உ

மண்டலபுருடன்-அருளிச்செய்த

# சூடாமணிஉள்ளமுடையான்

## மூலமும்-உரையும்

இஃது.

சின்னகாவணம்

குழந்தைமுதலியார்குமாரர்

சோதிடம்-சுப்பராயமுதலியாரவர்களைக்கொண்டு

பரிசோதிப்பித்து.

ஸ்ரீபெரும்பூதூர்

## அகத்தீஸ்வரமுதலியா

ரவர்களால் தமது

கலைமகள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

௲௮௱௯௰௬ ௵-ஜூ[illegible]

சிந்தாத்திரிப்பேட்டை

உலகப்பமேஸ்திரிதெருவு-நெம்பர்-

இப்புத்தகம்-கவரன்மெண்டில்ரிஜிஸ்டர்செய்யப்பட்டிருக்கின்றது

உ

கடவுள் துணை.

# விளம்பரம்.

இதனால் சகலத்திராளுக்குந் தெரிவிப்ப தியாதெனில்,

சூடாமணி உள்ளமுடையான் - மூலமும் - உரையும்.

சோதிட நவரத்தினமாலை - மூலம்.

கந்தரந்த தி - மூலமும் - உரையும்.

பொன்னுருவி மசக்கையும்.

அரிச்சந்திர மகாராஜன் கதையும்.

இன்னம் பலதமிழ்ப்புத்தகங்களும் - வேண்டியவர்கள் சிந்தாத்திரிப்பேட்டை - தேவாலயத்தின் மேற்புறம் - உலகப்பமேஸ்திரி வீதியில், (௰௧) வது - இலக்கத்தையுடைய வீட்டில் கிரயத்திற்கு வாங்கிக் கொள்ளலாம்.

௲௮௱௪ ௵
ஜூன் ௴

இங்ஙனம்.

ஸ்ரீ - அகத்தீஸ்வரமுதலியார்.

ஓம்நமோஸ்து.

# சூடாமணி உள்ளமுடையான்

## மூலமும்-உரையும்,

### காப்பு.

உலகொருமூன்றுமேத்தவுயர்மறைநான்குமெண்ணெண் ... *
கலைகளுந்தெரியுமங்கைமறையவர்கனிந்துபோற்ற ... *
பொலன்மலியுருவுநின்றபூவடிவிசரப்பொன்னூர் ... *
மலரடிபணியவென்றன்மனத்தனமுடியுமாதோ ... ... *

### கடவுள்வாழ்த்து.

மாதவர்முன்புசொன்னவடமொழிக்கணிதநூலைத் ... ... *
தீதறுதமிழினாலேசெப்பளுனிசைந்ததென்போல் ... *
வேதமுங்கலைகளாறுமங்கமுங்கருதியும ... ... ... *
ஓதியிவ்வுலகுக்கேற்பவுரைப்பநென்றிசைத்ததொப்பாம் *

### அவையடக்கம்.

ஒப்பில்நாளோராவாரந்திதியோகங்கரணப்பேருந் ... *
தப்பிலாவிதானஞ்சார்ந்ததற்காலநன்மைதீமை ... ... *
செப்பிலன்பிடித்தலுன்னல்கோசாரந்தெசாபலன்கள் ... *
துப்புடைநவக்கோளெண்கோள்சுடரிவைசொல்லலுற்றேன் *

(இ-ள்) நாட்பெயரும்-இராசிப்பெயரும்-வாரங்களும்- யோகங்களும்-கரணங்களும்-திதிவாரநட்சத்திரங்களின் சுபாசுபங்களும்-நட்பாஷி யுச்சப்பகை நீசங்களும்-அம்சங்களும்-திரேகாணகுணமும்-காலஹோரை- கோட்கூறு- சுடற்செலவு-முகூர்த்தவிதானங்களும்-கிரஹணாந்தமாகத்தொகுத்து ஒருகோர்வைப்படுத்திச்சொல்லுவனென்றவாறு.

உற்றுலகுய்யவந்தானருளுள்ளமுடையான்மங்கைக் ... *
கொற்றவன்புகழ்பொலிந்தக்குவலயமுழுதுங்கேட்கச் ... *

சொற்றவநூற்பேருள்ளமுடைச்சூடாமணியென்றீட்டுப்...
பொற்றொடிவளைக்கைநல்லாய்புலவர்முன்புகலலுற்றேன் ❋

(இ-ள்) நூற்பெயர்பெறுமிடத்துச்செய்தோன்பெயராலுஞ்செய்வித்தோன்பெயராலுமளவினாலிடுகுறியினாற்குறியினாலிடுகுறியினாலுஞ் சிறப்பினாலும்பெயர்பெறுமாதலினிந்நூல்செய்தோன்பெயராலேஉள்ளமுடைச்சூடாமணியென்னுமப்பெயராலுரைப்பன்-எ-று.

# நூல்வரலாறு

## நட்சத்திரநிகண்டு.

புகலுறுபரிமாவாசிபுரவியேதுரகஞ்சென்னி ... ❋
இகலுறுகுதிரைமூந்நாளிரலையைப்பசியின்பேராம் ❋
பகலியதாழிபூதமடுப்பொடுதராசுகக்குல் ... ... ❋
பகல்வருகிழவன்சோறுபரணியின்பெயராதாமே ... ❋

(இ-ள்) பரிமா-வாசி-புரவி-துரகம்-சென்னி-குதிரை-மூந்நாள்-இரலை-ஐப்பசி-இவையைப்பசியின்பெயராம்-தாழி-பூதம்-அடுப்பு-தராசு-கக்குல்-கிழவன்-சோறு-இவைபரணியின்பேர்-எ-று. (௧)

ஆரலேயழலேயக்கிஅளகிறுலறுமீனாவி ... ... ... ❋
சீர்கொள்கார்த்திகைப்பேராகுந்தேருருளைமீன்வையம்... ❋
பார்சகடுரோகணிப்பேர்பாவுமான்றலையைந்தானம் ... ❋
மார்கழிமதிப்பேராளன்நரிப்புறமிருகசீரப்பேர் ... ❋

(இ-ள்) ஆரல்-அழல்-அக்கி-அளகு-இறால்-அறுமீன்-ஆவி-இவைகார்த்திகையென்பது-தேர்-அயன்பண்டி-உருள்-ஐமீன்-வையம்-பார்-சகடு-ரோகணிப்பெயரொன்பது-மான்றலை-ஐந்தானம்-மார்கழி-மதிப்பேராளன்-நரிப்புறம்-இவைமிருகசீரிடத்தின்பெயர்-எ-று.

பேரிறைசெங்கையாழ்வில்லாதிரைப்பெயராம்பிண்டி ... ❋
கார்திரள்மூங்கில்மாலைகரும்பொடாவணமேவிண்டல் ... ❋
கூரியபுணர்தமாகுங்குடந்தராகொடிறுதையம் ... ... ❋
பார்மதிபூசப்பேராம்பணிகவ்வைபாம்பாயில்யம்... ... ❋

(இ-ள்) இறை-செங்கை-யாழ்-வில்-இவைதிருவாதிரையென்க-பிண்டி-மூங்கில்-மாலை-கரும்பு-ஆவணம்-விண்டல்-இவைபுணர்பூசமென்க-குடம்-தரா-கொடிறு-தையம்-மதி-இவைபூசமென்ப-பணி

கல்லை-பாம்பு-இவை ஆயிலியம்-எ-று. (௫)

பாவுமூற்சனியேவாய்க்கால்வேட்டுவனெழிலியாமிற் ... *
கூவியஞமலிமாசிகொடுநுகமகப்பேர்துற்கை... ... *
நாவிதனெலியேமற்றை யிடைச்சனிபூரனும... ... *
மேவில்பாற்குனிபங்குனிகடைச்சனியுத்திரப்பேர் *

(இ-ள்)மூற்சனி-வாய்க்கால்-வேட்டுவன்-எழிலி-ஞமலி-மாசி-கொடுநுகம்-இவைமகமென்பது-துற்கை-நாவிதன்-எலி- இடைச்சனி- இவைபூரமென்பது - பாற்குனி- பங்குனி- கடைச்சனி - இவையுத்திரம்- எ -று.

உத்தமன்களிறுநவ்வியுயர்கௌத்துவமாங்கைம்மீன் *
அத்தமென்கன்னியாடையம்பரம்பயறுநொய்மீன்... *
சித்திரைப்பெயர்மரக்கால்பதுமமேதீபஞ்சோதி ... *
மொய்த்தவைகாசிமூற்றில்சுளகுடன்முறம்விசாகம்.. *

(இ-ள்)களிறு-நவ்வி-கௌத்துவம்-கைம்மீன்-இவையத்தமென்பது-கன்னி-ஆடை-அம்பரம்-பயறு-நொய்-மீன்-சித்திரை-மரக்கால்-பதுமம்- தீபம்-சோதிஎன்பது-வைகாசி- மூற்றில்- சுளகு- முறம்- இவைவிசாகம்-எ-று. (௬)

விசைகொள்புற்றுளியுன்றேள்மெய்ப்பனையனுடப்பேரா *
மசைவில்வல்லானவாளிதுளங்கொளிசேட்டையாகுந் ... *
திசையுறுகுருகுகொக்குதேட்கடையாணிமூலம் ... ... *
வசையிலாக்குளமேபொய்கைவாவிபூராடமாமே ... ... *

(இ-ள்)புற்றுளி- புன்றேள்-பனை-அனுடம்என்பது- வல்லானவாளி-துளங்கொளி-கேட்டைஎன்பது-குருகு- கொக்கு-தேட்கடை ஆணியம்-மூலமென்பது- குளம்-பொய்கை-வாவி-பூராடமென்பது

மாவெனிற்குளமேகூவல்மணிமுடியாடையூர்தி ... ... *
காலவுத்திராடஞ்சோணைசிராவணமுலக்கையோண... ... *
மானபுட்பறவைகாக்கையாவணியவிட்டப்பேரா... ... *
தேனனுய்சுண்டன்குண்டில்செக்கிவைசதையஞ்செவ்வே.... *

(இ-ள்)குளம்-கூவல்-மணி-முடி-ஆடை-ஊர்தி-உத்திராடப்பெயரொன்பது-சோணை-சிராவணம்-உலக்கை-திருவோணத்தின்பெயரென்பது-புள்ளு-பறவை-காக்கை- ஆவணி- அவிட்டமென்பது-சுண்டன்-குண்டில்-செக்கு-இவைசதையத்தின்பெயர்-எ-று. (௭)

செவ்வியகொடுங்கோல்நாழிபுரட்டைசீர்பூரட்டாதி ... *
பவ்வியமுரசுவேந்தனறிவனுத்திரட்டாதிப்பேர்... ... *
வவ்வியகடைமீன்தோணிமரக்கலந்தாலம்நாவாய் ... ...*
நவ்வியரேவதிப்பேரவைதினம்நாட்பொதுப்பேர் ... ...*

(இ-ள்) கொடுங்கோல்-நாழி-புரட்டை-பூரட்டாதிப்பெயரென்பது-முரசு-வேந்தன்-அறிவன்-உத்திரட்டாதியின்பெயரென்க-கடைமீன்-தோணி-மரக்கலம்-தாலம்-நாவாய்-நவ்வி-இவைரேவதியின்பெயரென்க-தினம்-நாள்-இவைபொதுப்பெயர்-எ-று (௮)

## இராசிநிகண்டு.

பேர்மறிதகர்வற்காலிபெரியமேழகம்பின்கொச்சை... ...*
கூரிமொல்லைமொத்தைபசுமுரிகுண்டைபாண்டில்... ...*
சீரியவிடையேபல்லஞ்சேவெருதிடப்பேராகுந்... ... ...*
தாரமேவிஞன்வீணைதண்டியாழ்மிதுனந்தானே ... ...*

(இ-ள்) மறி-தகர்-வற்காலி-மேழகம்-கொச்சை-மொல்லை-மொத்தை-மேடமென்பது-குண்டை-பாண்டில்-விடை-புல்லம்-சே-எருது-இடபமென்பது-தாரம்-கவினை வீணை-தண்டு-யாழ்-மிதுனம்-( )

தானண்டலவனள்ளிகுளிர்சேக்கைநெண்டுகொண்ட... ...*
லானகற்கடகப்பேராமாளரிமலைமாசியங்... ... ...*
கானமாப்புலியேகோண்மாக்கடுவனுஞ்சிங்கப்பேராந் ...*
தேன்மொழிமாதுதையல்சேடிபெண்டெரிவைகன்னி... ...*

(இ-ள்) நண்டு-அலவன்-நள்ளி-குளிர்-சேக்கை-கொண்டல்-கற்கடகப்பெயரென்பது-அரிவை-மாசியம்-புலி-கோண்மா-கடுவன்-சிங்கப்பெயரென்பது-மாது-தையல்-சேடி-பெண்-தெரிவை-கன்னி-எ-று.(

கன்னிபோல்நிறைகோல்தூக்கல்கட்டளைவணிகன்செட்டி... *
துன்னியதுலாத்தின்பேராந்துடர்மணிவிட்டநர்துட்டன்... *
முன்னியதெறுக்காற்புன்றேள்விருச்சிகப்பேராம்வில்லு ...*
மன்னியசிலைகாண்டபங்கார்முகத்தனுவென்மானே... ...*

(இ-ள்) நிறை-கோல்-தூக்கல்-கட்டளை-வணிகன்-செட்டி-துலாமென்பது-துடர்மணி-துட்டன்-விட்டல்-தெறுக்கால்-தேள்-விருச்சிகமென்பது-வில்லு-சிலை-காண்டபம்-கார்முகம்-தனுசு-எ-று. (௰௧)

மான்கலைபுல்வாய்கேதுவளர்சுறுமகரமாகுங் ... ... ...*
கூன்குடங்கலசஞ்சாடிகுட்வடுங்கும்பப்பேரா... ... ...*
மீன்கயல்சேலுங்கெண்டைமீனப்பேரிராசிக்கெல்லாந்... ...*
தேன்கமழ்குழலாயோரைபொதுப்பெயர்திதியின்பக்கம்...*

(இ-ள்)மான்-கலை-புல்வாய்-கேது-சுறு-மகரமென்பது-குடம்-கலசம்-சாடி-குட்டுவம்-கும்பமென்பது-மீன்-கயல-சேல்-கெண்டை-மீனப்பெயரென்பது-ஓரை-இராசியின்பொதுப்பெயரென்றவாறு;

இராசியுரிச்சொல்முற்றும்.

---

கிரகநிகண்டு.

பக்கரைபரியேழூர்திபகலவன்பரிதியென்றாழ் ... ... *
திக்கிலாப்புண்டரீகந்திவாகரனருக்கன்பானு ... ... ...*
மிக்கமார்த்தாண்டன்வெய்யோன்றினகரனிரவிவிண்ணிற்... *
செக்கராதித்தனுயிறலரிசூரியன்பேர்சொல்லே..... ... ...*

(இ-ள்)பக்கரை-பரியேழூர்தி-பகலவன்-பரிதி-என்றாழ்-புண்டரீகன்-திவாகரன்-அருக்கன்-பானு-மார்த்தாண்டன்-வெய்யோன்-தினகரன்-இரவி-ஆதித்தன்-ஞாயிறு-அலரி-சூரியன்பெயர்-எ-று. (௰௩)

சொல்லரும்பிறையேயிந்துசந்திரன்சசியேசோம... ... *
னல்லெழுமதிநாட்கேழ்வனம்புலிநிலாத்திங்கட்பேர் ... ...*
சொல்லுமங்காரகன்சேய்நிலமகன்குசன்தீயாரல்... ... *
வல்லிச்சரிடையாய்பூமன்வக்கிரன்குருதிசெவ்வாய்... ... *

(இ-ள்) பிறை-இந்து-சந்திரன்-சசி-சோமன்-மதி-நாள்-கேழ்வன்-அம்புலி-நிலா-திங்களென்க-அங்காரகன்-சேய்-நிலமகன்-அங்குசன்-தீ-ஆரல்-பூமன்-வக்கிரன்-குருதி-செவ்வாய்-எ-று. (௰௪)

செவ்வியகணக்கன்புந்திமதிமகனருணன்சீர்மால் ... ...*
தவ்வலில்புலவன்றாதன்மேதைசாமன்புதன்பே ... ...*
ஒவ்வமில்குருபொன்சீவன்பீதகனிறைவன்பார்ப்பான்......*
மவ்வலங்குழலாய்வாசோர்மந்திரிவியாழமாண்பே... ... *

(இ-ள்)கணக்கன்-புந்தி-மதிமகன்-அருணன்-மால்-புலவன்-தாதன்-மேதை-சாமன்-புதனென்க-குரு-பொன்-சீவன்-பீதகன்-இறைவன்-பார்ப்பான்-மவ்வல்-இவைவியாழத்தின்பெயர்-எ-று. (௰௫)

மீன்புகர்பிருகுசுங்கன்சுக்கிரன்சிதன்மழைக்கோள் ... ... *
ஏழன்படபார்க்கவனேவெள்ளிமுதுமகன்முடவனீலன் ... ... *
காண்டகுபங்குகாரிகரியவன்கதிர்சேய்மந்தன் .... ... *
சூண்டசுன்சனிப்பேர்நாகமிராகுப்பேர்கொடியோன்கேது *

(இ-ள்) புகர்-பிருகு-சுங்கன்-சுக்கிரன்-சிதன்-மழைக்கோள்-பார்க்கவன்-வெள்ளியென்க-முதுமகன்-முடவன்-நீலன்-பங்கு-காரி-கரியவன்-கதிர்சேய்-மந்தன்-சுன்-சனிப்பெயரென்க-நாகம்-இராகுவென்க-கொடியோன்-கேதுவின்பெயர்-எ-று. (௰௬)

## தெத்தயோகம்.

கொடுங்கதிர்தனக்கீராறுகுளிர்மதிதனக்குப்பன்னொன் ... ... *
நடுஞ்செவ்வாய்க்கஞ்சுமேதைக்கிரண்டுபொன்னவனுக்காறு *
நெடும்புகழ்கெட்டுநீலற்கொன்பதுநிகழ்ந்தபக்கம் ... ... *
படர்ந்தவைதெத்தயோகந்தீதென்பர்மலருமன்னே ... ... *

(இ-ள்) ஞாயிறு துவாதசியும்-திங்களேகாதசியும்-செவ்வாய்பஞ்சமியும்-புதன்விதியையும்- வியாழம்சஷ்டியும்-வெள்ளிஅஷ்டமியும்-சனிநவமியும்-இவைதெத்தயோகம்-சுபகன்மங்களுக்காகாது ()

## அமிர்தயோகம் மரணயோகம்.

பல்லுடைமூலமோணமிரேவதியத்தம்பாரில் ... ... ... *
தலமுடையுத்திரங்கண்மூன்றுநன்றருக்கன்றன்னில் ... ... *
குலவியவனுடங்கேட்டைகொடுமகம்விசாகம்விட்டஞ் ...... *
சலமுடையருக்கன்வாரஞ்சார்ந்திடில்மரணந்தானே ... ... *

(இ-ள்) ஞாயிற்றுக்கிழமையில்-மூலம்-திருவோணம்-இரேவதி-அத்தம்-உத்திரதிரையம்-இவைவரில் அமிர்தயோகம்-அனுடம்-கேட்டை-மகம்-விசாகம்-அவிட்டம்- இவைவரில்மரணயோகம்-எ-று ()

தானமான்றலைபேசோதிசாருநாள்புணர்தமோணம் ... ... *
மானுநாள்திங்கள்சேரிலமிர்தமாமியோகமாகும் ... ... ... *
ஈனமாமகம்விசாகங்கார்த்திகைபூரட்டாதி ... ... ... *
மானநாளுத்திராடமதிவரில்மரணமென்றே ... ... *

(இ-ள்) மிருகசீரிடம்-சோதி-ரோகணி-புணர்பூசம்-திருவோணம்-இவையுடன்திங்கள்சேரில் அமிர்தயோகமாம்-இவ்வாரத்தில்-மகம்-விசாகம்-கார்த்திகை-பூரட்டாதி-உத்திரம்-இவைசேரில்மரணயோகம்()

அன்றியவுரோணிமூலம்அறிவனுத்திரத்திற்செவ்வாய்... ... *
நின்றிடலமிர்தயோகம்நிறைந்தவான்சதையஞ்செங்கை ... *
வென்றியவிசாகம்பூரட்டாதியைவிரும்பினுனுங் ... ... *
கன்றியசெவ்வாய்நின்றாற்கருமங்கள்நாசங்காணே... ... *

(இ-ள்) செவ்வாய்க்கிழமையில்-ரோஹணி-மூலம்-உத்திரதினை
யம்சேரில் அமிர்தயோகமாம்- இவ்வாரத்து-சதையம்-திருவாதிரை-
விசாகம்-பூரட்டாதி-இவைசேரில்மரணயோகம்-எ-று. (உ௰)

சாணுமுப்பூரமாடிகார்த்திகையுத்திரத்தில் ... ... ... *
பூண்முலைமடவாய்புந்திவந்திடிற்புகழ்வர்சால ... ... *
வாணிபாவிட்டமூலமிரேவதிகுதிரையத்தஞ் ... ... *
சேணுறுபுந்திவந்தாற்செய்யுமக்கருமந்தீதே ... ... *

(இ-ள்) புதவாரத்தில்-மூப்பூரம்-உத்திராடம்-கார்த்திகை-உத்தி
ரம்-இவைசேரில்அமிர்தயோகமென்க-இவ்வாரத்து-அவிட்டம்-மூல
ம்-இரேவதி-அசுவனி-அத்தம்-இவைசேரில்மரணயோகம்-எ-று (உக)

கரும்பொடுசோதிபூசமைப்பசிமகத்திற்கற்றோர் ... ... *
விரும்பியவியாழநின்றால்விளம்புவாரமுதமென்று ... *
திருந்துமான்றலைபார்செக்குசெங்கையுத்திரத்தோடாரல்...*
சுரும்பமர்குழலாய்பொன்னன்வந்திடிற்றுயரஞ்சொல்லே *

(இ-ள்) வியாழக்கிழமையில்-புனர்பூசம்-சோதி-பூசம்- அசுவ
னி-மகம்-இவைசேரில் அமிர்தயோகமென்க- இவ்வாரத்து மிருகசீரி
டம்-ரோகணி-சதையம்-திருவாதிரை-உத்திரம்-கார்த்திகை- இவைசே
ரில் மரணயோகம்-எ-று. (உஉ)

சொல்லருமூலமத்தமிரேவதிநாகஞ்சுங்கன் ... ... *
புல்லிடலமுதயோகப்பூசமோடுரோணிகேட்டை ... ... *
மல்குமோரோணமாயில்மகத்தினில்வெள்ளிவந்தால் ... ...*
அல்லிருங்குழலாய்நீதென்றறிந்தனர்தமிழையாய்ந்தோர் *

(இ-ள்) வெள்ளிக்கிழமையில்-மூலம்-அத்தம்-இரேவதி-அசுவதி
இவைசேரில் அமிர்தயோகமென்க-இவ்வாரத்து-பூசம்-ரோகணி-கே
ட்டை-திருவோணம்-ஆயிலியம்-மகம்- இவைசேரில்மரணயோகம்.

ஆய்ந்தசீர்மகமேசோதியாரல்பார்சதையங்காரி... ... *
சார்ந்திடலமிர்தமத்தஞ்சித்திரைபுரட்டாதிசாலம்... ... ...*

வாய்ந்தவுத்திரத்தோடாயில்சனிவரில்மரணமென்க ... ... *
சேர்ந்ததிற்சொல்லாநாட்கள்சித்தயோகப்பேர்செப்பே ... *

(இ-ள்)சனிக்கிழமையில்-மகம்-சோதி-கார்த்திகை-ரோஹணி-சதையம்-இவைசேரில்அமிர்தயோகம்- இவ்வாரத்து- அத்தம்- சித்திரை-பூரட்டாதி-ரேவதி-உத்திரம்-ஆயிலியம்-இவைசேரில்மரணயோகமென்க-இச்சொல்லாதநாட்கள்இவ்வாரஞ்சேரில சித்தயோகம்.எ-று.

## அமிர்தயோகம்.

செப்பியகுருவுக்கொன்பானுங்குசன்பன்னுஞ்சேய்க்கு ... *
வெப்புறுகதிர்க்குமொன்றேடாறுபன்னொன்றுவெள்ளிக் *
கொப்புடைமதிக்குமின்றேழிரண்டியர்நந்தபுந்திக் ... *
கப்பதின்மூன்றுமூன்றுமெட்டுநல்லமுதயோகம் ... *

(இ-ள்) வியாழத்திற்குநவமி-சனிக்குச்சவுத்தி- செவ்வாய்க்குசதுர்த்தசி-ஞாயிறுக்குபிரதமையுஞ்சஷ்டியும்-வெள்ளிக்குஏகாதசி- திங்களுக்குவிதியைசத்தமியும் - புதனுக்குஅஷ்டமியுந்திரிதியையும்-திரயோதசியும்-அமிர்தயோகம்-எ-று. (உரு)

## சித்தயோகம்.

யோகம்நன்றிரவியத்தமூயர்மதிவர்ன்பேராளன் ... ... *
வேகவங்காரஞ்சன்னிமேதைசேரனுஷம்விண்ணோர் ... *
ஏகமந்திரிசேர்பூசமிரும்புகர்வாரந்தோணில் ... ... *
மாகவான்சனியுரோணிசித்தியென்மயில்லயன்றாய் ... *

(இ-ள்) ஞாயிறு அத்தம்-திங்கள்மிருகசீரிடம்- செவ்வாய்அசுவதி-புதன்அனுடம்-வியாழப்பூசம்-வெள்ளிஇரோவதி-சனிரோகணி-இவைசித்தயோகம்-என்றவாறு. (உக

## சுபயோகம்.

அன்னமேபருதிக்கெட்டாமம்புலிக்கொன்பான்சேய்க்கு *
மன்னியவிருமூன்றுகுமாலவற்கொருமூன்றுகும்... ... *
பொன்னவன்றனக்குப்பக்கம்பதினொன்றுபுகற்குப்பன்மூன்
றின்னல்சேய்சனிக்குப்பன்னொன்றிவைசுபயோகமென்னே *

(இ-ள்)ஞாயிறு அஷ்டமியும்-திங்கள்நவமியும்-செவ்வாய்சஷ்டியும்-புதன்-திரிதியையும்-வியாழம்ஏகாதசியும்-வெள்ளிதிரயோதசியும்-சனிசதுர்த்தசியும்- இப்படிவரிலிவைசுபயோகம்-எ-று. (உஎ)

நாளளவு மெண்ணினதொகைமை-எழுக்கேய்ந்து மீமாதசேடம்ஒன்றாகில்-இருத்தை-உ-ஆகில்நாசம்-௩-ஆகில்மரணம்-௪-ஆகில்அமிர்தம்-ரு-ஆகில்சுபம்-௬-ஆகில்சித்தியோகம்-எ-ஆகில்மிறிதியோமென்றிப்படிபார்த்துக்கொள்வது அமிச்சித்துக்கூட்டிஎண்ணுவது-எ-று.

## அக்கினியோகம்.

பிரசவெண்டிங்கட்காறுபெரியசேய்க்கேழுமாலுக் ... *
குறைசெய்தாரொட்டுப்பொன்னுக்கொன்பது புகற்குப்பத்து
பரியசுன்னுக்குப்பன்னென்றருக்கற்கிராறுபக்கம் ... [ப்
விளைசெய்பூங்குழலாயங்கியோகமென்றிசைத்தார்நூலோர்.*

(இ-ள்) திங்கள்சஷ்டி-செவ்வாய்சத்தமி-புதன்அஷ்டமி- வியாழம்நவமி-வெள்ளிதசமி-சனிஏகாதசி-ஞாயிறுதுவாதசி-இப்படிவரில் இவைஅக்கினியோகம் இவைசுபகன்மங்களுக்காகாது-எ-று.(௩௨)

## சகடயோகம்.

மேலெழுவியாழநின்றவிராசிக்காறீராரொட்டில் ... ... *
மாலைவெண்மதியஞ்சேரில்வந்தநாட்சகடயோகம்... ... *
பாலகன்பிறக்கிற்சாவாம்பழிபடுமணத்தைச்செய்யில் ... *
ஞாலமேல்வழியைப்போகில்நலமில்லைநறுமின்கொம்பே...*

(இ-ள்) வியாழம்நின்றவிராசிக்கு-௬-மிடத்திலும்-௰௨-மிடத்திலும்-அ-மிடத்திலும்- சந்திரகிரகம்வரும் நாள்சகடயோகம்- இதன்பலம்பாலகன்பிறக்கிற்சாவு-மணஞ்செய்யில் வழிபோகில்நன்மையில்லை-எ-று-சுபகன்மங்களுக்குந்தவிரப்படுமென்க. (௩௩)

## யோகத்தின்பெயர்.

தறுங்கம்பம்பிரிசம்வாணுள்புண்ணியமண்மாகண்ட... ...*
மறந்துளைச்சூலகண்டமார்க்கமுமுணர்வோடேற்றம்... ...*
கறங்கவில்சித்திகேறல்பெறுகாயம்பரிசங்காட்சி ... ... *
திறம்புகழ்காவல்வாய்ப்புத்திசைமுகனீர்த்திரான்பேய் ... *

(இ-ள்)இப்படியிருபத்தேழுயோகமுங்கண்டுகொள்வது-எ-று(௩௪

## விஷ்யோகம்.

பேயுடன்பரிசங்கோர்றல்பெரும்பாம்புசூலங்கம்ப... ... *
[ மாயுமாகண்டங்கெண்டமயிலொழித்திவைகள்நன்று... ...*

## நாசயோகம்.

என்றுநீடிருளைச்சிறுமிந்துவுக்காறுவெள்ளி ... ... *
கொன்றியநவமிமேதைக்கிரண்டொளியவற்குநாலு... ...*
பொன்றெனக்கெட்டுநீலப்பூமனுக்கேழுபொல்லாக் ... *
கன்றிடுநாசயோகமென்றறிகதிர்வேற்கண்ணாய் ... ... *

(இ-ள்) திங்கள்சஷ்டியும்-வெள்ளிநவமியும்-புதன்விதியையும்-ஞாயிறுசவுத்தியும்-வியாழமஷ்டமியும்-சனிசெவ்வாய்க்குசத்தமியும்- இப்படிவரில் நாசயோகம்-எ-று. (உஅ)

கதிரவற்கைத்தோடாரல்கணக்கற்கேழ்பரணிகாரி ... *
எதிருறுமெட்டுத்தோணியெரிக்குமன்னுவாவுரோணி... ... *
புதியபொன்றனக்குப்பன்மூன்றனுடமாம்புகற்காரோணை *
மதியவற்கிரண்டாம்பக்கஞ்சித்திரைமருவில்நாசம் ... *

(இ-ள்) ஞாயிறுபஞ்சமிகார்த்திகையும்-புதன்சத்தமிபரணியும்-சனிஅஷ்டமி-ரேவதியும்-செவ்வாய்பூரணைரோகணியும்-வியாழந்திரோதசிஅனுடமும்-வெள்ளிசஷ்டிதிருவோணமும்- திங்கள்விதியைசித்திரையும்-இப்படிவரில் இவைநாசயோகம்-எ-று. (உகூ)

மருவியகதிர்விசாகமதிவருசதையஞ்செவ்வாய் ... ... *
பொருவியவிட்டம்புந்திரேவதிபொன்னுரோணி ... ...*
பெருகுவிற்பூசங்காரியுத்திரம்பேணிவந்தா ... ... ...*
லருளிலநன்னுசமென்றுரரியநூல்தெரிந்தறிந்தோர் ... *

(இ-ள்) ஞாயிறுவிசாகமும்-திங்கள்சதையமும்- செவ்வாயவிட்டமும்-புதன்ரேவதியும்-வியாழம்ரோகணியும்-வெள்ளிபூசமும்- சனிஉத்திரமுமாகவரில் நாசயோகம்-எ-று. (௩௰)

## சித்தியோகம்.

அருக்கன்முன்சனியீருகமூறம்பொய்கையவிட்டந்தோணி *
யுருட்குடமுத்திரத்தோடுதித்தவாரத்திலொன்றே ... ...*
றெரித்தநாளளவுமெண்ணியேழுக்கீய்ந்தீயாச்சேட... ... *
மிருத்தைநாசஞ்சாவின்பஞ்சகஞ்சித்திபிரிசமென்ன ... *

(இ-ள்) ஞாயிறுமுதல்சனி-ஈருக-விசாகம்-பூராடம்-அவிட்டம்-இரேவதி-ரோகணி-பூசம்-உத்திரம்-இந்நாள்முதலாகஅற்றைவாரத்திலுற்ற

மேர்புமாகம்பமூன்றுசூலமஞ்சாவுக்கொன்பான் ... ... *
காபுமாகண்டங்கண்டமாறுமூன்கடிகைநீக்கே ... ... *

(இ-ள்) பேய்-பரிசம்-கோறல்-பாம்பு-சூலம்-கம்பம்- ஆகண்டம்-கண்டம்-அயில்-இவையொன்பதுமொழியஅல்லாதவை- நன்றென்பது-இந்த-ஒன்பதிலுங்கம்பத்துக்கு- மூன்றுவகை- முன்னேகழிப்பது-சூலத்துக்கு-ரு-ம்-பாம்புக்கு-௧௰-ம்- ஆகண்டம்கண்டத்துக்கு.ஆறுநாழிகைமுன்னேகழிப்பதுநின்றது- ஆமென்பது· பேயும்பரிசமும் கோறலும்அயிலும்- ஆகாது-எ-று. (௧௫)

நித்தயோகம்.

நீக்கியிக்கடிகைமுன்னேயிவையுமாம்நித்தயோகம்... ...*
பூக்குழல்மடவாயித்தைவாக்கியத்துருவக்கூட்டிச்... ... *
சேர்த்ததிற்சென்றதிங்களதிகையைதினத்தைச்செவ்வை... ...*
பார்த்ததிலொருநாள்நீக்கிநின்றநாள்பரிந்துசொல்லே......*

(இ-ள்) நித்தியோகம்பார்க்கும்படிஅத்தைவாக்கியத்தில்- துருவத்தைக்கூட்டியிதனுடனேசென்றமாதமுந்தேதியுங்கூட்டிநாளைப்பாத்து-கண்டநாளிலேஒருநாளைக்கழித்து· நின்றநாளித்தனை- நாளென்றறிந்து -முன்புசென்றயிருபத்தேழில்வந்தபலாபலன்-பார்த்துச்சொல்லுவது-எ-று. (௧௬)

திவத்திவயோகம்.

பரித்தவன்னுறுபக்கத்திலொன்றேத்தியெழுக்கிப்ந்தால் ... *
திருத்தவிலனர்ககாளஞ்செய்தனம்புகலென்றேழும்... ...*
உரைத்தஊரிதனிற்காழங்கலியிவையொழியமற்றத்... ...*
தெரித்தனநல்லவன்றுதிவத்திவயோகஞ்செப்பே... ...*

(இ-ள்) அத்தைபக்கம்இத்தனையாம்பக்கமென்றறிந்து அதிலேஒன்றுகூட்டிஎழுக்கிப்ந்தால்- நின்றசேடம்-௧- ஆகில்-திருத்திவதிவசம்-௨- ஆகில்கலிதிவசம்-௩- ஆகில்நந்தைதிவசம்-௪· ஆகில்- காலகண்டதிவசம்-ரு· ஆகில்சயதிவசம்-௬- ஆகில்தனதிவசம்-எ-ஆகில்-புகழ்திவசம்- இந்தயேழிலும்கலிதிவசமுங்- காலகண்டதிவசமும்-பொல்லாது மற்றுள்ளதெல்லாம்-நல்லது-எ-று. (௧௭)

வாரசூன்னியம்.

ஆதவற்கனுடக்கேட்டைமகமுறமடுப்பைந்தானம்... ... *
தேறுமதிக்குப்பொய்கைகேண்மகப்புரட்டையாரல்... ...*

சோதநுவிசாகம்பொல்லாக்குருதிக்குவிட்டமோணம் ... *
மேதகுசதையங்கேட்டையாதிரைவிளம்பலாகா ... ...*

(இ-ள்) ஞாயிற்றுக்கிழமையில்-அனுடம்-கேட்டை-மகம்-விசாகம்-பரணிமிருகசீரிடம்-திங்கட்கிழமையில்-பூராடம்-மகம்-மூலம்-பூரட்டாதி-கார்த்திகை-விசாகம்- செவ்வாய்க்கிழமையில்-அவிட்டம்-திருவோணம்-சதயம்-கேட்டை-திருவாதிரை-எ-று. (௫௮)

விளம்பியபுதற்குமூலமோணமோடாசவிட்டம்... ... *
இளம்பரிபரணிதீதென்றியம்பினரிரணியற்கு ... ... *
வளங்கொள்மான்றலைபூராடமரக்கலம்புணர்தம்பூரம் ... ...*
துலங்கியமுலையாய்தீதென்றுரைத்தனர்தூய்யநூலோர் ...*

(இ-ள்) புதனுக்கு-மூலம்-திருவோணம்-கார்த்திகை-அவிட்டம் அசுவதி-பரணி-வியாழத்துக்கு-மிருகசீடம்-பூராடம்-ரேவதி- புனர்பூசம்-பூரமென்றவாறு. (௫௯)

நூலறிபுகற்குப்பூசம்விசாகமொண்சதுவிட்டம் ... ...*
கோலமான்றலையோடத்தமனுடமுங்கொடுமைசெய்யும் ...*
நீலனுக்கத்தம்பூசம்புணர்தமுத்திரம்நீற்ரோணி ... ...*
மாலையொண்குழலாய்தீதுவாரசூன்னியம்வந்தாலே... ...*

(இ-ள்) வெள்ளியுடன்கூடின-பூசம்-விசாகம்-அவிட்டம்-மிருகசீரிடம்-ரோகணி-அத்தம்-அனுடமும்-சனிகூடின- அத்தம்- பூசம்-புனர்பூசம்-உத்திரம்-ரேவதியும்-இப்படியிம்மூன்றுவிருத்தத்திலும் அவ்வாரங்களில்இச்சொன்னநட்சத்திரங்கள்வரில்வாரசூன்னியமென்றுபெயராம்இவைசுபகன்மங்களுக்குவிலக்கப்படும்-எ-று. (௬௰)

கிழமைபிறந்தநாள்.

வந்திக்குங்கதிற்குங்கங்குல்மதிக்குச்சித்திரைசேய்காடி ...*
புந்திக்குவிட்டமாகும்பொன்னுக்குக்கேட்டையாகுஞ் ...*
சந்திக்கும்புகர்பூராடஞ்சனிரேவதிப்பிறந்தநாளாஞ்... ...*
சிந்திக்குங்கருமமெல்லாந்தீமையாய்விளையுமாதோ... ...*

(இ-ள்) ஞாயிறு-பரணி-திங்கள்-சித்திரை-செவ்வாய்க்கு- உத்திராடம்-புதன்அவிட்டம்-வியாழம்-கேட்டை-வெள்ளி-பூராடம்- சனி-ரேவதி-இவைகிழமைபிறந்தநாள்-இவைசுபகன்மங்களுக்கு- ஆகாது

## மாதாந்தம்- வருஷாந்தம்-தோஷயோகம்.

மாதாந்தமூன்றுநாளும்வருஷாந்தமொருபத்தைந்து ... *
தீதாந்தகிராணந்தீண்டுந்தினமுன்பின்சேர்ந்தவேழுங் ... *
காதாந்தகண்ணுப்நாளின்கடையிருகடிகைதானும் ... ... *
வேதாந்தமுணர்ந்தோர்தீதென்றியம்பினார்மிகவுமென்மேல் *

(இ-ள்) மாதாந்தத்திலேயந்தம்-௩-நாளும்-வருஷாந்தத்திலே-யந்தம்-௰௫-நாளும்-கிராணந்தீண்டினநாளும்-அதற்கு-முன்-௩-நாளும்-பின்-௩-நாளும் ஆ ஏழுநாளும்- நட்சத்திரத்தில். அந்தம்-உ-நாழிகையும்-சுபகன்மங்களுக்குவிலக்கப்படும்-எ-று (௪௨)

## கண்ணுள்ளநாள் இல்லாதநாள்.

மேதகுகதிரோனின்றநாளுமற்றதின்மேல்மூன்றும்... ...*
கோதறுபின்னில்மூன்றுங்குருட்டுநாளென்றுகொள்க ...*
ஓதியவதற்குப்பின்முன்னாலதுவொருகண்காணும் ... ...*
ஏதமில்நின்றநாட்களிருகணுண்டருக்கற்கென்னே ... ...*

(இ-ள்) ஆதித்தனின்றநாளும் அதற்குமுன் மூன்றுநாளும் பின் மூன்றுநாளும்-குருட்டுநாளெனக அதற்குமுன்னே நான்குநாளும்-பின்னே நான்குநாளும்ஒருகண்ணெனக அல்லாதநாட்களிரண்டு கண்ணுமுண்டு-எ-று. (௪௩)

அருக்கனார்கிழமையாதிசென்றவக்கிழமையாய்ந்து... ...*
பெருக்கிமுன்றதனாற்பெற்றறமாமுசற்கழித்துப்பின்னை ...*
இருக்குநாளொன்பானோர்கண்பன்னிரண்டிருகண்காணும் *
தருக்கிலாப்பின்னிலாறுங்குருட்டுநாட்சத்திரத்தே... ... *

(இ-ள்) ஞாயிற்றுக்கிழமை முதலாகச்சென்றகிழமையை மூன்றிற்பெருக்கி அத்தொகையையசுபதி முதலாகக் கழித்துநின்றநாளிலேஒன்பதுநாளொருகண்-நின்றநாளிற்பன்னிரண்டுநாளிருகண்-அதற்குமேல் ஆறுநாள் குருட்டுநாள்-எ-று. (௪௪)

சந்தித்தபிற்பக்கத்துத்தெசமிவிட்டதன்பின்னைந்து... ...*
மூந்துற்றதாதிநாலுங்குருடுபின்பொருமூன்றோர்கண்... *
பிந்துற்றவாறுங்காணும்பின்னின்முன்னொருகண்காணுஞ் *
சிந்தித்தவாறுங்காணுந்திரியமூன்றிருகண்காணே... ...*

(இ-ள்) அபரபக்ஷத்து-ஏகாதசிமுதலைந்தும்- பூர்வபக்ஷத்துபி

ரதமைமுதல்நாலுங்குருடு-பஞ்சமிமுதல்மூன்றுமொருகண்-அஷ்டமிமுதலாறுமிரண்டுகண்-பதினான்குமமாவாவும்அபரபக்ஷத்துப்பிரதமையும் ஒருகண்-விதிபைமுதலாறு மிரண்டுகண்-அஷ்டமி முதல்மூன்றுமொருகண்-எ-று. (௪௫)

ஒருகணுண்டெனுந்திங்கட்சவுத்தமமருக்கற்காகா... ...*
விருகணுண்டாம்நாள்பக்கமியாவற்குமின்பமெய்து... ...*
இருகணுமிலாநாளாகிலிபற்றியகருமந்தீதாய்... ... ...*
விரவியசுற்றத்தோடேங்கெடுமெனவிளம்பினரே ... ... *

(இ-ள்) சந்திரதிருஷ்டி யொருதிருஷ்டியாகிலும் நன்றென்பது-சூரியதிருஷ்டியொருதிருஷ்டியாகிலுந்தீதென்பது-இரண்டுகண்ணுமுள்ள நாட்பக்கங்களுமுத்தமம்-எ-று. (௪௬)

பகல்விழிவிராசிஇராவிழிவிராசி,

விளங்கியமேடங்குண்டைவீணைமான்கடகம்வில்லு ... ...*
மிளம்பிறையினமாயாறுமிரவுகண்காணுமென்றுந்... ...*
தெளிந்திடுமதிகோல்கன்னிகுடங்கயல்தேளுமெல்லாம் ...*
விளங்கதிரருக்கன்கூறுப்பகல்விழியுடையமன்னே... ...*

(இ-ள்) மேஷமுதல்நான்கும்-தனுசுமுதலிரண்டும்- சந்திரனிடமென்றும்இராவிழிக்குமென்றுஞ்சொல்வது-சிங்கமுதல்-நாலிராசியுங்கும்பமுதலிரண்டுராசியும்ஆதித்தனிடமென்றும்பகல்விழிக்குமென்றும்சொல்வதென்றவாறு. (௪௭)

பக்கமுண்ணுந்திசாதிசை.

மன்னுமுதற்சதுர்த்தியினிலஞ்சாஞ்சாம ... ... *
மருவியவட்டமிரண்டுபன்னொன்றேழா ... ...*
மூன்னிலுவாராற்சாமம்பிற்பக்கத்தில்... ... ... *
மூன்றிலிருமூன்றேழில்மூன்றுஞ்சாமம்... ... *
பன்னியபிற்பக்கத்தின்மேலெட்டாஞ்சாமம் ... ...*
பதினான்கின்முதற்சாமம்பகர்ந்தவிட்டில் ... ...*
இன்னவையாஞ்சாமமென்றறிந்துமற்ற... ... ...*
திரவிமுதலத்திசைதிதெனலாமே... ... ...*

(இ-ள்)பூர்வபட்சத்துச்சவுத்தியில் ௫- ம்- சாமம்மேற்கேயுண்ணும்-அபரபக்ஷத்துதிரிதிபையில் ௬-ம்-சாமம்வடமேற்கேயுண்ணு-ஏகாதசியில்-எ-ம் சாமம்வடக்கேயுண்ணும்-பௌர்ணமையில்- ௬- ம்-

சாமம்தெற்கேயுண்ணும்-சத்தமியில்-௩-ம்-சாமம்தெற்கேயுண்ணும் சத்தமியில்-௮-ம்-சாமம்-வடகிழக்கேயுண்ணும்-சதுர்த்தசியில்-நாற்சாமம்கிழக்கேயுண்ணும்-இந்தச்சாமங்கள்சுபகாரியங்களுக்கு விலக்கப்பட்டன-இத்திசையில்யாத்திரையும்விலக்கப்படுவன-எ-று-௪௮

### நக்ஷத்திரவிஷகடிகை.

ஆதிரைமூவேழ்கடிகைபூரட்டாதியொட்-டத்தமிருபத்திரண்டு
த்திரஞ்,சதையமொன்பானூரல்மகம்புணர்தத்தோணியானைந்து
சோதிமுமக்கேட்டைமானிலயிரேழுசொற்றிவன்பூராடம்நா
லாகும் - பாய்துரகமைம்பதுருள்நாற்பான்விட்டம்பனிமோ
னைம்பத்தெண்ணான்காயிலிய - மீதெலிசித்திரையாடிகுடம்நா
லைந்துமிகுமூலமிருபதன்பத்தாரின்மேல்நாற்கடிகைவிடமே.

(இ-ள்) திருவாதிரை-௨௧-நாழிகைக்குமேல்பூரட்டாதி-௰௬-நாழிகைக்குமேல்-அத்தம்-௨௨-நாழிகைக்குமேல்-உத்திரம்-சதையம்-௰௮-நாழிகைக்குமேல்-சோதி-விசாகம்-கேட்டை-மிருகசீரிடம்-௰௪-நாழிகைக்குமேல்-பரணி-உத்திரட்டாதி-பூராடம்-௨௪-நாழிகைக்குமேல்-அசுவதி-௫௰-நாழிகைக்குமேல்-ரோகணி-௪௰-நாழிகைக்குமேல்-அவிட்டம்-அனுஷம்-உத்திராடம்-திருவோணம்-௰-நாழிகைக்குமேல்-சித்திரை-மூலம்-பூசம்-௨௰-நாழிகைக்குமேல்-கார்த்திகை-புனர்பூசம்-பூரம்-மகம்-இரேவதி-௩௰ நாழிகைக்குமேல்-ஆயிலியம்-௨௨-நாழிகைக்குமேல்-நாலுநாழிகைவிஷக்கடிகை-இவைசுபகருமங்களுக்கு விலக்கப்பட்டன-எ-று. (௪௧)

### தூமாதிகிரகம்.

கடுங்கதிரோன் சென்றதிங்கட்டியதிமேலே ... ... ✻
கருதியநாலிராசிபதின்மூன்றுபாகை... ... ... ✻
யுடன்பெயத்திற்கண்ட நாட்டுமேமத்தை... ... ... ✻
யோங்கியமண்டலத்திலொழித்துத்தவிதிபாதம்... ✻
மடந்தைபதிலாரைகூட்டவட்டம் ... ... ... ... ✻
வட்டத்தைமண்டலத்திற்களையவில்காம் ... ... ✻
படர்ந்தசிலையிற்பதினேழ்பாகையிடக்கேது... ... ✻
பண்டையதாபிராசியொன்றைப்பயில்விதத்தாலே ✻

(இ-ள்.) சென்றமாதமூர்த்தியதியையும்வைத்து இதின்மேல்நாலிராசியும் பதின்மூன்றுபாகையுங்கூட்டி நாளைப்பார்த்து கண்டதனிலே தூமமென்றுபெயராம் இந்தத்தூமத்தை மண்டலத்திற்

ளைந்து கண்டநாள் விதிபாதமென் றுபெயராம் இதின்மேல் ஆயிரா சிகூட்டப்பரிவேழம்-இதைமண்டலத்திற் களையகண்டநாள் இந்திர தனுசு-இதிலேபதினேழுபாகை கூட்டக்கேது யிதிலே ஒருராசிகூட் டமுன்புபோலேயாம்-இந்நாட்கள் சுபகருமங்களுக்கு விலக்கப்ப ட்டன-எ-று. (௫௪)

## கரணத்தின்விபரம்.

வித்தகத்தாற்சென்றபக்கமிரட்டித்தொன்றை ... ...*
விலக்கிநின்றதொகையேழிற்கழித்தசேட ... ...*
மத்தலையமடங்கலடற்புலியேனங்கழுதை ... ...*
யானையெருதுடன்கோழியிவையடைவேயமிந்தா *
லுய்த்தனவேகரணம்பன்றூன்குமுன்பின் ... ...*
முதற்றியதிமுன்கூகைநாய்பாம்புமுதலாய் ... ...*
எய்த்தபுழுயுவாய்ச்சூழ்ந்தகரணம்பொல்லா ... *
வேனங்குக்குடன்கழுதையிவையுந்தீதே ... ...*

(இ-ள்.) சென்றபக்கத்தையிரட்டித்து அதிலொன்றைக்கழித் து நின்றதொகையை ஏழிற்கழித்தால் நின்றசேடம்-க-சிங்கம்-உ-புலி-ந-வாரகம்-ச-கழுதை-ரு-யானை-சு-எருது-எ-கோழியென வழும மிந்து இவையிற்றில் பன்றியுங் கோழியுங் கழுதையும் சுபகன்மங்களுக்கு விலக்கப்பட்டன ரிஷபம்-கோழி-விதைக்கலாகாது-அபரபட்சத்துச் சதுர்த்தசியிற் பிற்கூறுகூகை-அமாவசை-முற்கூறு நாய்- பிற்கூறு-பாம்பு-பூர்வபட்சத்துப் பிரதமையில்முற்கூறு-புழு- இவையுவாச்சூழ்ந்தகரணம் என்றும்பேராம் இவைவிலக்கப்பட்ட கரணமூத்தும் என்றவாறு. (௫௫)

தீதில்கதிர்நின்றநான்கேழுற்பாதஞ் ... ... ...*
சிறந்தபத்தாரகம்பம்பதினைந்தாகிற்... ... ...*
கோதிலயன்கண்டமிருபத்தொருநாட்காலன் ... *
கொடிதாகுமிவைசாலக்கொடுமைசெய்யும்... ...*
ஓதியசேய்நின்றநாட்கேழுற்பாதம் ... ... ...*
மோங்கியபத்தேற்றிகரிபதினைந்தாகிற் ... ... *
காதியிடுகண்டமெழுமூன்றுநாளேத் ... ... *
காலனிவைநல்வினைக்குகழித்தார்நூலோர் ... *

(இ-ள்) ஆதித்தனின்றநாட்கேழாநாள்-உற்பாதம்-௰-ம்-நாள்-கம்பம்-௰௫-ம்-நாள்-அதிகண்டம்-௨௧-ம்-நாள்-காலன்-செவ்வாய்நின்ற நாளுக்கேழாம்நாள்-உற்பாதம்-௰-ம்-நாட்திகிரி-௰௫-ம்-நாள்-கண்ட

ம்-௨௧-ம்-நாள்-காலன்-இவையாகாது-எ-று. (௫௨)

நூலறியும்புதனின்றநாளுக்கெட்டும் ... ... ... *
நோக்கயிருபதிறனும்பதினெட்டுங்கண்டங் ... *
கோலநெடும்புகற்கொன்பானேழுங்குற்றங் ... ...*
குருவுக்குமொன்பானேழ்கொடியதாகும் ... *
நீலனுக்குப்பதினொன்றுமஞ்சுபத்தும்... ... ...*
நிகழ்ந்தவிருபதுமாறும்பந்ததெசமெனக ... *
பாலனையமொழிமடவாய்பாம்புக்கேழ்நாட் ... ...*
பரிகமிங்கிவையனைத்தும்பழித்தார்நூலோர் ... *

(இ-ள்) புதனின்றநாளுக்கு-௮-௨௬-௰௮-ம்- கண்டமெனக-வியாழம்நின்றநாளுக்கு-௯-௭-ம்-வெள்ளிநின்றநாளுக்கு-௯-௭-ம்- குற்றம்-சனிநின்றநாளுக்கு-௰௧-௫-௰-௨௯-ம்-பந்ததேசமெனக-பாம்புநின்றநாளுக்கு-௭-ம்-நாட்பரிகமென்றுபெயராம் இவையெல்லாஞ்சுபகன்மங்களுக்குவிலக்கப்பட்டன-எ-று. (௫௩)

## லத்தைஇராசிவிஷம்.

மேலிரவிநின்றதன்னீராறையுதைக்கும் ... ... *
வியாழமிருமூன்றுசேய்மூன்றுசனியெட்டாம் ... *
மாலவன்பின்னிருமூன்றுமதியிருபத்திரண்டு... ...*
வாளரவமெட்டைந்துபுகர்பின்னுளுதைப்பர் ...*
சாலவின்னுளிற்கொடியாமேடங்குண்டை... ... *
தனுக்கன்னிதலையரவமரியாழ்கும்பங் ... ... *
கோலினிடைகழுகுண்ணுங்குளிர்மீன்தேள்மகரங் ...*
கொடும்பன்றிகடையிலுண்ணுமிவையுமறக்கொடிதே.

(இ-ள்) ஆதித்தனின்றநாளுக்கு-௰௨-ம்- நாளையுதைக்கும்- இப்படிக்குவியாழம்-௯-ம்-நாளும்-செவ்வாய்-௫-ம்-நாளும்- சனி-௮-ம்-நாளும்-புதன்-பின்-௯-ம்-நாளும்-திங்கள்-பின்-௨௨-ம்-நாளும்-பாம்பு- பின்-௮-ம்-நாளும்-வெள்ளி-பின்-௫-ம்-நாளும்-உதைக்கும்-இந்நாட்கள்-சுபகாரியத்துக்காகாதென்பது-மேஷம்-ரிஷபம்-தனுசு- கன்னி-இவைமுற்கூறு-விஷம்பாம்புண்ணும்-சிம்பம்-மிதுனம்- கும்பம்-துலாம்-இவைநடுக்கூறுகழுகுண்ணும்-க-ம்-கடகம்- மீனம்- விருச்சிகம்-மகரம்-இதுகடைக்கூறு-பன்றியுண்ணும்-இவையாதொரு காரியத்துக்குமாகாது-எ-று. (௫௪)

கொடுங்குழையாய்தக்கிழமைதாங்கள்முதலாய்க் ... *
குறித்தொருவன்கிழமையினைக்கோட்களேழு ...*
மடங்கவுண்ணுமைமுக்காற்கடிகைதன்னி ... ...*
லாதித்தனூண்காலனுதையமாகும் ... ... ...*
நெடுங்குருவூண்யமகண்டன்புந்தியத்தன் ... ... ...*
நீலனூண்குளியனிவை நினைக்கலாகா ... ... ...*
கடுங்குளியனூறேத்தலானையேறல் ... ... ... ...*
கால்நாட்டல்நெல்விடுதல்கருமமாமே ... ... ...*

(இ-ள்) தந்தாங்கிழமை தந்தான்முதல் பகல்நாழிகையை ஏழுகோளுமடைவே மூன்றேமுக்கால்நாழிகை- யொருவூணாக வுண்பார்கள் இவையீற்றில் ஞாயிறி நூண்காலனுதையமென்றுபெயர் வியாழத்தினூண்யமகண்டம்- புதனூண்- அர்த்தபிரகரன்- சனியினூண்குளியன் இவைசுபகன்மங்களுக்கு விலக்கப்பட்டன- குளியனில் அகமேறுக்க-ஊரேற்ற- வாகனமேற - கம்பம்நாட்ட - தானியமிட்டுவைக்க மிகவும் நன்றென்றவாறு. (௫௫)

## யோகினி.

கருதுமூதற்பக்கமுடன் நவமிகிழக்காகுங் ... ...*
களிப்புடையபதினொன்றுமூன்றுந்தென்கிழக்காந் *
தெரியிலொருபதின்மூன்றுமைந்துந்தெற்காஞ் ...*
செப்பரியபன்னிரண்டும் நான்குந்தென்மேற்கு...*
மருவுபதினான்காறுமேற்குவாவேழ் ... ... ...*
வடமேற்காந்தசமியுடனிரண்டும்வடக்காகு ... ...*
மூரியவிருநான்குவடகிழக்கேயுண்ணும் ... ... ...*
யோகினிமுன்னிடந்தீயவெழுழிந்ததிசைநன்றே ...*

(இ-ள்) பிரதமையும் நவமியும் கிழக்கேயுண்ணும் - ஏகாதசியும் திரிதியையும் தென்கிழக்கு - திரயோதசியும் பஞ்சமியும் தெற்கு- துவாதசியுஞ் சதுர்த்தசியுந்தென்மேற்கு-சதுர்த்தசியும் சஷ்டியும் மேற்கு-பூரணையுஞ்சத்தமியும் வடமேற்கு- தசமியும்விதியையும் வடக்கு-அஷ்டமிவடகிழக்கே நிற்கும் இப்படிவரப்பட்ட யோகினி முன்னுமிடமுந்தீதாம்- பின்னும்வலமும் நன்று-எ-று. (௫௬)

## ஆகாசபாதாளநத்தை.

நன்றுனதிசையெட்டுமுதற்பக்கங்கிழக்காம் ... ... *
நாலிரண்டுதிசைநவமிவிண்ணிலுண்ணுஞ் ... ...*

சென்றுரும்பூதலத்திற் றசமியுன்னுந்... ... ...*
திரியவுமிவ்வகைமுப்பான்றிதியின்சேரு ... ...*
மென்றுருந்தென்கிழக்குநிலம்விண்ணுந்தீதா... ...*
மெதிருமிடமும்வழிபிலெவரும்போகார் ... ...*
மின்றுருமருங்குழலாய்வலமும்பின்னு ... ... ...*
மிகநல்லன்சுக்கிரனல்வினைகட்கெல்லாம்... ...*

(இ-ள்) கிழக்குமுதலாக எட்டுதிக்கிலும் பிரதமைமுதலாகவெட் டுநிற்கும்- நவமி ஆகாசத்திலும் - தசமிபூமியிலும் நிற்கும்- ஏகாத சிமுதலாக அபரபக்ஷத்துபஞ்சமிபறுதியாக முன்புபோல்நிற்கும் சஷ்டிமுதலாகவு மூவர்வறுதியாக முன்புபோல்நிற்கும் இப்படி மூ ப்பதுதிதியும் நிறுத்துவதுஇவை யிதநில்தென்கிழக்குநிற்கும் பக்க ங்களும் ஆகாசத்திலும் பூமியிலும் நிற்கும் பக்கங்களு மெதிருமி டமும் யாத்திரை முதலானவைக்கு விலக்கப்பட்டன அல்லாதபக்கங் களும் வலமும்பின்னும் சுக்கிரன்மிகவும்நல்லன்-எ-று. (௫௭)

நந்தை - பத்திரை - சயை - ரித்தை - பூரணை.

வினவுமுதற்றிதியாறுபதினொன்றுநந்தை ... ...*
மேலிரண்டேழ்பன்னிரண்டும்விளங்கியபத்திரையா*
மினியவொருமூன்றெட்டுப்பதின்மூன்றுஞ்சயையா *
மிருத்தையென்பானான்கினுடனவமிபதினான்கை *
புனைகுழற்பஞ்சமியும்பத்துமுவாத்தனும் ... ...*
பூரணமென்மறியலவன்கோல்மகராஞ்சரமாந் ...*
தனிவிடைதேள்குடஞ்சிங்கம்நிலையிராசிதானு... ...*
மிதுனங்கன்னிமீனுபையமென்னத்தகுமே... ...*

(இ-ள்) பிரதமையும் சஷ்டியும் ஏகாதசியும் நந்தையென்றறிக- விதியைசத்தமி துவாதசி பத்திரையென்றறிக - திரிதியை அஷ்டமி திரயோதசியும்செயதிதியென்றறிக- சவுத்தி நவமி சதுர்த்தசி இரு த்தையென்றறிக- பஞ்சமி தசமி உவாவும்பூரணையென்றறிவது-மே ஷம்- கற்கடம்- துலாம்- மகரம்- இவைசரராசி - ரிஷபம் - சிங்கம்- விருச்சிகம்- கும்பம்- இவை- ஸ்திரராசி- மிதுனம்- கன்னி - தனுசு- மீனம்- இவை- உபயராசி-எ-று. (௫௮)

பஞ்சாங்கபலன்.

தருமிரவிசனிசெவ்வாய்பாம்புதீக்கோள்... ... *
சந்திரனும்பின்றீபன்முன்புநல்லன்... ... ... *

யிருமறையோன்புதன்வெள்ளிநற்கோளெல்லா... *
யிகநல்லருச்சமிராவாரபயனில்லைத்... ... ...*
தொகுதிதியுங்குணமொன்றுகரணமிரண்டாகுந் ...*
துய்யநாளொருநான்குகிழமையெட்டாம் ... *
முகிழ்முலையாயோகபலன்பதினறென்பா ... ...*
முகுர்த்தபலன்முழுத்தபலன்மொழியின்மாதே... *

(இ-ள்)ஆதித்தன்சனி- செவ்வாய்பாம்பு- தீக்கோளென்றும் சந்திரன்அபரபக்ஷத்துத்தீயன்-பூர்வபட்சத்துநல்லன்-வியாழம்-வெள்ளிபுதன்-நற்கோளென்றும்எல்லாருந்தந்தாம்-உச்சஸ்தானங்களில்நல்லொன்க-இராவைக்குவாரபலன்இல்லையென்க- பட்சத்தின்பலமொன்று-கரணத்தின்பலமிரண்டு-நாளின்பலம் நாலு - வாரபலன்எட்டு-யோகபலம்பதினறு-முகுர்த்தபலன்அளவில்லை-எ-று. (௫௯)

நோக்குபலன்.

மாலவன்றனுதையமாயிரங்குற்றங்கெடுக்கும்... *
வண்புகரோன்வன்பதினாயிரங்குற்றமாய்க்கும்... ...*
சீலமறையவனூறாயிரங்குற்றந்தீர்க்குஞ் ... ...*
சித்தசுபயோகம்நூறாயிரங்குற்றஞ்செகுக்குஞ் ...*
சோலையிளங்குயிலனையாயமுதயோகந் ... ... *
தோன்றியிடத் தீமையெல்லாந்துரப்புண்டோடும்... *
கோலவிளங்கதிர்கண்டவிருள்போற்றேயும்... ...*
குருவெள்ளிபுதனோக்கிற்குற்றமெல்லாம் ... ...*

(இ-ள்)புதன்ஆயிரங்குற்றந்தீர்க்கும்-வெள்ளிபதினாயிரங்குற்றந்தீர்க்கும்-வியாழமுதயம்நூறாயிரங்குற்றந்தீர்க்கும்- சித்தசுபயோகம் நூறுநூறாயிரங்குற்றந்தீர்க்கும்- அமிர்தயோகம் எல்லாக்குற்றமுந்தீர்க்கும்-புதன் வெள்ளி வியாழம்நோக்குண்டாகில் ஆதித்தனைக்கண்ட விருள்போல் எல்லாக்குற்றமும்நீங்கும்-எ-று. (௬௰)

ஆக்ஷிஉச்சம்.

எல்லிரவிதனக்குறவுவியாழந்திங்கட் ... ... *
கிரணியனும்புதனுஞ்செய்க்கினியபுதன்வெள்ளி......*
புல்விலெழும்புதற்கருக்கனொழியநல்லர் ... ...*
பொன்னவற்குச்சேயொழியப்பொருந்தாரில்லை......*
நல்லபுகற்குறவுசனிசெவ்வாய்புந்தி... ... ...*
நான்மறையோன்சனிக்குறவுபுதன்பொன்வெள்ளி ...*

யல்லவர்களெல்லாரும்பகைவரென்று ... ...*
றாரணங்கேயருந்தமிழ் நூலடையவாய்ந்தோர்... ... *

(இ-ள்) ஆதித்தனுக்குறவுவியாழம்- சந்திரனுக்குறவுவியாழமும் புதனும்-செவ்வாய்க்குறவுபுதனும்-வெள்ளியும்- புதனுக்கு ஆதித்த னொழியமற்றெருறவு- வியாழத்துக்குச்செவ்வாயொழியமற்றெருறவு- வெள்ளிக்குறவு-சனி- செவ்வாய்-புதன்- வியாழம்- சனிக்குறவு- புதன்- பொன்- வெள்ளி-எ-று, (௯க)

ஆய்ந்தகதிர்காக்ஷிசிங்கமதிக்கலவன்சேய்க்காடு...,...*
தேள்புதற்கரிவைமிதுனம்பொன்னவற்கு ... ...*
வாய்ந்தசிலைமீனம்புகற்குந்துலையிடபஞ்சனிக்கு *
மகரகும்பமிவையாக்ஷிவாளிரவிக்காடு ... ... ... *
யேய்ந்தமதிக்கேறரிக்குக்கலைபுதற்குக்கன்னி... ...*
யிரணியற்குக்கற்கடகமெழில்புகற்குமீனம் ... ...*
சாய்ந்தசனிக்குத்துலையுமாவுதேளுச்சங் ... ...*
கனங்குழையாயேழிடங்கள்நீசமெனக்கருதே... ...*

(இ-ள்) ஆதித்தனுக்காக்ஷிசிங்கம்- சந்திரனுக்குக்கற்கடகம்-செவ்வாய்க்குமேஷம்விருச்சிகம்- புதனுக்குகன்னிமிதுனம்- வியாழத்துக்கு தனுசுமீனம்-வெள்ளிக்குரிஷபம்துலாம்- சனிக்குமகரம்கும்பம்- இவையாக்ஷியென்றறிக- ஆதித்தனுக்குச்சம் மேஷம்-சந்திரனுக்குச்சம்ரிஷபம்-செவ்வாய்க்குச்சம்மகரம்-புதனுக்குச்சம்கன்னி- வியாழத்துக்குச்சம்கடகம்- வெள்ளிக்குச்சம்மீனம் - சனிக்குச்சம்துலாம்- பாம்புக்குச்சம்விருச்சிகமென்றறிவது-உச்சத்துயேழ மிராசிநீசம்.

## காற்கம்பம்கிரகவலி.

கருத்துடையவொன்றுநான்கேழுபத்தாம்... ... *
கண்டங்களுதையம்நீர்பாடுச்சமென்பர் ... ...*
பொருத்துடையபுதன்வியாழமுசைபத்துவலியர் *
புகர்மதிநீர்பாம்புசனிபாட்டிற்பூமன் ... ... ...*
தெரித்தகதிருச்சியில்வலியபுதன்றனக்குச்... ...*
செயவலிதுமேசக்குமந்தன்மற்றதற்குச்செம்பொன்...*
குருத்தனுக்குப்புகர்புகர்க்குமதிமதிக்குக்கதிரோன்*
கொடுங்கதிரோன்றனக்கரவுகோல்வளையாய்வலிதே...*

(இ-ள்)க-ச-எ-ய-ம்- இவைகளுதையமென்றும்- நீர்க்கீழென்றும் பாடென்றும்உச்சமென்றும்நாலுகண்டத்தின்பெயராம் இவையிற்றி

ர்-புதன்வியாழம்உதைபத்துவலியர்-வெள்ளி சந்திரன்நீர்க்கீழ்வலிய
ர்- சனிபாப்புபாட்டில்வலியர்-செவ்வாயாதித்தன் உச்சியில்வலியரெ
ன்றறிவது- புதனுக்குச் செவ்வாய்வலிது-செவ்வாய்க்குச்சனிவலிது-
சனிக்குவியாழம்வலிது- வியாழத்துக்கு வெள்ளிவலிது-வெள்ளிக்கு
ச்சந்திரன்வலிது-சந்திரனுக்கு ஆதித்தன்வலிது-ஆதித்தனுக்குப்பா
ம்புவலிது-எ-று, (சூரு)

## பகல்நாழிகை

வலியதகராவணியொன்றிருகால்சுன்னிடபமங்கைமுதற் [சுன்
னிருகாலொன்றுபாழ்ம்காலொருமூன்று ...
மூலவில்லிருமுக்காலோரிரண்டலவன்மீன ... ...*
மோரிரண்டுமொன்றரையுமொன்றுந்தேளிரண்டு *
பொலியுமிரண்டரைமூன்றுவில்லுமூன்று ... ...*
பொருந்தியமூன்றரை நான்குபுல்வாய்நான்கு ...*
பல்னிகழ்மூன்றரைமூன்றுகுடமூன்றுமிரண்டரையும்*
பகரிரண்டுங்கழியவச்சாய்பாதச்சாயலாமே ...*

(இ-ன்) சித்திரை- ஆவணி- முதல்பத்துக்கு-க-நடுப்பத்து-உ பிற்
பத்துக்குச்சுன்- வைகாசி- புரட்டாசி- முற்பத்துசுன் - நடுப்பத்து
ஊ- பிற்பத்துக்கு-க-கார்த்திகை - முற்பத்துக்கு- உ- நடுப்பத்து-சஊ
பிற்பத்து-உ- ஆடி- பங்குனி- முற்பத்து-உ- நடுப்பத்து- சஊ- பிற்
பத்து-க-ஐப்பசி- ஆனி-முற்பத்து-உ-நடுப்பத்து- உஊ- பிற்பத்து
ரு-மார்கழி-முற்பத்து- ரு- நடுப்பத்து- ருஊ- கடைப்பத்து-ச- தை
முற்பத்து-ச. நடுப்பத்து-ருஊ-பிற்பத்து-ரு- மாசி-முற்பத்து-ரு-நடு
ப்பத்து- உஊ- பிற்பத்து- உ- இப்படியவச்சாயைகழியும் பாதச்சா
யையெப்பொழுதும் அளாயடிகழியும்-எ-று. (சூச)

அரிமகரந்தேள்மிதுனமஞ்சேகாலா ... ... ...*
மாடுகயல்நாலேகாலரிவைதுலையஞ்சா... ... ...*
மெருதுகுடம்நாலேமுக்கால்வில்லிலலவ ...... *
னிருகடிகையஞ்சரையூணிராசிகள்பன்னிரண்டும்...*
விரவியசித்திரைமுதற்பங்குனியீறாக ... ... ...*
மேடமுதல்மீனத்தம்வெய்யோனும் ... ...*
பருதிநிலையோராயறிந்தாரோராக்கும்... ... ...*
பண்டுரைத்தநாழிகையாற்பகற்கடிகைபகரே ...*

(இ-ன்) சிங்கம்- விருச்சிகம்- மகரம்- மிதுனம்- நாழிகை - ருவ-

மீனம்- மேஷம்- சவ- துலாம்- கன்னி- ரு- ரிஷபம்- கும்பம்- சஉ தனுசு- கடகம்- ருஉ- இப்படிபன்னிரண்டுராசியுமித்தனைவுகண்டு சொல்வது-எ-று. (சரு)

பகர்ந்தபகல்நாழிகையைப்பாதிசெய்து ... ...*
பாதிதனையேழினாற்பெருக்கிப்பார்லில் ... ... ...*
நிகழ்ந்தவடியளந்தவச்சாயைப்பாதச்சாயை ... ... *
நீக்கிநின்றவடிமேலேழுங்கூட்டித் .. ... ...*
திகழ்ந்தமுதற்றொகையதனுக்கிதனையீய்ந்து ... ...*
சிறந்தபலஞ்சென்றநாழிகையின்பின்பேற் ... *
புகழ்ந்திரவிபடுக்கடிகையிவையதாமென்று ... ...*
பொலன்குழையாய்பகற்கடிகைபொருந்தச்சொல்லே

(இ-ள்) முன்புசொன்னபகல்நாழிகையை இருகூறுக்கிஒருகூறினை யேழிற்பெருக்கி அடிஅளந்தவச்சாயை பாதச்சாயை நீக்கிநின்றவடிமேல் ஏழுங்கூட்டியதனை முற்பட்டதொகைக்கீய்ந்த பலஞ்சென்றநாழிகையாம்உச்சிக்குப்பின்ஈய்ந்தபலன் அஸ்தமிக்கும் நாழிகை.

## இராத்திரிநாழிகை.

சொல்லமுதநாட்பின்பொன்னீரண்டேமுக்கால் ... *
தொழுமராலிருமுக்கால்மூம்முக்கால்ரோணி ... *
புல்லியமானிரண்டரையாதிரையொன்றேமுக்கால் [லி
புணர்தம்பொருவருமூன்றேமுக்காற்பூசமிரண்டேகா
வச்லரவொன்றேமுக்காலிரண்டேகாலா ... ... *
மகம்பூரமுத்திரமோரிரண்டாமத்தம் ... ... *
சொல்லுமிருமூன்றேகால்சித்திரையொன்றரையாந் *
தீபமொன்றேமுக்கால்மூறமிறண்டேகாலே ... *

(இ-ள்) பரணி- உஙு- கார்த்திகை- கஉ- ரோகணி- உவ- மிருகசீரிடம்-உஉ- திருவாதிரை- ௧ஙு-புனர்பூசம்- சுஙு- பூசம்-உவ- ஆயிலியம் கஙு- மகம்- உவ- பூரம்- உ- உத்திரம்-உ- அத்தம்- கவ-சித்திரை-சஉ சோதி-கஙு- விசாகம்-உவ-இப்படிநாழிகைதாழ்ந்துவரும்-எ-று. ()

கார்ப்பனையொன்றேமுக்காலொன்றேகால்கேட்டை ...*
கருதியமூலம்பொய்கையிரண்டேகாலாடி ... ...*
யேற்குமிரண்டரையோணமூன்றேகால்விட்ட... ...*
மிரண்டுசெக்கொன்றேமுக்கால்முக்காலேபூரட்டை *

நாற்றிலவுத்திரட்டாதியிரண்டேமுக்கால் ... ... *
கலமிரண்டேகால்மாவொன்றேகாலாஞ் ... ... *
சேர்த்தவந்திதனிலுச்சம்நாளையிஞ்ஞன்றறிந்து ... ... *
சேயிழையாயதுமுதலாய்ச்செல்கடிகைசெப்பே *

(இ-ள்) அனுடம்- கஅ- கேட்டை- கவ-மூலம்-உவ- பூராடம்-உவ உத்திராடம்- உ௦- திருவோணம்- ருவ- அவிட்டம்-உ-சதையம்-கஅ பூரட்டாதி- அ- உத்திரட்டாதி- உஅ- ரேவதி- உவ- அசுவதி-கவ-நா ட்குமென்றும்சொல்வது-எ-று. (கூஅ)

## லக்கின அங்குசம்.

செப்பியசொல்காற்கடிகைபெருக்கியாறில்ற்றை ...*
திதியெய்துகதிர்நின்றவோராமுதலாக ... ...*
முப்பதினாற்கழித்துநின்றவோரைமூன்றே ... ...*
யாறுமாவரைப்பாகைமுறைமுறையேயுண்பா ...*
ரைப்பசியிற்சேய்வெள்ளிபுந்திதிங்களடுப்ப ... ...*
வருக்கன்புதன்வெள்ளியழலோனூ ... ... ... *
லொப்பரியபொன்காரிசனியேபொன்னு ... ...*
ளொழிந்தவையுமிவ்வகையேயுண்பரெனவுரையே *

(இ-ள்)சென்றநாழிகையை-கூ-ல்-பெருக்கிஅற்றைத்திதியையும்அ தனுடன்கூட்டிஆதித்தனின்றராசிமுதலாக வொருராசிக்குமுப்பதா கக்கழித்துநின்றது அப்போது உதையராசியாம்- உதையராசியிற்செ ன்றபாகத்தைஅரிந்து ருவபசு)பாகைக்குஒரு அங்கிசமென்றறிவது- அசுவதிமுதற்கால்-செவ்வாய்-உ-ம்-கால்-வெள்ளி- ரு-ம்-கால-புதன்- சு-ம்-கால்-சந்திரன்-பரணிமுதற்கால்- ஆதித்தன்-உம்-கால்-புதன்-ரு- ம்-கால்-சுக்கிரன்-சு-ம் கால்-செவ்வாய்-கார்த்திகைமுதற்கால்-வியாழ ம்-உ-ம்-கால்-சனி-ரு-ம்-கால்-சனி-சு-ம்-கால்-வியாழம்-இவ்வொழிந்த நாட்களும்இவ்வகையேயொட்டிக்கொள்வது-எ-று. (கூகூ)

## த்ரோகாணம்கோட்கூறுவியசனம்

உரைத்திடிவோரிராசியொருமூன்றுகூறு ... ...*
வோரையுடையவனுண்ணுமுதலஞ்சாமோரா... ...*
கருத்துடையநடுவொன்பானோராகாப்போன் ...*
கடையுண்ணுந்திரேக்காணமிவைகாலவோரா... ...*
யருக்கன்முதல்சனியீறுங்கிழமையேழு... ... *
மந்தனன்முன்புதனீருவுண்பான்முன்னே ... *

சரித்தவிவற்கவ்வாறுங்கோட்கள்வந்து... ... ...*
தக்கவிரண்டரைகடிகையுண்பரெனச்சாற்றே... ...*

(இ-ள்- ஒருராசியை-௩-கூறாக்கியிராசியையுடையவன்முதற்கூறுண்ணும்-௫-ம்-இராசியுடையவன்நடுவிற்கூறுண்ணும்-௯-ம்- இராசியுடையவன்கடைக்கூறுண்ணும்-இவ்வகையெல்லாயிராசிகளுக்குந்திரேக்காணமொட்டிக்கொள்வது-காலவோரை கொளவரும்படி ஞாயிறுமுதல்சனியீறாகவெழுகிழமையும்-வியாழமுதல்புதனீறாக எ-ம்- அடைவேசிறுகாலமுதல்வந்து-௨½-நாழிகையுண்ணும்முதல்-௨½-உண்டகோளுக்கு-௬-ம்-கோள் பின்பு-௨½- நாழிகையுண்ணும்- இவ்வகையெல்லாகோட்களும்உண்பர்-எ-று (௭௰)

சாற்றிடிலோரையொன்றுபாகைமுப்பான்... ...*
சமனிரட்டையோரைவியனொற்றைதம்மி ... ... *
லேற்றவைத்தொடைந்தெட்டேழைந்துகூறு... ...*
வெரிகாரியிரணியன்மால்புகருண்பர்வியனில் ... ...*
மாற்றுச்சமனில்வெள்ளிமால்பொன்காரி... ...*
மண்மகனுங்கோட்கூறுவளைக்கைநல்லாய் ... ...*
தோற்றுவியன்முதற்பாதிக்கதிர்பின்திங்கள்... ...*
சுடற்சிலவுசமந்திங்கள்முதற்பின்றிங்கள்சூழ்கதிரோ;...*

(இ-ள்)ஒருமிராசியை-௩௰- பாகம்பண்ணி ஒற்றித்தவிராசிவியன்-இரட்டித்தராசி-சமன்-இவையிற்றை-௫-ம்-௫-ம்-௮-ம்-௭-ம்-௫-ம் ஆக முப்பதுபாகையையும்-௫- கூறாக்கிஇதில்வியனிராசியில்- முற்கூறு-செவ்வாய்-௨-ம்-கூறு-சனி-௩-ம்-கூறு-வியாழம்-௪-ம்- கூறுபுதன்-௫-ம்-கூறுவெள்ளி ஆக இவ்வகையேயுண்பர் சமனிராசியில்வெள்ளிபுதன் வியாழம்சனி செவ்வாய் என்றிவ்வடைவேகோட்கூறுண்ணுமென்றறிவது சுடற்சிலவுகோளுண்ணும்படிவியனிராசியில்முதற்கூறு-௰௫-ம்-பாகை ஆதித்தனுண்பிற்கூறுசந்திரனுண் சமனிராசியில் முற்கூறுசந்திரனுண்பிற்கூறு ஆதித்தனுண் இவ்வகைபார்த்துக்கொள்வது

## விதானங்கள்.

கதியுடைபுணர்ச்சிமந்தன்கருதிபோகாதுநல்வாய் ... ...*
முதுமையிற்கல்விமுன்னூல்முடிமணம்பொற்பூவின்றூன் *
விதைமுதல்போக்குச்சாந்திபதிட்டைவீடெடுத்தல்மேலும் *
பொதுவியல்விதானமெல்லாம்புகல்செய்வன் பூவையன்னாய்*

(இ-ள்) நிஷேகம்-புங்கவசனம்-சீமந்தம்-நாமகரணம்-கரணவேதம்- அன்னப்பிராசனம்- சவுளம்- வித்தியாரம்பம்-உபநயனம்-அபிஷேகம்-விவாகம்-கிருஷியாரம்பம்-பீஜாவாபனம்- யாத்திரைசாந்தி-பிரதிஷ்டை-கிரஹாரம்பம்-பொதுவியல்விதானங்களெல்லாஞ்சொல்லுவன்-எ-று, (எஉ)

## நிஷேகம்.

பூவையேபயனேயார்பூத்தநாள்முதல்மூன்றுநாளு... ...*
மேவிடார்புணர்ச்சிபின்னேவிரும்புநாட்பன்னிரண்டா*
மேவியகருவதுண்டாமிங்கிதிலிரட்டைநாளாண்... ...*
பாரியவொற்றைநாளேற்பெண்ணெனப்பகர்மினீயே*

(இ-ள்) ஸ்திரீபூத்தநாள்முதல்மூன்றுநாளும்விலக்கப்பட்டனமேற்பனிரண்டுநாளுங்கெற்பமுண்டாமிதிலிரட்டித்தநாளெல்லாம் -ஆண்-ஒற்றித்தநாளெல்லாம்பெண்பிரசையுண்டாம்-எ-று, (எங)

பகர்தருசோதிமூலம்பனையுருளோணந்தோணி... ...*
தகவிலுத்திரங்கள்மூன்றுஞ்சதையநாளத்தஞ்சாலப்...*
புதல்வர்கள்புணர்ச்சிவிட்டஞ்சித்திரைபுணர்தம்பூசம் *
மகசிரங்குதிரையிந்நாள்மத்திமந்தீதுமற்றே... ...*

(இ-ள்) சோதி-மூலம்-அனுஷம்-ரோகணி-திருவோணம்- ரேவதி-உத்திரங்கள்-மூன்றும்-சதையம்-அத்தம்- இவைநிஷேகத்துக்குச்சுத்தமென்பது-அவிட்டம்-சித்திரை-புணர்பூசம்- பூசம்-மிருகசீரிடம்-அசுவதி- இவைமத்திபம்-அல்லாதவையாகாது-எ-று, (எச)

தீதுவாவெட்டிரித்தைதீயவாவாரஞ்செப்பி... ... *
லோதருபிறந்தநாட்கள்பகலுடனொழிக்கப்பட்ட ... *
தாதவிழ்குழலிகேவலம்சராசிமிகவுநன்று ... ...*
மேதகுகோட்களுக்கில்மிக்கவும்விழுமிதாமே ... *

(இ-ள்) உவாஅஷ்டமி- ரித்தை- ஞாயிறு- செவ்வாய்- சனி- ஜென்மநக்ஷத்திரங்களும்- பகலும்- விலக்கப்பட்டன அல்லாதவைகளுஞ்சராசிகளுமுத்தமம் மற்றராசிகளும் சுபக்கிரக நோக்குண்டாகில் ஆம் - என்றவாறு. (எரு)

விடிமியமதிகெண்டங்கள்வெள்ளிபொனஞ்சோடோன்
...ம்நல்லர்புத்திபேழிஞேடோன் பானல்ல[பா

கழிவுறுபாபர்பன்னொன்றொருமூன்றுநல்லர் ... *
செழுமணிப்பூணினர்கள்புணர்ச்சியைச் செப்புங்காலே

(இ-ள்) உதையம்-ச-மிடம்-ய-மிடம்-சந்திரனல்லன்- வெள்ளியும் வியாழமும்-ரு- மிடம்-கூ-மிடம்-உதையத்திலும்நல்லர்-புதன்-எ-மிடம்-கூ-மிடம்-நல்லன்-பாபர்-யக-மிடம்-கூ-மிடம்-ரு-மிடம்-நல்லர்

## புங்கசவனம்.

செப்பியதிங்கள்மூன்றில்திருவோணம்பூசஞ்சேர்ந்த *
வொப்பருநற்கோள்வாரத்துதித்திடவெள்ளிதிங்கள்...*
வெப்புருவிருத்தைகன்னிவீணைநண்டெட்டிற்கோள்கள்
துப்புறுபாவாய்நீக்கித்துய்யபும்சவனஞ்சொல்லே...*

(இ-ள்) மூன்றுமாதத்திற்பூர்வபக்ஷத்திலே-திருவோணம்- பூசம்-இந்நாட்களில் சுபவாரங்களிலே- வெள்ளி - திங்களுதையமாக-ரித்தை-கன்னி- மிதுனங்-கடகம்-நீக்கி-அஷ்டமசுத்திவுண்டாகவும்ஆகாசம்நிர்மலமாகவுங்கொள்வது-எ-று. (எஎ)

## சீமந்தம்.

சொல்லுநான்காறெட்டிங்கட்டோணிமான்றலைபாரோண
புல்லுமுத்திரங்களத்தம்பூசங்கள்புகட்கோள்வாரம் [ம்
நல்லவேதிரட்டைபக்கம்நவமியோடுவாத்தேள்சிங்க...*
மல்லவேசீமந்தத்துக்கட்டமசுத்தமாக்கே ... ...*

(இ-ள்) ச- மாதம்- சா- மாதம்-அ- மாதத்திலேயாதல்-பிராமணராகில்மூன்று அவற்குச்சீமந்தம்பண்ணுவது-இரட்டித்தபக்கங்களும்-நவமியுந்தீது- தீயவிராசிகளில்- விருச்சிகம்- சிங்கம்- ஆகாது-ஒழிந்தவையீற்றிலே சுபக்கிரகவாரத்திலும்-ரேவதி-மிருகசிரிடம்-ரோகணி- திருவோணம்- உத்திரங்கள்மூன்றும்பூசங்கள்-இந்நாலுபக்கங்களும்இருத்தைநீக்கி அஷ்டமி சுத்தமாகக்கொள்வது-எ-று. (எஅ)

ஆக்கியசீமந்தத்துக்கமைவாரந்திங்களெட்டில்... ...*
மாக்கதிரேறுபோதின்மருவுமூற்பக்கத்தேழி ... ...*
லாக்கியபன்னிரண்டிலுரோகணியோணராகில் ...*
பூக்குழல்மடவாய்மாயோன்பெலியிடப்புலவர்சொன்னார்

(இ-ள்) எட்டுமாதத்திலேறும்பொழுது- பூர்வபக்ஷத்திலே- சத்தமி- துவாதசியானபக்கங்களிலே- ரோகணி- திருவோணம் - இந்நா

ட்கவிலேசுபக்கிரகங்கள் நோக்குண்டாக விஷ்ணுவெலியிடுவது.()

## மனைபுகுதல்.

புலந்திருவனையாய்கேளாய்பெருமனைபுகுநாளத்தஞ் *
சிலம்பின்மான்றலைமாவோணஞ்சித்திரையுத்திரங்கள் *
கலம்புனைபுணர்தஞ்சோதிகாரியான்புகர்மால்திங்கள் *
நலங்குடந்தேழிருத்தைமெட்டிடத்கோள்தவிரநன்றே *

(இ-ள்) சுத்திரகிரகப்பிரவேசம்-அத்தம்- மிருகசீரிடம்- அசுபதி-திருவோணம்-சித்திரை-உத்திரங்கள்-ங-அனுசம்-புணர்பூசம்-சோதி-சனி- வெள்ளி-புதன்-திங்கள்-இவைநல்லது விருச்சிகம்- இருத்தை-இவைதவிர அஷ்டமசுத்தியுண்டாக சுபக்கிரகங்கள் நோக்குண்டாகக்கொள்வது-எ-று. (அய)

## பிள்ளைப்பிறப்பு.

நன்றநற்குழவிதோன்றும்பொழுதினில் நன்னீராடிக் *
கன்றுரும்பசும்பொன்பூமிகலைபலமறையோர்க்கீந்து
சென்றுமைந்தனைமெடுத்துதிருமுகங்கண்டுசெவ்வேள்.
ஒன்றியசாதகங்கமீரோலையிலெழுதிவைப்பாம்... ...*

(இ-ள்) பிள்ளை பிறந்தபோது பிதாஸ்நானஞ்செய்து பிராமணருக்குத்தானம்பண்ணிய புத்திரர் முகங்கண்டு சாதகமெழுதிவைப்பது- என்றவாறு. (அக)

## நாமகரணம்.

எழிற்பெயரிடுநாள்பத்திலீருரிலோணந்தோணி ... *
வழுத்துமான்றலைபார்மூலமகமத்தஞ்சதையம்விட்டம்,
விழுப்பனேயுத்திரங்கள்விளக்கிருபூசம்நன்றும் [ளார்
மொழித்திடானுவாவையொன்பானொத்திதபக்கத்துள்

(இ-ள்) பிராமணருக்குப்பன்னிரண்டாநாள் அல்லாதவர்களுக்கு முப்பதாநாள் நாமகரணம்பண்ணுவது- திருவோணம்-ரேவதி-மிருகசீரிடம்-ரோகணி-மூலம்-அத்தம்-சதையம்- அவிட்டம்-அனுஷம்-உத்திரங்கள்-மூன்றும்-சோதி-புணர்பூசம்-பூசம்- இவைபக்கங்களில் இரட்டித்தபக்கங்களும் நல்லது நவமியும்-உவாவுமொழிய அல்லாதவைகள் நல்லது-எ-று. (அஉ)

உள்வருதிலயிராசிவுதித்திடவுச்சிமுன்னே ... ...*
எள்ளிருநம்மிநற்கோள்வாரத்தெட்டினிற்கோள்நீக்க *
யொள்ளியபகைநீச்சத்தைநோக்குங்கோளுதையமாற்றி
பிள்ளைதன்னுமஞ்சாற்றிப்பிறைநுதற்கருங்கட்பேதாய்*

(இ-ள்)ஸ்திரராசிகளிலேஉச்சிக்குமுன்னேநற்கோள் வாரங்களிலே அஷ்டமசுத்தியுண்டாகபகைநீச்சக்கோள் நோக்குங்கோளுதையமாற்றிக்கொள்வது-எ-று. (௮௩)

## உவநிஷ்கரணம்.

பேதைகேள்மூன்றுநாளிற்பெண்ணுமூத்திரங்கள்தன்னி
யாதலன்றனக்குச்செவ்வாய்கதிரவன்றன்னைக்காட்டு...[த்
மாதனுன்கானநாளின்மதிபசுத்தன்னைக்காட்டு .. ...*
மோதுவாயுனாக்குச்சொன்னவுவநிடகாலங்காணே ...*

(இ-ள்) பிள்ளைபிறந்த-௱-ம்-நாளாதல்-மூன்றுமாதமாதல் பிள்ளைக்குவிதித்தநாளிலே உவநிஷ்கரணஞ்செய்வது-எ-று. (௮௪)

## காதுகுத்துவது.

காணுமாறேழெண்டிங்கட்கருதுநாளீராதிரோண் ... *
வோணமான்றலைபூசங்களவிட்டமுத்திரங்களத்தந் ... *
தோணிசித்திரையேசெங்கைசுபவாரம்பன்மூன்றீரா -*
ராணிபாமிரண்டுமூன்றஞ்சாறேழ்காதமைக்கலமே...*

(இ-ள்-) ௬-ம்-மாதம்-௭-ம்-மாதம்-௮-ம்-மாதம்- இம்மாதத்தில்-௰௨-ம்-நாள்-௰௬-ம்-நாள்-காதுகுத்துவது திருவோணம்- மிருகசீரிடம்-புனர்பூசம்-பூசம்-அவிட்டம்-உத்திரங்கள்-௩-ம்-அத்தம்- இரேவதி-சித்திரை-திருவாதிரை- இன்னநட்சத்திரங்களில்சுபவாரமும்சுபக்கோளுதையமும்நன்றுபக்கங்களில்துவாதசி-திரயோதசி-துதிகை-திரிதிகை-பஞ்சமி-சஷ்டி-சத்தமி-இவைநல்லது-எ-று. (௮௫)

அளரிகுடந்தேள்தீதுவாடுமான்சுறுவிரண்டு ... ...*
நாளிருபக்கஞ்சேருங்கிழமைகள்நணுகிற்கேடாங் ...*
கோளவையெட்டின்மாற்றிக்கொடுங்கதிருச்சிமுன்னே*
வாளினைவென்றகண்ணாய்வைத்திடுங்காதுவல்லே ...*

(இ-ள்)மிதுனம்-சிங்கம்-கும்பம்-விருச்சிகம்-இதுதீது-மேஷம்-மகரம்-மத்திபம்-அல்லாதவைநல்லது-இரண்டுநாளும் இரண்டுபக்

கரும் சேருங்கிழமைகளாகாது அஷ்டமசுத்தியுண்டாக உச்சிக்குமுன்னே சொல்வதென்றவாறு. (௮௬)

வல்விமூன்றிரண்டைந்தொன்பான்பன்னொன்றேழ்மதிய னல்
புல்லியர்மூன்றுபன்னொன்றழகியபொன்பத்தாறுஞ்... [லன்
சொல்லியவேட்டந்தீயன்சுங்கனெட்டாறேழ்பொல்லா... -*
நல்லனெட்டொழியப்புந்திகாதிடனவிலுங்காலே... ... *

(இ-ள்)ரு-மிடம்-உ-மிடம்-௬-மிடம்-கூ-மிடம்-யக-மிடம்-எ-மிடம்-சந்திரனல்லன்-பாபக்கிரகம்-ரு-சா-யக-மிடம்-நல்லன்-வியாழம்-௰-மிடம்-சா-மிடம்-அ-மிடம்-ஒழிபநல்லன்-வெள்ளி-அ-மிடம்-எ-மிடம்-ஒழிய-நல்லன்-புதன்-அ-மிடம்-ஒழியநல்லன்-எ-று. (௮௭)

## அன்னப்பிராசனம்

சாலமாறெட்டீருரிற்கலமுருன்கைபூசங்கள் ... ...*
சீலமாவுத்திரங்கள்சித்திரை சதையம்மோணங் ... ...*
கோலமான்றலைபுட்சோதியனை குருபுகர்மால்நன்றாண்*
மேனுவாவிரட்டையொன்பான்மீனந்தேளாடொழியமேவே

(இ-ள்)சா-மாதமாதல்-அ-ம்-மாதமாதல்-ஆண்டுநிரம்பினுலாதல்பூர்வபட்சத்திலே ஆகாசம்நிர்மலமானபோது அன்னபிராசனம்பண்ணுவது இரேவதி-ரோகணி-அத்தம்-புனர்பூசம்-பூசம்-உத்திரங்கள்மூன்று-சித்திரை-சதையம்-திருவோணம்-மிருகசீரிஷம்-அவிட்டம்-சோதி-அனுஷம்-இவைநன்று-வியாழம்-வெள்ளி-புதன்-இவ்வாரங்கள்நன்று-உவாவும்-நவமியும்-இரட்டித்தபக்கங்களும் ஆகாது-மீனம்-மேடம்-விருச்சிகம்-இவைவிலக்கப்பட்டன-அல்லாதவைநன்று. ()

மேதைபொன்பானீராறும்வெள்ளியாறேழீராறு ... *
தீதுபத்தடையத்தீதுதிங்களுக்குடையவாகா... ... *
கோதில்நான்கிருமூன்றெட்டுங் குருத்தியன்கொடியோர்
மாதராயாறுபன்னொன்றழகியவாயுளாக்கே... [மூன்று

(இ-ள்)கூ-மிடம்-யஉ-மிடம்-புதன்-தீயன்-வெள்ளி-சா-மிடம்-எ-மிடம்-யஉ-மிடம்-தீயன்-ய-மிடம்-எல்லாருந்தீயர்-சந்திரனுடையவையெல்லாம் விலக்கப்பட்டன-ச-கூ-அ-மிடம்-வியாழம்பொல்லான்-பாபர்-ங கூ-யக-மிடம்-நல்லர்-எ-று. (௮௯)

## அரைநாண்கட்டகோடியுடுக்க.

வாய்ந்தசீர்மகவுக்காண்டு நிறம்பிடவந்தநாளிற் ... ... *
றேய்ந்துநீர்தன்னிற்றூயமறையினூற்சுத்திசெய்தா ... - *
லேய்ந்தபொன்னரைநாண்கட்டுமெழிற்பெறப்பிறந்தநாட்கே
காய்ந்தவேற்கண்ணாய்கோடிகலிங்கங்கள்கடிதுசொற்றே ... *

(இ-ள்) பிள்ளைபிறந்த-௩௱௬௰ம்-நாளிலேகுளிப்பாட்டிபுண்ணியா கமும்பண்ணிபொன்னரைநாண் கட்டுவதுபிள்ளை பிறந்தநாளிலே கோடிப்புடவையுடுத்துவது-எ-று. (௩௰)

## சவளம்.

சேருமுத்திரமுநான்குஞ்சிறந்தவுத்திராடநான்கு ... *
மோருமான்றலைபூசங்களுத்திரட்டாதிமூன்றும் ... ... *
பாருடனிருத்தைவெட்டாறுவாமுதற்பக்கம்பொல்லா *
வாரநற்கோள்நன்றாண்டுமூன்றைந்துமயிர்நாட்சொல்லே

(இ-ள்) உத்திரமுதல்நான்கும்-உத்திராடமுதல்நான்கும்-மிருகசீ ரிடம்-புனர்பூசம்-பூசம்-உத்திரட்டாதிமுதல்மூன்றும்-ரோகணியும் நல்லது-ரித்தை-அஷ்டமி-சஷ்டி-உவாபிரதமையுமொழிந்தவைநல் லது நற்கோள்வாரங்கள் நன்றென்பது பிள்ளைபிறந்தமூன்றாமாண் டிலும்-ஐந்தாமாண்டிலும்-சவுளம்பண்ணுவது-எ-று. (௩௧)

சொல்லியமகரங்கன்னிதுலைபெருநியாழ்மீனண்டு ... *
நல்லவெண்மதியமாறேடீராறந்தோற்றநாசம் ... *
புல்லர்மூன்றாறுபன்னொன்றினியர்கள்புகரோபொல்லா *
னெல்லையிற்குருவீராறுதீதெட்டிலெல்லார்தீதே ... *

(இ-ள்) மகரம்-கன்னி-துலாம்-ரிஷபம்-மிதுனம்-மீனம்-கற்கட கம்-இவைநல்லன்-சந்திரன்-௬-௰௨-உதையம்-பொல்லான் பாபர்-௩- ௬-௰௧-ம்-நல்லர்-வெள்ளி-௭-ம்- இடம்- ஒழியநல்லன்- வியாழம்- ௰௨-மிடம்-ஒழியநல்லன்-௮-மிடத்து-எல்லாருந்தீயர்-எ-று. (௩௨)

## சவுளத்துக்காகாதநாள்.

தீயபொன்வெள்ளிமூடந்தெக்கணவயனமாசி ... *
யாய்தருபிறந்தநாட்களட்டமராசிநாட்கள் ... ... *
காயசோழகஞ்செய்யார்கள் தொன்மணம் புணர்த்தவளா
மாய்தருகருப்பைநாளுமயிரனைநாசனூரி ... [ன்று]

(இ-ள்) சுக்கிரன்-பிரகஸ்பதி-பிரகாசமில்லர்தநாளும்- தெக்ஷணாயனத்திலும்-மாசிமாதத்திலும் பிறந்தநாட்களினும்- அஷ்டமராசிகளினும் விவாகம்பண்ணினவர்க்கும் தன்னிடஸ்திரீகெற்பமுண்டான நாளும் மயிர்வினைகளையப்படாதன-எ-று. (௬௩)

## பல்விளக்கநாள்.

நாரியற்காகுந்திங்களுதையஞாயிற்றுக்குள்ள ... *
ஓரியமறையோர்க்காகுஞ்சேயவன்வேந்தற்காகும் ... *
காரிசூத்திரற்காம்வெள்ளிபிறந்தவர்தங்கட்காகா ... *
வீரம்வற்கண்ணாயிந்நாட்பல்லுகிர்விளக்குநாளே... *

(இ-ள்) திங்கள்ஸ்திரீகளுக்காம்- ஞாயிறுபிராமணற்காம்- செவ்வாய்க்ஷத்திரியற்காம்- சனிசூத்திரற்காம்- வெள்ளிபிதிர்க்களுக்கு விலக்கப்பட்டன சவுளத்துக்குச் சொன்னகாலங்களிலே பல்லுமுகிரும் விளக்குவது-எ-று. (௬௪)

## சரஸ்வதியோகம்.

விளங்கியகதிரோன்மேவமேதைமூலைவந்துபாகை... *
இலங்கொடிதன்னிலெய்தவிந்துவெய்யோனுதிப்பத் *
துனங்கொள்மாற்கிழமைவந்தாற்சரஸ்வதியோகமாகும்*
குளங்கொடரன்னமன்றுகொடுப்பிக்கநாமகட்கே ... *

(இ-ள்) ஆதித்தன்கன்னியிலேநிற்க புதன்கன்னியில்- மிருகம்- பர்கையில்நிற்க - சந்திராதித்தருதையமாக புதன்கிழமைவந்தவன்று-சரஸ்வதியோகமென்றுபேராம்- அற்றைநாளிற் கருப்பங்கட்டியும் பாற்சோறுமாகக் கணபதியையும் சரஸ்வதியையும் அமுதுசெப்விக்க எல்லாவித்தையுமெய்தும்-எ-று. (௬௫)

## வித்தியாரம்பம்.

மகவினுக்ககந்திற்பெண்ணைமாவிருபூசஞ்செங்கை.. *
யகலியவோணமாதிமூன்றத்தமாகிமூன்று ... ...*
பகருமூத்திரங்கள்தோணிப்பார்நலவிருத்தைபன்மூன்-
றிகலுபெட்டுவாவிராறுநீக்கிமேலினிதுகூறே ... *

(இ-ள்) பிள்ளைஐந்துவயதுக்குபுகுந்தவாறே உத்தராயணம்பிறந்தவாறே ஆசாரியனைப்பூசித்து வித்தியாரம்பம் துவக்குவது- அனுஷம்-அசுபதி-புனர்பூசம்பூசம்-திருவாதிரை-திருவோணம்-அவிட்ட

ம்-சதையம்- அத்தஞ்-சித்திரை-சோதி-உத்திரட்டாதி-உத்திரம்-ரேவதி-ரோகணி-இவைநல்லது- இருத்தை-திரயோதசி-அஷ்டமி-உவாவும் துவாதசியும்-விலக்கப்பட்டன-எ-று. (௧௬)

கூறியசனிசெய்வாரந்நிலையோரைகொள்ளார்திங்கள் ... *
ஏறியபத்துமாறுமாறேழியம்பார்புந்தி ... ... *
சீறிடுமாறில்வெள்ளியாறேழெட்டனைத்துந்தீயர் ... *
வாறுபன்னொன்றுமூன்றுபாபர்நன்றாகுமாய்ந்தால் ... *

(இ-ள்) சனிசெவ்வாயும்ஸ்திரராசிகளும் விலக்கப்பட்டன- திங்கள்-௰-ம்-இடம்-உதையம்-௬-௰௨-௭-ம்-இடம்-பொல்லான்-புதன்-௬-ம்-இடம்-பொல்லான்-வெள்ளி-௬-ம்-௭-ம்-இடம்-பொல்லான்-௮-மிடத்து-எல்லாருந்தீயர்- பாபர்-௬-௩-௰௧-ம்-இடம்-நல்லனென்க-இனியொன்றுசிறப்பித்தவதனால்-சத்தசாஸ்திரம்-சாமுத்திரிகசாஸ்திரம்-சார்ந்தருவநீதிசாஸ்திரம் இவைமூன்றுக்குப்புனர்பூசம்நன்று-ஆயுர்வேதாகமசர்வசாஸ்திரம்இவைமூன்றுக்குஅவிட்டம்நல்லது-சோதிடசாஸ்திரத்துக்கு சோதிநல்லது- கூபசாஸ்திரத்துக்கும்தர்க்கசாஸ்திரத்துக்கும்திருவாதிரை நல்லது -அசுபசாஸ்திரத்துக்கு அசுபதிநல்லது-கன்மசாஸ்திரங்களுக்குத் திருவோணம்நல்லது-யோகசாஸ்திரத்துக்குச் சதையம்நல்லது-எ-று. (௧௭)

## உபநயனம்.

ஆய்ந்தமுப்புரிநூலேழிலணியுநாளனுடமத்தம் ... ... *
வாய்ந்தவுத்திரங்கள்சோதிமான்றலையுரோணிவாசி ... *
ஏய்ந்தசித்திரைபூசங்கள்ரேவதிநன்றிருத்தையெட்டுங் *
காய்ந்தபன்னொன்றுபத்துமுதலுவாக்கழிமுற்பக்கம் *

(இ-ள்) ஏழாம்வயதில்உபநயனம்பண்ணுவது-அனுஷம்-அத்தம்-உத்திரங்கள்-௩-ம்-சோதிமிருகசீரிஷம்-ரோகணி-அசுபதி- சித்திரை புனர்பூசம்-பூசம்-ரேவதி-இவைநன்றுபக்கங்களில்ரித்தையும்அஷ்டமி-ஏகாதசி பிரதமை-உவாவிலக்கப்பட்டன-எ-று. (௧௮)

பக்கம்பின்னைந்துமின்புபாபர்சம்வாரவோரை ... *
தெக்கணமயனந்திங்கட்குடையனசெம்பொன்புந்தி *
சுக்கிரனுதிற்சோமன்றேற்றருமீராறெட்டிநீ ... .. *
புக்கவரோழிக்குமூன்றிலாறுபன்னொன்றுபொல்லார் ... *

(இ-ள்) அபரபக்ஷத்துப்பஞ்சமிக்குப்பின்பு பாபவாரங்களினும் அவருடையராசிகளினும்தெட்சணுபனமும்சந்திரனுக்குடையவும் வியாழம்வெள்ளியும்-௬-ம்-இடம்-நல்லர்-௬௰ம்- இடத்துச்சந்திரன்-உதையமும்௰௨-ம்-இடமும்-பொல்லர்ன்-௮-ம் -இடத்தில்-எல்லாக்கோளும் விலக்கப்பட்டன-௩-௬-௰௧-ம்-இடம்-பாபர்நல்லர். எ-று,

பொல்லாதயோகம்விட்டிவிதிபாதம்புகர்பொன்மூடஞ் ...*
சொல்லாதகாணங்கம்பஞ்சூனியந்தூகணங்க... ... ...*
ளில்லர்நாட்பிறந்தநாட்கள்பொல்லாநாளிவையொழித்து...*
நல்லார்கணோக்குமூன்றுக்சொற்றினுன்மறையினுமே...... *

(இ-ள்)பொல்லாதயோகங்களும்-விஷ்டியும்-விதிபாதமும்-சுக்கிரபிரகஸ்பதிமூடங்களும்-சூனியம்-ஸ்தூணம்-குருட்டு-நாட்பிறந்தநாட்களொழித்து பொருந்தாதநாட்கவிர சுபக்கிரகங்கள் நோக்குண்டாக ஆகாசம் நிர்மலமாகக்கொள்வது-எ-று. (௰)

நான்மறையதனுற்சிங்கஞாயிற்றிச்மூன்னுவாவில் ... *
தானமர்கருநாளோவந்தைதபஸ்ஞாயிற்றுவாவி ... ...*
ஞானமிலத்தஞ்சோணுேளாங்குவாகனஞ்சேய்மீனம்...*
மானஞயமிர்தநாளில்மயிர்தனைக்குறைத்தல்மாண்பே *

(இ-ள்) ஆவணிமாதத்திலே பௌரணையோடுகூடின வோணமும் புரட்டாசிமாதத்திலத்தமும் உவாகர்மத்துக்குத் தந்கான சுபக்கிரகங்களிலே சவளத்துக்குச் சொல்லுகாலங்களிலே கொள்வது-எ-று.( )

## சமாவர்த்தனம்.

மாண்புடையோணமத்தமக்கிரமனுஷிம்பண்டி... ... ...*
காண்பருமுத்திரங்கள்பூ ங்கள்கடைமீநன்றுநீ ... ... ...*
நீண்டருமிருத்தையெட்டோடுவாமுதற்சனிசேய்திங்கள்... *
கூண்டதேள்மேடமெட்டிற்கோளொழிகுளிக்கக்கோதாய்...*

(இ-ள்) புணர்பூசம்- திருவோணம்-அத்தம் - மிருகசீரிஷம் - அனுஷம்- ரோகணி- உத்திரம்- ௩-ரேவதியிதுநல்லது- ரித்தை- அஷ்டமி- உவா- பிரதமை- சனி- செவ்வாய்- திங்கள்- விருச்சிகம்-மேஷம் - இவையாகாது - அஷ்டமசுத்தியுண்டாக ஆகாசம்நிர்மலமாக சமாவர்த்தனங்கொள்வர்-எ-று. (௰௨)

சோதில்மான்றலையுரோணிகுதிரையுத்திரங்களத்தஞ்... *
சோதிசித்திரைபூசங்கள்சோணியோடனுடமோண ...*

மேஷமில்விட்டம்நன்று மிரண்டைந்தேழ்பன்மூன்றிரா
ரோதியமூன்றும்பக்கமுயர்முடிசூட்டநன்றே... ... *

(இ-ள்) மிருகசீரிஷம்-ரோகணி-அசுபதி-உத்திரம்-௩ அத்தஞ்-சோதி-சித்திரை-புனர்பூசம்-பூசம்-ரேவதி-அனுஷம்-திருவோணம்-அவிட்டம்-இவைநன்று-பக்கங்களில்-துதிகை-பஞ்சமி-சத்தமி-தசமி-திரையோதசி-துவாதசி-திரிதிகை-இவைநன்று-எ-று. (௩௩)

நன்றுநற்கோட்கள்வாரமங்சகம்நவிலுமோமாகை... ...*
கன்றியபதிக்கோட்டுதுகன்னியுந்துலாமுமாகா... ...*
வன்றிறல்முடிசூட்டோனையுடையவாள்கோளைநற்கோள்
நின்றிடிலுறவுநன்றுநோக்கிடவறிவுண்டாமே... ...*

(இ-ள்) இவர்கள் நட்சத்திரங்களில்-கன்னி-துலாமொழியநன்று-அபிஷேகம் பண்ணும்போது உதிக்கிற ராசியுடையகோளை நற்கோள் மித்திரஸ்தானத்தில் நின்றுநோக்கில்-பந்துக்களையுடையதாம்-எ-று.

உண்டாயவுச்சம்நின்றகோளுச்சம்நோக்குமாகில்......*
கொண்டானெனல்பிறநாடெல்லாங்கோளவைநீசம்நன்று
தண்டாதுநீசநோக்கிற்சாலநோய்கொண்டுசாவர் [பாரோ
பண்டாவுமொழியாய்வெய்யப்பகைநோக்கிற்பகையாம்

(இ-ள்) அபிஷேகம்பண்ணுகிறவன்ராசியுடையகோள் உச்சஸ்தானத்திலேநின்று உச்சஸ்தானத்துக்கோளை நோக்குமாகில் பிறநாடெல்லாங்கொள்ளுமென்பது-அந்தக்கோள்நீசக்கோளைநோக்குமாகில்-நோய்கொண்டுமரணமென்பது-சத்துருஸ்தானத்திலேநின்றுசத்துருஸ்தானத்திற்கோளைநோக்குமாகில்சத்துருக்கள்பலருமுண்டாம்

பார்த்திடிற்றீப்கோளாறும்பன்னொன்றுமூன்றும்நல்ல ... *
சீற்றவேமுதையமைத்துஞ் சிறந்தபன்னொன்றேடான்பா
லற்றநற்கோள்கள்நன்றுமெட்டிடமெல்லாம்பொல்லா... [ன்
ஞாற்றலையுடையமன்னரணிமுடிசூடும்நாளில் ... ... *

(இ-ள்) பாபர்-௩-ம் ௬-௰-ல்-நல்லர்- சுபர்-௭- உதையம்-௫-௰-ம்-நல்லர்-அஷ்டமத்திலெல்லாரும்பொல்லார்-எ-று. (௩௪)

## விவாகம்

சூடியமனைநாள்மூலமிரேவதிமகமேசோதி ... ...*
யோடுமேன்றலையுரோணியனுடமுத்திரங்களத்தம்......*

கூடிநன்றுவாவிருத்தையட்டமிகொடியோர்வார ... *
மாடிமார்கழிபுரட்டைமாசிதீதன்னமன்னேய் ... *

(இ-ள்)மூலம்-ரேவதி-மகம்-சோதி-மிருகசீரிஷம்- ரோகணி-அனுஷ
ம்-உத்திரம்-௩-அத்தம்-இவைநன்று உவா-ரித்தை- அஷ்டமி-சனி-செ
வ்வாய்-ஞாயிறு-ஆடி- மார்கழி- புரட்டாசி- மாசி- விலக்கப்பட்டன

அன்னமேமிதுனங்கும்பமலவனேயிடபம்வில்லு... ...*
கன்னிகொல்நன்றபன்னொன்றொரு மூன்றிற்கமீங்கோளரங்
பொன்னவனெட்டிற்றீடன்புகர்புதனுறெட்டேகா... ... [ன்
ரன்னவரேழிற்றீயாமதிநல்லிரண்டில்மூன்றே ... ... *

(இ-ள்) மிதுனம்-கும்பம்-கடகம்-ரிஷபம்-தனுசு கன்னி-துலாம்-
இவைநன்று-க-மிடம்-௬-மிடம்-௩- மிடம்-பாபர்நல்லர்-வியாழம்-
அஷ்டமத்தில் பொல்லான்-வெள்ளி புதன்-௬-அ-ல்-பொல்லார்-எ-மி
டம் எல்லாருந்தீயர்-சந்திரன்-உ-௩-ல்-நல்லது-எ-று. (௫௮)

அக்கினிபரிக்கிரிகிக்க.

மூன்றதாமுத்திரங்கள்சித்திரைமுறம்பார்ரோணி ... ...*
மான்றலேபாரல்நாளில்மகரமீன்கடகங்கும்ப ... ... *
மேன்றசெய்சனியிருத்தையிவைபொழிற்றெழிற்கோனேக்க
வான்றநான்மறையோரோத்தவங்கிகைக்கொள்ளலாமே... .. *

(இ-ள்)உத்திரங்கள்மூன்றும்-சித்திரை-விசாகம்- ரோகணி-ரேவதி-
மிருகசீரிஷம்-கார்த்திகை-இவைநல்லது- மகரம்-மீனம்-கடகம்-கும்
பம்-செவ்வாய்-சனி-உதையாங்கம்-ரித்தை இவை சுபக்கிரகங்கள்நட்
பாட்சியுச்சத்துநின்றுநோக்கவிட்டிறரில் விசேஷித்துள்ள வித்துவா
ங்சர் அனுக்கிரகிக்க அக்கினி பரிக்கிரகம்பண்ணுவது-எ-று. (௫௯)

பூமிதெரிசனம்.

ஆதிலாபரணிமூலமனுடமுத்திரங்களோணரும்... ...*
சோதிசித்திரையேபூசமகமிவை தூய்யபக்கந் ... ...*
தீதுபத்திரையோடான்பான்செங்கதிர்காரிவாரம்...*
மாதும்தளிடபந்துய்பமதிதெழவயல்செய்பாரோ ... *

(இ-ள்)திருவாதிரை-பரணி-மூலம்-அனுஷம் -உத்திரமூன்றும் -தி
ருவோணம்-சோதி-சித்திரை-பூசம்-மகம்-இவைநன்று-பத்திரையும்-
நவமியும்-தீது-ஞாயிறு-சனி-பொல்லாது-கன்னி-விருச்சிகம்-ரிஷப

ம்-மேஷம்-மிதுனம்-மீனம்-இவைநன்று-அஷ்டமசுத்தியுண்டாக பூமிதெரிசனம்பண்ணுவதென்றவாறு. (௱௰)

## கிரிஷியாரம்பம்.

பார்கிழங்குத்திரங்கள்படவிருபூசமத்தஞ் ... ... *
சீரியவாகுமொன்பானிரட்டிக்தபக்கந்தீகாங் ... ... *
கூறியமகரநண்டுகுண்டைமீன்மிதுனம்நன்றுங்... *
காரியுங்கதிருந்தீதாஞ்செய்யுககருதுவாற்கே... ... *

(இ-ள்) ரோகணி-மூலம்-உத்திரங்கள்-௩-ம்-இரேவதி-புணர்பூசம்-பூசம்-அத்தம்-இவைநன்று-நவமியும்-இரட்டித்தபக்கங்களுமாகாது ராசிகளில்-மகரம்-கடகம்-ரிஷபம்-மிதுனம்-மீனம்-இவைநன்று-சனி-ஞாயிறு ஆகாது பூர்வபட்சத்திலே-யோகக்கிரசித்தனுப் தானஞ்செய்து-சிலபுஷ்பங்களினுலும்-நீராலும்-பூமியை-அர்ச்சித்து கிருஷியாரம்பஞ்செய்வது-எ-று. (௱௰௧)

## ஏருயிட.

கருதுமூத்திரங்கள்மூன்றுங்கரும்பனேபுணர்தம்பூசம் *
பொருவில்சித்திரையேசெங்கைபோந்திங்கள்செவ்வாய்
புந்தி,யெருயிடநல்லவாகுமிருத்தையெட்டுவாவுந்தீகாந்
திருவநாயுமூவான்சொன்னகாலமேயெருவுஞ்செய்யே*

(இ-ள்) உத்திரமூன்றும்-அனுஷம்-புணர்பூசம்-பூசம்-சித்திரை திருவாதிரை-இவைநன்று-வியாழம்-திங்கள்-செவ்வாய்-புதன்-இவை நன்று-இருத்தை அஷ்டமி உவாப்பொல்லாது உழவுக்குச்சொன்ன மூகூர்த்தங்களிலே யேருவிடுவது-எ-று. (௱௰௨)

## விதைக்க.

செப்பிடுமூலமத்தமிரேவதியனுடந்தீயர்... ... ... *
தப்பிலுத்திரங்களோணமகமுறஞ்சதையம்பூச... ...*
மொப்பிலாவுரோணியிந்நாளுத்தமம்புணர்தம்விட்டம்.
ஐப்பசிமகசிரங்கள்மத்திமம்விதையணங்கே... ... *

(இ-ள்)மூலம்-அத்தம்-இரேவதி-அனுஷம்-சோதி-உத்திரம்-மூன்றும்-திருவோணம்-மகம்-விசாகம்-சதையம்-பூசம்-ரோகணி-இந்நாட்களுத்தமம்-புணர்பூசம்-அவிட்டம்-அசுபதி-மிருகசீரிஷம்-மத்திமம்-எ-று. (௱௰௩)

அணாவ்ருகேளஞ்செழ்பன் மூன்றமைந்தபஞ்சொன்றமூன்று
மிணங்குமூன் றுவாவுநன் ருமீனைந் துமிரண்டுமொருங் ... *
குணங்கள் மத்திமமாங்குன்னடை நண்டரிமகரமீனம் ........*
வணங்குநன் றென்றுவீணைகுடந் துலாஞ்சமம்வழுத்தே ... *

(இ-ள்) பஞ்சமி-சத்தமி-திரையோதசி-ஏகாதசி- கிர்த்திகை-ப
வுரணை-இவைநன்று-தசமி- துதிகை-சஷ்டி-இவைமத்திபம்-ரிஷபம்
கடகம்-சிங்கம்-மகரம்-மீனம்-இவையுத்தமம்-மிதுனம்-கும்பம்- து
லாம்-இவைமத்திபம்-சொல்லாதவையதமம் எ-று. (௱௰௪)

வழுத்திடில்நற்கோள்வாரவுதையநன்றெட்டிற்கோளைக்
கழுத்திடுமருக்கன்வாரக்காலமேநெல்லைவித்து ... ...*
லொழித்திடிற்சனிபின்வாரமுச்சியிலெள்ளைவித்து ...*
கொழித்தசெய்வாரம்வித்துக் கொள்ளுடன்வரகுவித்தே

(இ-ள்) நற்கோள்வாரம்நன்று- தீக்கோள்வாரந்தீது-அ- மிடத்தி
லெல்லாருந்தீயர்-ஞாயிற்றுக்கிழமைஉதையத்திலே-நெல்லைவிதைக்
கலாம்-சனிக்கிழமையினுச்சியில்-எள்ளைவிதைக்கலாம்-செவ்வாய்க்கி
ழமை-புதையத்திலே-கொள்ளும்வரகும்விதைக்கலாம்-எ-று. (௱௰௫)

கூறியமூலநாள் நன்றுகரும்பிடக்கொடிக்காற்காயி *
லேறிட மூலம்நன்றுமெள்விதைக்கனுடஞ்செக்காம்.. *
மாறிலாமரங்கள்வைக்கவுரோணிபாம்வழுதிலைக்குத்... *
தேறியபரணிநன்றுஞ்சித்திரைபயிருவித்தே... ... *

(இ-ள்) கரும்பிட-அசுவதி-கொடிக்காலுக்கு-ஆயிலியம்- மூலம்-எ
ள்ளுக்கு-அனுடம்-சதையம்-மரம்வைக்க- ரோகணி- வழுதிலைவைக்க
ப்பரணி-பயறுக்கு-சித்திரை-இந்நாட்களில்- இப்பயிரிடுவது-எ-று()

கதிரறுக்க.

வித்தகமகமுரோணிவிசாகமாதிரையோடோணம் ... *
மத்தமேபரணிசாலவழுகிதாமிருத்தையாகா ... *
லொத்தபொன்திங்கள்புந்திபுதையவாரங்கள்நன்றுங் *
குத்துமேறரிதேள்நண்டுகுடங்கதிரறுக்கநன்றே ... *

(இ-ள்) மகம்-ரோகணி-விசாகம்-திருவாதிரை-திருவோணம்- அத்
தம்-பரணி-இவைநன்று-ரித்தையாகாது- வியாழம்-திங்கள்-புதன்-இ
ந்தவாரங்களு மிவர்களுதையங்களும்-நன்று-ரிஷபம்-சிங்கம்-விருச்
சிகம்-கற்கடம்-கும்பம் இவைகதிரறுக்கநன்றென்பது-எ-று. (௱௰௭)

## நவபோசனம்.

நன்றிதருபூசம்பரணிமானன்கலமொல்புடச்சேத் ... *
கொன்றியமங்கைமூலமுறம்படனையத்திரங்கள் ... [தாங்
குன்றுசித்திரையைந்தானஞ் சுபரின்பம்புதிதூண், தூய்
கன்றுவாவிருத்தைமீன்தேன்மதிவிர்காந்தடன்யாய் *

(இ-ள்) புனர்பூசம்-ரோகணி-அசுபதி-இரேவதி-திருவோணம்-அவிட்டம்-சதையம்-அத்தம்-மூலம்-விசாகம்-அனுஷம்-உத்திரங்கள்-ங-ம். சித்திரை-மிருகசீரிஷம்-இவைநன்று- நற்கோள்வாரவுதையங்கள்நன்று-இருத்தைஉவாவும்-மீனம்-விருச்சிகம்-மேஷம்-இவைதவிர மற்றுள்ளவையெல்லாம் நவபோசனத்துக்கு நன்று கதிராறுப்பார்க்கு மிதுவே காலமாகக்கொள்வார்-எ-று. (௱௰௫)

## தானியமிடவைக்க.

கைவருமத்தஞ் செங்கைமகமருளனுடங்கங்குற் ... ... *
பொய்யிலுத்திரங்களோணமிர்கசிரஞ்சினிபொன்வாரந்
தையல்மாவிருத்தைவிட்டிசரராசியொழித்தலாகிற் ... *
றையலாய்க்குளியந்தன்னில்தாரணமதானியந்தான் ... *

(இ-ள்) அத்தம்-திருவாதிரை-மகம்-ரோகணி-அனுஷம்-பரணி- உத்திரங்கள்-ங-ம்-மிருகசீரிஷம்-திருவோணம்- இவைநன்று- சனியும்வியாழமும்நல்லது-ரித்தை-சஷ்டியும்-சராசியுந்தீது-மற்றுள்ளவையீத்தில் குளியனிலே கெற்பிணியாதல் கன்னிகையாதல் தானியமிட்டுவைப்பது-எ-று. (௱௰௬)

## தானியம்வாங்க.

தானமாவத்தஞ் சோதிசதையமுத்திரங்கள்விட்ட ... *
மூனமில்விசாகந்தோணியுருளிருபூசமோண ... ... *
மானசித்திரையைந்தானமனுடநாள்மகமூலத்தில் ... *
வானுறைசனிபொன்கூற்றில்வைத்ததானியங்கள்வாங்கே

(இ-ள்) அசுபதி-அத்தஞ்-சோதி- சதையம்-உத்திரங்கள்- ங-ம்- அவிட்டம்-விசாகம்-இரேவதி-ரோகணி-புனர்பூசம்-பூசம்-திருவோணம்-சித்திரை-மிருகசீரிஷம்-அனுடம்-மகம்-மூலம்-இவைநன்று-சனிவியாழம்-நன்று-இவர்கள் உதையாங்சங்களிலேவைத்ததானியம்வாங்குவது-எ-று (௱௰௭)

## தனுசுயிறுக்க.

வாங்கியதனுசவிட்டமருவியவிருத்தைநந்தை [... *
யோங்கியசனிபொன்வாரவுதயத்துக்குளியன்கூடக். *
இஞ்சுருமனுடநாளிலிருகாலிற்றிங்கள்சேர ... ... *
வாங்கவன்தன்னைக்கோட்கள்நோக்கிடிலழகிதென்றூர் *

(இ-ள்) தனுசு-அவிட்டம்-ரித்தை-நந்தை- இவர்கள்பக்கமாகச்- சனி-வியாழமும்-இவர்ளுதையங்களுமாக குளியன்மூகுர்த்தமாக அனுடமிரண்டாங்காலிலே சந்திரனிற்க அந்தச்சந்திரனை கிரகங்கள் நோக்க அந்நாளிலே தனுசுயிறுக்கபின்னைத்தனுசுகொள்ளார்-எ-று.

## யாத்திரை.

ஆரலேயாதியேழ்நாள்நந்தைசெய்கிழக்காந்தெற்குச் *
சீரியமகத்தோடேழ்நாட்பத்திரைசனிசெய்திங்கட்... *
சாருமேற்கனுடமாறுசயைபுதன்குருவடக்குப் ... *
பூரணமவிட்டமேழ்நாட்புகர்கதிர்நன்றுபோக்கே... *

(இ-ள்) கார்த்திகைமுதலெழுநாளும்-நந்தையும்- செவ்வாய்க்கிழமையுங்கிழக்குப்போகலாம்-மகமுதலேழுநாளும்- பத்திரையும்- சனி-திங்கள்-தெற்குப்போகலாம் - அனுடமுதலாறுநாளும் சயையும்-புதன்-வியாழமும்-மேற்குப்போகலாம்-அவிட்டமுதலேழுநாளும்-பூரணையும்-அமாவாசையும்-வெள்ளி ஞாயிறு-வடக்குப்போகலாம்

போக்கினிற்பரணியாரலாதிரைபூரமூன்றுந் ... *
தீர்குமாயிலியங்கேட்டைசித்திரைவிசாகஞ்சோதி... *
யாக்கியமகமிருத்தையாதியட்டமியுவாக்கள்... ... *
நீக்கிடுமருக்கன்சேய்மால்நிலையோரைநினைக்கலாகா... *

(இ-ள்) பரணி-கார்த்திகை- திருவாதிரை-பூரம்-௩-ம்- ஆயிலியம்-கேட்டை-சித்திரை-விசாகம்-சோதி-மகம்-ரித்தை- பிரதமை- அட்டமி-உவாக்கள்-ஞாயிறு-செவ்வாய்-புதன்- ஸ்திரராசியும்- யாத்திரைக்கு விலக்கப்பட்டன-எ-று.
(௱உ௩)

நினைவுறுவிட்டிவில்லுவிதிபாதம்நெடியவட்டந் ... *
துனிவுறுகிராணஞ்சூலந்தூயசிக்கிராந்திதூமம்... ...*
வனிலதைகேளிடித்தல்மின்னல்மழைபெய்தலிடறல்தும்ம
இனையனசெய்யப்போகிலெய்திடுநாசமெல்லாம் ...[ல்

(இ-ள்) விட்டி-வில்லு-விதிபாதம்-பரிவேஷம்-கிரகணம்-சூலம்-சங்கிரமம்-தூமம்-இடித்தல்-மின்னல்-மழைபெய்தல்-இடறல்-தும்மல்-இவையெல்லாம்-யாத்திரைக்குவிலக்கப்பட்டன-எ-று. (௱௨௪)

எல்லையிலியாத்திரைக்கங்கேகுவானிராசிக்காறிற் ... ... *
சொல்லியமூன்றொடொன்பான்பதினொன்றுசுகத்தைநல்கு*
மல்லல்செய்பகைமைக்கோலிலாங்கவனிராசிக்கெட்டிற் ... *
செல்லிடிற்பகைமையைக்கொன்றுதிரும்பித்தன்பதியைச்சேரும்

(இ-ள்) தன்னுடையவிராசிக்கு-௩-௯-௩-௰க-போகில் சுகத்தையுண்டாக்கும்-சத்துருவைச்செயிக்கப்போகில்-அவனுடையராசிக்கு-அ-ம்-இராசியிலேபுறப்படில்- சத்துருவைச்செயம் பண்ணிச்சுகமேவருமென்பது தன்னுடையவிராசிக்கு-௰௨- ம்- இராசியும்-அஷ்டமவிராசியும் புறப்படில்சரீரவாதையுண்டாம்-எ-று. (௱௨௫)

பதியுடைநற்கோளெங்கும்நன்றநந்திரப்பலரும்பொல்லார் ... *
மதியிரண்டெட்டுநாலோடொன்பதீராறைமாய்க்குந் ... ...*
திதியுடைவெள்ளிதீயனேழினிற்றீய்க்கேள்பத்தும் ... ...*
கதியுடைமூன்றுமாறும்பதினொன்றுமினியர்காணே ... ...*

(இ-ள்) நற்கோள்-உதையாங்சம்-நன்று-ரு-மிடம்-எல்லாரும்பொல்லார்-சந்திரன்-உ-அ-ச-௯-௰௨-மிடம்-தீயன்-சுக்கிரன்-எ-மிடம்-பொல்லான்-பாபர்-௰-௩-௬-௰க-மிடம்-நல்லர்-எ-று. (௱௨௬)

சமுத்திரயாத்திரை.

காண்டகுதிரைவிட்டங்கலம்பணையத்தஞ்சோதி ... ...*
தூண்றுமான்றலேயோடோணந்துலையெழக்கடலிற்போகி...*
லீண்டியநிதியுமெய்தூமெழிற்புகர்புந்திவார... ... ...*
மாண்டசீர்புரட்டையாடிமாசிமாதற்காகாதே... ... ...*

(இ-ள்) அசுபதி-அவிட்டம்-இரேவதி-அனுஷம்-அத்தம்-சோதி-மிருகசிரிஷம்-திருவோணம்-இந்நாட்களிலேதுலாமுதையமாகமுன்புசொன்னவாரங்களிலேசமுத்திரயாத்திரைமிகவும்லபிக்கும்- வெள்ளி புதன்-புரட்டாசி-மாசி-ஆடியும்-யாத்திரைவிலக்கப்படும்-எ-று௱௨௭

மாடுமுதலானவைக்கொள்ள.

மாதராய்பரணிகேட்டைசித்திரைசதயம்வண்மை ... ...*
சோதியுத்திரங்களாயிலாதிரைபுந்திசுக்க ... ... ... *

ஞெதுவாவிருத்தைவெட்டிற்கோளெழுந்தொழிந்தநாளில் *
பீதரிசுருவிற்கன்னிவீதிக்கோயாத்திரைக்கோ ... ... *

(இ-ள்) பரணி-கேட்டை-சித்திரை-சதையம்-அத்தம்-சோதி-உத்திரங்கள்-௩-ம்-ஆயிலியம்-திருவாதிரை-புதன்-வெள்ளி-உவாவும்-இருத்தை இவையொழிந்துநின்றநாட்களில்-சிங்கம்-மகரம்- கன்னி- துலாம்-ஆகு-முகூர்த்தமாகஅஷ்டமசுத்தியுண்டாகமாடுமுதலானவைகொள்ளவும் கொடுக்கவும்-நன்றென்றவாறு. (௱௨௮)

நக்ஷத்திரபக்ஷணம்.

யாத்திரைபுரவிமூன்றும் பயற்றஞ்சோறெழிற்பார்சாக
மாத்தயிர்நுரைத்தவெண்ணெய்மானினுதிரம்பாலும் ... *
சேர்த்தநெய்பாலின்சோறுசிச்சிலிசென்னற்சோறும் ... *
வாய்த்தநற்சாகம்பாலின்வெம்பலவண்ணச்சோறே ... *

(இ-ள்) அசுபதிமுதலாக-௨௰௭- நாளுக்கும் பக்ஷணம்-பயத்தஞ்சோறு-பாலில்வெந்தஇலைக்கறி-தயிர்-வெண்ணை-நுரை-மானிறைச்சி-உதிரம்-புடோல்-நெய்-பாற்சோறு-சிச்சிலி-மாங்கிஷம்-சென்னற்சோறு-இலைக்கறி-பாலில்வெந்தஅப்பம்-வண்ணச்சோறு-எ-று. ௱௨௯

வண்புகழ்நெல்லிமாவிற்கரைத்தநீர்முதிரையெள்நீர் ... ... *
கண்சிறுமூலந்தாதுமாதளைதருப்பணத்தோ ... ... ... *
டெண்செந்நெற்கழுநீர்பூந்தேன்சர்க்கரைபேலத்துண்பால்-
கண்டருபருப்புந்தாட்களனைத்துக்குமுணவுதானே ... ... *

(இ-ள்) நெல்லிக்காய்-மாக்கரைத்தநீர்-கொள்ளு-எள்ளுக்கழுவினநீர்- சிறுமூலகம்-தருப்பணம்-நெல்லரிசிகழுவினநீர்-தேன்-சர்க்கரை-பன்றிமாமிசம்-பால்-பருப்பு-ஆக- இருபத்தேழுங்கண்டுகொள்க()

திதிபட்சணம்.

காணெருக்கரிசிநீர்நெய்கஞ்சியோடுப்பிற்சோறு ... ... *
பூணும்பொன்றேய்த்தநீர்தேன்புளித்தமாதளங்காய்த்தன்னீர்
ஊனமாங்கோவின்நீராடரிசிபாற்சோறுகட்டி ... ... *
பூண்மலியுசிதைமற்றையுளுத்தஞ்சோறும்பக்கம் ... ... *

(இ-ள்) திதிக்குப்பட்சணங்கொடுக்கும்படி பிரதமைமுதலாகஎருக்கிலை-அரிசிகழுவினநீர்-நெய்-கஞ்சி-உப்பிற்சோறு- பொன்தேய்த்தநீர்-தேன்-மாதளம்நீர்-கோமூத்திரம்-அரிசி-பாற்சோறு-சர்க்கரை.

உதிரம்-உளுந்தஞ்சோறு-இவைதிதிபட்சணம்-எ-று. (௱௯௧)

## வாரபட்சணம்.

பக்கணம்நெய்பாற்கட்டிபரவுமெட்டயிருநெல்லு... *
முற்கமேகிழமைகூறும்விரும்புநெய்யேட்பாற்கட்டி *
திக்குநாலினுக்குமூணுஞ்சிறுகால்பால்தயிருமுச்சி... *
யொக்குமெள்ளந்திசெந்தேனள்ளிருணவாமென்றே

(இ-ள்) வாரபட்சணம்-நெய்-பால்-சர்க்கரை-எள்ளு-தயிர்-நெல்லு பயிறு-யிவை-ஞாயிறுமுதலாக வெழுவாரத்துக்கும்நிறையாகவறிந்து கொள்வது இவை திக்குநாலுக்கும் நெய்-எள்ளு-பால்-சர்க்கரை-இவை திக்குநாலுக்கும்-நேரோநிறையாக அறிவது-கிழக்குமுதலாகப்பொழுது நாலுக்கும்-சிறுகாலேபால்-உச்சிக்குத்தயிர்-அந்திக்குஎள்ளும்-மத்தியானத்திற்குத் தேனுங்கபிந்தலைவேபட்சித்துப்போவது-பட்சிக்கவொண்ணாதவை தெரிசித்துப்போவது-காணக்கிடையாதவைநினைத்துப்போவது-எ-று. (௱௯௨)

## வார அடியாற்செய்யும்வகை.

அன்றடியதினொன்றின்சொலருக்கற்கேழதிங்கட்கு... *
மொன்றியபகைடசேய்க்கொன்பானீர்சுற்றேழனைநீரார்க்கப்
பொன்றனக்கெட்டில்மாற்குச்சந்தணிபுகற்கைம்முக்கசல்-
கன்றியசுள்ளிகின்னுக்சனிக்கெஞ்சிற்கரும்புகூடே... ...*

(இ-ள்) ஞாயிறுக்கு-௰௧-அடியிலினியவார்த்தை சொல்லிப்போவது-திங்களுக்கு-எ௨-அடியிற்கடந்துபோவது-செவ்வாய்க்கு-௯-அடியில்-நீர்சுற்றிப்போவது-புதனுக்கு-எ௨-அடியில்-நீரிட்டுப்போவது வியாழத்துக்கு-அ-அடியில்-சந்தனம்பூசிப்போவது-வெள்ளிக்கு-௰ஐ-அடியில்-சுள்ளிகிள்ளிப்போட்டுப்போவது-சனிக்கு-௫-அடியில்-கரும்புகுடிப்போவது- இவையெல்லாங்காரியவிதத்துக்குத்தக்கப்படிசெய்துபோவது-எ-று. (௱௯௩)

சூழ்திசைவடக்குக்காவற்கடருச்சிகிழக்குத்தென்பால்... ...*
வீழ்தருமாலைமேற்குநள்ளிராவிரையப்போகில் ... ...*
வாழ்பெருங்கிளைஞராங்கிமறையவர்தமைவணங்கித் ... ...*
தாழ்வில்கோள்நோக்கப்போகிற்சமைத்திடுங்கருமந்தானே *

(இ-ள்) வடக்குப்போகில்-உதையத்துக்குமுன்னேபோவது-கிழக்கு-உச்சிக்குப்பின்போவது- தெற்கு -அந்தியம்பொழுதுபோவது-

மேற்கு-ஆர்த்திராத்திரியிற்போவது- போகும்போது தன்னுடைய பந்துக்களையும் அக்கினியையும் பிராமணரையும் நமஸ்க்காரம்பண்ணி-சுபக்கிரகங்கள்நோக்கப்போவது-எ-று. (௱௩௪)

## எண்ணெய்வார்க்க.

சருதுமூற்பிறந்தநாட்கள்கதிர்புகர்பொன்சேய்கேட்டை... *
பொருவுமுத்திரங்களோணம்பூரமாதிரைபன்னான்கு... ... *
தருமுவாவாறெட்டொடென்றிராமொன்றுசங்கிராந்தியெண்ணே *
பரிசியானோயர்பாலர்விருத்தற்குக்காலமில்லை... ... ...*

(இ-ள்)சென்மநட்சத்திரங்களும்-ஞாயிறு-வெள்ளி-வியாழம்-செவ்வாய்-கேட்டை-உத்திரமூன்றும்-திருவோணம்-பூரம்-திருவாதிரை-சதுர்த்தசி-உவா-சஷ்டி- அஷ்டமி- துவாதசி-பிரதமை-சங்கிரமகால மிவைஎண்ணெய் வார்க்லாகாது வியாதியாளர்க்கும்- விருத்தர்க்கும்-பாலர்க்கும்-காலமில்லை-எ-று. (௱௩௫)

## சதாபிஷேகம்.

காலமாயிரத்தெட்டிங்கள்கழிந்தபினத்தமோணஞ் ...*
சாலுமுத்திரங்கள்தோணிசதையநாள்மகமேரோணி *
மேலுமுத்திராயணத்துமிசைந்தநற்கிழமையெய்த...*
சீலமாதங்கடன்னிற்செய்சதாபிஷேகந்தானே... ... *

(இ-ள்)ஆயிரத்தெட்டுமாதஞ்சென்றவாறே-அத்தம்- திருவோணம் உத்திரங்கள்-௩ம்-ரேவதி-சதையம்-மகம்-ரோகணி- நற்கோள்வாரங்களிலே-உத்திராயணம் -பிறந்தவாறே ஒத்தித்தபக்கங்களிலே சாதாபிஷேகஞ்செய்வது-என்றவாறு. (௱௩௬)

## சிரார்த்தம்.

தானமாபரணியோணஞ்சதையமான்றலைபூரர்கள்... ......*
மான்மகம்பூசமத்தம் சித்திரை ச்றனுடம்விட்டம்... ... ...*
போனபிற்பக்கமைந்தில்ம்மன்மாசிபுரட்டைதன்னிற் ...[யே
றேன்மொழிவெள்ளிநந்தை யொழித்துநற் சிரார்த்தஞ் செய்

(இ-ள்)அசுபதி - பரணி- சதையம்- திருவோணம்- மிருகசீரிஷம்-பூசம்-அத்தம்-சித்திரை-சோதி-அனுடம்-அவிட்டம்-மகம்-அமரபட்சத்துப்பஞ்சமிக்குப்பின்பு-மாசி-புராட்டாசிமாதங்களிலேவெள்ளியும்-நவமியும்ஒழிய சிரார்த்தம்பண்ணுவது-எ-று. (௱௩௭)

செய்பவன்மனைவிமக்கள்சென்மமூன்றிருபத்தேழு ... *
மையமில்றநான்காறுலட்டமராசியர்கா ... ... ... *
வெய்துமட்டமியொன்பானிற்கேட்டையேழ்பரணிபன்மூன்
றையமில்மகம்பின்போதுசிராபயமாய்ந்துகொள்ளே ... *

(இ-ள்) சிரார்த்தம்பண்ணுகிறவன்-சென்மத்திரியங்களும்-பாக்கியபுத்திரருடைய சென்மத்திரியங்களும் கர்த்தாவினுடைய-உளம்-நாளும்-அஷ்டமராசியும்-இவைவிசேஷித்து-விலக்கப்பட்டன-அஷ்டமி-நவமியுடன்கூடினகேட்டையும்-சத்தமியுடன்கூடின பரணியும்-திரயோதசியுடன்கூடினமகமும்-இவைமிகவும் நல்லதென்பது அபானத்திலே சராசியாதல் உபயமாகக்கொள்வது-எ-று. (௱௬௮)

## அஷ்டகை.

கொள்விருத்தச்சிரார்த்தங்குறித்தசங்கிராந்திதீர்த்தந் *
தென்னுவராகும்பின்னுந்தென்புலத்தவர்கட்கெல்லா *
மென்னுமுக்கால்நாள்நந்தைபத்திரைாயீரேழ்காரி [லோர்
வெள்ளியிற்றுதையமேகா தசியிற்கோள் விரும்பார்மே

(இ-ள்) சங்கிரமகாலங்களினும்-தீர்த்தகாலங்களினும்-விருத்தசாத்திரம்பண்ணுவது- பிதுர்க்களுக்கு முக்கால்நாட்களும்- நந்தை- பத்திரை- சதுர்த்தசியும்-சனி-வெள்ளி-யுதையமும்-சந்திரோதையும்-பூர்வபட்சமும்-அல்லாதவைநீங்கலே பாபக்கிரகம்நோக்க-மக-மிடம்-சுத்தமாகக்கொள்வது மிக்கோரென்று சிறப்பித்தவதனல்-மாசிபுரட்டாசிமாதங்களிலே அமரபட்சத்துசஷ்டியில் சுபகர்மங்களுக்கு விலக்கப்பட்ட நாட்களில் பாபக்கிரகங்களுக்கு விலக்கப்பட்ட நாட்களில் பாபக்கிரகவாரோதையங்களில் அஷ்டகைபண்ணுவது-எ-று.()

## சாந்திகம்-பவுஷிகம்.

விரும்பியபூசந்தோணியோணம்பார்மகவிளக்குக் ... *
கரும்பனையுத்திரங்கள்கையொடுசதையந்தன்னில் ... *
விரும்புதன்கதிர்செய்காரியிருத்தையெட்டுவாக்கள்நீக்கி
தரும்பிறைவளநாட்செய்யசாந்திகப்பவுஷிகந்தான் ... *

(இள்) புணர்பூசம்-ரேவதி-திருவோணம்- ரோகணி-மகம்-சோதி-அனுடம்-உத்திரங்கள்-ரூ-ம்-அத்தம்- சதையம்- இந்நாளிலேபுதன்-ஞாயிறு-செவ்வாய்-சனி-ரித்தையும்-அஷ்டமியும்- உவாக்களுமொழியப்பூர்வபக்ஷத்திலே சாந்திகம் பவுஷிகம்பண்ணுவது-எ-று(௱௬௯)

## கெஜசாந்தி.

ஞாணிருபூசத்தோணிசதையமுத்திரங்கள்விட்ட ... ...*
மான்மகஞ்சோதியத்தஞ்சித்திரை யனைவார்வாதி ... *
யான்பதிவெள்ளிசெம்பொன்பண்டிதன்வாரத்தன்னி *
லானையின்சாந்திசெய்கையிருத்தைதநீக்கினியசொல்லாய்,

(இ-ள்) புணர்பூசம்-பூசம்-ரேவதி-சதையம்- ஊத்திரங்கள்-௩-ம்- அவிட்டம்-மகம்-சோதி-அத்தம்-சித்திரை-அனுஷம்- ரோகணி- அசுபதி-இவையீற்றிலே-வெள்ளி-வியாழம்-புதன்-திங்கள்-இவர்கள் வருகிற வுதையங்களிலே-இருத்தையொழித்து கெஜசாந்திபண்ணுவது()

## அசுவசாந்தி.

சொன்மறம்விட்டமாறல்தோணிமான்றலையவாசி...*
மன்னுகைபூசம்நற்கோள்வாரத்தையிருத்தைமாற்றிப் *
பன்னியசரோபயத்திற்பரிசாந்திசெயமின்|பாங்காய் *
மின்னனுய்கதிரோன்சோதிநிற்குநாள்மிகவுநன்றே...*

(இ-ள்) விசாகம்-அவிட்டம்-ரேவதி-கார்த்திகை- மிருகசீரிஷம்-அசுபதி-பூசம்- இந்நாட்களில்- உதையங்களிலேசரராசி யுபயராசிகளிலே ரித்தைகூடாதபக்கங்களிலே- அசுவசாந்திபண்ணுவது ஆதித்தன்சோதியில்-நிற்கும்நாள் அசுவசாந்திமிகவும்-நன்று-எ-று. (௱௪௨)

## மானுவிசாந்தி.

நன்றுகார்த்திகைமாதத்தில்நளிர்மதிவளர்பக்கத்தி ... *
லன்றுமட்டமியீராறிலமைந்தவான்பூசநாளில்... ...*
வன்திறலுதைசுத்திமானுவிபண்ணுஞ்சோதி ... [தே
யொன்றுநாள்வெய்யோன்சாந்தி யானவைவேந்தற்கோ

(இள்) கார்த்திகைமாதத்தில் பூர்வபட்சத்தில் அஷ்டமி துவாதசியில் இவையீற்றிலே பூசத்திலன்றுதைபசுத்தியாக மானுவிபண்ணுவது சோதியிலாதித்தனிற்கும் நாளிலே ராசாவானவன் சாசாந்தியும் பண்ணுவது-எ-று. (௱௪௩)

ஓதுமுத்திரங்களத்தமோணமான்றலைமாவிட்டஞ் ... ...*
சோதிசித்திரையோடாரல்தோணிநாளிருத்தைநீக்கி ... *
மேடைபொன்கதிரோன்வெள்ளிமென்னலையோரைதன்னில்*
மூதராய்மறையோர்க்கெல்லாச்சுகங்களுஞ்செய்கைமாண்பே,

(இ-ள்) உத்திரங்கள்-ங-ம்-அத்தம்-திருவோணம்-மிருகசீரிஷம்-அசுபதி-அவிட்டம்-சோதி-சித்திரை-கார்த்திகை-ரேவதி-இந்நாளில் ரித்தையொழிந்தபக்கங்களிலே-புதன்-ஞாயிறு-வியாழம்-வெள்ளி-இவைவார உதையங்களிலே திலைராசியும் திக்கும் ராசாக்களுக்கெல்லாம் சுபகன்மங்களுஞ் செய்யலாம்-எ-று. (௱௪௪)

மான்றலையுத்திரங்கள்மகமத்தம்புணர்தமோணம் ... *
என்றசித்திரைபார்சோதிரேவதிபனைமானந்தை ... *
தோன்றுபூரணைபொன்புந்திசுகன்மதிகதிர்வாரங்க ... *
ளான்றவாகனங்கமேறவாயுதம்பயிற்றலாமே ... *

(இ-ள்) மிருகசீரிஷம்-உத்திரமூன்றும்-மகம்-அத்தம்-புனர்பூசம்-திருவோணம்-சித்திரை-ரோகணி-சோதி-ரேவதி-அனுஷம்-அசுபதி-இந்நாளிலே நந்தைபூரணை-இந்தப்பக்கங்களிலே வியாழம்-புதன்-வெள்ளி-திங்கள்-ஞாயிறு-இவ்வாரவுதையங்களிலே இவர்களிராசிகளிலும்-யானை-குதிரை-தண்டேறவாயுதம்பயிற்றவும்நன்று-எ-று()

## யுத்தஞ்செய்க.

ஆதிரைபரணிபாரல்மகம்பூசமாயில்கேட்டை... ...*
யோதுசித்திரைபூராடமோணம்பார்விளக்கிருத்தை...*
காதியவிட்டிசெம்பொன்கடுங்கோள்களுதையவாரந்...*
தீதிலாப்படைகாணச்செருச்செய்யவழகிதன்றே,

(இ-ள்) திருவாதிரை-பரணி-கார்த்திகை-மகம்-பூசம்-ஆயிலியம்-கேட்டை-சித்திரை-பூராடம்-திருவோணம்-ரோகணி-சோதி-இந்நாளுக்கும்-ரித்தை-விஷ்டியும்-வியாழம்-ஞாயிறு-சனி-செவ்வாய்-இவர்களுடைய வாரோதையங்களும் படைகாணவும் யுத்தஞ்செய்யவும்-அழகிது-எ-று. (௱௪௫)

## பொன்பூண.

அழகிமகுதிரையத்தஞ்சித்திரையனுடம்பூசந் ... ...[கன்
தொழிகொள்மான்றலைபார்தோணிசுங்கன்மாற்சனிபொன்திங்
எழில்கொள்பூரணையேநந்தையெருதியாழ்தனுமீன்கன்னி *
டொரூஉபொன்பூணுமாதர்க்கணியெலாம்புசழ்ந்துபூட்டே *

(இ-ள்) அசுபதி-அத்தம்-சித்திரை-அனுடம்-பூசம்-மிருகசீரிஷம்-ரோகணி-ரேவதி-இந்நாட்களிலே-வெள்ளி-புதன்-சனி-வியாழம்-திங்கள்-இவ்வாரங்களிலே-பக்கம்-நாள்-பூரணை-நந்தையிலே-இராசிக

வில்-ரிஷபம்- மிதுனம்-தனுசு-மீனம்- இவையில்- பொன்பூணநன்று-இதுவிசேஷித்து-ஸ்ரீகளுக்குஅழகு-எ-று. (௱௪௭)

## கோடியுடுக்க.

பூட்டுமுத்திரங்கள்தோணிபுரவிபாரிருபூசங்கள் ... *
வீட்டியவத்தமாதிலையந்தெழில்விட்டநற்கோள் ... *
சூட்டியவாரநன்றூர்துயரமெட்டிருத்தைசிங்கம் ... *
கோட்டியசரங்கள்நீக்கிநின்றதிற்கூறைசாத்தே... ...*

(இ-ள்) உத்திரங்கள்மூன்றும்-ரேவதி-அசுபதி-ரோகணி- புணர்பூசம்-பூசம்-அத்தம்-சித்திரை-சோதி-விசாகம்- அனுஷம்- அவிட்டம்-இவைநன்று-நற்கோள்வார உதையங்கள்நன்று-அஷ்டமி-ரித்தை- சிங்கம்-மேஷம்-கற்கடகம்-துலாம்-மகரம்-இவையிற்றில்-கோடிப்புடவையுடுக்கலாகாது-எ-று. (௱௪௮)

சாந்திடுகூறைநற்கோளுதையத்துத்தண்ணியோர்கள் *
எத்தூமூன்றாறுபன்னொன்றினியரேழ்மிகமால்நல்ல...*
நீத்திடுமெட்டிற்கோளைநின்றபன்னிரண்டுநான்கு... *
மாற்றவண்புகரோன்றீயனுடைமாட்டதிகநல்லாய் ... *

(இ-ள்) நற்கோள்வாரஉதையங்கள்நன்று-பாபர்-௩-௬-௰௧-மிடம்-நல்லர்-புதன்-௭-ம்-நல்லன்-௮-மிடத்து-எல்லாரும்பொல்லார்-௰௨-சு-ல்-வெள்ளி-பொல்லன் அல்லாதவையெல்லாம்நன்று-எ-று. (௱௪௯)

## தெய்வப்பிரதிஷ்டை.

அதிகநன்றாறுபூசங்களனுடமைந்தாணந்தோணி ... *
குதிரையுத்திரங்கள்மூன்றுங்கோணுகநன்றுசேர்தி... *
புதியமாலீசனத்தமத்திமம்புகட்கோள்வாரங் ... [றைய்
கதிர்வடக்குறுநாள்தெய்வப்பிரதிட்டைசெய்கமலக்கண்

(இ-ள்) ரோகணி-புணர்பூசம்-பூசம்-அனுடம்-மிருகசீரிஷம்- அசுபதி-ரேவதி-உத்திரங்கள் ௩-ம்-மகம்-இவையுத்தமம்-சோதி-திருவோணம்-அத்தம்-இவைமத்திமம்-அல்லாதவையாகாது-நற்கோள்வார உதையங்கள்- நன்று- உத்திராயணம்- சிறந்தவாறே பிரதிஷ்டைபண்ணுவது-எ-று.
(௱௫௰)

கண்ணிலாநாட்கள்மாசிகடிமபிற்பக்கமொன்பான் [ன்
எண்ணுவாவிரட்டைபக்கமிராப் புகர்செம்பொன் மூட

கண்ணியசகடம்விட்டிசாராசிதலையாய்நின்ற... ... ... *
லண்ணல்தன்னோரைக்காறெட்டராறும்பிரதிஷ்டைக்காகா... *

(இ-ள்)கண்ணில்லாதநாட்கள்-மாசிமாதம்- அமரபட்சம்நவமிஉவா இரட்டித்தபக்கம்-இராத்திரி-சுக்கிரன்- பிரகஸ்பதி-அஸ்தமனம் -சகடம்-விஷ்டிசாராசிகளில்கர்த்தாவினுடையவிராசிக்கு-௬-௮-௰௨-மிராசியும்- இவைபிரதிஷ்டைக்குவர்ச்சிக்கப்பட்டது-எ-று. (௱௫௧)

ஆகாதபாபர்மூன்றோடாறுபன்னொன்றுநல்லர் ... ... *
ஏகார்களெட்டிலியாருமேழிடம்வெள்ளிபொல்லான்... ... *
மாகாறுமதியநான்குமீராறுமருவிற்றீயன் ... ... ... *
பாகாரும்விடையில்வெள்ளிமிகநன்றுபிரதிஷ்டைபண்ண... *

(இ-ள்)பாபர்-௩-௬-௰௧-மிடம்-நல்லர்-௮-மிடம்-எல்லாரும்பொல்லார்-௭-மிடம்-வெள்ளிதீயன்-சந்திரன்-௪-௰௨ மிடம்-தீயர்-ரிஷபத்தில் வெள்ளியுதையமாகச்செய்யப்பெறில்விசேஷித்துநன்று- எ-று.

பண்மொழிசாஞ்சேய்பின்னிற்பதினன்குமுன்னிலெட்டுப் *
பெண்ணேழுவற்குநன்றாம்பெருகியசரோபயங்க...... ... *
ளெண்ணும்பெண்டெய்வநாட்டாமிறைவர்மூவர்க்குமானட் *
டண்ணியசங்கிராந்திமாதார்ந்தற்றிருநாள்சாற்றே... ... *

(இ-ள்)சாராசியும் செவ்வாய்க்கிழமையும் அமரபட்சத்துசதுர்த்தசியும்பூர்வபட்சத்துஅஷ்டமியும் இவைசத்தமாதாக்களை எழுந்தருளவிக்கலாம்-சராசிகளும் உபயராசிகளும் ஸ்ரீதெய்வப்பிரதிஷ்டைக்கு நன்றென்பது-ரித்தையும் இரட்டித்தபக்கங்களும் உவாவும் மூதேவி பிரதிஷ்டைக்காமென்பது ராசாவினுடையநாளுக்குப் ஊர்பிறந்தநாளுக்கும் பொருந்துநாட்களிலேசங்கிரமகாலத்திலும் மாதாந்தங்களிலும்திருநா ளெழுந்தருளிவிப்பது முன்சொன்னநாட்களிலே சுபக்கிரகங்கள்நோக்குபதின்மூன்றும்பிரதிஷ்டைபண்ணுவது

திருவமர்தேவர்க்கெல்லாஞ்சிறந்தவைகாசித்திங்க... ... ... *
ளுரியநற்பக்கந்தன்னிலுபர்ந்தநாள்வாரமேத்தத் ... ... *
தருமிசப்பவுத்திரங்கள்தமருகக்கொழுந்துசாற்றும்... ... *
பொருவருமாடிதிங்கள்பதினன்கட்டமியும்போற்றே... ... *

(இ-ள்) வைகாசிமாதத்தில் பூர்வபட்சத்தில் சுபகன் மங்களுக்குச் சொன்னநாளில் நற்கோள்வாரஉதையங்களில் ஆகாசம் நிர்மலமாக தேவர்களுக்கெல்லாம்பவித்திரமும் மருக்கொழுந்துஞ்சாத்துவது

அமரபட்சத்து ஆடிமாதத்திலேயாதல் அஷ்டமிபதினான்கிலாதல்சாத்துவது-எ-று. (௱௫௪)

## வாஸ்துயிட.

போற்றுமுத்திரங்களோணம்பூசங்கள்மகம்பார்ரோணி ...*
தோற்றியசதையஞ்சோதிமான்றலையனுடந்தாய்தா ... ...*
மாற்றலெட்டுவாவிருத்தைமந்தனில்நற்கோள்வாரந் ... ...*
தேற்றமூர்கருப்பதிக்கவியம்பினார்நிலையோலைக்கே ... ...*

(இ-ள்)உத்திரமூன்றும்- திருவோணம்-புனர்பூசம் -பூசம்-மகம்-ரோகணி-ரேவதி-சதையம்-சோதி-மான்றலை-அனுடம்-இவைநன்று-அஷ்டமி உவாவிருத்தைஇலையாகாது-சனி-வியாழம்-வெள்ளி-புதன்-திங்கள்-இவ்வாரோதையங்களிலேஸ்திரராசிகளிலேஊர்கருப்பதிப்பது வித்துவான்களுடனே கூடப்போய்சுபநிமித்தங்களுஞ்செய்யப்பூமியிலே சென்று கந்தம்பார்த்து மண்ணையள்ளி வாஸ்துநிச்சயிப்பது-எ-று. (௱௫௫)

## அகமெடுக்க.

நிலைதிருக்கீழ்சாரில்லந்தைமாசிநின்றதேன்சா... ... ...*
ஈலையில்சித்திரைவைகாசியாடியாவணிமேற்சார்வாய் ... ...*
மலருமைப்பசிரேவாய்த்தகார்த்திகைவடசார்வாகு... ...*
மூலகர்பங்குனியோடானிபுரட்டாசியில்லொழித்தார்... ...*

(இ-ள்)தைமாசிமாதம்-கீழ்சார்அகமெடுப்பது-சித்திரை-வைகாசி தென்சார்அகமெடுப்பது-ஆடி-ஆவணி-மேல்சார்அகமெடுப்பது-ஐப்பசி கார்த்திகை வடசார்அகமெடுப்பது-பங்குனி-ஆனி-புரட்டாசி-மார்கழி-இவையொருதிக்கிலும்-அகமெடுக்கலாகாது-எ-று (௱௫௬)

ஒழுக்கியகுண்டையாழ்நண்டியர்கிழக்குடன்வடக்கா ... ...*
மழற்புரியரிவைகோலுக்கழுகியகிழக்குந்தெற்கும் ... *
விழித்திடுந்தேளும்வில்லுமகரமுமேற்குந்தெற்கும் ... ...*
வழுத்தினார்குடமீன்மேடம்வாசலாம்வடக்குமேற்கே... ...*

(இ-ள்)ரிஷபம்-மிதுனம்-கடகம்-இவையீற்றுக்குவடக்குங்கிழக்கும்வாசற்பொருந்தும்-சிங்கம்-கன்னி-துலாம்-கிழக்குந்தெற்கும்பொருந்தும்-தனசு-விருச்சிகம்-மகரம்-இவையீற்றுக்குமேற்குந்தெற்கும்பொருந்தும்-கும்பம்-மீனம்-மேஷம்- வடக்கும் மேற்கும்வாசல்பொருந்தும்-எ-று. (௱௫௭)

வடங்கொள்பார்தோணிபூசமகசிரமனுஷமத்தந் ... *
திடங்களுத்திரங்கணன்றுசித்திரைபுணர்தமூலந் ... *
தடந்தருவிட்டஞ்சோதிசதையமத்திமமூற்பக்கத் [கே
தெடம்பெருவிட்டிருத்தை யுவாவெட்டிற்கோட்கள்நீக்

(இ-ள்) ரோகணி- ரேவதி- பூசம்- மிருகசீரிடம்- அனுஷம்- அத்தம்- உத்திரங்கள்மூன்று- இவையுத்தமம்- சித்திரை- புணர்பூசம்- மூலம்- அவிட்டம்- சோதி- சதயம்- இவைமத்திமம்- அல்லாதநாட்கள்- ஆகாது- பூர்வபட்சத்துஅஷ்டமியும்- ரித்தையும்- உவாவும்- ஆகாதுநீக்கின்றபக்கங்களிலே அட்டமிசுத்தியுண்டாகக்கிரகமெடுப்பது-எ-று. ()

## கிரகாரம்பம்.

நீத்திடும்பாபவாரம்நிலையோரைபுயைமங்கோண்மீன் *
கோத்ததேட்சிங்கஞ்செம்பொன்குடம்புகர்திங்களேற்றி
லேத்துமால்வெள்ளிநன்றுமேழ்புகர்கொடிதீராறிற் *
றீற்றிறமதிமாற்பன்னென்றுமூன்றினியதீக்கோள் *

(இ-ள்) பாபக்கிரகமுதையங்கள் விலக்கப்பட்டன சுபகிரகவாரவுதையங்களும்- ஸ்திரராசியும்- உபையராசியும்- நன்றென்பது- விருச்சிகத்திலும்- சிங்கத்திலும்- பிரகஸ்பதிநிற்கிலும்- கும்பத்திலே- வெள்ளிநிற்கிலும்- ரிஷபத்திலே- புதன்சுக்கிரனும் - விசேஷித்து- நன்மைபண்ணுவான்- வெள்ளி- ஏழாமிடமொழியநல்லன்- சந்திரன்- புதன்-ய௨- மிடமொழியநல்லன்- பாபக்கிரகங்கள்- ௩க- மிடம்- ௬- மிடம்- ௩- மிடம்- நல்லதென்பது- தேவாலயங்களுக்கும்- கிரகங்களுக்கும்- வாஸ்துவகுக்கவும்- கிரகாரம்பத்துக்குச் சொல்லகாலங்களிலேகொள்ளுவது-எ-று. (௱ருகூ)

## குடிப்புக - திருவாண்டெழுத.

தீங்கிலாவில்லெடுக்கச்செப்பியகாலந்தன்னி ... ... *
லோங்கியமாசியாடியொழித்துள்ளகாலமெல்லா ... *
மாங்குடிபுகுதமாதேயாடியில திவாக்கே ... ... *
ஈங்கிவைமன்னர்க்கெல்லாமெழுத்திடமினுதென்றுமே *

(இ-ள்) கிரஹாரம்பத்துக்குச்சொன்னநாட்களிலே- மாசியும்- ஆடியுமொழிய அல்லாதவைவெல்லாங்குடிப்புகநன்றென்பது - ஆடிமாசத்திலே- திருவாதிரையாயிநன்று உச்சியம்பொழுதுவிராசாவுக்குத்திருவாண்டெழுத்திடுவது-எ-று. (௱சுய)

## தீட்சை.

இனியதேருத்திரங்களிரேவதியவிட்டமோண ... ...*
மனுடமான்றலைபூசங்களாதிரையத்தங்கேட்டை ...*
துணிவுறுமகமேமூலஞ்சோதிசித்திரைசேய்வாரங் ...*
குனிசிலைநுதலாய்நன்றுகுருவுமாகொள்ளுவார்க்கே...*

(இ-ள்) ரோகணி- உத்திரங்கள்- மூன்றும்-ரேவதி-யவிட்டம்-திருவோணம்-அனுஷம்-மிருகசீரிஷம்-புனர்பூசம்- பூசம்- திருவாதிரை-அத்தம்- கேட்டை- மகம்-மூலம்- சோதி- சித்திரை-இவைநன்று-கிழமைகளில்- செவ்வாய் நன்று-எ-று. (௱௬௧)

ஒல்லையினுவாவிருத்தையட்டமியெட்டிற்கோட்கள் *
புல்லியமாசியாடிபுரட்டைமார்கழியொழித்து ...*
நல்லபூற்பக்கத்திற்குமோரைகோள்மைந்தநாளிற் ...*
சொல்லுவார்சங்கிராந்திதோன்றில்மெய்ச்சுத்திபண்ணே

(இ-ள்) உவாவும்- இருத்தை- அட்டமி- மாசி- ஆடி - புரட்டாசி மார்கழி- இவையொழித்து- பூர்வபட்சத்திலே- ஸ்திரராசிகள்-உதையமாக அட்டமிசுத்தியுண்டாக- ஆகாசம்நிர்மலமாகக்கொள்வது-சிஷ்ன்-பிறந்தநாட்களிலேயாதல் - மற்றும்- புண்ணியயோகங்களிலே-சிஷ்னேசரீரசுத்தி பண்ணுவது-எ-று. (௱௬௨)

## குளங் கிணறு-கெல்ல.

சுத்தமுத்திரங்கள்கேட்டைதோணிசித்திரைபாரோண *
மத்தமான்றலைபூராடமகமைந்தேழ்மூன்றுபன்னொன் *
றொத்தபன்மூன்றுமொன்று திதியோரைகுடமீன்கேது
குத்தியவெருதிநண்டிற்குளங்குழிகூவல்கெல்லே......*

(இ-ள்) உத்திரங்கள் மூன்றும்-கேட்டை-ரேவதி- சித்திரை-ரோகணி-திருவோணம்- அத்தம்- மிருகசிரிஷம்- பூராடம்- மகம்- பஞ்சமி-சத்தமி-திரிதிகை- ஏகாதசி-பிரதமைராசிகளில்-கும்பம்-மீனம்-மகரம்-ரிஷபங்கடகம்- இவையிற்றிலே சுபக்கிரகவாரோதயங்களிலே அட்டமசுத்தியுண்டாககுளங்குழிகூவல்கெல்லுவது-எ-று. (௱௬௩)

கல்லுமாக்குளங்கள்கூவல்கதிர்துலாமத்திமத்திற் ...*
செல்லுநாட்பெருநீராகுஞ்சித்திரைநடுவிற்பத்தில்...*
மல்லமாக்கைகள்கட்டில்மலையதாமெட்டிற்சுத்த ...*
மல்லுறுகுழலாய்கோன்களழகிதோர்கீழ்மையாய்ந்தே*

(இ-ள்) ஐப்பசி மாசம்- நடுவிற்பத்தில் - மூன்பு சொன்னநாட்களிலே- குளங்-கிணறு-வெட்டப்பெருநீராம்- சித்திரைமாசத்தில்-நடுவிற்பத்தில்- கனைகடடில்-மலைபோலேயாம்-சுபக்கிரகங்களிலே-அஷ்டமசுத்தியுண்டாக-முன்புசொன்னமுகூர்த்தத்திலேகொள்ளுவது

## வியாதியஸ்தர்மருந்துண்ண.

ஆயில்முப்பூரஞ்சோதியாதிரைபரணிகேட்டை ...*
ஏயுநற்சதையம்பக்கமீருறுநான்காறொன்றான் ...*
காய்கதிர்செவ்வாய்காரிவாரங்கள்கலந்தநாளில்... [லோர்
நோய்கொளில் மரணமென்று நவின்றனர் நூல்கள்வல்

(இ-ள்) ஆயிலியம்- மூப்பூரஞ்- சோதி- திருவாதிரை-பரணி- கேட்டை-சதையம்- துவாதசி- சதுர்த்தி- சஷ்டி- நவமி ஞாயிறு- செவ்வாய்-சனிக்கிழமைகளும்- சொன்னநாட்பக்கமுங்கூடினநாள் வியாதிப்பட்டவனுக்குசத்தியமரணமென்பது-எ-று. (ருகரு)

வல்லிருபூசமத்தமான்சோதியுருள்மாப்பெண்ணை ... ...*
சொல்லுமுத்திரங்கள்விட்டநந்தோணிமான்றலைசெக்கோண *
மெல்லியசரநல்வாரம்வெய்யவனெண்கோள்சுத்தம் ... ...*
செல்வமாமிருத்தைநீக்கிமருந்துண்ணத்தெரிந்துகொள்ளே*

(இ-ள்) பூசங்கள்-அத்தஞ்-சித்திரை-சோதி- ரோகணி-அசுவதி-அனுஷம்-உத்திரம்-மூன்றும்- அவிட்டம்-ரேவதி- மிருகசீஷம்-சதையம்-திருவோணம்-சராசிகளும்-வியாழம்-வெள்ளி-திங்கள்-ஞாயிறு-புதன்-பக்கங்களில்-இருத்தையொழிய- மற்றுள்ளவையீற்றில-சுபக்கிரகங்கள் நோக்க அஷ்டமசுத்தியுண்டாக மருந்துகுடிப்பது-எ-று ()

## அறுக்க வெதுப்ப.

தெரிதருமாயில்கேட்டைசெங்கைமூலஞ்சேய்காரி ...*
விருதருவிரித்தைகன்னிமேடங்கோல்கடகந்தம்மை *
எரிதருதீக்கோள்நோக்கவெட்டிடஞ்சுத்தமாக்கி ...*
கருதுநோயறுத்துச்சுட்டுக்காரம்வைத்தட்டைகட்டே *

(இ-ள்) ஆயிலியம்-கேட்டை-திருவாதிரை-மூலம்-செவ்வாய்-சனி-இருத்தை- கன்னி- மேடம்-துலாம்- கடகம்- இந்தராசிகளே-பாபக்கிரகங்கள்நோக்க-அஷ்டமசுத்தியுண்டாகவியாதிகளறுக்கவும்- சுடவும்-காரம்வைக்கவும்- உருவிடவும்- நல்லது- எ-று. (ருகள)

## மரணதோஷம்.

சட்டியவுரோணிசோதிகலமகம்புனர்தமாயி... ... ✻
லொட்டியவுத்திரங்கள்தவிர்த்திவையொழிந்தநநாளி ✻
லட்டமியிருத்தையான்றசமியில்வெள்ளிதிங்கள்... ✻
கூட்டியவுதையவாரற்துயர்கெடக்குளிக்கநன்றே ... ✻

(இ-ள்) ரோகணி-சோதி- ரேவதி- மகம்- புனர்பூசம்-ஆயிலியம்-உத்திரம்- மூன்றும்- இவைஒழிந்தநாளிலே- அஷ்டமி - இருந்தை-தசமி-இப்பக்கங்களிலே- வெள்ளி- திங்கள் - இவ்வாரவுதையங்களிலேவியாதியஸ்தர்குளிப்பது- எ-று. (௱௬௮)

நன்றுணர்மூக்கால்சாலாம் வருநாட்பத்திரையாம்பக்கம்
வென்றிகொள்பொன்சேய்வெள்ளிவாரத்திலவித்தல்சுட்
என்றிவையுளவேயிந்நாளிறந்தவன்மாபுதன்னிற் [டல்
பொன்றுவர்மூவரொன்றுபுகன்றனர்புலவர்பொன்னே ✻

(இ-ள்) மூக்காலுங்காலுமாகவருநாட்களிலே- பத்திரை - வியாழம்-செவ்வாய்-வெள்ளி-இவை கூடினநாளில்-சாதல்-சுடுதல்செய்யில்-அவனுடையவங்கிஷத்திலேமூன்றுபேர்-மரணமுண்டென்பது-எ-று.

பொன்னனாய்த்தருப்பையாலேபுனர்தேகவுருவம்பண்ணி
பின்னுமந்தணரையூட்டிப்பிறப்பிலாத்தேவர்தம்மை ✻
புண்ணியபூசைசெய்தாலொழிந்திடுஞ்சாக்காடென்று ✻
மின்னிடைமடந்தைநல்லாய்விளம்பினர்தமிழ்விரித்தோர்

(இ-ள்) தெற்பையாலேபிரேதரூபம்பண்ணி புனர்தேகத்தைத்தகனஞ்செய்துபிராமணப்போசனமுஞ்செய்வித்துதேவர்களையும்-பூசிக்கத்தோஷந்தீருமென்பது-எ-று. (௱௭௰)

## க்ஷேத்திரவிதம்

விரித்தவான்பரணியோணம்விசாகமோடத்தநாளில் ✻
கருத்துடைநாலாங்காலிற்கடகம்வந்துதிப்பக்கண்டு ✻
திருத்தியசெய்யில்மண்ணைத்தின்றிடச்செல்வமிஞ்சிப் ✻
பொருத்தமும்புகழுமுண்டாம்பூமியுந்தன்னதாமே ✻

(இ-ள்) பரணி- ஓணம்-விசாகம்-அத்தம்-இவையீற்றிலேநாலாங்கால்களிலே-கற்கடமுதையமாக க்ஷேத்திரத்தில்- பூமியைப்பார்த்து மண்ணைத்தின்ன அந்தப்பூமிதன்னதாய்ஐஸ்வரிய முண்டாமென்பது.

## நாவாயுங்கள்ளரும்புகாமல்.

தாவியவிலங்குகள்ளர்தன்செய்யிற்புகாமல்வேண்டி [னு
லோவில்கார்த்திகையாம்நாளின் மான்றலையுதிக்கும்போ
மேவுபாழ்மனையெறப்பில் விறகினைக்கொணர்ந்துசெய்
யிற்,றூவவேகள்வரம்புதோறுமெரித்திடிற்புகுதாதொன்றும்

(இ-ள்) மிருகங்களுங் - கள்ளருந்தன்செய்யிற் புகாது வேண்டில் கார்த்திகை நட்சத்திரநன்று மிருகசீரிடம்-உதிக்கும்போது பாழ் மனை யெறப்பில் விறகைக்கொண்டுவந்து செய்யில் வரப்புத்தோறு மெரிக் கச்செய்யில் யாதொன்றும்புகாது-எ-று. (௱௭௨)

ஒன்றியசேயின்வாரத்துவர்பதினான்குதன்னில் ...*
வன்திறலவிட்டமத்தமகசிரநாளிற்சிங்கங் ... ...*
கன்றியவில்லுதிப்பக்காஞ்சிரமுளையநாட்ட... ...*
வென்றிகொள்விலங்குசெய்யில்மேவிடாமேவில்வியும்,

(இ-ள்) செவ்வாய்க்கிழமையில்- பதினான்காதல்- உவாவாதல்-இப் பக்கமும்- அவிட்டம்- அத்தம்-மிருகசீரிடம்-இந்நாட்களுங்கூடிய ந்தநாள்-சிங்கந்தனுசுவாதல் முகூர்த்தமாகக் காஞ்சிரமுளையைச்செ ய்யில் வரம்பில் நாலுமூலையும்- நாட்டமிருகங்கள்-நாவாய்-களையு காது- புகுந்தால்- மரிக்கும்-எ-று. (௱௭௩)

மேவுமாதிரையுநன்றுவில்லெழுமனையிற்செய்யி ...*
லெவியகோணம்நான்குமெட்டியின்முளையைநாட்டத்,
திமிருகங்களாழலெலிநாவாய்விட்டிடிற்செய்யில் ...*
தாவிடாமனையிற்சாரச்சாருமேல்மரணஞ்சாற்றே ...*

(இ-ள்) திருவாதிரையினன்று- தனுசு உதையமாக - மனையினுஞ் செய்யிலும்- நான்குகோணங்களிலும்- காஞ்சிரமுளையை நாட்டமி ருகங்கள்- எலி- யாழல்- நாவாய் புகுதாதென்பது-எ-று (௱௭௪)

சாற்றுமாதிரையிற்செவ்வாய்க்கிழமையிற்றகரிபாதல் *
சீற்றமாமகரத்தாதல்சேயெழப்பகைகுறில்லித்... ...*
றேற்றியவிறகைவாங்கிச்சுடலையிற்றீயைமூட்ட ...*
மாற்றலர்மாய்ந்துபோகுஞ்சூனியமயிலேயன்னாய் ...*

(இ-ள்) செவ்வாய்க்கிழமையில்திருவாதிரையன்றுமேஷத்திலாதல் மகரத்திலாதல்செவ்வாயுதிப்பஅப்போதுசத்துருவின்மனை யெறப் பில்விறகைவாங்கிச்சுடுகாட்டி லிட்டெரிக்கச் சத்துருக்கள் மாய்ந்து

போவார்கள்-எ-று. (௱௭௫)

அன்னைச்சித்திரைமாதத்துச்சித்திரையானநாளில் ...*
முன்னரைதன்னிற்றிங்களுதிப்பதுமுகூர்த்தமாகக் ...*
கன்னியைப்பஞ்சவர்ன்னநூல்புனைந்தரையிற்கட்ட...*
மன்னியகுமரிநீக்கிவாட்கையுமெய்துமண்மேல் ...*

(இ-ள்) சித்திரைமாதத்துச்சித்திரை நாள்முன்னரையிற்றிங்களு தையமாகக்கன்னிகையாயிருப்பாளைக்குளிப்பாட்டி - பஞ்சவர்ன்ன நூலாலேகுளிகையாக்கி-அரையிற்கட்டக்குமரிநீங்கி வாட்கையுமெய் தும்-எ-று. (௱௭௬)

மண்ணிடைமகளைப்போதவேண்டரூய்வாழ்வார்தம்மை
பெண்ணுடன்கூட்டவேண்டிற்பெரியசித்திரைநாளத்தந்
திண்ணியூரவுதிப்பதிங்கட்கிழமையிற்றிருவன்னுளைப்*
புண்ணியநறுநீருட்டிப்புணர்முலைச்சாந்தம்பூசே ...*

(இ-ள்) ஸ்திரீகளுடன்சேராதே யோடிப்போவாரைச்சேர்விக்க வேண்டில்-சித்திரைமாதநாள்-அத்தமுதையமாகத் திங்கட்கிழமையி னன்று ஸ்ரீயைக்குளிப்பாட்டி சந்தனத்தைப்பூசிகூட்டினுல் ஒருநா ளும்பிரியார்-எ-று. (௱௭௭)

மேல்நோக்கு-கீழ்நோக்கு முகட்டுநாள்.

சந்திரன்விதைசெய்பூசல்சனிதவங்கதிர்சேவித்தல் ...*
மந்திரிமணமால்கல்விமயிர்வெள்ளிவாரநன்று ... *
மந்தமில்முடியேவிஞ்ஞனுபரும்பொருள்கன்னிதானம்
வந்துருபகைநோய்தீர்க்கவருவதேகாலமானே ... *

(இ-ள்) முன்புசொல்லிப்போந்தவையீற்றில்விசேஷங்கள்- திங்க ள்வித்தைக்கு விசேஷமென்பது- செவ்வாய்பூசல்- சனிதவசு - ஞா யிறுசேவிக்க - வியாழம்விவாகஞ்செய்ய - புதன்வித்தியாரம்பம்ப ண்ண- வெள்ளிசௌரத்துக்குவிசேஷம்- அபிஷேகம்வந்தெய்திய போதும்வித்தைஅர்த்தம்வந்தெய்தியபோதுசத்துருவை செயித்த ல்உயித்தியம் வந்தெய்தினபோதும் கன்னியாதானம் வந்தெய்தின போதும்- சத்துருவையழிக்கலான பொழுதும் எய்தினபொழுதே காலமாகச்செய்வது-எ-று. (௱௭௮)

மாமுதல்நான்குமற்றைமகமுதல்நான்குமூலந் ...*
தான்முதல்நான்குமேலாந்தக்கமான்றலையவிட்டம்...*

மேவுசித்திரையுமுச்சிவிரித்திடுமீசனுந் ... ...*
தூவியசோதினுஞ்சதையநாள்கீழாங்காலே... ... *

(இ-ள்) அசுவதிமுதல்நாலும்- மகமுதல்நாலும்- மூலமுதல்நாலும்- இவைமேல்நோக்கினநாள்யிவையீற்றில் அகமெடுக்கவும் கூடம் வைக்கவும் ஊரேற்றவும்நன்றென்பது- மகசிரம்- அவிட்டம்- சித்திரை- இவைமூன்று முகட்டுநாள் இவையீற்றில்மரம்வைக்கவும்கோபுரம்பண்ணவும்நன்றென்பது திருவாதிரைமுதல்நாலும் - சோதிமுதல்நாலும்- சதையம்முதல்நாலும்-இவைகீழ்நோக்கினநாள் இவையீற்றில் ஏரிகுளங்கிணறுகெல்லவும் விசேஷித்துநன்றென்பது-எ-று.

காரியசுத்தி.

மால்கொண்டமணத்துக்கேழுங்கருதும்வாயுறைக்குப்பத்தி *
மால்கொண்டமனைகிரண்டுவழிபோக்குக்கைந்துவாஸ்து ...*
மேல்கொண்டபிரதிட்டைக்காதுமயிர்வித்தைமுடிசீமந்தம்*
வேல்கொண்டநாமமுன்னூற்கெட்டிடஞ்சுத்தமென்றே ...*

(இ-ள்) விவாகத்துக்கேழாமிடம்சுத்திகொள்ளுவது- அன்னப்பிராசனத்துக்குப்பத்தாமிடம்-கிரகாரம்பத்துக்குஇரண்டாமிடம்-யாத்திரைக்குஐந்தாமிடம்- சுத்திகொள்ளுவது - வாஸ்துபிரதிஷ்டை-கருணர்வேதம்- சவுளம்-வித்தியாரம்பம்-அபிஷேகம்- சீமந்தம்-நாமகரணம்-உபநயனம் - இவையீற்றுக்கு - எட்டாமிடம் - சுத்தமாகக்கொள்ளுவது-எ-று. (௱௮௰)

இராசிசுத்தி.

சுத்தமாமணஞ்சிரார்த்தம்யாத்திரைசோலைவைத்தல்...*
புத்திசேர்குருவைக்கண்டால்புணர்ந்திடலகமெடுத்தல்*
வைத்தயேருழவுகூவல்மரக்கலமயிரோகல்வி... ... *
சத்தியமேடமாதிகயலீறுய்க்கழித்தார்கற்றோர்... ...*

(இ-ள்)விவாகத்துக்குமேடமாகாது-சிரார்த்தத்துக்குரிஷபமாகாது-யாத்திரைக்குமிதுனமாகாது- விருட்சம்வைக்கக்கடகமாகாது-ஆசாரியனைக்காணச்சிங்கமாகாது- புணர்ச்சிக்குக்கன்னியாகாது -அகமெடுக்கத்துலாமாகாது-உழவுக்குவிருச்சிகமாகாது-கிணறுவெட்டத்தனுசாகாது-செலத்தில்-மரக்கலயாத்திரைக்குமாகாது-க்ஷவரத்துக்குக்கும்பமாகாது-வித்தியாரம்பத்துக்குமீனமாகாது-இவைவிலக்கப்பட்டவிராசி-எ-று. (௱௮௧)

## சென்மத்திரய நாள்-தோஷமும்-அனுக்கூலமும்.

கற்பநாள்மூன்றிலெண்ணெய்கடிமணஞ்சிரார்த்தம்போக்கு *
லத்புறுபிணிமருந்துமயிர்வினைமருவலாகா... ... ...*
விற்புகலுழுதல்வித்தலினிதுண்டலறங்கள்செய்தல் .... ...*
பொற்பணிமகுடமாலடைபுனையெலாம்புகலின்மாதே... ...*

(இ-ள்)பிறந்தாளென்றில்-எண்ணெய்வார்க்க-விவாகம்-சிரார்த்தம்-யாத்திரை-வியாதி-மருந்துக்ஷவரம்- இவைவிசேஷித்துத்தவிர்க்கப்பட்டன-குடிப்புக-உழவுவிதைக்க-நவபோசனம்பண்ண-தன்மஞ்செய்ய- ஆபரணம்பூண- அபிஷேகம்பண்ண- கோடிபுடவையுடுக்க-இவைவிசேஷித்துநன்மையென்பது-எ-று. (௱௮௨)

## மணப்பொருத்தம்.

மாதவர்மணப்பொருத்தம்வழுத்துநாட்கெணப்பொருத்தம் *
மாதுமாகேந்திரமோடுஸ்ரீதீர்க்கம்யோனிராசி... ... ...*
மேதகுமதிபதிக்கோள்வசியமிரச்சுவேதன் ... ... -*
தீதறுமாக்கள்புள்ளுதெரிந்திடவுரைப்பதேனே ... ...*

(இ-ள்) தினம்-கெணம்-மகேந்திரம்-ஸ்ரீதீர்க்கம்-யோனிராசி -ராசியாதிபதி-வசியம்-இரச்சுவம்-வேதையென்றுசொல்லப்பட்ட தெசப்பொருத்தமும்அடைவே-சொல்லுவேன்-எ-று. (௱௮௩)

உரைத்திடிரண்டுநான்காறெட்டொன்பானீரேழ் *
பரித்தவெண்ணிரண்டுபத்தொன்பானிருபத்திரண்டும் *
இருத்தியவிருபன்மூன்றுமிருபத்தாறிருபத்தெட்டும் *
பொருத்தநன்றிருபத்தொன்பானுளிவைபூவின்மாதே *

(இ-ள்)௨-௩-௬-௮-௯-௰௨-௰௪-௰௬-௰௯-௨௨-௨௫-௨௬-௨௮-௨௯-ம்நாள்-இவையெல்லாக்கன்மங்களுக்கும்பொருந்தும்நாளென்பது-இவைபத்துச்சென்றால்தொட்டெண்ணிக்கொள்வது இருபதாநாளும்-தொட்டெண்ணுவது-எ-று. (௱௮௪)

மான்றலைபுணர்தமாரல்வயப்பரிசதையமாடி ... ... *
யான்றசித்திரைபங்குனியனுடமத்திமம்பார்செய்கை ... *
மூன்றியவறிவந்தோணிமகம்பூசம்மோணமத்தந் ... ...[தோர்
மதான்றிநன்றுறுநாளல்லர் தொழிற்றனர் துணிந்து தேர்ந்

(இ-ள்)-மிருகசீரிடம்-புணர்பூசம்-கார்த்திகை-அசுவதி-சதையம்

உத்திராடஞ்சித்திரை உத்திரம்--அனுஷம்-இவையொன்பதும்-ஸ்திரீயு ம்-புருஷனும்ஒருநாளாகில்மத்திமம்-ரோகணி-திருவாதிரை-உத்திரட் டாதி-ரேவதி-மகம்பூசம்-ஓணம்-அத்தம்-இவையெட்டும்ஒருநாளாகி ல்உத்தமம்-மூலம்-ஆயிலியம் விசாகம்-கேட்டை-பூரம்-௬-ம்-பரணி- அவிட்டம்-சோதி-இவைபத்துநட்சத்திரங்களும்-இருவரும் ஏகநட் சத்திரமாகிலாகாது-எ-று.ஒருநாட்பிறந்தபொருத்தம்முற்றும். ()

தோரேப்புத்திரங்கள்செங்கைமூப்பூரமக்கள் ... ...*
பாரமான்றலைபூசங்கள்பனைவிளக்கோணந்தோணி ... *
சூரிமாவத்தந்தேவர்மூறல்கேட்டைப்பயறுமூலம் ...*
மாரல்பாம்பவிட்டஞ்செக்குமகங்கணமாக்காங்கே *

(இ-ள்)உரோகணி-பரணி-உத்திரத்திரயம்-திருவாதிரை-மூப்பூரம்- இவை-௯-ம்-மனுஷகணம்-மிருகசீரிடம்-புனர்பூசம்-பூசம்- அனுஷ ம்-சோதி-ஓணம்-இரேவதி-அசுவதி-அத்தம்-இவையொன்பதும்-தே வகணம்-விசாகம்-கேட்டை-சித்திரை-மூலம்-கார்த்திகை-ஆயிலியம்- அவிட்டம்-சதையம்-மகம்-இவையொன்பதும்-இராட்சதகணம்எ-று

அரக்கருந்தேவர்தாமுமலைப்பகையரக்கரோடே... ...*
பெருக்கவுமனிதர்சேரிற்பிணம்படுமக்களோடே......*
செருக்கியதேவர்சேரின்மத்திமஞ்செல்வமுண்டா [றே
யிருக்குமேற் கணங்களொன்றே யிவைநல மாதுமொன்

(இ-ள்)இராக்ஷதகணமும் தேவகணமுமாகில்- சிலுகாமென்பது- ராக்ஷதகணமு-மனிதகணமுமாகில்- மரணமுண்டாமென்பது-மனு ஷகணமும்-தேவகணமுமாகில்-மத்திமமென்பது-இரண்டு-மொரு கணமாகில்-உத்தமம்-எ-று.கணப்பொருத்தம்-முற்றும். (௱௮௭)

ஒன்றுநான்கேழுபத்துப்பதின்மூன்றெண்ணிரண்டாநாட்க*
ளொன்றொழித்திருபானந்துமிருபதோடிரண்டுமாகில் ...*
நன்றுமாம்கேந்திரத்தான்நாட்பதின்மூன்றப்பாலே... ...*
சென்றிடின்மிகவுநன்றுஸ்ரீதீர்க்கமென்றுசெப்பே... ...*

(இ-ள்)௧-௪-௭-௰-௰௩-௰௬-௰௯-௨௰௨-௨௰௫-இந்நாளும்மாகேந்தி ரப்பொருத்தமுண்டென்பதுமுன்புபோலேதொட்டெண்ணுதயிரு பத்தேழுங்கண்டுகொள்வது-(மாகேந்திரம்-முற்றும்)ஸ்ரீதீர்க்கங்கொ ள்ளும்படிஸ்ரீநாளிலேநின்று- புருஷநாளவு- மெண்ணினால்-௰௩-நா ளுக்கு- மேற்படில்உத்தமம்- பதின்மூன்றில்குறையலாகாதென்று- சொல்லுவது-எ-று.ஸ்ரீதீர்க்கம்-முற்றும். (௱௮௮)

செப்பியகுதிரையானைபாம்பேதீய்நாகஞ்சாரை... ... ... *
தப்பிற்பெண்ணுப்பெண்பூனைதகர்புஞ்ஞாருவெலியாண்பெட்
டையொப்பெருமெதருமைவேங்கைகிடாப்புலிமோடுபுல்வாய் [டை
கொப்புறுகலைநாய்வல்லீண்குரங்குவன்பசுக்குரங்கே... ...*

(இ-ள்) அசுவதிகுதிரை - பரணியானை - கார்த்திகைஆடு - உரோகணி பாம்பு - மிருகசீரிடம்சாரைப்பாம்பு - திருவாதிரைபெண்ணுய் - புனர் பூசம்பெண்பூனை - பூசம் - கிடாய் - ஆயிலியம்கடுவன்பூனை - மகம் - எலி - பூரம்பெண்ணெலி - உத்திரம்எருது - அத்தம்எருமை - சித்திரைபுலி - சோதிகிடா - விசாகம்பெண்புலி - அநுஷம்புல்வாய் - கேட்டைகலைமூ லம்நாய் - பூராடம்குரங்கு - உத்திராடம்மலட்டுப்பசு - திருவோணம் பெண்குரங்கு - எ-று. (௱௫௯)

குரமிகுமனையிற்பெண்டீர்குதிரையிற்பேடுகூறில் ...*
நரர்களிற்புருஷர்நல்லர்பாற்பசுமிடியீருக ... ... *
விருபதோடேழுநாளும்யோனியிப்பரிசேயென்று ...*
தூரகமேயாதியாகச்சொல்லிடாய்துடியேயன்னுய்... *

(இ-ள்) அவிட்டம்பெண் - சதையம்பெட்டைக்குதிரை - பூரட்டாதி புருஷன் - உத்திரட்டாதியாற்பசு - இரேவதிபெண்யானை - இவ்வகையா லிருபத்தேழுயோனியுங்கண்டுகொள்க - எ-று. (௱௬௰)

துடிபிடியானைதன்னிற்பகைநரர்துரகங்கோள்கள்... *
கடியுடையெருமைபுல்வாய்கடற்புலிபகையதாகும்... *
கொடியபாம்பதனுக்காடுகுரங்குக்குநாயதாகும்......*
கடியபேரெலிக்குப்பூனைபகையெனக்கருதுநீயே ... *

(இ-ள்) ஆனைக்குப்பகைமனிதர் - குதிரைக்குப்பகைபசு - எருமைக் கும் புல்வாய்க்கும்பகைபுலி - பாம்புக்குப்பகைஆடு - குரங்குக்குப் பகைநாய் - எலிக்குப்பகைபூனை - எ-று. (௱௬௧)

கருத்துடையாணுமாணுங்கூடும்பகைபெண்ணும்பெண்ணுந்
திருத்தமாம்பெண்பெண்ணுமியாணுமேனற்செல்வமுண்டாம்*
விருத்தமாம்பெண்ணுணுமியாண்பெண்ணேல்மிகவும்யோனி
பொருத்தமாமிராசியேழில்மேற்படிற்புகழுண்டாமே... [ப்

(இ-ள்) இரண்டுயோனியும் புருஷயோனியாகில் உயுத்தியமு ண்டாம் - இரண்டுயோனியும் பெண்யோனியாகில் உத்தமம் - ஸ்திரீ யோனியாய் - புருஷன்புருஷயோனியாகில் - நன்றென்பது - புருஷன்

ஸ்ரீயோனியாய்-ஸ்ரீபுருஷயோனியாகில்-மறுதலையுண்டாம்- இவ்வகை யால்யோனிப்பொருத்தம்- பார்ப்பது இராசிப்பொருத்தம்- சொள் ளும்படிஸ்ரீராசியில்நின் றுபுருஷராசியளவுமெண்ணினல்-ஏழாமிரா சியாகிலும்- எழுக்குமேற்படிலும் உத்தமம் ஏழிற்குறையலாகாது-

உண்டாயமதிக்குந்தேட்குமுறவுமான்விடையாழ்சோல்பெண் ...<br>
குண்டைகோலக்குறவுவீணைகொடியரேளாதியாறுந் ... *<br>
தண்டிற்பெண்டனக்குச்சிங்கமீனெழித்தெல்லாஞ்சார்வாம்.*<br>
நண்டுக்குவிடையாழ்வில்மீனரிநட்பென்றுசொல்லே ... *

(இ-ள்) முன்பேநட்புச்சொல்லியிருக்கவும்-விசேஷித்து அதி பதிப்பொருத்தஞ் சொல்லும்படி-மேஷவிருச்சிகத்துக்குறவுமகரா ம்-ரிஷபம்-மிதுனம்-துலாம்-கன்னி- இவைஐந்துமென்பது ரிஷப துலாத்துக்குறவு மிதுனத்துக்கும் - விருச்சிகமுதல் - ஆறுராசியும் மிதுனத்துக்குக்கன்னிக்குமுறவு- சிங்கமுமீனமுமொழிய எல்லாரா சியுமென்து-டகத்துரிஷபமும்-மிதுனமும்-தனுசும்- மீனமும்-க ன்னியு-முறவு-எ-று. (௱௯௩)

சொல்லிபசிங்கத்துக்குச்சுற்றமீன்மேடமாகும் ... ... *<br>
வில்லுமீன்றனக்குக்கும்பம்விடைமுதலாறும்நட்பாங் ...*<br>
சொல்லைமான்கும்பத்துக்குக்கோதையாழ் விடைமீன்விற்கே-<br>
ரல்லல்மாகுழலாய்கேண்மீனதிபதிபொருத்தமாங்கே ... *

(இ-ள்)சிங்கத்துக்கு-மீனம்-மேஷம்-தனுசு-முறவு-தனுசுக்கு- மீனத்துக்கும்-கும்பம்-ரிஷபமுதலாறு ராசியுமுறவு-மகரகும்பத்து க்கு-கன்னி-மிதுனம்-ரிஷபம்-மீனம்-தனுசு-துலாமுறவு-கும்பத்துக் கும்-கன்னி-மிதுனம்-ரிஷபம்-மீனம்-தனுசு- துலாமிவை- யுறவென் பது-எ-று, அதிபதிபொருத்தம்-முற்றும். (௱௯௪)

பொருந்திடுமதிக்குச்சிங்கம்விருச்சிகம்பொருவிடைக்கு...*<br>
விருந்துகற்கடகங்கோலாமிதுனத்துக்கரிவையாகுற் ... ... *<br>
திருந்துகற்கடகத்துக்குத்தேட்சிலைசிங்கத்துக்குக் ... ... *<br>
கருஞ்சுறுவசியமாகுங்கன்னிக்குவிடைமீன்பொன்னே ... *

(இ-ள்) மேஷத்துக்குச்சிங்கமும்- விருச்சிகமும்-வசியம்- ரிஷ பத்துக்கு -கடகம்- துலாம்-வசியம்- மிதுனத்துக்குக்- கன்னிவசியம்- கடகத்துக்குவிருச்சிகமும்-தனுசும்-வசியம்-சிங்கத்துக்கு-மகரம்வசி யம்-கன்னிக்கு-ரிஷபமும்-மீனமும்-வசியமென்றறிவது-எ-று. ()

பொன்னனுப்துலைக்குப்புல்வாய்பொருந்துதேளதற்குநண்டுங்
கன்னியும்வசியமாகுங்கார்முகமதற்குமீனுஞ் ... ... ... *
சொன்னவில்மகரத்துக்குக்கும்பமாங்கும்பத்துக்கு ... ...*
மன்னுமீன்மீனத்துக்குமகரமும்வசியந்தானே ... ... *

(இ-ள்) துலாத்துக்கு மகரமும்-விருச்சிகத்துக்குக் கடகமுங் கன்னியும்-தனுசுக்கு மீனமும்-மகரத்துக்குக் கும்பமும்-கும்பத்துக்கு மீனமும்-மீனத்துக்கு மகரமும்- வசியம் எ-று. (௱௯௬)

வைச்சவான்மதியிற்பாதிபோல்மூன்றுவளையைக்கீறி *
மெச்செப்தவளையின்மேலேவிலங்குநால்வளையுங்கீறி *
யச்சுவனிமுதலாய்வைத்துயிரக்சுவையடைவேயெண்ணி
யுச்சிடவிருவர்நாளுமொருவளையுறமேற்கேடே ... *

(இ-ள்) ஒத்தநிலத்திலே-சந்திரன்பாதிபோலே-மூன்றுவளையைக் கீறியதிலே குறுக்கேநாலு வளையுங்கீறி இருபத்தேழுவளையுமாகில்- முதல்வளையிலே அசுவதியைநாட்டி - இருபத்தேழுநாளையுமெண்ணுவது-எண்ணிச்சென்றால்- ஸ்ரீநாளும்புருஷநாளும் ஒருவளையுமிலாகாதென்பது-இதில்மேலொன்றுசிறப்பித்தவதனுஞ்- அசுபதியும்- ஆயிலியமும்-மகமுங்-கேட்டையும்-மூலமும்- ரேவதியும்-இந்தஆறு நாளும்-அடிக்கயிறென்றுபெயராம்-பரணி-பூசம்-பூரம்-அனுஷம்- பூராடம்-உத்திரட்டாதி- இவையாறுங்குறங்கிற்கயிறென்றுபெயராம்-கார்த்திகை-புணர்பூசம்-உத்திரம்-விசாகம்-உத்திராடம்- பூரட்டாதி-இவைஆறும்வயிறென்றுபெயராம்-அத்தம்-ரோகணி-திருவோணம்-சோதி-திருவாதிரை-சதையம்-இவையாறும்கழுத்தென்றுபெயராம்-மிருகசீரிடம்-சித்திரை-அவிட்டம்-இம்மூன்றுஞ்சிரசென்றுபெயராம்-இவையெல்லாந்தம்மிற்பொருந்தாது-எ-று. (௱௯௭)

உறுங்கயிறடியதாகிலான்பொருட்கேடதாகும் ... *
குறங்கினிற்கயிறதாகிற்கூறுகமலடியென்றும்... ...*
நிரந்தரும்வயிறதாகிற்நிச்சயமக்கள்சாவான் ... [சாம்
சிறந்தவான்கழுத்ததாகிற்கொழுநன்சாஞ்சிரத்திற்பெண்

(இ-ள்) அடிக்கயிருகில் அத்தஹானியென்பது- குறங்காகில் மலடியென்பது-வயிருகில் புத்திரகானியென்பது-கழுத்தாகில் பத்தாமரணமென்பது-முகடாகிற்பெண்சாமென்பது-இவ்வகையால் ரசசுகண்டுகொள்க-எ-று. ரசசுமுற்றும். (௱௯௮)

சார்ந்தமூச்சதிரமாகத்தலத்தினிற்கீறியத்தி ... ...*
லாய்ந்தமூன்றுக்கீறியமைந்தவேதக்கயிற்றிற் ...*
சேர்ந்தமாறுலைவைத்துத்தெரிந்தெண்ணத்தெரிவைநாளு
மார்ந்தநாட்டானுமேகவளாயுறின்மரணங்காணே ...*

(இ-ள்) வேதக்கயிறுகொள்ளும்படி ஒத்தநிலத்திலேமுச்சதிரமா கக்கீறி யிதின்மேலே மூன்றுன்குவளையுங்கீறி இருபத்து நாளுமூன் றுமூலையுமாகவிருபத்தேழுங்காண்பது அசுவதியைஒருமூலையிலே நாட்டிரேவதியீறாகவெண்ணினால்இருவர்நாளுமொருவளையுறிவ்வா துகாணுமென்றுசிறப்பித்தவதனால் அசுவதி- மகம்- மூலம்- இவைத ம்மிற்பொருந்தாவென்க- பரணிக்குக்கேட்டைபகை- கார்த்திகைக்கு அனுஷம்- ரோகணிக்குவிசாகம்- மிருகசீரிடத்துக்குசோதி- திருவா திரைக்குஅவிட்டம்- புனர்பூசத்துக்குத்திருவோணம் - பூசத்துக்கு உத்திராடம்- ஆயில்யத்துக்குப்பூராடம்- பூரத்துக்குரேவதி - உத்தி ரத்துக்குஉத்திரட்டாதி- அத்தத்துக்குப்பூரட்டாதி- சித்திரைக்குச்ச தையம்பொருந்தாது இச்சொல்ன நாட்களொழிய மற்றுள்ளநாட் களெல்லாம் பொருந்தும்-எ-று, வேதக்கயிறுமுற்றும். (௨௬)

காஞ்சிரம்நெல்லியத்திநாவற்றின்கருங்காலிப்பின்... *
நாஞ்சசெண்பகமேபுன்னையால்வாகையரசுவெள்ளி *
தீஞ்சுளைப்பலாவெருக்குமாதளைசிறந்தவில்வம் ...*
பூஞ்சுனைமருதுதாழைமகிழ்மூங்கிற்பொழிற்றேமாவே.

(இ-ள்) அசுவதிகாஞ்சிரம்- பரணிநெல்லி- கார்த்திகைஅத்தி-ரோ கணிநாவல்- மிருகசீரிடங்கருங்காலி- திருவாதிரைசெண்பகம்- புன ர்பூசம்புன்னை- பூசம்ஆல்- ஆயில்யம்வாகை- மகம்அரசு- பூரம்விளா- உத்திரம்பலா- அத்தம்எருக்கு-சித்திரைமாதளை-சோதிவில்வம்-விசா கம்மருது- அனுஷம்தாழை- கேட்டைமகிழ்- மூலம்மூங்கில்- பூரா டம்தேமா-என்றறிவது-எ-று, (௨௭)

பொழில்வஞ்சிபலாசுவன்னிமாப்புளிவேம்பிலுப்பை *
பழுநின்றிப்பரிமுன்காணப்பாலமாம்பலாசுபுன்னை *
எழுசம்புப்புகழ்பலாமாவிலுப்பைசெண்பகமெருக்கு
கிழவஞ்சியரசாலத்திமாதளைவயிரமற்றே ... ...[க

(இ-ள்) உத்திராடம்வஞ்சி- திருவோணம்பலாசு - அவிட்டம்வன் னி-சதையம்மாமரம்- பூரட்டாதிபுளி-உத்திரட்டாதிவேம்பு-ரேவதி இலுப்பை- இப்படி இருபத்தேழுநாளுங்கண்டுகொள்க இவைநீத்

நில்பலாசு- புன்னை- நாவல்-மகிழ்-பலர்மா-இலுப்பை-செண்பகம்-எருக்கு-வஞ்சி- அரசு- ஆல்- அத்தி- மாதளை- இவையென்பது அல்லாதவையெல்லாம்வயிரம்-எ-று. (உ௱௧)

வயிரமாணுகிற்பெண்பால்மரமெனின்மைந்தருண்டாம்
வயிரமாதரிவையாகிலாம்பலன்மலடியாகும் ... ...*
வயிரமதிரண்டுமாகின்மைந்தரும்பொருளுமாயின் ...*
வயிரமதொழிந்திரண்டும்பாலெனில்வாழ்வுண்டாமே *

(இ-ள்) புருஷன்வயிரமரமாய்-பெண்பால்மரமாகில் புத்திருண்டாம்-பெண்வயிரமரமாய்புருஷன்பால் மரமாகில் மலடியென்பது இருவரும் வயிரமாகில்- புத்திரசேதமும்- அர்த்தசேதமும்-இருவர்நர்ளும்பால்மரமாகில்- இலட்சுமிகடாக்ஷமுண்டாம்- எ-று. விருட்சப்பொருத்தமூற்றும். (உ௱உ)

## பட்சிப்பொருத்தம்.

வாழ்பரிமுதலாயைந்தும்வல்லூராதிரைமூன்றுஞ் *
சூழ்வலியாந்தையாகுந்துய்யவுத்திரமுன்னைந்தும் ...*
தாழ்விலாவலியனுகுந்தடம்பனைமுதலர்யைந்தும் ... *
கோழியாமோணமாதியாறுமாமயிலின்கூறே... ...*

(இ-ள்) அசுவதிமுதல் ஐந்துநாளும் வல்லூரு - திருவாதிரைமுதலாறுநாளுமாந்தை- உத்திரமுதலைந்துநாளும்வலியன்- அனுஷமுதலைந்துநாளுங்கோழி-திருவோணமுதலாறுநாளும்-மயில்-எ-று. ()

## பட்சிப்பகை.

மயிற்பகைவல்லூராந்தைகோழிக்குமவையேபாகுஞ் *
செயிற்பகைவலியற்காந்தையார்தைக்குவலியன்றீதாம்,
இயற்றியவலியநல்லாதெல்லாம்வல்லூரினுக்கே ... *
யுயிற்பகையல்லான்மற்றிக்கோழிந்தவையுறவாமென்றே

(இ-ள்) மயிலுக்குவல்லூரும் ஆந்தையும்பகை - கோழிக்கு வல்லூரும்ஆந்தையும்பகை- வலியனுக்குஆந்தைபகை - ஆந்தைக்குவலியன்பகை- வல்லூருக்குவலியனொழியவெல்லாம்பகை-சொல்லாதவையெல்லாம் உறவு இவையுயிர்ப்பகை-எ-று. (உ௱௪)

## ஸ்திரீதீர்க்கம்-புருஷதீர்க்கம்

அன்றுபெண்பிறந்தநாள்தொட் டாணுநாளளவுமெண்ணி *
நின்றவன்னாள்கள்தொட்டுநேரிழைநாளீராகச் ... ... *
சென்றதையேழிற்றாக்கியிருபத்தேழ்க்கீய்ந்தசேட ... [னே
மன்றலங்குழலாய்தாழ்ந்தோர் மரணம்பின் முன்னெனல் மன்

(இ-ள்) பெண்பிறந்தநாளிலேநின்று ஆண்பிறந்தநாளளவுமெண்ணி ஆண்பிறந்தநாள்தொட்டுப் பெண்பிறந்தநாளளவுமெண்ணி இதனையேழிற்பெருக்கி இருபத்தேழுக்கீய்ந்து சேஷித்ததையறிந்துதாழ்வுள்ள நாள்மூந்தமரணம்- முன்புசொன்னபொருத்தமெல்லாம் ஸ்ரீபிறந்தநாளிலேதொட்டெண்ணுவது-எ-று. (௨௱௫)

## அங்குரார்ப்பணம்

மன்னியமுளைக்குங்காலம்வரையின்றிமணஞ்செய்நாளி
முன்னிலைந்தாநாளாகமொழிந்தனரொழிந்தபின்னாள்[ல்
தன்னையுமுரைத்தாரென்றுசாற்றுவர்நோன்புதானு ...*
முன்னுபன்னைந்துமிந்தமூன்றுநாளைந்துமாமே ... *

(இ-ள்) அங்குரார்ப்பணத்துக்கு திதிவாரநட்சத்திரங்கள் பார்க்கவேண்டுவதில்லை விவாகத்துக்குயிட்ட நாளுக்குமுன்பிலைந்தானாள் முன்னாள்கொள்வது அதில்முடியாதாகிலன்றுகொள்ளுவது உபநயனத்துக்கும் சீமந்தத்துக்கும்முன்னேமூன்று நாளைந்து சுநாளென்ன அங்குரார்ப்பணம்பண்ணுவது-எ-று. (௨௱௬)

## நக்ஷத்திரதேவதை.

அஞ்சொன்மருத்துவனியமனங்கிபிறசாவதிசந்திர ...*
னரன்றிதியமரர்குருவராப்பிதுர்க்கள்பேகன் ...*
மிஞ்சரிமாவருக்கன்பிந்துவட்டவாகு ... ... ...*
மிரும்பெருமித்திரனிந்திரனிருதிபுனல்விசுவதேவர்,
கஞ்சவயன்கரியதிருமால்வசுக்கள்... ... ... ...*
கடற்கடவுள்கருதுமசைமித்ரநாகர் ... ... ...*
வெஞ்சவிலைப்பசிமுதல்நாளிருபத்தேழு ... ...*
மிவ்வடைவேயிறைவரெனவெண்ணிக்கொள்ளே ...*

(இ-ள்) அசுவதிமுதல்மருத்துவர்-பரணி-யமன்-அக்கினி-பிறசாவதி-சந்திரன் உருத்திரன்-அதிதி-பிரகஸ்பதி-சர்ப்பம்-பிதுர்க்கள்-பேக

ன்-அரியமா-ஆதித்தன்-துஷ்டவா-வாயு-இர்திராக்கினி- மித்திரன்-இந்திரன்-நிருதி-சலம்-விசுவதேவன்-பிர்ம்மா-விஷ்ணு-வசுக்கள்- வருணன்-அசேகபான்-அகிலபுக்தினி நாகபுருஷர் இவர்கள் அசுவதிமுதலான இருபத்தேழும் அபிசித்தும் உட்பட நட்சத்திரதேவதையென்றறிவது அபிசித்துதிருவோணத்துக்குமுன் என்னுவது-எ-று. (உ௱எ)

திதிதேவதையும்-உவாச்சூழ்ந்தகரணமுஞ்சொல்லியது.

எண்ணுமயன்மாலியமனிந்துகந்த ... ... ... *
னிந்திரன்சீர்வசுக்களராத்தருமனீசன்... ... ...*
விண்ணில்வெயில்வேள்கலிமுனிறந்ததேவர் ... *
மெய்த்தேவர்திதித்தேவர்விளம்புங்காலை ... ...*
கண்ணர்பிறசாபதிசந்திரன்சயந்தனவன்வசுக்கள் ... *
கனமணிபத்திரனியமனிவர்காண்தேவ... ... ...*
மொன்னுதலாயியமனுடன்பிதுர்க்களாவீச... ... *
ருவாச்சூழ்ந்தகரணத்துக்கிறைவனெனவுரையே ... *

(இ-ள்) பிர்ம்மா-விஷ்ணு-யமன்-சந்திரன்-சுப்பிரமணியன்-இந்திரன்-வசுக்கள்-சற்பம்-தன்மருத்திரன்-ஆதித்தன்-காமன்-கலிபிதுர்க்கள்-விசுவதேவர்- இவர்கள் பிரதமைமுதலாகவுந் திதிதேவதையென்றறிவது-விஷ்ணு-பிரசாவதி சந்திரன் சயந்தன்-வசுக்கள்- மணிபத்திரன்-யமன்-இவர்கள் சிங்கமுதல்கரணதேவதையென்றறிவது இயமன்-பிர்க்கள்-சற்பம்-உருத்திரன்- இவர்கள் உவாச்சூழ்ந்தகரணதேவதைகள்-எ-று. (உ௱அ)

ஆண் - பெண் - அலி- நக்ஷத்திரமறிக.

உரைக்கிலத்தமிருபூசமோணமபிசித்தோ... ... ... *
டொண்பனையுத்திரட்டாதிபூரட்டாதி ... ... *
தெரித்தபரியாணவிங்கமூலஞ்செக்குச் ... ... *
சிறந்தமான்றலைமூன்றுந்தெளியுமலியெனக ... *
வருட்பரணிமுதல்மூன்றுமாயில்முதல்நான்கு... ...*
மாதினாசித்திரையாதிமூன்றவிட்டந்தோணி ... ...*
வருத்தமில்பூராடமுத்திராடங்கேட்டை... ... ... *
மற்றவைபெணிலிங்கமெனவமுத்துமாதே ... *

(இ-ள்) அத்தம்-புனர்பூசம்-பூசம்- திருவோணம்- அபிசித்து- அனுஷம்-உத்திரட்டாதி-பூரட்டாதி- அசுவதி- இவையொன்பதுநாளும்-புருஷநட்சத்திரம்-மூலம்-சதையம்-மிருகசீரிடம்- இவைமூன்று

ம் நபுஞ்சகம்-பரணி-கார்த்திகை-ரோகணி-ஆயிலியம்-மகம்-பூரம்-உத்திரம்-திருவாதிரை-சித்திரை சோதி-விசாகம்-அவிட்டம்-ரேவதி-பூராடம்-உத்திராடம்-கேடடை-இவை-௰௬-நாளும்-ஸ்ரீநட்சத்திரமென்றறிவது இவைபின்புவரும் நட்சத்திரங்களும் ஆண்கொண்டது பெண்கொண்டதுஎன்றும்-அலியென்றும்-அறிவது-எ-று. உ௱௯

தெருட்சி.

மாவிதவையாம்பரணிமைந்தருண்டா ... ... ... *
மலடிகார்த்திகைநன்மைரோகணிமகசிரத்தில் ... *
மேவுகொழுநற்கினியள்செங்கைவெப்பு ... ... *
மிகுபுணர்தஞ்சுகம்பூசம்விளங்கியசீருளதாம் ... *
பூவைவயிற்றிழிவாகுமகங்கணவனல்லன் ... ... *
பூரமகவில்லைப்பயனுண்டுத்திரத்திற் ... ... *
றேவிநலம்பெரியளத்தஞ்சித்திரைநல்லறிவாந்... ...*
தீபத்திற்குடும்பிமுறம்விதவையெனத்தெருண்டால்*

(இ-ள்) அசுபதியிற்றிரண்டால்விதவை-பரணிபுருஷிருண்டாம்-கார்த்திகைமலடி-ரோகணிநன்மையுண்டாம்-மிருகசீரிஷம்பத்தாவுக்கினியள்-திருவாதிரைவெப்பு-புணர்பூசம்சுகம்-பூசச்சீருடையள்-ஆயிலியம்வயிறிழிவு-மகம்பத்தானல்லான்-பூரம்புத்திரகானி-உத்திரம்பிரயோசனமுண்டு-அத்தம்நன்மை-சித்திரைஅறிவு-சோதிகுடும்பி-விசாகம்-விதவை-எ-று. (உ௱௰)

தெருளனுடம்நோய்கேட்டைபரத்தைமூலஞ் ... *
சிறந்தபாலுடையள்செழும்பூரட்டாதி ... ...*
புரியவடியார்கெடுவருத்திராட ... ... ... ...*
மூய்த்தவறஞ்செயுமோணம்புண்ணியத்தையுடயள் *
வருபொருளுண்டாமவிட்டஞ்சதையநிதியிழக்கும்...*
வாய்ந்தபூரட்டாதிமலடியாக்கும் ... ... ... *
பெரியவுத்திரட்டாதிவறுமையாக்கும் ... ... ...*
பிணிரோணிதெருட்சிநலம்பேசுங்காலே ... ...*

(இ-ள்) அனுடம்வியாதி - கேட்டைபரஸ்ரீ - மூலம் பாலுடையாள்-பூரட்டாதி அடியார்கெடும்-உத்திராடம் தனம் புத்தியுண்டாம்-திருவோணம் பாக்கியமுடையள்-அவிட்டம் அர்த்தமுண்டாம்-சதையம் அற்தநர்சம்-பூரட்டாதிமலடி-உத்திரட்டாதி வறுமை-இரேவதி வியாதியன்றி-எ-று. (உ௱௰௧)

காலமுதற்பக்கத்திற்றெருளிற்கள்ளி ... ... ... *
கவினிரண்டின்மூன்றின்பங்கருதாருண்டாம் ... *
நாலில்மகப்பேறஞ்சிலாறுசாரம்... ... ... ... *
நற்குழவிபெறுமேழில்நாலிரண்டிலிழக்குஞ் ... *
சாலவரும்நவமியினிலறஞ்செய்யும்பத்திற் ... ... *
றருமமூன்பதினொன்றிற்பன்னிரண்டிற்சீறு... ...*
மேலுறுபன்மூன்றதனைப்புகழுமீரேழ் ... ... *
மிகுசோரம்பதினைந்தின்மிடிபடுமெல்லியலே ... *

(இ-ள்) பிரதமைக்குக்கள்ளி-விதியை அழகு-திரிதியைஇன்பம்-சவுத்திசத்துருக்களுண்டாம்-பஞ்சமிபுத்திராருண்டாம்-சஷ்டி ஆசாரம்-சப்தமிபுத்திராருண்டாம்- அஷ்டமிபெற்றிழக்கும்- நவமிவாழ்வு-தசமிதருமஞ்செய்வள்- ஏகாதசிபெலமுடையவள்- துவாதசிகெற்பமுண்டாம்- திரயோதசிதன்னைப்புகழும் - சதுர்த்தசிசோரஸ்ரீயாம்-பௌர்ணமிக்குஇடருண்டாக்குமென்றவாறு. (உ௱௰உ)

மெல்லிமறிபாத்தைகள்ளிவிடையாழ்சோர ... ...*
மிகுமலவனெக்கமிவிறலரியும்பெண்ணுஞ் ...*
செல்வமிகுமிடிதுலைதேள்பரத்தைக்கள்ளி... ... *
திண்சிலைமான்கற்புநிதிகுடமீன்றீதாம்... ... ...*
பல்கதிரோன்வாரமகவில்லைத்திங்கள் ... ... ...*
பத்தினியாஞ்சேய்விதவைபல்சிறுவர்புதற்குச் ... *
செல்வமிகுங்குருவெள்ளியழகுமிடிகாரி ... ... *
தெருண்டவர்தம்பலந்தன்னைத்தெரிந்துணர்க்குங்காலே

(இ-ள்) மேஷமுதையத்தில்திரண்டால் பரஸ்ரீயாம்- ரிஷபங்- கன்னி-மிதுனம் சோர்வுண்டாம்-கடகம்-முட்டை-சிங்கம்- கன்னி-நிதியுண்டாம்-துலாம்-மிடி-விருச்சிகம்-தனுசு-கன்னி-மகரம்-கற்புடையள்- கும்பம்அற்தமூண்டாம்-மீனம்தீதுண்டாம்- வாரத்தில்- ஞாயிறுபுத்திரரில்லை-திங்கள்-பதிவிரதை-செவ்வாய்விதவை- புதன்புத்திரருண்டாம்-வியாழம்தனமுண்டாம்-வெள்ளிஅழகுண்டாம்- சனிமிடிபடும்-எ-று. (உ௱௰௫)

## கிரகநோக்கு.

சேருமுதையமேழிடங்கள் முழுநோக்கொன்பான் றிகழ்மூக்
பாரிலைந்துமணாறுக்காம்பத்துநான்குக்கால்நோக்கா [காற்

மாறில்மூன்றும்பன்னொன்றுமரைக்கால்நோக்காமாறெட்டும்
நாரியிரண்டும்பன்னிரண்டுநயனமில்லைநவக்கோளே ... *

(இ-ள்) உதையராசியும்-எ-மிராசியும்முழுநோக்கு-கூ-ம்-ராசி முக்கால்நோக்கு-ரு-ம்-ராசி அரைநோக்கு-ய-சு-ம்- கால்நோக்கு- கூ-மக-அரைக்கால்நோக்கு-உ-கூ அ-யஉ-நோக்கில்லையென்பது- இவையெல்லாம்-தந்தாமாட்சிநிலங்களில்-நின்றபோது-இச்சொன்னநோக்கு- முழுபலம்- நட்பில்நின்றபோதுசொன்ன இவையிற்றில்நாலிலொன்றுகுறையும்- உச்சத்தில்பத்திலொன்று ஏறும்பகையில்- ஒன்றுபாதிநீச்சத்தில்-ஒன்றுகால் இவ்வகையெல்லாம் நோக்கறிக-எ-று.

நவையிற்குழவிபிறந்திடினுநன்மைதீமைநாடுங்கா ... *
லவதிக்கருப்பமுதலாகவாரய்ந்தறிகவறியாயேற் ... [யிர்
புவனிதனினிற்சேர்நோக்கும்பொழுதுகொள்கவுதையமு
தவறில்மதிசேரோரையுடல்தர்மக்கூந்தன்மாமயிலே *

(இ-ள்) ஜெனித்தவர்களுக்கெல்லாம்-நன்மை-தீமை-விசாரிக்குமிடத்து-கெற்பதான-முகூர்த்தமாகக்கொள்வது-கொள்ளமுடியாதாகில். சிரோதையமானபோது முகூர்த்தமாகக்கொள்வது- பிறந்தபோது-உதிக்கின்றவிராசியுயிரென்றும்-ஜென்மலக்கினமென்றும்-அறிவது-சந்திரனின்றவிராசியை-உடலென்றும்- சந்திரலக்கினமென்றும்-அறிவது-எ-று. (௨௱௰௫)

மாமன்சிறுவன்றாய்தந்தைமரணமைந்துமீரைந்தும் ... *
பூமன்காரிமதிவெய்யோனிற்கிற்புகட்கோளதினோக்கிற் ... *
சோமற்கேழ்செய்சனிநிற்கிற்றாய்சாஞ்சுடற்கேழ்பிதாமரணந்
தீமைகோட்களுடனுயிரைப்பற்றிநிற்கிற்சிறுவன்சாம் ... *

(இ-ள்) உதையவிராசிக்கு-ரு-மிடம்-ய-மிடத்தில்-செவ்வாய்-நிற்கில் மாமனுக்கும்-சனிநிற்கில்-பிள்ளைக்கும்- சந்திரனிற்கில்- மாதாவுக்கும்-சூரியனிற்கில்-பிதாவுக்கும்-மரணமுண்டென்க- சந்திரனுக்கு-எ-மிடத்தில்-செவ்வாயாதல்-சனியாதல்-நிற்கில்-மாதாமரணம்-ஆதித்தனுக்கு-எ-மிடத்தில் சனிசெவ்வாய்- நிற்கில்- பிதாமரணமென்பது- இவையெல்லாம்-சுபக்கிரகம்-நோக்காதொழியில்-எ-று. (௨௱௰௬)

சாருமுதையத்தனக்காரிற்சதிராயதற்கேழ்சனிசெவ்வாய்
சேரில்மகவும்பிதாவுடன்சாந்திங்களாகிற்றாயுடன்சாம் *
காரியுதிப்பச்செய்நாலிற்கதிரோனேழிற்கலந்திடினும்
பாரில்மகவும்பகற்கிடவாய்பாம்பினுதையமாக்கிடலா *

(இ-ள்) உதையத்துக்கு-௯-மிடத்தில்- ஆதித்தனிற்க-ஆதித்தனுக்கு-௭-மிடத்தில்- சனி- செவ்வாய்- நிற்கப்பிள்ளையும்- பிதாவும்-மரணம்- ௯- மிடத்துச்சந்திரனிற்கத்தாய்மரணம்- உதையத்தில்-சனி நிற்க-௯- மிடத்தில்- ஆதித்தனுக்கு-௭- மிடத்தில்-செவ்வாய்-நிற்க-சுபகிரகங்கள்- நோக்கில்லையாகில்- பிள்ளையன்றைப்பகலேமரணமென்பது- உதையத்தோராகுகேதுக்கள் நிற்கப் பிள்ளையன்றிராவேமரணமென்பது-எ-று. (௨௱௰௭)

இடைத்தவுயிரோடலருணள்வருநாள்தீத்தற்கெழுமியகோட்
படைத்தநோக்கமின்றெனினும்பாலன்மரணந்தேயுமதிக் *
கடுத்தவிருபாற்றீக்கோளேலன்னைபுதல்வனுடன்வீயுந் [மே
தொடுத்தகூடலராத்திண்டிற் செய்யில் மகச்சாஞ்சொன்னே

(இ-ள்) சென்மலக்கினமும் - சந்திரலக்கினமும்- தீய்க்கோள்நிற்பதான நாளும்-ஜெனித்தநாளும்-தீதாகசெனித்தபிள்ளைக்கு-சுபக்கிரகம்நோக்கில்லாமல்செனித்தபொழுதேமரண மென்பது-செனித்தபொழுதுபரிவேஷமுண்டாகிலும்- கிராணந்தீண்டினும் - பிள்ளையன்றேமரணம்-எ-று. (௨௱௰௮)

சொன்னபூசஞ்சித்திரைபூராடநாளில்மதிதோன்றிற்,பின்னும்
நாற்காலினிற்பிறக்கில்பிதாதாய்பிள்ளைமாமன்சாம்,பன்னொன்
றொன்பான்சனிசெயும்பாம்பொன்பதிலும்பிதாமரணம்,பொ
ன்னேனுக்காதலெட்டேநிற்புதல்வன்பொன்றுஞ்சனிசெவ்வாய் *

(இ-ள்) பூசம்-சித்திரை-பூராடம்- இந்நாள்முதற்காலிலேசெனிக்கில்-பிதாமரணம்-இரண்டாங்காலில்-மாதாமரணம்-மூன்றுங்காலில்-பிள்ளைமரணம்- நாலாங்காலில்-மாமன்மரணமென்பது-௰௧-மிடம்-௯-மிடமாதல்சனிசெவ்வாய்நிற்கினும்-௯-மிடத்துப்பாம்புநிற்கினும்பிதாமரணம்-௮-ல்-௭ல்-சனிசெவ்வாய்நிற்கில்பிள்ளைமரணம்இவையெல்லாம்சுபக்கிரகங்கள்நோக்கில்லையாகில்நன்மையில்லை-எ-று. ()

செவ்வாய்மூன்றினுடன்பிறந்தார்சனி சேய்வெள்ளியெழிற்பி
தவ்வாமதியமேழிற்றாய்தந்தைமரணஞ்சதிரோழி ... [ள்ளை
கவ்வாயலவனுதிப்பவதற்காறுமூன்றந்தீய்க்கோளா... ...*
மைவார்குழலாயிராறில்நற்கோள்நிற்கில்மகன்போமே ...*

(இ-ள்) ௩-மிடத்துச்செவ்வாய்நிற்கிலுடன்பிறந்தார்மரணம்- ௭-மிடத்தில்-சனி-செவ்வாய்-வெள்ளிநிற்கில்- பிள்ளைமரணம்-சந்திரன்-௭-மிடத்தில்நிற்கில்-தாய்மரணம்-ஆதித்தன்-௭-மிடத்தில்நிற்கில்-பிதா

மரணம்-கடகமுதையமாக-சா-மிடத்திலும்-ஙம்-இடத்திலும்-பாபர் நிற்க-யஉ-மிடத்தில்-சுபக்கிரகம்நிற்கில்பிள்ளைமரணம்-எ-று. ()

மகவினுயிருக்காறேழில்மற்றையெட்டில்மூன்றுனிலே
மிகவுந்தேயுமதியுடனேவெங்கோள்நிற்பநற்கோள்கள் *
திகழுநோக்கயின்றெனினுஞ்சேயுந்திக்குநாலெட்டில் *
நிகழுந்தீய்க்கோள்நின்றிடினுமெச்சமரணநிச்சயமே *

(இ-ள்) உதையத்துக்கு-சா-எ-அ-யஉ-மிடத்தில்- க்ஷீணசந்திரனிற்க அவனுடனேபாபக்கிரகம்நிற்க சுபக்கிரகம்நோக்காதொழியினும் க்ஷயசந்திரனுக்கு-ச- மிடம்- அ- மிடத்திற்பாபக்கிரகம்நிற்கினும் பிள்ளைமரணம்-எ-று. (உக)

நிச்சமேவுகதிருலையம்நிகழ்பாட்டகனினிலவுதிப்ப ... *
வச்சந்தீக்கோட்பன்னிரண்டின் மருவின்மரணமகற்கேற்பப்
பச்சைமதியுங்கதிரவனும்பாலனுயிர்க்குப்பன்னிரண்டிற் *
கச்சுமூலையாய்நிற்பாரேற்கண்போமென்றேலொருகண்போம்

(இ-ள்) ஆதித்தனுஞ்சந்திரனுங்கூட உதையம்பண்ண அதற்குப் பன்னிரண்டாமிடத்திற்பாபக்கிரகம்நிற்க ஆதித்தன்அஸ்தமிக்கச்சந்திரனுதையமாகஉதையத்துக்கு-யஉ- மிடத்து- பாபக்கிரகம்நிற்கசுபக்கிரகங்கள்நோக்காதொழியில் பிள்ளைமரணமென்கஉதையத்துக்கு-யஉ-மிடத்திற்சந்திராதித்தர்நிற்க பிள்ளையிரண்டுகண்ணுங்கெடும்ஒருவர்நிற்கில் ஒருகண்கெடும்-யஉ- மிடத்தில்நின்றவர்களைச்சனி செவ்வாய்நோக்கிற்கண்கெடும்-எ-று. (உஉ)

போதுமிராசியிரண்டினையும்பொன்னோக்கன்றித்தீக்கோட்க
ளோதமதியமூடனிற்கிற்சிறுவன்குருபுத்திரனல்ல... ... ...[ன்
சாதிக்கதிரால்மறையவர்கோச்சனியேலீனர்கீழ்ப்பட்டா *
ராதிவணிகர்சூத்திரர்சேயாவேற்புலையரவன்றந்தை ... *

(இ-ள்) சந்திரலக்கினத்தையும் ஜென்மலக்கினத்தையும் சுபக்கிரகங்கள் நோக்காதொழியில் சந்திரனுடன் பாபக்கிரகங்கள் நிற்கப்பிறந்தான் பாசாதனஞ்சார பத்தர்களின்றொன்று அறியவேண்டின் சந்திரனுடனே ஆதித்தனிற்கில் பிராமணராதல் க்ஷத்திரியராதலென்க சனியாகி லீனராதல் நாலுசாதிக்குங் கீழ்ப்பட்டாரென்க செவ்வாயாகில் வைசியராதல் சூத்திரனாதலென்க யாம்பாகில் புலையனென்றுநிச்சயிப்பது-எ-று. (உங)

தந்தவுடலைச்சனிநோக்கிற்றகரின்மதிசேய்தானிற்க... ...*
வந்தகுழவியிரந்துண்ணுமகவினுடலோடுயிர்தம்மை ... *
முந்தநோக்கிற்சீர்கேடாமுணர்சேய்காலவோரையுடன்[குமே
செந்தேன்மொழியாய்சனிகண்டஞ் சேரப்புகுந்தான்சிறைபு

(இ-ள்) சுபக்கிரகநோக்கின்றி யிருந்தசந்திரலக்கினத்தைச் சனி முழுநோக்கு நோக்கசந்திரனும் செவ்வாயும் மேஷத்தில் நிற்கப் பிறந்தான் பிச்சைபுக்குண்ணும் சந்திரலக்கினத்தையும் ஜென்மலக்கினத்தையும் சுபக்கிரகம் நோக்காதொழிய சனிமுழுநோக்குநோக்கப்பிறந்தான் சீர்கேடனும் செவ்வாயின் காலவோரையில் ஜென்மத்தில் கண்டங்களில் சந்திரனிற்கப்பிறந்தான் சிறைபுகும்-எ-று.()

சிறந்தவுதையஞ்சனியாயேழ்பாம்பாய்த்தெரிவைபுகர்சேர *
இறந்தமதிநாள்பிறந்தவலனிருகாற்கைகள்தறிப்புண்ணும்...*
பிறந்தவுயிர்காற்சேயாகிற்பெரியகதிரோனதிலுதிப்ப ... *
குறைந்தமதிப்பாம்பொருகாலிற்கூடலுடலு மறுப்புண்ணும்

(இ-ள்)சனியுதையமாக அதற்கு-எ-மிடத்தில்-பாம்புநிற்கக்கன்னியிலேவெள்ளிநிற்க அமரபட்சத்துச் சென்றழிகின்றசந்திரநின்றகாலிற்பாம்புங்கூடநிற்கப்பிறந்தான்கையுக்காலுந்-தறிப்புண்ணும் செவ்வாயினங்சத்தே ஆதித்தனிற்கஅதுவேயுதையமாகத்தேய்ந்தழிகின்றசந்திரனும்பாம்பு மொருகாலிலேயுமில்அப்போபிறந்தானுடல்-பிளப்புண்ணும்-எ-று.
(உஉரு)

உடற்கட்கதிர்பாம்புறக்காரியுதிப்பப்பிறந்தானுடற்பிளவர் *
மடிக்கண்ணரவஞேக்கமதியிழந்தமகப்பேர்தலையறுமென்,க
டித்தகாதேட்சேய்நிற்பச்சனிவந்துதிப்பப்புதன்மூன்றிற்,கு
டிக்குமொருசேயெனப்பிறந்தான்குறலாங்கோவைச்செவ்வாயாய்

(இ-ள்) அமரபட்சத்து அமாவாசையின்-கடகசந்திரலக்கினத்துநின்றசந்திரனுடைனே ஆதித்தநிற்க அவர்களுடன்பாம்புநிற்க-சனியுதையமாகப்பிறந்தான்உடல்பிளப்புண்ணும்ராகுகேதுக்கள்-நோக்குப்பெற்றகூர்ணசந்திரன்சுடற்சிலவாகப்பிறந்தான் - தலையறுப்புண்ணும்மேஷத்திலாதல் விருச்சிகத்திலாதல்செவ்வாய்நிற்கசனி உதையமாதஉதையத்துக்கு-ரு-மிடத்தில்புதனிற்கப்பிறந்தான்குறளுருவாம்

வாய்ந்தகோட்களோரேழிலாறுமருவத்தமதுச்சங் ... ...,*
காய்ந்தமடங்கலுதித்திடினுங்கனகனுதிப்பவைந்துக்கோ...*

சேர்ந்தமுச்சமெய்திடினுமிசைந்தநாற்கோளுச்சமுற,
வாய்ந்தகுடத்திற்புகருதிப்பவரினுமரசர்க்கரசாமே...*

(இ-ள்) ஆதித்தன்முதலானஎழுகோட்களினும்- ஆறுகோட்கள்த ந்தாமுச்சத்துநிற்ப- சிங்கம்- உதையமாகப்பிறந்தான்-அரசர்க்கரச னும்-ரு-கோள்தந்தாமுச்சத்துநிற்பவியாழமுதையமாகப்பிறந்தான் ராஜராஜனுமென்க-ச-கோள்தந்தாமுச்சத்துநிற்பகும்பத்திற்சுக்கிர னுதையமாகப்பிறந்தான்எல்லாவுலகுமுடையவனும்-எ-று. (உஉஎ)

அரசாம்நண்டில்நிறைந்தமதிதன்னோடாறுகோள்நோக்கப் *
புலசால்குண்டையுதித்திடினுமொருகோளுச்சமுறவந்தோர்
கனசேராட்சிநட்பெனினுங்கன்னிபுதனுச்சயற்புகராய் [மே
வினசேர்தனுப்பொன்மேவிடினு மிக்கோர்நட்பின்வேந்தா

(இ-ள்) கடகத்துப்பூரணச்சந்திரனை-சு-கோள்நோக்க ரிஷபமு தையமாகப்பிறந்தான் இளையநாள்காலத்திலே ராச்சியபரிபாலனம் பண்ணுவான்சுபக்கோளில்ஒருகோளுச்சத்துநிற்க மற்றைக்கோள்க ள்தந்தாம்நட்பினுமாட்சியினும் நிற்கப்பிறந்தான்ராஜாக்கள்வணங்க வாழ்வான்கன்னியில்புதனிற்க மிதுனத்துவெள்ளிநிற்கமற்றைக்கோ ட்களதந்தாம்நட்பினுமாட்சியினும் நிற்கப்பிறந்தான்இராச்சியபரி பாலனம்பண்ணுவான்-எ-று. (உஉஅ)

வேந்தனவந்தனிலுதிப்பவெய்யோன்மேடம்விடை புகர்மா
ல்,சேர்ந்தவரினும்விடைமதியாய்ச்சிங்கங்கதிராய்ச்சிலைக்குரு
வா,யாய்ந்தவெள்ளியுதையத்துளம்பொற்காலிற்பிறந்திடினும்
வாய்ந்தமதிக்காமீறெட்டில்மாற்பொன்புகரேல்மன்னுமே *

(இ-ள்) கடகத்தில்- வியாழமுதையமாக ஆதித்தன்மேஷத்து நிற் பவெள்ளியும்-புதனும்- ரிஷபத்துநிற்பகபிறந்தான்எல்லாத்தேசமு ம்- ஆளுமென்க-சந்திரன்-ரிஷபத்துநிற்கஆதித்தன்சிங்கத்துநிற்கவி யாழந்தனுசில்நிற்கவெள்ளியுதையமாகவியாழம்அஞ்சத்துசாதகமா னல்ராஜாவாம்சந்திரனுக்கு-கூ-மிடத்தில்புதனிற்க-எ-மிடத்தில்வியா ழம்நிற்க-அ- மிடத்தில்சுக்கிரனிற்கசாதகமானவன் சத்துருக்களையு ஞ்செயித்துராச்சியபரிபாலனம்பண்ணுவான்-எ-று. (உஉகூ)

மன்னுமகரஞ்சனிமதிசேய்மதியங்கடகந்துலைவெள்ளி...[ஞ்
பொன்னன்வில்லிற்கதிர்சிங்கம்புலவன்வீணை பொருந்திடினு

சுன்னுமதியுநூச்சமுறச்சுடரும்புதனுமுயிர்காதில்... ...*
மின்னும்புகர்பொன்றம்மிடத்தேமேவுமெனினுமிகவாழ்வே

(இ-ள்)சனிமகரத்தும்-செவ்வாய்மேஷத்தும்-சந்திரன்கடகத்தும் வெள்ளிதுலாத்தும்-வியாழம்தனுசிலும்-ஆதித்தன்சிங்கத்திலும்-புதன்மிதுனத்திலும்நிற்கப்பிறந்தான்-அந்தகாலத்துக்குஇராச்சியம்பண்ணுவான்என்பதுசனியுஞ்-சந்திரனும்-தந்தாமுச்சத்தில்நிற்க-ஆதித்தனும்-புதனும்-ஜென்மலக்கினத்துக்கு-கூ-மிடத்தேநிற்க-வெள்ளியும்-வியாழமும்-தந்தாமாட்சியிலேநிற்கப்பிறந்தான் சத்துருக்களையுஞ்செயித்துராச்சியபரிபாலனம்பண்ணுவான்-எ-று. (உருய)

வாழும்வெள்ளிமிதுனத்துமதிபோர்தனுவில்மண்மகன்தேள்,
சூழமருவைபுதனுதையந்தோன்றிலரசாஞ்சுடரிரண்டுந் ...*
தாழ்விலுச்சமுறலவைவையுநிப்பக்குனிற்பொன்சனிகுடத்தி
ஆழில்மேதைதேட்சேய்வற்றெய்தப்பிறப்பினிறையாமே [ல்

(இ-ள்) வெள்ளிமிதுனத்துநிற்ப-சந்திரனும்வியாழமும்தனுசில்நிற்ப-செவ்வாய்விருச்சிகத்தில்நிற்க-கன்னியிற்புதனுதையமாகப்பிறந்தவன்-எல்லாத்தேசமும்ஆளுவானென்பது-சந்திராதித்தரிருவரும்தந்தாமுச்சத்துநிற்பஅவையேயுதையமாக-வியாழங்கடகத்து நிற்ப- சனிகும்பத்துநிற்ப- புதன்மிதுனத்துநிற்ப செவ்வாய்விருச்சிகத்துநிற்பபிறந்தான்எல்லாத்தேசத்துக்கும்இராஜாவாம்-எ-று.(உருக)

இறைவன்சேனைத்தலைவனுமாமுக்கோளுச்சமெழிற்புகர்பொ
னறையுமுச்சமச்சனுமாமருக்கன்மேடந்தனக்குருவாம் [ன்
பிறையைவெள்ளியேழிடத்தேநோக்கக்காலிற்பிறந்தானேற்*
பொறையும்வலியுமிருநிதியுப்புகழுங்கொடையுமிகப்பூணும்*

(இ-ள்) மூன்றுகோள்தந்தாமுச்சத்துநிற்பப்பிறந்தவன் சேனாதிபதியாம்-வியாழமுஞ்சுக்கிரனும்தத்தாமுச்சதநுநிற்பநற்கோளங்கிசத்துப்பிறந்தவன்பலமுப்ஸ்ரீயுடையனும்-எ-று. (உருஉ)

பூண்டவிடையில்மதிக்கேழிற் பொன்னுப்பொற்காலிற்பிறந்
தான்,றாண்டுபுகர்காற்பொன் னுதிப்பச்சுரூச்சே யடையத்
தோன்றிடினும்,நீண்டகுருவுநிறைமதியுஞ்சேரநெடுமோற்பொ
ன்சேர, ஆண்டபுகரினுதையத்துவரினுங்கல்விநிதியாமே *

(இ-ள்) சந்திரன்-ரிஷபத்துநிற்பஅவனே-எ- மிடத்தே-வியாழம்-நோக்கவியாழமுதற்காலிற்பிறந்தான்வித்துவானுமாய் ராசசேனுப

தியுமாம் - வியாழமுதையமாகச்செவ்வாய்மகரத்து நிற்பசுக்கிரன்
அஞ்சத்துப்பிறந்தான்கீர்த்தியும் ஸ்ரீயுடையன்-வியாழமும் நிறைம
தியுங்கூடி நிற்கக்கன்னியிலேபுதனிற்க வெள்ளியுதையமாகப்பிறந்தா
ன்லோகாதிபதியுமாய்வித்துவானுமாம்-எ-று. (௨௫௩)

நிதியுடைப்புகர்மீனுளனெடுங்குருவுதிப்பநீண்ட ...*
மதியினைத்தீக்கோளேக்கமாநிறுத்தலைவனுக்குங்கதியுடை
ப்புகர்பொன்திங்கள்கலந்திட நேர்க்காங்கோ, லுதைய
மாய்ப்பிறந்தான்வாழியொருவற்குமொன்றுமீயான் *

(இ-ள்) சுக்கிரன்மீனத்துநிற்கவியாழமுதையமாக வளர்மதியைத்
தீக்கோள்நோக்கப்பிறந்தவன் ஸ்ரீமானும்-வளர்மதியைச்சுக்கிரன்வி
யாழம் நோக்கத்துலாத்தில் சனியுதையமாகப்பிறந்தவன் தனாதிபதி
யாயிருக்கையிலேயொருவற்குமொன்றுமீயான்-எ-று. (௨௫௪)

ஒன்றியமதிக்கிரண்டுபாலும்நற்கோட்களுண்டேல்...*
என்றும்வாழ்த்திடுமென்முன்னேல் மூர்த்தியன்பின்றல்பி
ன்னேல்,நன்றிருபாலுநற்கோள்நின்றிட வுச்சநற்கோள்*
அன்றவைநோக்கத்தோன்றுமாயிழையரசியாமே ...*

(இ-ள்) வளர்மதிக்குமுன்னும் பின்னும் நற்கோள்நிற்கப்பிறந்த
வன் மரிக்குமளவுங்குமாரனும்-சுகசந்திரனுக்கு முன்னேநிற்கில்பா
லஸ்ரீயுண்டாம்பின்னேநிற்கில்விர்தாப்பியபிராயத்தில் ஸ்ரீயுண்டாம்-ச
ந்திரலக்கினத்தைசுபகிரகங்கள்பற்றிநிற்கவுச்சக்கோள் அதைநோக்
கசாதகனனவன்ராசஸ்ரீயாம்-எ-று. (௨௫௫)

அரசுறுபுதனுதிப்பவம்புலிக்கேற்பொன்னுன்று...*
முரவியபுகர்பொன்கூடனிற்பினுமுடலுயிர்க்கு......*
விரவியைந்தேழிற்செம்பொன்வெள்ளிநின்றிடினுமிக்க
புரவலர்போற்றச்செல்வங்கல்விவந்தெய்தும்பொன்னே

(இ-ள்)புதனுதையமாகநிறைமதிக்கு-எ-மிடத்துவியாழம்நிற்கப்
பிறந்தவன்சேனாதிபதியாம்-வியாழமுஞ்சுக்கிரனுங்கூடிநிற்கப் புத
னுதையமாகப்பிறந்தவன்தனவானுமுபகாரியுமாம்-எ-று. (௨௫௬)

பொன்னுடன்வெள்ளிபுந்திபொலிவுடனேக்கவந்த *
மன்னிளங்குழவிதன்மேல்வலிந்ததீக்கோள்களேக்கப்,
பன்னெடுங்கதிர்வாள்விசும்பகலவன்றன்னைக்கண்ட *
துன்னிருள்போலமாய்ந்துசுகமிகப்பெருகுமன்றே *

(இ-ள்) வியாழமுஞ்சுக்கிரனும்புதனும்நோக்கப்பிறந்தவன்பாப க்கிரகங்கள்செய்யுந்தன்மையள் ஆதித்தனைக்கண்ட யிருள்போலநீங் குமென்பது-எ-று.சாதகம்-முற்றும், (உகஎ)

## விஷ்ணு அயனம் விஷ்ணுபதம் சடர்தாரிமுகம்.

பெருவிஷமதிகோல்நண்டுமகரமுமயனப்பேரா ... *
மிரிவிடைகுடந்தேள்விண்டுபதமென்பவரீவைவில்மீன்
றருமிதுனங்கனுக்குஞ்சடாதாரிமுகமுமென்க ... *
இரவினில்விளைவுண்டாகும்பகல்விளைவில்லையென்னே *

(இ-ள்) சித்திரையும்அற்பிசியும் விஷுமென்றறிக- ஆடியுந்தையுமய னமென்றுபேராம்-ஆவணிவைகாசிமாசிகார்த்திகைஇவைவிஷ்ணு பதமென்றுபேர்- புரட்டாசிமார்கழி பங்குனிஆனி இவைநாலுஞ்ச டாதாரிமுகமாம்-எ-று. (உகஅ)

## வருஷாதிசித்திரைமீ - கஉ.

விளக்கியகதிரோன்வாரஞ்சிறுமழைவெள்ளிதிங்கள் [ம்
களங்கொள்செய்கலகப்புந்தி காற்றுப்பொன்காலநன்று
வளம்பெருவெள்ளிவெள்ளமந்தனில்மழைகேடாகும் *
தெளிந்தசங்கிராந்திவிட்டியெட்டுவாவிருத்தைதீம்த *

(இ-ள்) வருஷாதிசித்திரைமாதம் முதற்றேதி ஞாயிற்றுக்கிழமை யாகில்வருஷம்-திங்கள்வெள்ளம்- செவ்வாய்கலகம்- புதன்காற்று-வி யாழம்-நற்காலம்வெள்ளிபெருமழை- சனிமழையில்லை- விஷ்டி-அ ஷ்டமி- உவா-விருத்தை-இவையுந்தீது-எ-று. (உகக)

திதிலுத்திரங்களத்தந்திருவோணமவிட்டந்தோணி ...*
யோதுமான்றலையேமூலமுத்தமஞ்சங்கிராந்தி ... *
சோதிசித்திரைபார்செக்குப்பூசங்கண்மகமேவாதி ... *
மாதராயனுடங்காலமத்திமந்தீதுமற்றே ... ... *

(இ-ள்)உத்திரம்-ரு-அத்தந்-திருவோணம்-அவிட்டம்-ரேவதி- மிரு கசீரிடம்-மூலம்-இவையிற்றில்சங்கிரமமிக்கில்உத்தமகாலமாம்-சோ தி-சித்திரை-ரோகணி-சதையம்-புனர்பூசம்-பூசம்- மகம்- அசுபதி-அ னுஷம்-இவையிற்றில்சங்கிரமமிக்கில்மத்திமகாலம்- பரணி- கார்த்தி கை-திருவாதிரை-ஆயிலியம்-பூரம்-ரு-ம்-விசாகங்-கேட்டை-இவையி ற்றில்சங்கிரமமிக்கில்அதமகாலமென்பது-எ-று. (உசய)

அஂகம்.

மற்றிருபூசம்பாருத்திரங்கள்மான்றலையுமேறும் ...*
புற்றரவத்தஞ்சோதியாதிரைபரணிபோந்தை... ...*
விற்றதிற்குறையுமாக்கமிக்கவைநிற்கும்விட்டி... ...*
சுற்றுவாவிருத்தையெட்டுங்குளிகனுஞ்சருங்குமஂகம் *

(இ-ள்) புனர்பூசம்-பூசம்-ரோகணி-உத்திரத்திரயம்-மிருகசீரிஷம்-இவையஂகமேறும்-ஆயிலியம்-அஸ்தம்-சோதி-ஆதிரை-பரணி-அனுஷம்-இவைகுறையும்-இச்சொல்லாதநாட்களொத்துநிற்கும்-விஷ்டி-உவா-இருத்தை-அஷ்டமிகுளியன்-இவை-அஂகம்-குறையும்-எ-று

சுருக்கமில்சங்கிராந்திசுடர்சனிகிடக்குஞ்சோமன் ... ...*
றிருக்குடைச்செவ்வாய்நிற்குஞ் செம்பொன்மா லிருக்கும்வெ
ளருக்குடைநடைவயிற்றிற்றூழ்ந்திடுங்கிடையிலஂகம்... [ள்ளி
உரைத்தவைநிற்கினிற்கும்மொழிந்தவையுபருமன்றே ... *

(இ-ள்) ஞாயிறுஞ்சனியுங்கிடக்கும்-இவையிற்றிலஂகம்-தாழும்-திங்கட்-செவ்வாய்-நிற்கும்-இவையிற்றிலஂகம்-நிற்கும்-வியாழம்-புதனிருக்கும்-வெள்ளிநடக்கும்-இவையிற்றிலஂகம்-ஏறும்-எ-று. ()

உயர்விடைசிலைமீன்சிங்கமொளியிழைதகரில்வெய்யோ-
னியல்புடைவெண்பூவெண்பட்டணிந்திடிலிவற்றிலேறு-
மயல்சிறுசிவப்புச்சாத்துமற்றவைதன்னிற்குன்றுஞ் *
செயலளவுடையநிற்குந்திறந்தாழுஞ்சரத்திலேறும் *

(இள்) ரிஷபம்-தனுசு-மீனம்-சிங்கம்-கன்னி-மேஷம்- இவையிற்றில் ஆதித்தன்-வெண்பூவெண்துகில்சாத்தும் இவையிற்றில் அஂகம் ஏறும்-மிதுனம்-மகரம்-கடகம்-துலாம்-விருச்சிகம்-கும்பம்-இவையிற்செம்பூ-செந்துகில்-சாத்தும்-இவையிற்றில்குறையும்-உபையராசிகள்நிற்குமென்றும்-திரராசிகள்-தாழுமென்றும்-சரராசிகள்-ஏறுமென்றும்சொல்லு-எ-று. (உசரு)

ஏறரிமேடம்வெய்யோனியற்புலியுருவாமித்திற் ... *
பாறுமாமனிதர்மீன்சால்பாவையில்விடையாமாரி ... *
யாறலைத்திடும்யாழ்கோல்தேளரியதாமரசர்தம்மில்...*
மாறுவாவருடைமற்றும்வந்ததேவர்துநிற்கும்... ... *

(இ-ள்) ரிஷபம்-சிங்கம்-மேஷம்-இவையிற்றில்ஆதித்தன் புலியுருவுருவரம்மனுஷிரெல்லாமாயும்-மீனம்-கும்பம்-கன்னி-இவையிற்றில்

ரிஷபமாம்-பெருவருஷமுண்டாம்-மிதுனம்- துலாம்- விருச்சிகம்- இவையிற்றில்-இங்சவுருவாம் - இவைராஜாக்களுக்கு யுத்தமுண்டாம்- மகரம்-கடகம்-தனுசு-இவையிற்றிலாதித்தன்வருடையாம்- இவைமு ன்மாதத்திலே செய்தவகைசெய்யும்-எ-று. (உ௪௪)

நின்றசங்கிராந்திநாடிநேர்பகுத்தொருகூறொன்பா...*
னொன்றுவித்தழிற்றுக்கியொருமூன்றிற்கீய்ந்தசேடம்
ஒன்றெனிற்குறையுமல்கமோரிரண்டேறுமூன்றேல் *
நின்றிடுமருக்கன்பாட்டினிலாவெழும்நிலையிற்றாழும் *

(இ-ள்) சங்கிரமத்துநாழிகையை இருகூறாக்கி யொருகூறிலே யொன்பதுகூட்டி-இத்தனையேழிற்பெருக்கி மூன்றுக்கீய்ந்து நின் றசேடம் ஒன்றாகிற்குறையும்-இரண்டாகிலேறும்- மூன்றாகில்நிற்கும்-ஆதித்தன்- அஸ்தமனமாகிலும் - சந்திரனுதயமாகிலும்- தாழு மென்பது - இவையெல்லாவற்றையும்பார்த்து மிகுதியாற் பலஞ் சொல்வது-எ-று. (உ௪௫)

## தலையுவாக்குறி

தாழ்புயற்பெய்யிற்பெய்யுந்தையுங்கார்த்திகையுமற்றை
வாழுமைப்பசியினேடுமார்கழிபெய்யிற்பெய்யாச்...*
சூழ்சனியருக்கன்செவ்வாய்சொன்னசங்கிராந்தியாமேல்
வீழ்புயலில்லைநற்கோள்வாரமேல்வாரிமென்மேல்...*

(இ-ள்) தைமாதமுங் கார்த்திகைமாதமுஞ் சங்கிரமகாலத்தில் வ ருஷிம்பெய்யில் அம்மாதங்களிலே வருஷமுண்டாம்- அற்பிசிமார் கழியும் பெய்யிற்பெய்யாது-அன்றிச்செவ்வாய் சனிஞாயிறாகில் வரு ஷமில்லை-நற்கோள்வாரங்களில் சங்கிரமிக்கில்பெருவருஷமுண்டு.()

மேவுசங்கிரமநாள்முன்பின்மிக்கவர்பிறந்தநாளே [வந்
லோவிலாதனத்தைப்போக்குமொழிந்தநாளாறுஞ்செல்
தாவில்யாத்திரையான்மூன்றுந்தன்பதியிருத்துமாறுங்*
கோவினற்பயனுண்டென்றுங்கொற்றவனருள்மற்றாமே·

(இ-ள்) சங்கிரமத்துநாளும் அதற்குமுன்பின்னாளும் பிறந்தநா ளாகில்-அர்த்தஹானி-அதன்பின்-௬-நாளும்செல்வம்-அதன்பின்-௩-நா ள்-ஸ்தனபேதம்-அதன்பின்-௬-நாள்-தனப்பிராப்த்தி-அதன்பின்-௩- நாள்ராசபயம்-அதன்பின்-௬-நாள்-ராஜபூசை-இவ்வகையால் இருப த்தேழுநாளுங்கண்டுகொள்க-இவைபிறந்தநாள் தொட்டெண்ணுவா குமுளர் எ-று. (உ௪௬)

ஆனிமார்கழியின்றேனோடாடியிற்றலையுவாவில் ... *
வானிடிப்புதிரங்கூடல்மண்கம்பங்கிராணம்வட்ட... *
மீன்விழுந்திடுதலாலங்கட்டிகள்விழுதல்செய்யிற் ... *
றானியமிவற்றிற்கஞ்சார்ந்திங்களிற்சாயுமன்றே ... ... *

(இ-ள்) ஆனி-மார்கழி-கார்த்திகை-ஆடி-இம்மாதங்களில்-பவரணையில்-இடிப்புஉதிரமாக-விழுதல்-பூகம்பம்-கிராணம்-பரிவேஷம்-நட்சத்திரம் வீழ்தல்-ஆலாங்கட்டிகள் வீழ்தல்செய்யில்-இம்மாதங்களுக்கு-௬-ம்-மாதங்களிலே-அஃகம்-அறவுந்தாழும்-எ-று. (௨௪௮)

சார்ந்தபங்குனியின்மாசிதையிலிக்குறிகளுண்டேல்... *
லேய்ந்தசந்தனம்பொன்பட்டுக் குறையுமேழ்திங்கடன்
னூர்ந்தவைப்பசிபுரட்டையுளவெனிற்குதிரையானை [னி
மாய்ந்திடுமிவற்றிற்கைந்தாந்திங்களின்மயிலேயன்னாய்.

(இ-ள்) பங்குனி-மாசி-தை-இம்மாதங்களில்-தலையுவாவில்-முன்பு சொன்ன குறிகளுண்டாகில்-இவையிற்றுக்கு-௭- மாதத்துக்குள்ளே பொன்-பட்டு-சந்தனங்குறையும்-ஐப்பசி-புரட்டாசி-இவையிற்றிலுண்டாகில்இதற்கு-௫-ம்-மாதத்துக்குள்ளே-யானைகுதிரை-நசிக்கும்-()

அன்னைசித்திரைவைகாசியவற்றினுளேந்தார்திங்கள் ... *
தன்னினூல்பருத்தியெள்ளுதானியங்கிழங்குசாயு ... ...ம்
முன்னதாவணியிலுண்டேன்முதிரைவெண்கலநெய்யெண்ணெ
தின்னுங்கிழங்குதிங்களிரண்டினுட்குறையுஞ்செவ்வே... [ய்

(இ-ள்) சித்திரை-வைகாசி-இவற்றில்-உளவெனில்-அவையிற்றுக்கு-௬-மாதத்துக்குள்-நூல்-பருத்தி-எள்ளு-தானியம்-கிழங்கு-இவையெல்லாம் குறையுமென்க- ஆவணிமாதத்தில்முன்பு சொன்னகுறியுண்டாகில்-அதற்கிரண்டாமாதத்துக்குள்-முதிரை-வெண்கலம்-நெய்-எண்ணெய் - தின்னுங்கிழங்கு இவைகுறையும்- எ-று- தலையுவாக்குறி முற்றும். (௨௫௦)

## உத்திராடக்காற்று

செவ்வைகீழ்காற்றுத்தீதாந்தென்னர்கோல்பின்னுமாரி*
கவ்வைசேர்தெங்கிழ்காற்றேல்கலகரும்பசிகோளுண்டா
எவ்வமில்தென்றற்போராமில்லையேற்பசியால்மாயு [ம்
மவ்வலங்குழலாய்தென்மேல்வளிதளிவந்துபோமே *

(இ-ள்) ஆடிமாதத்தில்-உத்திராடத்தினன்று- உதயத்திலே கீழ்

காற்றடிக்குமாகில் பாண்டியனுக்குப்பொல்லாது- பின்மாரிவருஷி முண்டு-கீழ்மூலைக்காற்றடிக்குமாகில்-கலகமும்-பசியும்- கோள்ருமுண்டாம்-தெற்குக்காற்ருகில் யுத்தமும் பசியுமுண்டாம்- தென்மேல் மூலைக்காற்ருகில் விளைவில்லை-எ-று. (உருக)

போதுமேல்காற்றேல்மாரிபொழிந்துநற்காலமாகு... *
மெதகுவடமேல்காற்றேல்விருத்தங்கள்பெருக்கவுண்டா
கோதிலாவடந்தையாகிற்குவலயம்வெள்ளக்கேடா... [ம்
மேதகுவடகீழ்கால்முன்மாரியாய்விளையுமெங்கும் ... *

(இ-ள்) மேல்காற்றடிக்குமாகில் மாரிபொழிந்துநற்காற்ருகும்- வடமேல்காற்ருகில் மிருகங்களாகிலும் விட்டில்தாவாய்ப்புழுக்களுண்டென்பது- வடகாற்ருகில் பூமியெல்லாம் வெள்ளக்கேடாம்- வடகீழ்காற்ருகில் முன்மாரியாய் விளையும்-எ-று. (உருஉ)

எங்குளவளியுமீண்டிபெறிவதுவலமேநன்ரு ... ... *
மங்கவையிடத்திற்றீகாமாடியுத்திராடமான ... ... *
திங்கிதிலுவாவுக்கூடினெழின்மிகுமிடையுவாவிற் ... *
செங்கதிரவனைமேகமறைக்குமேற்சிறகுமாரி .. ... *

(இ-ள்) இச்சொன்னகாற்றெல்லாம் வலமாகவீசுமாகி லுத்தமமென்றும்- இடமாகவீசுமாகிற் பொல்லாதென்பது- உத்திராடத்துடன் உவாவுக்கூடில் உதையகாலத்தி லாதித்தனை மேகமறைக்குமாகில்-ஊனமறவருஷிக்கும்-எ-று. (உருங)

பஞ்சமிக்குறி.

சிறப்புடையாடிதன்னிற்சிறந்தமுற்பக்கத்தைந்தில்... ...*
விறற்கதிர்வாரமற்பமழைதிங்கள்வெள்ளமாகு ... ... *
மறப்பரும்பூசல்செவ்வாய்மால்காற்றுவியாழமாரி... ...[ல்
குறிப்பரும்வெள்ளிவெள்ளங்கொடுஞ்சனிகுறையுங்கொண்ட

(இ-ள்) ஆடிமாதம்பூர்வபட்சத்தில்பஞ்சமிஞாயிற்றுக்கிழமையாகிலற்பவருஷம்-திங்களாகில்வெள்ளம்-செவ்வாயாகில்பூசல்-புதனாகில் காற்று-வியாழமாகில்நிறையவிளையும்-வெள்ளியாகில்பெருவருஷம்-சனியாகில் விளைவில்லை-எ-று. (உருச)

சோதிக்குறி.

கொண்டல்மந்தாரங்காற்றுகுலவியமுழக்கமின்னல்...*
தண்டின்முற்பக்கம்வந்தநவமியிற்சோதிநாளி ... ...*

றுண்டெனின்மாரிமூன்றுமுயர்முறந்தசமிதன்னிற் -*
கண்டிலனடுவுபன்னொன் றனுடமேற்கடையிற்பெய்யும்

(இ-ள்)ஆடிமாதம்பூர்வபட்சத்தில் நவமியுஞ்சோதியுங் கூடினநாளில்மந்தாரமாதல்மழையாதல்மின்னலாத லுண்டாகில்முன்வருஷமாம்தசமியும் விசாகமுங்கூடினநாளில் இந்தக்குறியுண்டாகில்நடுவில்வருஷமென்பது ஏகாதசியும்அனுடமுங்கூடினநாளில்பின்னேவருஷம்-எ-று. (௨௫௫)

ஆடிக்குறி.

கடையினிற்றசமிபன்னொன் றரோணிநாட்கதிரைமேக *
மடையினுமாடிப்பூரம்வெள்ளிபொன்திங்களேனு...*
மடைமழையல்லாவாரமற்பமென்றுத்திராடந் ... ...*
திடமுடையானிமூலம்வில்லுமேற்கிடினுந்தீதே ... *

(இ-ள்)அபரபட்சத்துதசிமியும் ஏகாதசியுடன்கூடினரோகணிநாள்மந்தாரமுண்டாகில் அவ்வாண்டுவருஷமிகுதியென்றும் -ஆடி-பூரம்-வெள்ளியாமுந்-திங்களில்வரில் அடைமழையென்றும் அல்லாத வாரம்வரில் வருஷமில்லையென்றும்-ஆடியுத்திராடம் ஆனிமூலம்மேற்கேவில்லிடில்-அவ்வாண்டுவிளைவில்லை-எ-று. (௨௫௬)

கெர்ப்பவோட்டம்

தீயபூராடம்வெய்யோன்சேர்ந்திடுநாளில்வட்டந் ...*
தூயமந்தாரந்தோன்றிற்சுடரவனுதிரைக்கே ... ...*
பாயுநாள்தொட்டுமுன்பிலொருநாட்குப்பதினாலாகக் -*
காயும்வேற்கண்ணாய்சொல்லுங்கார்மழைகருப்பந்தானே

(இ-ள்)மார்கழிமாதத்தில்-௰௬௨ ௨௰-நாழிகைக்குப்பின்புபூராடத்திலே யாதித்தன்சென்றுபிறவேசிக்குமன்று முதலாகப்பதின்மூன்றுநாளும்-௨௰-நாழிகையும்நிற்கும்- இந்நாட்களில்மந்தாரமாதல்-பரிவேஷமாதல்உண்டாகில்ஆனிமாதத்து-௭௨-௬௰-நாழிகைக்குபின்பு ஆதித்தன்திருவாதிரையிற்சென்றுபிறவேசிக்கும்முன்புசொன்ன குறியுறுநாள் முழக்கமுண்டாகில்-பின்சொன்னநாளில்-௰௪-நாளும் அடைமழைஒருநாழியுண்டாகில்-௰௪-நாழிகை அடைமழையென்று இக்கணக்கிலேபார்த்துச்சொல்லுவது-எ-று. (௨௫௭)

## கிராணபலன்.

காரதும்பூரமகம்பூசங்கங்குலாரல்மூறம்புரட்டை ... *
விரியுமக்னிமண்டலமாம்விட்டமாயில்விளக்கத்த.. ...*
மருவுங்குதிரையுத்திராஞ்சித்திரையும்வாயுமண்டலமாந் *
தெரியுமிவற்றிலரவுருமேற்சேரும்பசிநோய்தெரிந்தரியே

(இ-ள்)பூரம்-மகம்-பூசம்-பரணி- கிர்த்திகை-விசாகம்-பூரட்டாதி-இவைஅக்கினிமண்டலம்-அவிட்டம்-ஆயிலியம்- சோதி-அத்தம்-அசுவனிஉத்திரம்-சித்திரை-இவைவாயுமண்டலம்- இவையிற்றில்கிராணந்தீண்டில்பசியும்நோயுமுண்டாய்மனுஷிரல்லாமய்வர்-எ-று (உருஅ)

அறிவன்சதையங்கடைமூலமணிமான்றலையேபூராட ... ...*
மிறைவன்வருணமண்டலமாமெழிற்பராசாடியன்னகேட்டை *
மறுவிற்புணர்தமயிசித்துமன்றுமோணமகேந்திரமாம் [பார்
விறைகொளரவமிவற்றுறுமேல் வெள்ளம்பெருத்துவிளங்கும்

(இ-ள்)உத்திரட்டாதி-சதயம்-இரேவதி-மூலம்-மிருகசீரிடம்-பூராடம்-திருவாதிரை-இவைவருணமண்டலமென்றுபேராம்-ரோகணி-உத்திராடம்-அனுஷம்-கேட்டை-புனர்பூசம்-அபிசித்து-திருவோணம் இவைமாகேந்திரமண்டலமென்றுபேராம்-இவையிற்றில்கிராணந்தீண்டில்நிறையவருஷித்துப்பூமியெல்லாம்விளையும்-எ-று. (உருகூ)

விளக்குங்கதிர்கள்தம்மைப்பாம் புண்ணும்பொழுதுமின்முழ
க்கம்,வளைந்துகூடில்வளிதுளிவில்மருவில்மாரிவளஞ்சாக்குந்
துளங்குமரசர்செங்கோற்கள்சோமன்றனையுமருக்கனையுந்- *
தளங்கொளரவம்பதினைந்திற்சாரிற்பசிநோய்தப்பாதே.... ...*

(இ-ள்)சந்திராதித்தரைக்கிராணந்தீண்டும்போதுமின்னுதல்முழங்குதல்பரிவேஷித்தல்-காற்றடித்தல்- வருஷித்தல்-வில்லிடுதல்செய்யில்-வருஷித்துத்தேசமெல்லாம்விளையும்-ராசாக்களுக்குச்செயமுண்டாம்-சோமக்கிரகணம்பற்றியிருக்கையில்பதினைந்துநாளையில்சூரியகிரஹணம்வருமாகில்பசியுமுண்டாய் மனுஷிரெல்லாமரிப்பார்கள்.

தப்பிற்கதிர்கள்தமைநாகந்தான் கொண்டெழுமேன்மழைதவ
மொப்பவுண்டவழிபாடேயும்மிழிவுலகம்விளைவுண்டா ... [று
மப்பியுடனேவிழுங்கிவிழிலரசர்செங்கோற்கழிவுண்டாஞ் ...*
செப்பின்மூலையாழுடறக்கிற்றிண்ணமுலகஞ்சிதைந்திடுமே *

(இ-ள்)சந்திராதித்தருதையங்களிலேஇராகுகேதுக்கள்கொண்டெ

ஞமர்இல் வருஷமில்லை- உண்டாப்போலேவுமிஞமாகில் உலகமெல்லாம்விளையும்-அஸ்தமனகாலத்திலே பற்றிஉடனேவிழுங்கிவிடில்ராசாக்களுக்குமரணமுண்டென்பதுஉண்டாறுக்குமாகில்பூமிக்கழிவுண்டு

சிதைவிற்பிறந்தபின்மூன்னாட்சென்மராசியாய்ச்சேரிற் ... *
புதல்வன்மனைசேப் பொழில்வாவி பொன்பெருற்றாருடன்
பொன்று, மதனைமொழிக்கின்வெண்கலத்திலெய்வார்த்தரவை
ப்பொன்னாலே, மதியொண்ணுதலாய்சமைத்ததனில்வைத்துக்
கொடுக்கமறையோர்க்கே ... ... ... ... ... ... ... *

(இ-ள்)பிறந்தநாள்மூன்றினும் சென்மவாரத்திலும் சென்மராசியிலும்கிராணந்தீண்டில்விருட்சம்-குளம்-அதர்த்தம்- இவையுமழிந்து பந்துக்களுக்கும் புத்திரனுக்கும்ஸ்திரீக்கும் தனக்குமரணமுண்டாம்- அதுதவிர்க்கவேண்டினால் வெண்கலத்தாலேவொரு பாத்திரஞ்செய்துநிறையநெய்வார்த்துபொன்னாலேபாம்பாகச் சமைத்துஅதிலேயிட்டுபிராமணருக்குத்தானமாகக்கொடுப்பது-எ-று. (உகூஉ)

## கிரகவெற்றித்தோர்வை.

மறுவெண்டிங்கட்சனிசேயை விழுங்கின்மன்னர்கோல்வளரும்
பிறைபொன்புகரைவிழுங்கிடினும் பின்னும்வெள்ளிவியாழத்
தை, யரவுண்டிடினு மனுப்பெரிதா மம்பொன்புகரோன்சனி
சேயைத், திரவுண்டிடினும்பசிபெரிதாஞ் செவ்வாய்சனியுண்
டிடிற்போராம்... ... ... ... ... ... ... ... *

(இ-ள்)கிரகணகாலத்திற்சந்திரன்சனி செவ்வாயைவிழுங்கில்ராசாக்களுக்குமிகவும்ராச்சியம்செல்லும்-சந்திரன் வியாழம்வெள்ளியை விழுங்கில்மனுப்பெருக்கும்-வெள்ளி சனிசெவ்வாயைவிழுங்கில்யுத்தமுண்டு-எ-று-இராஹணம்முற்றும். (உகூரு)

போராமதிக்குச்சேய்புந்திபொன்னன்வெள்ளிசனிதோற்கிற் *
றீராரசர்சேகாலோங்குஞ்சேய்க்குப்புந்திமதிதோற்கி... ...*
லாராயமைச்சரரசழிவாமமைச்சர்தோற்கிற்பசிபூசல்... ...*
வாரார்முலையாயொன்றெய்துமந்தன்றோற்கிற்குறும்பறுமால்

(இ-ள்)சந்திரனுக்குச்-செவ்வாய்-புதன்வியாழம்-வெள்ளிசனிதோற்கில்-ராஜாக்களுக்குச்-தேசமெல்லாம்செல்லும்- செவ்வாய்க்குப்புதன்-தோற்கில்-மந்திரிகளுக்கு-அழிவுண்டாம்-சந்திரன்தோற்கில்-ஸ்வசனமுண்டாம்-வியாழந்தோற்கில்-பசியாலேமாயும் வெள்ளிதோற்கி

ல்பூசலாம்-சனிதோற்கில்குறும்பரெல்லாமழியும்-எ-று. (உகூச)

அறியும்புதற்குமதிதோற்கிலரசர்க்கிடுக்கணைமைச்சரோற் ... ...*
குறையுங்கொண்டற்சேய்சனிகள்தோற்கிற்குறும்பற்கழிவாகு... *
மறையந்தணர்க்குச்சேய்சனிகள்மதியந்தோத்கின்மழைபெரிதாம்*
பொறைவண்புந்திபுகர்தோற்கிற்போகம்விளையும்புகலுங்கால் ...*

(இ-ள்)புதனுக்குச்சந்திரன்-தோற்கில்ராஜாக்களுக்கு-விசனமுண்டாம்.வியாழம்-தோற்கில்-கொண்டல்குறையும்-சேய்சனிகள்-தோற்கில்-குறும்பற்கழிவாகும்-பிரகஸ்பதிக்கு-சேய்சனிமதியந்தோற்கில்-மழைமிச்சமாம்-புதனுக்குச்-சுக்கிரன்-தோற்கில்- போகம்விளையும்-

புகற்குச்சனிசேய்புதன்றோற்கிற்பொழியுமாரிமதிதோற்கிற்*
பகைக்குமரசர்பொன்றோற்கிற்...சிநோய்பூசற்பலவுண்டா *
மிகைத்தசனிக்குமதிதோற்கில் விளைவுகுன்றும்பொன்றோற்கி
ற். சிதைக்கும்பசியாற்புகர்தோற்கின் மழைபொன்சேய்மால்
செருப்பெரிதாம் ... ... ... ... ... ... ... *

(இ-ள்) வெள்ளிக்குச்சனி- செவ்வாய்புதன்- தோற்கில்- வருஷம்-பெருக்கவுண்டாம்- சந்திரன்தோற்கில் - ராஜாக்களுக்குப்பகையுண்டாம்-வியாழந் தோற்கில்-பசியாலாதல்-வியாதியாலாதல்பூசலாலாதல்மனுக்களெல்லாம்மரணமடையும்-சனிக்குச்சந்திரன்தோற்கில்விளைவில்லை-வியாழந்தோற்கில்பாசியால்மாயும்-வெள்ளிதோற்கில்-வருஷமில்லை-செவ்வாய்புதன்தோற்கில்யுத்தம்-பெரிதாம்-எ-று. (உகூசா)

செருக்குஞ்சிங்கமுதலாதிற் \சேர்ந்தகோட்கள்வருங்கோளைப்,
பெருக்கவெல்லுங்குடமாதியாதில்நின்றபெருங்கோளை [லா
விரிக்கில்வருங்கோளவை வெல்லும்வெற்றிதோர்வி மெல்விய
யுலாக்கில்வெற்றிபுகர்தெற்கிலொழிந்தார்வெற்றிவடக்குறிலே

(இ-ள்) சிங்கமுதலாதினும்நின்றகோட்கள்- வருங்கோளைவெல்லும்-கும்பமுதலாதினும்- நின்றகோளைவருங் கோள்வெல்லும்- வெள்ளிதெற்குறில்வெற்றியல்லாதவர்-வடக்குறில்செயம்-எ-று. (உகூஎ)

வடித்தபொன்னினுடனதற்கேழ்மந்தன்பாம்புசேயுறினுங் *
கடித்தசேயோடரவுறினுஞ்சூரிசெவ்வாய்பாம்புறினுந், தடித்
தமீன்றேட்கண்டயினடு சேவேறரிமுன்சனியுறினு, மிடிக்கண்
பெரிதாய்மழையின்றிபெட்டொன்றுகுமனுவெல்லாம் ... *

(இ-ள்) வியாழத்துடன்சனியாதல்பாம்பாதல் செவ்வாயாதல்நிற்

பினும்-மீனத்திற்கடையிலாதல்விருச்சிகத்துக்கடையிலாதல்ரிஷப த்துநடுவாதல்சிங்கத்துமுதலாதல்சனிநிற்பினும்வருஷமின்றிவிளை வுகுன்றிதேசத்தில் சர்வபிராணிகளும்வியாதியாலும்பசியாலும் மர ணமெய்துவர்-எ-று. (உசுஅ)

## துர்விஷயலட்சணம்.

மனுவேறரிதேட்கயல்தனுவில்மந்தன்செவ்வாய்வக்கிரிக்கில்[ல்
வினையேபெருகும்வேந்தற்குவெள்ளிக்கேழில்பொன் மேவி
துனியாஞ்சுக்கன்படிகடத்தற்சுன்மாற்கடையேகதிர்நிற்கில் *
நனிசேர்கதிற்குமுன்சனிசெய்நடக்கிற்பஞ்சம்நாடெல்லாம் *

(இ-ள்) ரிஷபம்- சிங்கம்- விருச்சிகம்- தனுசு- மீனம்- இவையிற் றில்செவ்வாயாதல்சனியாதல்நின்றுவக்கிரித்தால்விசேஷித்து ராஜாக் களுக்குயுத்தமுண்டாம்- வெள்ளிக்கு- எ- மிடத்தில் வியாழம்நிற்கில் சமசத்தம உதகமென்றுபெயராய்சுபகர்மங்களுக்குவிலக்கப்பட்ட ன-படிகடத்தலென்பது வெள்ளிதெற்கேபோதல். வெள்ளிக்கும்பு தனுக்கும்நடுவேஆதித்தனிற்கில் ஆதித்தனுக்குமுன்னேசனிசெவ்வா ய்நிற்கில்பஞ்சமாய்மனுஷிரில்லாமாய்வர்-எ-று. (உசுகூ)

நாடுங்கதிர்பொன்சனிசேரைநணுகிமாதம்நாலரைப்பின்... *
ஞேடுங்கோட்கள்வக்கிரமாமுனாக்கிற்பிறியுமெட்டனாயாந் *
தேடுங்கதிற்குமுன்புகரோன் செல்லச்செவ்வாய்மின்செல்லி *
லாடுங்கோட்கள்பூராடம்வெள்ளிவெள்ளமழைசால ... ... *

(இ-ள்) வியாழஞ்சனிசெவ்வாயிவற்றுடனே ஆதித்தன்கூடில்-நால ரைமாதஞ்சென்றுலிவர்கள்வக்கிரிக்கத்து டங்குவார்கள்-ஆதித்தன்கூ டிநின்றமாதமுதல்எட்டனாமாதத்தில்வக்கிரமநீங்குமென்க ஆதித்த னுக்குமுன்வெள்ளிசெல்ல செவ்வாய்பின் செல்லினும் பூராடத்தில் வெள்ளிநிற்பினும்வெள்ளமாகவருஷிக்கும்-எ-று. (உஎ0)

## கிரகம் பரிவேஷிக்குறி,

சாலவருக்கனுதையத்துச்சாரில்வட்டந்தானழிவா, மேலே
யுச்சிவிளைவுண்டாம்வெய்யோன்பாட்டிலரசழிவா,மாலே
மதியைப்பரிவேடம்வளைக்கிலமிக்கமழைபொழிதல்,கோ
லமுலேயாய்படைவேந்தர்குடைசாய்ந்திடுதல்பிழைவருதல்

(இ-ள்) ஆதித்தனையுதையகாலத்தில்பரிவேஷிக்கில்வருஷமில்லை-உ

ச்சிகாலத்திற்பரிவேஷிக்கில்விளைவுண்டாம்-மாலைமதியைப்பரிவேஷி
க்கில்-அதிகமழைபொழியும்-அரசர்கீர்த்திக்குஅழிவாகும்-எ-று. ()

விழையாமதியைப்பொன்வெள்ளியுடனேவளைக்கிற்பெருமழையா*
மழைதாழ்த்தாட்குஞ்சிறிதாகில்மதியைச்சனிசேயுடன்வளைக்கிற் ...*
பழிதான்பசிநோய்பலவுளவாம்பாம்புதீண்டும்பொழுதுவளைவே ...*
லழிவாமரசர்நகர்விட்டாலனைத்துநாட்டுக்கழிவாமே |... ... *

(இ-ள்) சந்திரனைச்சுக்கிரன்வியாழத்துடனே- பரிவேஷிக்கில்வரு
ஷிம்பெரிதென்க-வட்டஞ்சிறிதாகில்மழைதாட்கும்-சந்திரனைச்-சனி
யுடனேவளைக்கிற்பசியும்-நோயும்-பெருக்கவுண்டாம்- கிரஹணந்தீ
ண்டும்பொழுதுவளைக்கில்ராஜாக்களுக்கு-அழிவுண்டாம்-விட்டபோ
து-பரிவேஷிக்கில் நாட்டுக்கழிவுண்டு எ-று. (உஎஉ)

## நக்ஷத்திரவிழுகுறி.

ஆடுகயல்தேள்தனுசிங்கமெழுமீன்விழுமேலரசழிவாங் ...*
கோடுமகரந்துலையலவன்கும்பமஃகங்குறைந்திடுமால்......*
தேடுமிதுனமந்திரிசாந்தெரிவையுதையம்பிணிபெரிதா ...*
மோடுமிடபமழையில்லையுடுவீழ்குறியென்றுணர்ந்துணாயே*

(இ-ள்) மேஷம்-மீனம்-விருச்சிகம்-தனுசு-சிம்பம்- இவையுதைய
மாகநக்ஷத்திரம்-விழில்-ராஜாக்களுக்கு-அழிவுண்டாம்மகரம்-துலாம்
கன்னி-கும்பம்-இவையுதையமாக-விழில்அஃகம்-தாழும்-மிதுனத்தில்
விழில்மந்திரிமரணம்-கன்னியிலவிழில்வியாதியுண்டாம்-ரிஷபத்தில்
விழில்மழையில்லை-எ-று. (உஎங)

## பிறைக்குறி.

உணாசேர்பிறைமீன்மேடத்திலுயருந்தெற்குவிடைமிதுனம்......*
விணாசேர்குழலாய்சனிநோக்குமிச்சுவெல்லாம்வடக்குயரும்[கியாம்
பெரியோர்சொன்னநெறியொழியப்பிணைகாண்தோற்றிற்பெரும்ப
கணாசேர்பக்கமொன்றிரண்டுங்கதிர்பொன்புகருகாண்பிறையே *

(இ-ள்) பங்குனிபஞ்சித்திரையும்-பிறைகாணத்தெற்குயரும் -வை
காசிஆனிமுதல்-எட்டுமாதமும் வடக்குயரும்-தையுமாசியும்- சமன்-
இச்சொன்னநேரொழியவிபரீதமாகில் பூமியெல்லாம் பசியாலேமா
யும்-பிறைகாணலாவது-பக்கங்களில்-திதியையும் - கிழமைகளில் ஞா
யிறும்-வியாழம்வெள்ளியுமென்ப- விசேஷித்துச்சதுர்த்தியில்- சுக
ப்படும்-எ-று. (உஎச)

## மகவோட்டம்

காணுமாசிகலைமதியக்கருதுமகமீனுங்கிளையும் ... ... *
பேணுந்தென்பால்மீன்சேரிற்பெரிதாமஃகமிரண்டாமீன் *
பூணிலொன்றரைக்காலாம்பொருந்துமூன்றிற்பாதியதாஞ் *
சேணின்வடபால்மீன்சோற்செகத்திலஃகஞ்சிறிதென்னே... *

(இ-ள்)மாசிமாதத்தில் மகத்துநின்று- சந்திரன்மகநக்ஷத்திரத்திலே தெற்கு-மீனைச்சேரில் மிகுந்தவஃகம்- இரண்டாம்நக்ஷத்திரத்திலொன்றரைக்காலாம்-மூன்றாம்நட்சத்திரத்திலே நிற்கில்ஒன்றுபாதி எல்லாத்துக்கும்வடக்கு நட்சத்திரத்தில் நிற்கில் ஒன்றுகாலாம்-எ-று

## வியாழசரிதை

சிறியமேடங்குருவாகிற்றேசமெங்கும்விளைவுண்டாங் ... ... *
குறியகுன்னைடைபொல்சேரிற்கொண்டற்பொழியுங்கோடல்காப் ... *
பொறிகொள்மிதுனங்குருநிற்கிற்பொன்முத்தரிதாஞ்சூலானுங் ... *
கறவைபூசல்மழைபெரிதாங்கடகஞ்சிங்கங்கம்பசிநோய் ... ... *

(இ-ள்)வியாழம்மேஷத்தில்நிற்கும்போதுஐப்பசியென்னுமாண்டாம் அவ்வாண்டில் வருஷங்குறைவறப்பெய்துதேசமெல்லாம்விளையும் ரிஷபத்தில்நிற்கும்போது கார்த்திகையென்னுமாண்டாம் அவ்வாண்டு அடைமழைபெய்து கன்றுகாவிடல்காது மிகவிளையும்-மிதுனத்தில் நிற்கும்போது மார்கழியென்னுமாண்டாம் - அவ்வாண்டு வருஷங்குறைந்து விளைவின்றிப் பசியும்நோயும் பெரிதாம்எ-று (உஎங)

நோக்கும்பொன்னன்கன்னியுறில்நூலுந்துகுமெளிதாகும் ... *
னோக்குங்கொண்டல்விளைவுண்டாங்குறையும்பருத்தியுப்புடனே *
பக்குந்துலையின்மழைபெரிதாயளப்பமலியு நிறைகுறையும் ... *
வீக்குந்தேளில்பசிமிடிநோய்வில்லில்மழைபோர்மிகவுண்டாம் *

(இ-ள்) வியாழம்கன்னியில்நிற்கும்போது பங்குனி என்னுமாண்டாம்அவ்வாண்டுமிகவுமழைபெய்து விளைந்து அஃகம்பெரிதாம்- நூலும்புடவையும்எளிதாகும் பருத்தி- உப்பு- நெய் - குறையுமென்க-துலாத்தில்நிற்கும் போதுசித்திரைஎன்னுமாண்டாம் அவ்வாண்டில்மிகவும்வருஷம்பெய்துநானாவிததானியமும்மிகவுண்டாம்- அஃகம்பெருத்து-அளப்பன-எல்லாமலிந்துநிறுப்பன வெல்லாங்குறையுமென்க-விருச்சிகத்தில்நிற்கும்போதுவைகாசிஎன்னுமாண்டாம்- அவ்வாண்டுவருஷமின்றிவிளைவுக்குன்றிப்பசிநோய் மிகவுண்டாம்- அ

னுசில்நிற்கும்போது-ஆனிஎன்னுமாண்டாம் - அவ்வாண்டுவருஷமி கப்பெய்துகுளங்களெல்லாம்உடைந்து-துற்காலம்- நற்காலமாய்-எங்கும்விளைந்துராசாக்களுக்குளங்கும்பூசலுண்டாம்-எ-று. (உஎஎ)

மிகவுமகரம்பொன்சேரின்மிடியோர் பெரிதாய்விளைவில்லை *
யகலுங்கும்பமடைமழைபாடலீநம்பெருக்குமீனத்திற் ... *
பகைநோய்பசியாய்விளைவின்றிப்பரிமாவானைமிகமாயும் *
புகலுமாடைபசிமுதலாய்ப்புரட்டையீரும்புவிக்கெல்லாம் *

(இ-ள்) மகரத்தில் வியாழம் நிற்கும்போது ஆடிஎன்னுமண்டாம் அவ்வாண்டுவருஷமின்றி விளைவின்றிப்பசியும்பெருக்க வுண்டாய்பருத்தியுமெள்ளுமலியுமெனக- கும்பத்தில்நிற்கும்போது ஆவணிஎன்னுமாண்டாம்-அவ்வாண்டு அடைமழையாய் எங்கும்விளைந்துதானியம்பெருத்துவியாதியாலும்யுத்தத்தாலும்மனுஷரெல்லா மாய்வரொன்பதுமீனத்தில்நிற்கும்போதுபுரட்டாசிஎன்னுமாண்டாம்-அவ்வாண்டுவிளைவின்றிப்பஞ்சமாய்- யானைகுதிரை-மனுஷர்-அடையப்பசியாலும்நோயாலுமாய்வரொன்பதுபருத்தியுமெள்ளுங்குறையும் சூலிகளாண் பெறுவார்கள்- இப்படிஅற்பிசிமுதல்புரட்டாசியீராக-மேஷமுதல் மீனமீறாக எண்ணிக்கொள்வது- எ-று.வியாழசரிதை முற்றும்.
(உஎஅ)

## சுக்கிரசரிதை

புவியில்மதியேழியாழ்புலவன்புகரோணிற்கிற்புயல்பெரிதாங்... *
குவைகேளரிபெண்துணிவில்லைக் கோல்தேள்வெள்ளங்கொடுஞ்சிலை
யேற்,றுவலைதோன்றிற்றுளியாய்ப்போஞ்சுறவுங்குடமூந்துடர்மீன
ம்,நவையில்வெள்ளிநின்றிடுமேல்நாளுநாளுமழைபெரிதாம் ... *

(இ-ள்) மேஷமுதல்நாலிராசியும் வெள்ளிநிற்கில்வருஷமுண்டாம்-சிங்ககன்னியில்நிற்கும்நாளில்வருஷமின்றிவிளைத்த விளையுந்தீயுமெனக- துலாம்விருச்சிகத்தில்நிற்கும்போது வெள்ளம்போம்-தனுசில்நிற்கும்போதுவருஷந்தோன்றத்துளியாய்ப்போம்-மகரமுதல்மூன்றிராசியினும்நிற்கும்போது அடைமழையாம்-எ-று. (உஎகூ)

## சனிசரிதை.

பெரியகுதிரைசனியேறிற்பெய்யுமாரிதுயர்தோன்றல் ... *
குறிதாம்பரணிவிளைவுடனேபொருவாமாறல்முதல்மூன்றும் *

கரியோனிற்கின்மனுமாய்ந்துகார்தான்வறக்குமாதிரையிற் *
சொரியாநிற்குமழைபுணர்தந்துளியும்விளையுமளவாமே ...*

(இ-ள்) அசுவதியில் சனிநிற்கில் வருஷிம் பெய்துவிளையும்-பரணியில்அழிவுண்டாம் - எல்லாத்தானியங்களும்விளையும் - கார்த்திகை-ரோகணி-மிருகசீரிஷம் - இந்நாட்களில் நிற்கில் வருஷமின்றிப் பஞ்சமாய் மனுமாயும் - திருவாதிரையில் நிற்கில் வருஷங்குறைவறப்பெய்து தேசமெல்லாம் விளையும் - புணர்பூசத்தில் - வருஷிமும் விளைவும் மத்திமமாய்க் கீழ்சாதிப்பல்கும் - எ-று. (உஅ௰)

அளவிற்பூஞ்சனியெய்திலற்பம்விளைவாயகம்பல்கும் *
வளமிலாயில்மகம்பூரமாரிமறுத்துமனுமாயுங்... ...*
களவுஞ்சனியுத்திரமெய்திற்கார்சற்றுகிபெட்பயறு *
விளைவுமத்தமுதனுன்கும்வெள்ளம்பெருத்துமிடிதீரும்

(இ-ள்) பூசத்துச் சனிநிற்கில் விளைவற்பமாய் மிருகங்களும் கீழ்மக்களும் பல்கும் - ஆயிலியம் - மகம் - பூரம் - இவையிற்றில் - சனிநிற்கில் வருஷமின்றித் தேசத்தில் மனுஷிர் பசியாலும் வியாதியாலும் பகையாலும் மரணமடைவரொன்க உத்திரத்தில் நிற்கில் மழையற்பம் - எள்ளு - பயிறு - வரகு - விளையும் - அத்தமுதல் நாங்கும் வருஷங் குறைவறப்பெய்து தேசமெங்கும் விளைந்து அம்கமும்பெருகும் - எ-று. (உஅ௧)

சிரநீலன்பனையேறிற்றென்னற்கழிவுவிளைவுண்டாங்,சாரி
கேட்டைமுதலேந்துங்கருதிப்பசிநோய்பகைபெரிதாம்.
வேரிவிட்டமுதன்மூன்றும்வெள்ளம்பெரிதாய்விளையும்
பார்.பாரிலறிவன்கலஞ்சனியேற்பசியான்மாயும்படியெல்லாம்

(இ-ள்) அனுடத்துச் சனிநிற்கில் - வருஷித்துக் குளங்களெல்லாம்- நிறைந்துவிளையும் பாண்டியனுக் கழிவுண்டாம் - குறும்பக்கழிவென்க - கேட்டைமுதல் - ரு - நாளிலும் - நிற்கில் - வருஷமின்றி எல்லாந்தீய்ந்து - மனுஷரெல்லாம் - பகையாலேமாயும் - அவிட்டமுதல் - ௩ - நாளிலும் - நிற்கில் - தேசங்குறைவற விளைந்து கன்றுகாலியும் பல்கிமனுஷ ரெல்லாஞ் சுசமே யிருப்பார்கள் உத்திரட்டாதி-ரேவதி- இவையில் - நிற்கில் வருஷமின்றி மனுஷரெல்லாம் நோயாலும் பசியாலும் மரணமடைவர் இச்சொன்னபலன் - செவ்வாய்க்கு மொக்கும்-எ-று. (உஅ௨)

## புதனோட்டம்.

படியிற்கும்பம்விடைமீனமேடம்பருதிமுன்னோடும் *
நெடியதண்டில்முதனான்குமுடனேநின்றுபின்னோடும்.
கடியகதிரைப்புதன்பிரிதல்கதிரோன்கன்னிபுணர்ந்திடுத
ற்,கொடியினிடையாய்செற்குறுதற்பிரிதல்பஞ்சக்குறியாமே

(இ-ள்) கும்பம்- ரிஷபம்- மீனம்- மேஷம்- இவ்விராசியில் புதன் ஆதித்தனுக்கு முன்னேயோடும்- மிதுனமுதல்- நான்கிராசியும் ஆதித்தனுடனே நிற்கும்- துலாமுதல்- ௪- இராசியும் ஆதித்தனுக்குப்பின்னேவோடும்- இச்சொன்னவகையொழிய ஆதித்தனைப் பிரிந்துதோன்றினும் ஆதித்தன் கன்னியில் நிற்கும்நாளும் - வெள்ளி தெற்கேபோம்நாளும் வருஷமில்லை-எ-று. (௨௮௩)

## கோள்நிலை.

ஆதித்தகதிரோன்புகர்புந்திகுலவிநிற்குமொருமாதஞ் ...*
செதித்தமதிநாளிரண்டேகாற்செவ்வாய்மாதமொன்றரையாங்,
கறுத்தசனியாண்டிரண்டரையாங்கனகன்றானுமோராண்டா[ள்
மிருத்தபாம்பாண்டொன்றரையாமிராசியொன்றில்நின்றிடுநா

(இ-ள்) ஆதித்தன்- புதன்- சுக்கிரன்ராசியில்- ஒருமாதம்நிற்பார்கள் - சந்திரனிரண்டேகால் நாள் நிற்பன் - செவ்வாய்ஒன்றரை மாதம் - சனியிரண்டரை வருஷம்- வியாழம் ஒருவருஷம் - ராகு கேது வொன்றரைவருஷம்நிற்பார்கள் எ-று. (௨௮௪)

## மனைப்பொருத்தம்.

நாட்டுமுறகுமனைபதற்கு நலங்கோளெட்டெட்டனாசெய்தா
ல்,மீட்டுநடுவுநாலறையும்விரிஞ்சன்மூலைநாலும்போ, மீட்டுந்
திசைகளொருநான்கிலிருநான்கறையுமிறைவற்காக்,சோட்டுநா
ற்பத்தெட்டறையுங்குணமாய்க்கொள்கக்குலமனைக்கே ...*

(இ-ள்) எற்றுகின்றனுலையும் எடுக்கின்றமனையையும் - ௬௰௪ அறையாக்கினால்நடுவில் - ௪ - அறையும் - பிரமஸ்தானம்- நாலு மூலையும்போக்காகும் - திக்குநான்கில் - ௮ - அறையும்தேவர்கள்காவல்நின்ற - ௪௰௮ - அறையும்கொள்வது-எ-று. (௨௮௫)

மனையைச்சிறுகோலாலளந்துவந்தகுழியின்பேராய, மனையை
வெட்டார்ப்பெருக்கிப்புன் னிரண்டாற்கழித்தசாக்கயா, மனை

யையொன்பதாற்பெருக்கிப் பத்திற்கழித்ததழிவாகும், நினையி
ன்மூன்றாற்பெருக்கியெட்டுக்கீய்ந்தசேடம்நிலயோனி ... *

(இ-ள்) மனையை முழக்கோலாலே யளந்து கண்டகுழியின் பேராயமாம் - அவ்வாயத்தை - ௮ - ல் - பெருக்கி - ௰௨ - ல் - கழித்து நின்றதன் பேராக்கமாம்- ஆயத்தை - ௯ - ல் - பெருக்கி - ௰-ல்-கழித்தது அழிவாம்-ஆயத்தை- ௩- ல்- பெருக்கி ௮- ல் - கழித்து நின்றசேடம்யோனி-எ-று. (௨௮௬)

நிலைகொளாயமெட்டேற்றிநெறிமூவொன்பான்கழித்ததுநா,
ளிலகுஞ்சிலநான்காற்பெருக்கிமுவைந்தாற்கழித்ததிதி *
யிலகுமொன்பானுடனேற்றியேழிற்கழித்ததுகிழமை, புலை
யின்மூவொன்பாற்பெருக்கியொன்பாற்கழித்ததங்சகமே *

(இ-ள்) முன்புசொன்ன ஆயத்தை - ௮ - ல் - பெருக்கி-௨௭-ல்- கழித்துநின்றசேடம் நாளென்பது- ஆயத்தை- ௪- ல்-பெருக்கி-௰௫-ல்-கழித்தசேடம்பக்கம்- ஆயத்தை- ௯-ல்- பெருக்கி - ௭-ல்-கழித்துநின்றசேடம்கிழமை என்க - ஆயத்தை - ௨௰௭ - ல்- பெருக்கி-௯-ல்- கழித்துநின்றசேடம் அங்சகம்-எ-று. (௨௮௭)

அஞ்சொலிருபத்தேழ்பெருக்கினூற்றிற்கழித்ததுவாயுள் *
செஞ்சொலாயஞ்சிலவானம்வரினுமாக்கஞ்சிறுத்தழிவு ...*
மிஞ்சுமெனினும்யோனிநாள்பக்கங்கிழமையெய்திடினும் *
வஞ்சமானவங்சகங்கள்வாணாட்குறைதல்மனைக்காகா... ...*

(இ-ள்) ஆயத்தை- ௨௭- ல்- பெருக்கி- ௱- ல்- கழித்து- நின்றசேடம்-மனைக்கு ஆயுளென்பது- இவற்றிலாயஞ்சிலவரினும்-ஆக்கஞ்சிறுத்து அழிவுபெருக்கினும் யோனிநாள்-பக்கங்கிழமை- பொல்லாதவைவரினும் அங்சகம் பொல்லாதவை வரினும் ஆயுசு குறையினுமனைக்குஆகாது-எ-று. (௨௮௮)

## யோனியறிதல்.

ஆகுங்கிழக்குமுதலெட்டும்பருந்துபூனையரிசுணங்க *
னாகங்கருப்பைகரிமுசலாம்யோனிநல்லனாற்றிசையு...*
மேகஞ்சேர்தற்காமுணர்வுசத்திவிளைவோடாகிட நோய்,
சோகஞ்சுகமற்றிவற்றாற்றுன்சத்திவிளைவுசுகம்நன்றாம்,

(இ-ள்) யோனியும்-அங்சமும்-அறியும்படி-கிழக்குப்பருந்து-தென்கிழக்குப்பூனை-தெற்குச்சிங்கம்- தென்மேற்குநாய்- மேற்குப்

பாம்பு-வடமேற்கெலி-வடக்குயானை-வடகிழக்குமுசல்-ஆ, யோனி எட்டுங்கண்டுகொள்க-இவையிற்றிற்-பருந்தும்-சிங்கமும்-பாம்பும்-யானையும்-நன்றென்பது-அல்லாதவை-தீதென்பது- இவற்றில்- புத்தி-சத்தி-தானியம்-ராச்சியம்- துக்கம்- வியாதி- தரித்திரம்- சுகம்- இவையெட்டுங் கண்டுகொள்க-இவையிற்றில் ராச்சியம்-புத்தி-சத்தி-தானியம்-சுகம்-அழகிதென்க-அல்லாதவைதீது-எ-று (௨௮௯)

## வாஸ்துபுருஷன்.

நன்றுங்கிழக்குமுதலெட்டுமெட்டில்நல்லான்றொழுக்குப்பை *
குன்றப்படப்பையெருமைநிலைதொழுநெற்கூடுநிடம்நீர்சா
ல்,என்றூர்மனைக்குங்கிணறுகிழக்கீசன்மதிநீமொழிற்கிழவன் [ம்
றன்றூட்கதிர்மேத்கால்நீட்டித்தலைவைத்திடங்கீழ்தான்கிடக்கு

(இ-ள்) கிழக்கே அடுக்களைக் கொள்வது - தென்கிழக்கே பசுத்தொழும்-தெற்கேகுப்பையிடுவது- தென்மேற்குத்தோப்பு - மேற்கேஎருமைத்தொழுயிடுவது - வடமேற்கே நெற்கூடு - வடக்கே போசனசாலை-வடகிழக்கேதண்ணீர்சால்வைப்பது - மனைக்குக்கிணறு வெட்டில்கிழக்கு வியாதியுண்டாம்-வடகிழக்கின்பம்-வடக்குசவுக்கியம் - வடமேற்கு ஆயுதத்தால் மரணம் - மேற்குச் சம்பத்து-தென்மேற்குச்சாவு- தெற்கு ஸ்ரீமரணம் - தென்கிழக்குப் புத்திரஹானி - பிரம்மஸ்தானத்தில் அர்த்தசானியென்று சொல்வது வாஸ்துபுருஷன்கிடக்கும்படி - ஆதித்தனின்றராசியின் பேரிலே கால்நீட்டி அதற்கு எதிர்ராசியிலே தலைவைத்து இடக்கை கீழாகக்கிடக்கும்-எ-று. (௨௯௰)

கிடந்தான்மேடமொருபத்திற்கிளரும்விடையின்மூவேழி *
லடுங்கோல்கடகம்பதிமொன்றிலறியோராதிற்றேரெட்டிற் *
குடந்தானிருபத்தொன்றதனிற்கூறுமகரம்பன்னிரண்டி... *
விடந்தாமெடுக்கலாமென்றுமொல்லாத்திசையுநல்லோரே... *

(இ-ள்) வாஸ்துபுருஷன் எழுந்திருக்கும்நாள் - சித்திரை ௴ ௰௳ - வைகாசி ௴ ௨௰௧௳ - ஆடி ௴ அற்பசி ௴ ௰௧௳ - ஆவணி ௴ ௬௳ - கார்த்திகை ௴ ௮௳ - தை ௴ ௰௨௳ - மாசி ௴ ௨௨௳ - இவையிற்றில் - இன்னயின்ன திசையன்றியிலே எங்கும் அகமெடுக்கலாம்-எ-று றவாறு.மனை நூல்முற்றும் (௨௯௧)

## சுவர்பிளப்பு

நல்லமனையிற்சுவர்பிளக்கிலருக்கன்றிசையினாசஞ்சே, பல்லது
றும்பொன்சாவுபுதனழகாப்புகர்மேலாக்கமதாங், கொல்லுங்
காரிமதிநெறிநியங்கூற்றம்பாம்புபாமெனக்கொள்க, வெல்லைய
ருக்கன்சேய்பொன்மால்புகர்சன்மதிபாம் பெண்டிசைக்கே*

(இ-ள்) அகத்திற்சுவர்பிளக்கிற்கிழக்குநாசம் - தென்கிழக்கு அல்லல்- தெற்குமரணம்- தென்மேற்குஅழகு- மேற்குஆக்கம்- வடமேற்குகாவு- வடக்குஅர்த்தலாபம்- வடகிழக்குஸ்திரீமரணம்- திக்குவெட்டும்- கிழக்குஆதித்தன்-தென்கிழக்குசெவ்வாய் - தெற்குவியாழம் தென்மேற்குப்புதன்-மேற்குவெள்ளி-வடமேற்குச்சனி- வடக்குச்சந்திரன்- வடகிழக்குப்பாம்புநிலை-எ-று. (உ௧உ)

## புற்று.

எண்டிசையுங்கிழக்குமுதலாகவெண்ணி... ... ...*
விந்திரனக்கினிநிருதிவருணன்வாயு ... ... ...*
வண்டமுறுமதியீசனட்டதிக்கும் ... ... ... ...*
கலமநடுவேலயன்மேற்புற்றெடுக்கில்... ... ...*
மண்டியசாவிந்திரன்மேற்செல்வமக்கி ... ... ...*
மனையிடியுமயன்றுயரம்நிருதிவாழ்வு ... ... *
கொண்டல்வருணன்மகவுகாற்றுக்கூற்றங் ... ...*
குலமதியேனவயீசன்குறுகுநோயே ... ... *

(இ-ள்) எட்டுதிக்கிலும்கிழக்குஇந்திரன் - தென்கிழக்குஅக்கினி- தெற்குயமன்-தென்மேற்குநிருதி-மேற்குவருணன்- வடமேற்குவாயு-வடக்குச்சோமன்-வடகிழக்கீசானன்-நடுபிரம்மஸ்தானம்-இவையிற்றில் மின்புநட்டஞ்சொல்லும்பொழுது இன்னதெய்வத்தின் பெயருடையோனென்றும்- தேவசிந்தனைகளும் - இவையிற்றிலேயறிவது-பிரம்மஸ்தானத்தில் புற்றெடுக்கிற்சாவு- இந்திரன்செல்வம்- அக்கினியில்மனையிடியும்-யமன் துக்கம்-நிருதிஸ்ரீசாம்-வருணன்புத்திரலாபம் - வாயுகூற்றும் - சந்திரன்நன்மை - ஈசானன் வியாதியென்று சொல்வது-எ-று. (உ௧௩)

## செஞ்செல்லு

குறுகியசெஞ்செலயன்மேற்றேன்றில்நன்றுங் ... *
கொடுங்கதிர்கேடக்கியிருநிதியமின்பும் ... ...*

பெரும்நிருதிமழைவருணன்செல்வஞ்சாற்று ... ... *
பெண்போக்குமதிவாழ்வுயீடையீசன் ... ... *
சறவையிடமுறிற்கீழ்க்காலிமாயுங் ... ... ... *
கட்டிற்படிசாலிக்கீழட்டில்நோயா ... ... *
மிறைவரிடமூருணிபம்பலன்கள்பன்னி ... ... ... *
லெழில்நாடுகெடுஞ்சுவர்மேலெங்குமன்றே ... ... *

(இ-ள்) பிரமஸ்தானத்தில் செஞ்செல்லுத்தோன்றில்- நன்மை கிழக்குக்கேடு-அக்கினிநிதிபெருக்கு-யமனின்பம்-நிருதிமழை- வருணன்செல்வம்-வாயுஸ்தரீயைப்போக்கும் சந்திரனில்வாழ்வு-ஈசானம்பீடை-கன்றுகாலித்தொழுவம்-கன்றுகாலிநாசம்- கட்டிற்கீழ்வாசற்படிக்கீழ்-அடுக்குகளைக்கிழிவை-வியாதி-தேவஸ்தானம்- ஊருணி-அம்பலங்கள்-பன்னிபிடம்- இவற்றிற்றோன்றில்- நாடுகெடும் சுவர்மேற்றோன்றில் மிகவும்நன்று-எ-று. (௧௯௪)

## கோடிகிழியில்-நன்மைதீமை

நற்கோடிகிழியின்மடிமூன்றுசெய்து ... ... ... *
நயந்தகடைத்தலைகிழாய்க்கிழக்கேவைத்துப் ... *
பொற்கோடிமுகமேலாய்மேற்கேவைத்துப் ... ... *
பூவிலயன்கொலைபருக்கன்செல்வமிடைபுதல்வர் ... *
அற்கோலமனைவேகுமயனிலிடையின்ப ... ... *
மழலெரிக்குமிரவிக்குநடுவுற்றூரிடருந் ... ... *
தெற்கோடிச்சாவீதற்குமரிக்குமிடைதுன்பஞ் ... *
செழுமலரோற்கிடைபிணிதென்மேற்கிருவர்பெருமே

(இ-ள்)புதுப்புடவைபீறினல் மூன்றுமடியாக்கிக் கடைத்தலையைக்கீழாக்கிக் கிழக்கேவைத்து முகத்தலைமேலாக்கி மேற்கேவைத்துப் பார்த்தால் பிரமஸ்தானமாகில்மரணம் - ஆதித்தனிற்செல்வம் - இவையிரண்டுக்கும் நடுவாகில்புத்திரருண்டாம்-அக்கினியில்அகமேறும்- அக்கினிக்கும் பிரமாவுக்கும் நடுவின்பம்- அக்கினிக்குமாதித்தனுக்கும் நடுபந்துக்கள் விதனம்- யமனிற்சாவு- யமனுக்கும் அக்கினிக்கும் நடுதுக்கம்-யமனுக்கும் பிரமாவுக்கும் நடுவியாதி- நிருதியில்புத்திரலாபம்-எ-று. (௧௯௫)

பெருநிருதிகால்னிடைபகைமலரோனடுவேத் ... ... *
பேரின்பம்வருணனிதிநிருதிநீரிடையி ... ... *
னறுநுதல்பேரயனிடையிற்புடவைகாற்றி ... ... [யி
னட்டார்நீள்வளியுள்மனம்நான்முகன்காற்றிடைநோ

நிறைந்மதிகேடயனிடையிற்பிணிமதிகாற்றிடையி ... *
னேரார்கேடசனலம்நிலாவீசற்கிடையி... *
லுறுபொருள்போமயனீசற்கிடையிலின்ப ... ... *
மொன்கதிரோற்கிடை நன் ருமுற்பிடவைகிழியே ... *

(இ-ள்) நிருதிக்கும் யமனுக்கும் நடுசத்துருவுண்டாம்- நிருதிக்கும் பிரம்மாவுக்கும் நடுவின்பம்-வருணன் அர்த்தலாபம்-வருணனுக்கும் நிருதிக்கும் நடுஸ்ரீபேறு-வருணனுக்கும் பிரம்மாவுக்கும் நடுமரணமுண்டாம்-வாயுவில் பந்துக்களுண்டாம் - வாயுவுக்கும் வருணனுக்கும் நடுகலியாணமுண்டாம்-வாயுவுக்கும் பிரம்மாவுக்கும் நடுசம்பத்துண்டாம். சந்திரனில் பிள்ளைகள்-சந்திரனுக்கும் பிரம்மாவுக்கும் நடுசம்பத்து-சந்திரனுக்கும்-வாயுவுக்கும்- நடுநாசம்- ஈசனில் நலம்-சந்திரனுக்கும் ஈசானத்திற்கும் நடுஅர்த்தஹானி-ஈசனுக்கும் பிரம்மாவுக்கும் நடு இன்பம்- ஈசனுக்கும் ஆதித்தனுக்கும் நடுநன்மையுண்டாம்-எ-று. (௨௯௬)

## சுரிகைலட்சணம்.

கிழக்குநெடுஞ்சுரிகைகதிர்மேல்வினவிற்சிரங்காங் ... *
கெழுமுநலங்குலம்வணிகன்பகைகேடுபறையன் ... *
விழிக்குநமனலம்பெருகுமூனையிற்குறைவாகும் ... *
வேளாணிருதியின்மேல்மிடிபெருகும்புலையன் ... *
சுழிக்குநெடுவீராசனதுசெல்வமுண்டாஞ் ... ... *
சுழல்வளியிற்கீழ்சாதி துரையஞ்சும் ... ... ... *
பழிப்பின்மதிதனம்பெருகுங்குலமும்பார்ப்பான் ... *
பாம்பின்மேற்பறைச்சாதிபழியொடுகேடுளவாம் *

(இ-ள்) ஆயுதங்கொண்டு ஆதித்தனின்ற திசையிலே நின்றுவினவில் சிரங்குண்டாமென்பது-சாதிவைசியனென்றும் காரியம்லாபமுண்டாமென்றும் சொல்வது-அக்கினியாகில்சாதிபறையனென்றும்-காரியசேதமுண்டென்றும் சொல்வது - யமன்திசையில் குறைவுண்டென்றுஞ் சூத்திரனென்றும்- அர்த்தலாபமுண்டென்றும்- சொல்லுவது-ச-வது- நிருதியில் வினவில் மனமிடியன் சாதிபுலையனென்றுஞ் சொல்லுவது- வருணனில் ஸ்ரீயுண்டென்றும் சாதிக்ஷத்திரியனென்றும் சொல்வது-வாயுகீழ்சாதியென்றும் துக்கமென்றுஞ் சொல்லுவது-சோமனில் அர்த்தலாபமுண்டென்றும்-சாதிபிராமணனென்றுஞ் சொல்லுவது. பாம்பிற்சாதி பறையனென்றும் பழிகேடென்றுஞ் சொல்லுவது-எ-று. (௨௯௭)

## பஞ்சபக்ஷிபலன்.

உளங்கொள்நந்தைகதிர்செவ்வாயகாரமோங்கும்பத்திரைமால் ... *
தளங்கொள்மதியந்தானிகரஞ்சயையும்பொன்னுமுகாரமதரம் ... *
விளங்குமிருத்தைப்புகரெகரம்வெய்யசனிபூரணையொகரந் ... ... *
துளங்குமிடையாய்ப்பகர்கடிகையவ்வாறிவையூண்சொன்முறையே.

(இ-ள்) நந்தை-ஞாயிறு-செவ்வாய்-அகரம்-பத்திரைபுதன்- திங்கள்இகரம்-சேயை-வியாழம்-உகரம்-ரித்தையும்- வெள்ளியும்- எகரம்-பூரணையும்-சனியும்-ஒகரம்- இவையிற்றில் சொன்னகிழமையிலும்-பக்கங்களிலும் உதயாதிமுதலாக அஸ்தமனமிறுதியாக ஒவ்வொன்று ஆறுநாழிகையாக முப்பதுநாழிகையும் அடைவேயுண்பர்கள்()

சொன்னவகாரம்வல்லூறூண் துய்யவிகாரமாந்தையூன் ... *
முன்னையுகாரம்வலியனூண்மொழியிலெகாரங்கோழியினூண்
பன்னுமொகாரமயிலூணும்பண்டை யடைவேபறவைகளொ
ரொன்னுமிரண்டுநடைமுடிமூன்றுறக்கநாலுசாவைந்தே [ன்

(இ-ள்) அகாரம் வல்லூறூண்-இகாரம் ஆந்தையூண்-உகாரம் வலியனூண்-எகாரம் கோழியினூண்- ஒகாரம் மயிலூண்- இவ்வடைவேயுதிக்கிற் பட்சியுண்ணும் இரண்டாம்பட்சி நடக்கும்- மூன்றாம் பட்சி இராசா-நான்காம்பட்சி நித்திரை-ஐந்தாபட்சி மரணம்-எ-று.

சாய்ந்தவகாரங்ககாரமுடன்சகாரங்ககாரந்தானதன் ... *
வாய்த்தநகாரம்பகாரமிவைமகாரம்யகாரமெட்டெழுத்தும் *
வாய்ந்தபருந்துமுதலியோனியிருநான்கினுக்குமடைவாகி *
யேய்ந்தபோரும்வெற்றியுந்தாமிதனாற்பறவையாலியம்பே *

(இ-ள்) அ-க-ச-த-ந-ப-ம-ய-இவையெட்டெழுத்தையுங் கிழக்குமுதலாக எட்டுத்திக்கிலு மடைப்பது இவையிற்றுக்குமுன்பு-பருந்து முதலாகச் சொல்லிப் பொருத்தியோனிஎட்டையும் யோனியாக்கிக்கொள்வது இந்தயோனியாலும்-அட்சரத்தாலும்-பட்சியாலும்-பலாபலமும்-வெற்றித்தோல்வியும்- உறவும்பகையும் விசாரித்துச் சொல்வது-எ-று.

(௫௯)

## பேர்பொருத்தம்.

இயம்புமுன்னெழுந்தான்பாலனிரண்ட துகுமரன்மூன்றேல்,
வயம்புமூதானாலும்நோயைந்துமரணமாமே ... ... *

பயன்கொள்தன்பேரொழுத்துமவன்பெயரொழுத்தும்பார்த்தா
வியர்துடன்ருக்கிவெட்டிற்கழித்தெற்றம்வெற்றிபாரோ... [ல்

(இ-ள்) அ-இ-உ-எ-ஒ- என்கிற ஐந்திலேயுமடைத்தால் இவ்வடைவிலே- தன்பெயரொழுத்தையும் பின்புகொள்கின்ற பெரொழுத்தையும்-பார்த்தாலிரண்டும்-ஒரொழுத்தாகில் பாலனென்றும்-உ-ம்-எழுத்தாகில்-குமரனென்றும்-௩-ம்-எழுத்தாகில் இராஜாவென்றும்-ச-ம்-எழுத்தாகில் வியாதியென்றும்-ரு-ம்-எழுத்தாகில் மரணமென்றுஞ்சொல்வது இவையிற்றில் நான்கும்-ஐந்தும்- ஆகாதென்பது- தன்னுடையபூர்வநாமத்தில் சாவெழுத்தை நீக்கிநின்ற வெழுத்தையெண்ணி- அதனை-ய-ல்- பெருக்கி- அ-ல்- கழிந்து நின்றசேஷத்தை யறிந்தால் இரண்டினு மேற்றமானபேர் பொருந்துமென்று சொல்வது-எ-று. (௩௱க)

## நட்டமுட்டிசிந்தனை.

பாரினில்நட்டமுட்டிசிந்தனைப்பகரவேண்டிற் ... ...*
சீரியதறிக்கால்கீழ்க்காற்சிறப்புடையோரைகோணங்...*
காரியம்வினவிநின்றோராகள்கவிப்புநோக்கங் ...*
கூரிதாயுணர்ந்துகோளின்வலியறிந்திசிதுகூறே......*

(இ-ள்) நட்டமுட்டி-சிந்தனைச்சொல்லவேண்டில்-தறிக்காலுங்கீழ்க்காலுமோராயும்-திரேக்காணமும்- உதையவாருட முங்கவிப்பும்-உனணூட்டுநோக்கு-மிவையிற்றையறிந்து இக்கோட்களை நட்பாக்ஷி உச்சப்பகை-நீசங்களிலே-பலாபலன்பயனறிந்துசொல்லுவது-எ-று

## தறிக்கால்.

கூறியமறியிற்சேய்மால்புகர்மதிகுண்டைசுன்பொன் *
சீறுசேப்புகர்யாழ்செவ்வாய்சனிதிங்களருக்கனண்டி...*
லேறியமதிமால்வெய்யோன்புகரரியிரவிகாரி... ...*
யாறியபுகர்சேய்கன்னிபொன்சனியருக்கன்செவ்வாய் *

(இ-ள்)மேடமுதற்கால்-செவ்வாய்-உ-ம்-கால்-புதன்-௩-ம்-கால்-வெள்ளி-ச-ம்-கால்-சந்திரன்ரிஷபமுதற்கால்-சனி-உ-ம்-கால்-வியாழம்௩

௩-ம்-கால்-செவ்வாய்-௪-ம்-கால்-வெள்ளி-மிதுன-முதற்கால்- செவ்வாய்-௨-ம்-கால்-சனி-௩-ம்-கால்-திங்கள்-௪-ம்-கால்- ஆதித்தன்கடகமுதற்கால்-திங்கள்-௨-ம் கால்-புதன்-௩-ம்-கால்- ஆதித்தன்-௪-ம்-கால்-வெள்ளி-சிங்கமுதற்கால்-ஆதித்தன்-௨-ம்-கால்-சனி-௩-ம்கால்-வெள்ளி-௪-ம்கால்-செவ்வாய்-கன்னி-முதற்கால்- வியாழம்-௨-ம்-கால்-சனி-௩-ம்-கால்-ஆதித்தன்-௪-ம்-கால்-செவ்வாய்-எ-று. (௫௱௩)

## இராசிநோக்கு.

செவ்வியதுலையின்வெள்ளிமதிசேய்மால்தேட்சேய்காரி ...✱
வெவ்வெயிற்குருவீத்சேய்மால்வெயில்குறுமகரம்வில்லோ ✱
னெவ்வமிற்காரிதேரோன்சனிகுடம்புகரோனிற்று... ... ✱
தவ்வமில்கதிர்மால்மீன்பொன்சனிரவிபொன்றறிக்கால் ...✱

(இ-ள்) துலாத்தில்முதற்கால்-வெள்ளி-௨-ம்-கால்-சந்திரன்-௩-ம்-கால்-செவ்வாய்-௪-ம்-கால்-புதன்- விருச்சிகமுதற்கால்-செவ்வாய்-௨-ம்-கால்-சனி-௩-ம்-கால்-ஆதித்தன்-௪-ம்-கால்-வியாழம்- தனுசில் முதற்கால்-செவ்வாய்-௨-ம்-கால்-புதன்-௩-ம்-கால்- ஆதித்தன்- ௪-ம்-கால்-வியாழம்-மகரமுதற்கால்-வியாழம்- ௨-ம்-கால்-சனி-௩-ம்- கால்-ஆதித்தன்-௪-ம்-கால்-சனி-கும்பமுதற்கால்-வெள்ளி-௨-ம்-கால்-திங்கள்-௩-ம்-கால்-ஆதித்தன்-௪-ம்-கால்-புதன்- மீனம்- முதற்கால்-வியாழம்-௨-ம்-கால்-சனி-௩-ம்-கால்-சூரியன்-௪-ம்-கால்-குரு-இவ்வகையால்-தறிக்காலறிவது-எ-று. (௫௱௪)

தாதுகொள்மதியேர்கீழ்பாலியாழ்தென்கீழ்க்கடகஞ்சிங்கந் ✱
தீதிலாத்தெற்குத்தென்மேற்கெசயிழைகோல்தேள்மேற்கு...✱
மாதனுவடமேல்மிக்கமகரஞ்சால்வடக்குமீன... ... ...✱
மோதியவடகீழ்நிற்பதுண்பதுமென்றுமோனா ... ... ✱

(இ-ள்) மேஷம்-ரிஷபம்-கிழக்குநிலை-மிதுனம்- தென்கிழக்கு-கடகம்-சிங்கந்தெற்கு-கன்னி-தென்மேற்கு- துலாம்- விருச்சிகம்-மேற்கு-தனுசு-வடமேற்கு-மகரம்-கும்பம்-வடக்கு-மீனம்-வடகிழக்கு-திக்கால்-மேஷமுதற்கால்- மிதுனத்தின்கடைக்காலையுண்ணும்-௨-ம்-கால்-௩-ம்-காலையுண்ணும்-௩-ம்-கால்-௨-ம்-காலையுண்ணும்-௪-ம்-கால்-முதற்காலையுண்ணும்- இப்படியே மற்றவிராசிகளுண்ணும் -எ-று

## கவிப்புஉச்சக்கோள்.

ஓணைபன்றொன்றொன்பானேழ்சரந்திரமுபையநோக்குஞ் *
சார்கவிப்புறையமாதியிரண்டணாகடிகைதன்னை ... ... *
நரிதன்கவிக்கும்பின்னையிடைமுதலடைவேறன்று... ...*
மார்புகர்பொன்மேல்மேனைமதியிடைபுவிக்கோளல்லார் ...*

(இ-ள்) சரராசிகளெல்லாம்-௰௧-மிராசியைநோக்கும்-திரராசிகளெல்லாம்-௯-மிராசியைநோக்கும்- உபையராசிகளெல்லாம்-௭-மிராசியை நோக்கும்மேஷமுதற்கால்-கும்பம்-நான்காங்காலை-கால்நோக்குநோக்கும்-௨-ம்-கால்-௫-ம்-காலை-௩-நோக்குநோக்கும்-௫-ம்-கால்-௨-ம்-காலை-௩-நோக்குநோக்கும்- ௪-ம்-கால்- முதற்காலைமுழுநோக்குநோக்கும்-இப்படிநோக்குமென்றறிவதுகவிப்புக்கொள்ளும்படி சிறுகால்யாதொருஇராசியுதிப்பது-௨௨-நாழிகை-அவ்விராசிதன்னைத்தானே கவிக்கும்-௨-ம்-இராசிமுறை-௨௨-நாழிகைகவிக்கும்- இப்படிபன்னிரண்டிராசியும்-௬௰-நாழிகையுமிடமேவற்றுகவிக்குமென்பது வினைவிநிற்றவிராசி-யாரூடமென்பது அப்பொழுதுவுதிக்கிறவிராசியையுதையமென்றறிவது பாம்பும் வெள்ளியும்-வியாழமும்-உச்சிக்கோளென்றறிவது-புதன்-திங்கள்-இவை நிலைக்கோள்-ஆதித்தன்-செவ்வாய்-சனி-பூமிக்கோள்-இவையிற்றுமேலே உச்சத்திற்கெட்டது-இடை நிலைத்திலேகெட்டது-பூமியிற்கெட்டது- என்று மற்றுள்ளவையும் இவ்வகையாலேபார்த்துச்சொல்வது-எ-று. (௫௱௬)

## சாதிஇராசிக்கிரகமறிக.

புவிபுகழ்மீன்றேள்நண்டுபொன்மதிமறையோன்சிங்கஞ் *
குவிமறிவிற்சேய்தேரோன்கொற்றவன்மிதுனங்கோல்சால் *
நவிபுதன்வணிகன்குண்டைநாரியாமகரம்வெள்ளி ... ...*
பவனிமேவளாளன்காரிபஞ்சமன்புலையன்பாம்பே... ... *

(இ-ள்) மீனம்-விருச்சிகம்-கடகம்-வியாழம்-திங்கள்- இவைபிராமணன்-சிங்கம்-மேஷம்தனுசு-செவ்வாய்-ஞாயிறு-இவை-க்ஷத்திரியன் மிதுனம்-துலாம்-கும்பம்-புதல் இவை-வைசியன்-ரிஷபம்-கன்னி-மகரம்-வெள்ளி இவைசூத்திரன் -சனி-பஞ்சமன்-பாம்பு-புலையன்-எ-று

பாம்புசுன்சுறவுவீணைபைந்தொடிகறுப்புமேஷஞ் ... *
தேம்புமீன்குடந்தேட்பச்சைதிங்கள்வெங்கதிரோன்சுங்கன் *

தாம்பணைவிடைகோல்நண்டுவெள்ளைசெய்தகர்வித்திங்க ... *
மாம்புகழ்சிவப்பேபேசிலிறைவன்பொன்னிறமேசொல்லாய் *

(இ-ள்) பாம்பு-சனி-மகரம்-மிதுனம்-கன்னி-இவைகறுப்பு-புதன்-மீனம்-கும்பம்-விருச்சிகம்-இவைபச்சை-திங்கள்-ஞாயிறு-வெள்ளி-ரிஷபம்-துலாம்-கடகம்-இவைவெள்ளை-செவ்வாய்- மேஷம்-தனுசு-சிங்கம்-இவைசிவப்பு- வியாழம் பொன்னிறம் இப்படி நிறஞ்சொல்லுவது எ-று. (௫௱௮)

அளவுகுறள்·மறு·இருகால்-நாற்கால் பறவைபலகால்.

இனியபொன்புந்திநாகம்நெடியவரிந்துசெவ்வாய்... ...*
சனிகுறிதருக்கன்சுங்கன்சமனன்விண்மருவடுக்கன்... ...*
பனிமதிதலைசெய்பின்புபார்க்கவன்முகந்தோள்பைம்பொன் *
வனிதைமால்கைக்கீழ்வெய்யோன்மருக்கராமந்தன்காலே... *

(இ-ள்) வியாழம்-புதன்- பாம்புநெடியது-திங்கள்-செவ்வாய்-சனி-குறியது-ஞாயிறு-வெள்ளி-அளவுசமன் - இவையிற்றுலேஅளவுகுறள்சொல்லுக-சந்திரனுக்குத்தலையிலேமறு-செவ்வாய்க்குமுதுகு-வெள்ளிக்குமுகம்-வியாழந்தோள்-புதன்கைக்கீழ்-ஞாயிறுமருக்கு-பாம்பு-சனி கால்-இப்படி இவடத்தில்மருவுண்டு-எ-று. (௫௱௯)

காலிரண்டருக்கன்காரிகன்னிகோல்மிதுனங்கும்பம்... *
நாலுளசெய்பொன்குன்றைநற்சிலைசிங்கமேடம்...... *
கால்பலவெள்ளிபாம்புகடகர்தேட்சிறகேகாலுஞ் ... *
மேல்சுறவிரண்டுந்திங்கள்புதனறுகால்கள்செப்பே... *

(இ-ள்) ஞாயிறுசனி-துலாம்-மிதுனம்-கும்பம்-இவையிருகாற்சிவன்-செவ்வாய்-வியாழம்-ரிஷபம்-தனுசு-சிங்கம்-இவைநாற்காற்சீவன்-வெள்ளி-பாம்பு-கடகம்-விருச்சிகம்-இவைபலகாலுள்ளது-மீனம்-மகரம்-இவைசிறகேகால்களுள்ளது-திங்கள்-புதன்- இவை-அறுகாலென்றுசொல்லுவது-எ-று. (௫௱௰)

தாதுமூலசீவன்.

செட்பிபதறிக்கால்மேடமுதலோராதிமூவென்பால்... *
றப்பறத்தா துமூலசீவனென்றடைம்வசாற்று... ... ...*

மப்புமப்போக்குநிற்பவருவனமுன்போலாகு... ... ...*
மொப்பிலாவோனாவாரமாண்பெண்ணென்றடைவேயோதே- *

(இ-ள்) மேஷமுதலான-௰௨- இராசியையும்- தாதுமூல சீவனென்றோட்டுவது-தறிக்கால்நாற்பத்தெட்டையும்-மேஷமுதற்காலிப்படியே ஒட்டுவது-அசுவதிமுதல்-௨௰௭-நாளையும்- இப்படியேயொட்டுவது கழிகாலம்-நிகழ்காலம்வருகாலம் என்றிவ்வடைவேயொட்டுவது-ஞாயிறுமுதலானகிழமையும்-மேஷமுதலானராசிகளையும்- ஆண்பெண்ணென்றோட்டுவது-எ-று. (௩௱௰௧)

## கதிர்கள்.

ஓதியகதிர்கள்முப்பதருக்கற்கொண்மதிக்குநாலேழ் ... *
சேய்தனக்கேட்டுமேதைக்காறுசெம்பொன்னுக்கொன்பால் *
மோகுவெள்ளிக்கேழு னிக்குமூன்றராவிரண்டுக் ... ... *
கோதியகதிராற்றூரம்மாருவுயர்வுமோதே ... ... ...*

(இ-ள்) ஆதித்தனுக்கு - கதிர் - ௩௰ - திங்களுக்கு - ௨௮-செவ்வாய்க்கு-௮- புதனுக்கு - ௬ -'வியாழம்'- ௯ - வெள்ளி- ௭- சனி-௩-பாம்புக்கு இரண்டென்பது - ஓதியதென்று மிகுத்துச்சொல்லியவதனால் தந்தாமாட்சிகளிற் சொன்னவையென்றும் - நட்பில்- நாலத்தொன்றுகுறையும் பகையிற்பாதி - நீசத்தி லொன்றுமுக்காலுச்சத்திற்பத்திலொன்று இவையிற்றாலே - தூரமும் இடையும்-உருவும்- வரும்நாளும் போம்நாளும் ஆழமும் வயதும்- மற்றும்வருவனவெல்லாம் - விசாரித்துச்சொல்லுவது-எ-று. (௩௱௰௨)

## கிரகநவலோகம்.

ஓங்கியவருக்கன்பஞ்சலோகமொண்டிங்களீயந் [பொன்
றீங்கில்வெண்கலஞ்சேய்செம்புபுதன்றராவியாழஞ்செம்
பாங்குடைவெள்ளிவெள்ளிசனிபணியிரும்புகல்லாம் *
பூங்குழன்மடவாய்தாதுவைப்பொருந்தும்போதே... *

(இ-ள்) ஆதித்தன்- தாதுவாய்வந்தபோது- பஞ்சலோகம்-திங்கள் ஈயம்௨- வெண்கலம் செவ்வாய்- செப்புபுதன்- தராவியாழம்-பொன் வெள்ளி- வெள்ளி சனி - பாம்பு இரும்பு-கல்-எ-று. (௩௱௰௩)

பொருந்தியமூலம்வெய்யோன்மலைமரமதிபூவாழை *
இரும்புசெய்தாறுமேதைபடர்வனவியாழபுன்னை *
கரும்புசெண்பகமாம்வெள்ளிகிழங்கொடிகொடிபூக்காரி
இரும்பனைமஞ்சளிஞ்சியிராகுவெற்றிலைமுட்டுமே ...*

(இ-ள்) ஆதித்தன் மூலமாய் வந்தபோது மரம் வைரமாம்- திங்கள்பூவாழை முதலானவை - செவ்வாய்சிறுதூறு - புதன்படாப்படுவன- வியாழம் புன்னை - கரும்பு - செண்பகமென்க - வெள்ளிகிழங்கு- கொடி-பூவென்க- சனி-யானை- மஞ்சள்- இஞ்சி- முதலானவையென்க-பாம்பு முள்ளுடையது-எ-று. (௩௱௰௪)

## மூலதாது.

தூய்ச்சுடர்மூலதாதுவைக்கோலைச்சோமன்புல்லுத் *
தீய்ச்செவ்வாய்வரகுசாமைதினைமேதை யிலைகோல்செம்
பொன், காய்ச்சநெற்கடலைகூறைவெள்ளிகொள்கடுகு
சோறு,மாய்ச்சனிமிளகுமுள்ளெட்கதியராக்கயிறுமாமே

(இ-ள்) ஆதித்தன் மூலதாதுவாய் வந்தபோது - வைக்கோல் ஓலைமுதலானவை யென்க - சந்திரன்புல்லென்பது - செவ்வாய் வரகு-தினைசாமையென்பது- புதன்இலை- கோலென்பது-வியாழம்-நெல்லு-கடலை- புடவையென்பது- வெள்ளி - கொள்ளு - கடுகு-சோறென்பது- சனி மிளகு-முள்ளு- எள்ளுக்கதியென்பது- பாம்பு- கயிறுமுதலானவை- என்பது-எ-று. (௩௱௰௫)

## கிரகமிருகம்.

மாதராய்களிறுவெய்யோன்மதிபரிசெவ்வாயாடு ...*
மேதைகன்றெருதுவேந்தன்வெள்ளிகோவெருமைகாரி,
தாதராக்காட்டில்நாற்காலிருகாற்கோள்வலிதேல்மாந்த *
ரோதியபுவிக்கோளிஞ்சிலூர்வனபறவையுச்சம் ... *

(இ-ள்) ஆதித்தன் சிவனுப்வந்தபோது - ஆனை முதலானவையென்க - திங்கள் மூதிரா முதலானவை கொம்பில்லாதவை - செவ்வாயாடுமுதலானவை - புதன்கன்றுகள் - வியாழம்எருது-வெள்ளிபசு-சனிஎருமை - பாம்பு - காட்டில்வாழு மிருகமென்க - இருகாற்கோள்கள்- வலிதாய்வந்தபோது - மனுஷிசீவனென்பது - பூமிக்கோள்வலிதாய்வந்தபோது - ஊர்வன தாழ்வனவென்பது- உச்சக்கோ-ள்வலிதாய்வந்தபோது-பறவையென்பது-எ-று. (௩௱௰௬)

## சேவதாது.

பறைதருசேவதாதுபகல்வனுகிர்கோல்திங்கள் ... ...*
பொறைதருமுத்துநத்தைசூமன்வத்தியமூல்புர்தி ...*
இறகொடுபீலிவேந்தன்புழுகுகஸ்தூரிவெள்ளி ... *
அறையும்வெண்சாய்மாங்கள்சனிமயிரராக்கள்கொம்பே

(இ-ள்) ஆதித்தன் - சேவதாதுவாய்வந்கவிடத்து - உகிர்கோல்- முதலானவையென்பது - திங்கள்- முத்து-நத்தை-பலகறை முதலானவை-செவ்வாய்உலர்ந்தமாமிசங்கள் - புதன்இறகுபீலியென்பது-வியாழாம் - புழுகு - கஸ்தூரியென்க - வெள்ளி வெண்சாய்மலா னும்பென்பது - சனி - மயிரென்பது - பாம்புகொன்பது - இவையெல்லாம்- நட்பாக்ஷியுச்சங்களால் வலியார்த்துவலியதனுல்- தாதுமூலசீவனிருமிப்பது-எ-று. (கூளயக)

## கிரகவடிவு.

கொம்பனுய்கதிர்நாள்மூல மதிவட்டந்துடிசேய்கூர்மால், வெம்புடிக்கோணம்வேந்தனீள்வட்டம்வெள்ளிவெண்கோள், நம்பியசனிவிற்பாம்புநெடிதுருப்பகரிற்சேகி,லம்பொனூர்புகருள்மதிநீரறிவன்வீடல்ணர்காடே *

(இ-ள்) ஆதித்தன் நாலுமூலை-சந்திரன்வட்டம்- செவ்வாய் துடிவடிவு- புதன்முக்கோணம் - வியாழம் நீளவட்டம் - வெள்ளிவெண்கோணம் - சனி விற்போன்றிருக்கும் - பாம்புநெடிதென்பது- இவ்வகையாலே கெட்ட வுருக்களின் பேதங்கள் - சொல்லினது- இனிச் சேர்விடஞ் சொல்லும்படி - வியாழம் ஊருக்குள் - வெள்ளி ஊர் - திங்கள் நீருக்குகள்- புதன் அகம் - ஒழிந்த கோள்கள்- காடு-எ-று. (கூளயஅ)

## கெடுதிசேருமிடங்காணுங்காணுதும்.

காடுநன்னிலமூரிகருமலேசிற்றூராறு... ... ...*
நாடியகிணறுதோட்டம்நதிக்கரைசயமூன்னீர்கள் ...*
மேடமுன்கயலிராசயுளாவிடந்தீக்கோள்விஞ்சில் ... *
கேடதுகாணுநற்கோள்மிஞ்சிடிற்கெடுதிபோகா......*

(இ-ள்) மேஷம்காடு - ரிஷபம்விளைநிலம் - மிதுனம்ஊர்- கடகம்குளம் - சிங்கம்மலை - கன்னிசிற்றூர் - துலாம்ஆறு - விருச்சிகம்

கிணறு - தனுசுதோட்டம் - மகரம்ஆற்றங்கரை - கும்பம்கயம் - மீனம்அலை - சமுத்திரமென்றும் - இவ்வகையாலே சேர்விடஞ்செல்லுவது - தீக்கோள்விஞ்சில் காணவொண்ணுமதன்றும் - நற்கோல்விஞ்சில்காணலாம்-எ-று. (௱௰௯)

## சிரோதைய பிருட்டோதையராசி.

போகமார்கன்னிகோல்தேள் பொதுவரிமிதுனங்கும்பம்
வேகமார்தலையாலெட்சி விலங்குமீன்மிக்கபின்னு, மேகி
டாக்கெடுதிபாருமுதையமு மிரண்டுநோக்கிற்,றோசையா
யொன்றேறற்பின்புதோன்றுநோக்கிலதோற்றென்று *

(இ-ள்) கன்னி - துலாம்- விருச்சிகம்- சிம்பம்- மிதுனங்- கும்பம்- இவைதலையாலெட்சி - மீனம்- விலங்குநோக்கிலாதவை- பிருட்டோதயம்- உதையமும்- பாடிரண்டுஞ் சிரோதையமாகிற் கெடுதிகாணலாமென்பது- ஒன்றுநோக்கிற் பின்புதோன்றும் - பிருட்டோதயமாகிற்காணவொண்ணுது- எ-று. (௱௨௰)

## சோரர்கள்- பேரறியமுட்டி.

தோன்றிடவுயிர்கள்பேரி லெழுத்தெலாந்துய்தாயெண்
ணி,மூன்றுடன்மூன்றிற்ருக்கிமுன்சென்றவோரா கூட்டி
யூன்றியபெருக்கித்தாலொக்குமேலில்லைச்சேடந்[ல்லை
தான்றுமேலப்பேர்கள்ளன் வாரத்தாற்றுணிந்துசொ

(இ-ள்) அசுத்தபேரில்எழுத்தைபெண்ணி - கூ- ல்- பெருக்கி- உதயாதிசென்றஇராசியையும் இதனோடேகூட்டிய பேருக்கியந்தால் ஒத்தாலில்லையென்பது- ஒக்காயாநின்றசேடமெத்தனை யென்றறிந்து அப்பேர்கள்ளனென்பது வாரத்தாற்றுணிந்து சொல்லென்றகருத்து அவ்வியாதசேடமெத்தனையாங் கிழமையுடையானென்றறிந்து அத்தனையாங்கிழமையுடையானுக்குச் சொன்னகுணங்களுண்டாகில், அவனேகள்ளனெனத்துணிதல்-எ-று, (௱௨௰௧)

சொல்லியமுடியவெய்யோன்றேல்மாஞ்சோமனீரீந் *
புல்லியசெய்திவேந்தன்புந்திபச்சிலைபொன்செங்கல். *
நல்லவால்புகர்பளிங்குமணற்சனிகரிமண்ணுகந் ... *
கல்விதைவேர்கள்மற்றுமுன்புபோற்கண்டுகொள்ளே *

(இ-ள்) ஆதித்தன்-தோலென்றும்-மரமென்றும்- சந்திரன்-நீரில் வாழ்வனவென்றும் - செவ்வாய்- நெருப்பில்வெந்ததென்றும்- புதன்- பச்சிலையென்றும்- வியாழம்- செங்கலென்றும் - வெள்ளி-பளிங்குமணலென்றும்- சனி- களிமண்-சரியென்றும்- பாம்பு- கல்லு-விதை-வேரென்றும்-முன்பு-தாதுமூலசீவன்சொன்னவையும் ஆராய்ந்துபலபலத்தாற்சொல்வது-எ-று. (௩௨௨)

சிந்தனை.

கண்டசிந்தனைபுவிக்கோள்வலிதெனிற்புவியென்காதல்,
மண்டியல்விடைதுலாக்கோள்வலிதெனிலிடையென்மற்
றை.புண்டசிந்தனையேனுச்சக்கோள்வலிதென்னலாங்கே
பண்டுபோற்றுதுமூலசிவன்களுணர்த்துபாரே... ...*

(இ-ள்) பூமிக்கோள் வலிபெற்றுநிற்கிற் பூமிசிந்தனையென்றும்- இடநிலைக்கோள்வலிதெனிலிடையிற்சிந்தனையென்றும்- உச்சக்கோள் வலிதாகில் ஆகாசசிந்தனையென்றும்-இவ்வகையறிந்து தாதுமூலசீவன்பார்த்துச்சொல்லுவது-எ-று. (௩௨௩)

காலஞ்சொல்ல.

பால்மதிமுகூர்த்தஞ்செய்நாள் பதினைந்துவெள்ளிபைம்
பொன்,மேலொருதிங்கள்மேதையிரண்டுவெய்யோனுக்
காறு, நீலனுக்கொன்றுகாலந்தினைத்திடுங்கருமமெல்லா
ஞ்,சாலவும்நன்றுநற்கோள்வலியவேற்றவருந்தீக்கோள்

(இ-ள்) முடியும் - முடியாதென்னும் பொருளுக்குக் காலஞ்சொல்லும்படி-சந்திரனுக்கு ஒருமுகூர்த்தம் - செவ்வாய்க் கொருநாள்- வெள்ளிக்குப்- பதினைந்துநாள்- வியாழத்துக்கு- ஒருமாதம்-புதனுக்கிரண்டுமாதம்- ஆதித்தனுக்கு- ஆறுமாதம்- சனிக்கு-ஓராண்டில் முடியுமென்றும் - காரியசிந்தனைக்குநற்கோள் - வலிதாகில் நன்றென்றும்- தீக்கோள்வலிதாகில்தீதென்றுங்கொள்வது-எ-று. (௩௨௪)

பிறந்தநாளறிய.

கோதிலாரூடநீசன்னிற்குறித்ததற்கைந்தொன்பானில் *
மாதவர்பிறந்தநாட்கள்வருவதுவாரத்தொன்றெண்ணி *

லோதியசரங்கள்வாமந்திதமலைமுபையஞ்செவ்வே... *
பேதமில்சரமேமுந்நாட்டிதங்கடையிடனுள்மற்றே *

(இ-ள்) பிறந்தநாளறியவேண்டில்- வினவினனுடைய வாரூடவிராசியினும்-அதற்கைந்திலும்-ஒன்பதிலும்-கண்டுகொள்க-இவைமூன்றிலும் ஒன்று நிச்சயிக்க வேண்டில்- வினவினவள் இடப்பாலுற்றிருக்கில் சரராசியென்றும்-தென்பாலுற்றிருக்கில் ஸ்திரராசியென்றும்-செவ்வையாயிருக்கையில் உபயராசியென்றும் அறிவது- அவ்விராசியி லிந்நாளென்று அறியவேண்டில்- சரராசியாகில் அவ்விராசியில் முதல்நாளென்றும்-ஸ்திரராசியாகில்-கடைநாளென்றும்-உபயராசியாகில்-அவ்விராசியில்-நடுநாளென்றும் அறிவது-ஒதியவென்றவதனுல் உதயத்திலும்- ஆரூடத்திலு நோக்கிலும்-வலியதனுற் கண்டுகொள்க-எ-று. (௬௨௫)

## அக்ஷரமுந்தெய்வமும் - கோளும்யோனியும்.

மற்றருற்கதிர்சேய்பொன்மாற்புகர்சனிமதிபாப்பீறு *
முற்றிகைமுதலாநாடியேழனாமுறையிற்பெறுஞ் ...*
சொற்றநிற்பாதியோனிகொடியதிற்பாதிருார்... ...*
மிற்றகாராதியிரெட்டெழுத்திரண்டனாயிற்பேறும் *

(இ-ள்) கிழக்குஞாயிறு - தென்கிழக்குச்செவ்வாய் - தெற்குவியாழம் - தென்மேற்குப்புதன்- மேற்குவெள்ளி- வடமேற்குச்சனி- வடக்குச்சந்திரன் - வடகிழக்குப்பாம்பு - இவர்களிந்தத்திக்கிலே நின்று ஏழரைநாழிகையிற் பேறுவர்களென்பது - யோனியும்-பதாகையும் - மூன்றேமுக்கால் - நாழிகையிற் பேறும் - தெய்வம்- சஹஹ-நாழிகையிற்பேறும் - அக்ஷரப்நிற்கும்படி - அ - ஆ - உ - ம்- கிழக்கு - இ - ஈ - உ - ம்-தென்கிழக்கு - உ - ஊ - உ - ம்-தெற்கு- ரு - ரூ - உ - ம்-தென்மேற்கு - ளு - ளூ - உ - ம்-மேற்கு - எ - ஐ- உ- ம்- வடமேற்கு- ஒ- ஔ- உ- ம்- வடக்கு-அம்- ஹம்ச - உ- ம்-வடகிழக்கு- இப்படிநின்று இரண்டரைநாழிகையிற்பேறும்- இவர்களெல்லாம்திக்கிறநிலையிலேநிற்கிற்கள்ளரும்-கேட்டளவும்- காரியங்கொள்ளப்போவாருமுளரோஎன்பது - இவர்கள்பேரில்பேர்ந்ததிக்கிலேபோம்-எ-று. (௬௨௬)

## அக்ஷரமும் இராகுவோட்டமும்.

பேரெழுத்தொருபத்தெட்டிற்பெரியசேய்புகர்மால்பொ
ன்சுன்,சூரியன்மதியிராகுகேதுவென்றிவர்க்குச்சோரா *

தோரிரண்டொருவருக்குமுரகனண்டாதிவாமஞ்... ... *
சாருமையனாயாநாடியறிந்தட்டாந்தறிக்காற்றன்னுல் *

(இ-ள்) க-ங-செவ்வாய்-ச-ஞ-வெள்ளி-ட-ண-புதன்-த-ந-வியாழம்-ப-ம-சனி-ய-ர-ஆதித்தன்-ல-வ-சந்திரன்-ழ-ள-இராகு-ற-ன-கேது-இவ்வக்ஷரங்களிலே-கோட்களுக்கு-என்றும்-இவர்கள்- நின்றநிக்குகளுக்குமென்றுமறிவது-இவ்வக்ஷரங்களாற் கேட்டவுருக்கள் பெயருங்காரியங்கொள்ளப்போவார் பேருமற்றுள்ளவையுமறிவது-இராகு ஒம்படி உதயாதிமுதலாகஒருராசிக்கு-௨ நாழிகையாகக் கடகமுதல் சிங்கமீறாக யிடமேயேபு மென்றறிவது- இவ்விராசியுந் தறிக்காலுமறிந்து இதனுலே தாதுமூல சீவன்களும் நிச்சயித்து நக்ஷத்திரங்களெல்லாந் தப்பாமற்செல்லுவது எ-று. (௫௨௭)

கிஞ்நீரிராசி.

காலமான்றலையேகேட்டைமதமூகநான்கதோண ... *
மேலுமூன்றறிவன்மூன்முனிருபூசமாயிற்சால ... ... *
சேல்சுறுவிடைநண்டிந்துபுகராசீசமூநீருண்டாம் *
நாலுடையாரு-த்தநற்கோட்கள்நன்மைசாற்றே ... *

(இ-ள்) மிருகசீரிஷம்-கேட்டை- அஸ்தமுதல்நான்கும்- திருவோணமுதல்மூன்றும்-உத்திரட்டாதிமுதல்மூன்றும்-புணர்பூசமுதல்மூன்றும்-இந்நாட்களும்-கும்பம்- துலாம்-மீனம்-மகரம்-ரிஷபம்-கடகம்-இவ்விராசிகளும்-திங்கள்-வெள்ளி-பாம்பு-இக்கோட்களும்- செலமுண்டென்பது-அல்லாதவை செலமில்லையென்பது - சொன்னவுடையாரு-க்கவிப்புக்களாலும் இவையிற்றில் சுபக்கிரகங்கள் நிற்பினும்-நோக்கினும் உடையவாருடங்களுக்கு-௪- மிராசியிலும் பெருக்கச் செலமுண்டென்பது-இவையிற்றைப் பாபர்நோக்கில் நீரில்லையென்பது கவிப்பிராசி-செலராசியாகில்-மேலூற்றென்பது அல்லாதவை கீழூற்றென்பது ஊற்றுக்கும்-கோளுக்கும்-இராசிக்கும்-அடைத்ததிக்கிலே என்பது-அல்லாதவை- கீழூற்றென்பது- ஆற்றுநீர் வரவுக்காலெல்லாம் உடையவாருடத்துக்கு ஏழாமிராசியாற் பலன் சொல்லுவது வருஷத்துக்குப் பத்தாமிராசியாற்பலன்சொல்லுவது

நசளம்.

சார்கதிர்சுடரீறெட்டுச்சந்திரனுலுசேப்பத் ... ... *
தேர்புதனுன்பானேழ்பொன்புகளாத்துசனிமூவேழ

மூராராவொருபத்தைந்தாமுச்சஞ்சாண்முழந்தாழாட்சி-
பாரிலாள்மட்டுநட்பாம்பகைநீசந்தூரம்பாவாய் ... *

(இ-ள்) ஆதித்தனுக்குக்கதிர்-௰௬ சந்திரனுக்கு-௬. செவ்வாய்- புதன்-௩-வியாழம்-௭-வெள்ளி ௫-சனி-௨௰-பாம்பு-௰௫-இக்கதிர்கள்-உச்சத்தாற்சாணென்றும்-ஆட்சியால்முழமென்றும்- நட்பால் ஆள்மட்டென்றும்-பகைநீசத்தால்தூரமென்று-சொல்லுவது- நற்கோள்வரில்வெட்ட எளிதென்றும் - தண்ணீர் நல்லதென்றும் - சொல்லுவது- தீக்கோள்வரில் பாறைஎன்றும்- தண்ணீர்பொல்லாதென்றும்-சொல்லுவது--எ-று. (௩௨௧)

## பூச்சல்லியம்.

பாரறைநாலேழிற்றேபனைவைத்துப்பன்னேழ்நாள்சூழ்ந்
தேர்வலதென்மேற்கீசன்முதல்வடக்கொருநாட்கெண்ணி
சீர்மிகமிதுனமேற்காற்றெற்கொடுகிழக்குமெண்ணி [ச்
நீர்மதிநின்றநாட்பினிருதிபேல்நிறுத்துவட்டம்... ...*

(இ-ள்) சிறுகாலே மேற்கு நோக்கப் பார்த்திருந்து ஒத்தநிலத்திலேகீழ்மேலாக-எட்டுரேகையும்-தென்வடக்கு-ஐந்து ரேகையுமாகக்கீறில்-இருபத்தெட்டறையாம்-இவ்வறைகளில்-தென்கீழ்மூலையறையிலே அனுஷத்தைநிறுத்தி வலமாக-௰௭-நாள்- அனுஷம்-கேட்டை-மூலம்-பூராடம்-உத்திராடம்-அபிசித்து-திருவோணம்-அவிட்டம்-சதயம்-பூரட்டாதி-உத்திரட்டாதி-ரேவதி- அசுவனி- பரணி-முதல் நாளுமாகவெண்ணித் தென்மேலையறையிலே திருவாதிரையைநிறுத்தி-புனர்பூசம்-பூசம்-ஆயிலியம்- என்றெண்ணி- ஆயிலியத்துக்கு மேலையறையிலே-மகத்தைவைத்து-தெற்குநோக்கி-மகம்-பூரம்- உத்திரம்-அஸ்தம்-சித்திரை சோதி- விசாகமென்றெண்ணி- இருபத்தெட்டுநாளும்-இருபத்தெட்டறையிலும் நிறுத்துவது-எ-று. (௩௨௨)

விட்டமூன்மாலைவாயுவாறல்மெய்மகம்பின்மாலை......*
றெட்டிராநிறுத்திமுன்போல்நினைத்திருசக்கரத்தால் [ம்
வட்டம்நான்காலந்தோறுந்திசைமாறிமதிமேற்சென்று
உட்டிணம்வைத்துச்சோமனுறைவிடம்நிறைநீருண்டாம்

(இ-ள்) இராமுன்போதுகீறினாற்போலே கிழக்குநோக்கிப்பார்த்திருந்து மேலைமூலையறையில்-கார்த்திகையைவைத்து- முன்போல

வெண்ணிக்காண்பது இப்படி நாலுபோதும் எண்ணினால் சந்திரனெ
ன்றும்பேராம்-அப்போது அச்சந்திரனிலே உதிக்கிறராசியைச் சா
திரவுபயமென்றறிந்து-அவ்வகையில்- தானமாக்கியமுழுநாட்களில்
ஒன்றைநிறுத்தி அன்று சந்திரனின்ற நாளளவுமெண்ணுவது- பெரு
நீரொன்றறிவது- இராகுநின்றநிலையளவு முன்புபோலெண்ணப் பழ
ங்கிணறென்றறிவது- வெள்ளிநின்ற அறையில்பின்பே அபிசித்துநி
றுத்துவது-வெள்ளிநீருண்டென்பது - வியாழம்நின்ற அறையளவு
மெண்ணப்பூஞ்சலலியமென்றறிவது-உத்திராடத்தின்பின்பே அபி
சித்துவைவைத்துமுன்புசொன்னவனிடமுதலனைத்துநாட்களெல்லா
ம் இரண்டேயணாக்கால்நாழிகையிற்பேறுமென்றறிவது-எ-று(௬௬௧)

உண்டவப்போதளந்தவடியினலேழுகூட்டித் ... ... *
தண்டுபத்தாறுக்கிந்தாற்றலையோடென்பிட்டியோடுங்... ...*
கண்கள்ளிதெய்வஞ்சாம்பற்கரியவன்சாலிபொன்கல் ... ...*
மண்டுசெங்கொம்புநாய்சாலனற்குதம்விழியாய்த்தோன்றும் *

(இ-ள்)பூசல்லியம்வினவினபோது அடியளந்துஅவ்வடியைநிறுத்தி
அதன்மேல்-உ௰அ-கூட்டி-௰௬-க்கீய்ந்தால் ஈயாதசேடம் ஒன்றாகில்-
தலை-எலும்பு-உ-ஆகில்-எலும்பு-௩-ஆகில்-எறும்பு-௪-ஓடு-௫-விறகு-
௬-தெய்வங்கள்-௭-சாம்பல்-௮- கரி-௯-பிணம்- ௰-தானியம்-௰௧-பொ
ன்-௰௨-கல்லு-௰௩-தவளை-௰௪-கொம்பு-௰௫-எலும்பு- ௰௬-சாலோடு-
இவ்வகையால்-௰௬-பொருளுமறிவது-முன்புகிணீற்குச்சொன்ன சக்
கிரத்தால் பூச்சல்லியமின்ன விடத்திலே கிடக்குதென்றும் முன்புகி
ணீற்குச்சொன்ன கோட்களின் - கதிர்க்களாலே இன்னதனையாழத்தி
லேகிடக்குதென்றுஞ்சொல்லுவது-எ-று. (௬௬௨)

## சந்திரகெதி.

தோன்றியமேடமாதிமீன்முடிவாகச்சோமன் ... ... ...*
என்றபேர்க்கிருப்புப்பூசலெழின்மறைபயிற்றற்பிள்ளை ...*
பூன்றுநோய்வெறுப்பகேடுபசிபிழைப்புறக்கமூணு... ...*
மான்றவழ்மதிகுணத்தான்வரும்பலர்பலங்கழுத்தே... ...*

(இ-ள்) மேஷசந்திரன்- நடைரிஷபம்- இருப்பு- மிதுனம்-பூசல்-
கடகம்-வேதமோதல் - சிங்கம் பிள்ளை- கன்னிநோய்- துலாம்கரிப்பு-
வெறுப்பு- விருச்சிகம்கேடு-தனுசுபட்டினி- மகரம் அனுபோகம்-

கும்பம்உறக்கம்-மீனம்உளணி- இப்படியாகவொருவன்·காரியம்வினவினபோது·சந்திரகெதியைப்பார்த்துபலாபலஞ்சொல்லுவது- ()

## சூரியன்அங்சகுணம்.

வழுத்திறம்படாவஞ்சான்வயிறுடன்பெரியகோபி ... ...*
விழித்திரம்நிறமுஞ்செய்யன்மெய்ம்மையன்றூய்மைநெஞ்ச *
னழிப்பருமோகிசெல்வனையமோவாயதன்பன் ... ... *
பழிப்பிலான்சுருண்டுநீண்டபங்கயன்பருதிக்காலான் ... ...*

(இ-ள்) ஆதித்தன்-அங்சத்தான் குணம்-யாத்திரைபோகவேண்டியிருப்பன்-அஞ்சான்-வயிறுஞ்சரீரமும்பெரியன்-கோபி- கண்ணும்-நிறமுஞ்சிவப்பு-சத்தியனவன்-உத்தமன்-தேசுடையவன்-மோகி- சீமான்-ஐயமோவாயன்-தேகி-மயிர்சுருண்டுநீண்டிருப்பது·எ-று. (௱௯௪)

## சந்திரனங்சகுணம்.

சுந்தினன்முகத்தில்வங்கள்கண்சிறிதயமோவாயன் ...*
சேர்ந்தவற்கன்பன்மந்தன்சென்னெறிகுறளான்செல்வன்
வாய்ந்தமாநிறவன்வார்த்தைநிலையிலான்மயிர்நீண்டையன்
தோய்ந்திடுநீரிற்றங்குஞ்சாமனங்கிஷித்திருமேன ... *

(இ-ள்) சந்திரன்குணம்-அழகியன்-முகத்திலேவங்கள்-கண்சிறியன்-ஐயமோவாயன்- அடுத்தவற்குச்சிநேகி-மந்தன்-சென்னெறியாயிருப்பன்-குறளன்-ஸ்ரீமான்-மாநிறவன்- வார்த்தைநிலையிலான்- நீண்டமயிரான்-எப்போதுங்குளிக்குமபிஷ்மத்தன்-எ-று. (௱௯௫)

## செவ்வாயங்சகுணம்.

அஞ்சொலான்கடுஞ்சொலாளனும்பொருளற்பன்கோபி ... *
வெஞ்சமர்விரும்புஞ்செய்யன்மெய்யன்மேதினிதிருந்தும் *
வஞ்சகனுலோபிசற்றாண்மறுவுடைமுதுகன்றேசன் ... ...*
விஞ்சியுகிலுசிவீரன்வெவ்வியன்செவ்வாய்க்காலன் ... ...*

(இ-ள்) செவ்வாயின்குணம்-அஞ்சான்-கடுஞ்சொல்லன்- ஜீவனமில்லான்-கோபி-பூசல்விரும்பும்- நிறஞ்சிவப்பு- பூமிதிருந்தும் வஞ்சகன்-

லோபி-சற்றூண் முதுகிலே மறுவுடையன்-பிரகாசி-எப்போதுந் துதிக்கப்படும்-வீரன்-செவ்வியன் எ-று. (௬௬)

## புதனங்சகுணம்.

செவ்வியன் றியாகிமோகிதெய்வங்கள்பேணுமெய்யன் ✻
கைவரும்பாடல்ஞானிசாளேபங்கருதுஞ்சூரன்... ...✻
மெய்வருதருமன்றேசன்பிரியன்மேம்படுகுணத்தான் ✻
மைவருங்குழலாய்நன்றிமறந்திடான்மாலிகாலன்......✻

(இ-ள்)புதனங்சத்தான்குணம்- செவ்வியன்சத்தியனுவன்- மோகி-தியாகி தெய்வங்கள்பேணும்- பாடவல்லன்- ஞானி-காளேயங்காரன்-சூரன்- தனவான் தேசுடையன்-மேம்படுகுணத்தான்-நன்றிமறவான்

## வியாழனங்சகுணம்.

மாதவன்சுத்தன்றேசன்மந்திரிதருமன்செல்வன்... ...✻
காதலர்பெறுவனீண்டகல்வியன்சிவந்தகண்ணன் ... ✻
நீதியனினியசொல்லனீண்டமோவாயனையன் ... ...✻
மேதகுமறிவன்பல்காற்குளித்திடும்வியாழக்காலன் ...✻

(இ-ள்)வியாழனங்சத்தான் குணம்- தவசுடையன்- மந்திரி-தனவான் நிறைபுத்திரசந்தானம்- மிகவும்விபான்- சிவந்தகண்ணன்- நீதியன்- இனியசொல்லன் சுகன்- நீண்டமோவாயன்- மிக்க அறிவுடையன்- எப்போதுங்குளிக்கும்-எ-று. (௬௮)

## வெள்ளியங்சகுணம்.

காதலன்வீரன்சூரன்கானமுங்கருதுந்தேசம் ... ...✻
ஓதிமெய்வடிவன்றிண்ணனுத்தமனெழிபாச்செல்வன் ✻
பாதகமில்லாதநெஞ்சன்பண்டிதன்பருத்தமெய்யன் ...✻
போதவான்செய்தநன்றிமறந்திடான்புகரின்காலன்...✻

(இ-ள்)வெள்ளியங்சத்தான் குணம்- சிநேகி- வீரன்- மகா சூரன்-கியானமுடையவன்- ஓதும் அழகியன்-திண்ணியன்-உத்தமன் -தீர்

க்கஷேவினி சுத்ததர்மா- வித்துவான்-சரீரம் பெருத்திருப்பன்-பேர் காவான்- செய்நன்றி மறவான்-எ-று. (௫௫௯)

## சனியினலக்ஷணம்.

புகழிலான்பொய்யனஞ்சான்புறவடிபெரியனூண ... ... *
னிகழ்பெறுவயிறன்கள்ளனிருந்தவன்குறளன்றோளன்......*
அகழியனுடைபேணுமருப்பொருளற்பமீட்டுந் ... ... *
தகவிலன்கரியன்மெய்யன்சனியினங்கிசத்தான்றனே... ...*

(இ-ள்) சனியினங்சத்தான்குணம்- புகழ்விரும்பான்- பொய்சொல்லும் அஞ்சான்- கால்பெரியன் - மிகவும்போசனம் பண்ணும்வயிறு பெரியன்-கள்ளன். மகாதவசுடையன் - குறளன்-தோள்ளவியன்-உலோபி-யுடுக்குந்தரித்திரன்-தயையிலான்-நிறங்கறுப்பென்க-இந்த குணங்களினாலே யறியாதவர்களையும் இன்ன அங்சத்தானென்றும்-அர்த்தமெடுத்தானென்றும்-கொண்டுபோனானையுங்காரியங்கொள்ளப் போவானையுங் குலவகையாலறிந்துசொல்லுவது-எ-று. (௫௬௰)

## கோசரங்கிரகவேதை.

ஆன்றபதினொன்றுமூன்றினைந்தாறு ... ... ... ...*
மருக்கன்மதியான்றமூன்றுமேழ்பத்தோ... ...*
டென்றபதினொன்றாவுசனிசெய்மூன்றே...... ... *
விருமூன்றேபத்தொன்றுமாவிரண்டுநான்கு... ...*
மூன்றிருவேட்டினைந்துமீனைந்தோடொன்று [ரண்டா
மொழிர்திடுபொன்பதினொன்றொன்பானேழைந்தி
மான்றபுகர்பன்னொன்றீராறிரண்டெட்டொன்று ... *
வருதான்குமூன்றைந்தொன்பான்வருவர்வாழ்வே...*

(இ-ள்) ௰௩-௫-௰௯-ம்-ஆதித்தனல்லன்-௩-௫-௯-௭-௰-௰௧- சந்திரனல்லன்-௫-௯-௰௩ம்-இராகு-செவ்வாய்-சனி-நல்லன்-௨-௬-௯-௮-௰-௰௧-மிடம்-புதனல்லன்-௰௧-௯ ௭ ௫ ௨-மிடம்-வியாழம்னல்லன்-௰௧-௰௨-௨-௮-சென்மம்-௬-௫-௫-௯-மிடம்-வெள்ளி நல்லன்-எ-று. (௫௬௧)

## விபரீதவேதை.

வாய்ந்தகதிரோனேந்தொன்பானுலீராறு ... ...*
மதியைந்தொன்பானீராறிரண்டுநான்கெட்டா ... *
யாய்ந்தசனிசேயரவீராறொன்பானேந்தா... ... ...*
மாய்புதனேந்தொடுமூன்றொன்பானொன்றெட்டீரா*
றேய்ந்தகுருவிருநாலீரைந்துமூன்றுநான்கோ ... *
டீராறுபுகர்மூன்றுநேழைந்தெட்டீரைந்து ... *
மாய்ந்திடுமொன்றொன்பதுபத்தொன்றுமைந்து ...*
மாயிழையேகிரகவேதமாய்ந்துகொள்நீயடைவே *

(இ-ள்) கிரகவேதங்கொள்ளும்படி முன்புசொன்ன கோசரபலத்தில் ஆதித்தன்-௰௧-மிடத்திற்பலன்றருவது-௫-மிடம்-சுத்தியாகில்-௩-மிடத்திற்பலன்றருவது- ௯- மிடஞ்சுத்தியாகில்- ௰- மிடம் - பலன்றருவது- ௪ -மிடஞ்சுத்தியாகில்- ௬- மிடம் - பலன்றருவது- ௰௨-மிடஞ்சுத்தியாகில்- சந்திரன்முன்புசொன்ன- ௧- ௩- ௬- ௭- ௰- ௰௧-மிடம்- பலன்றரும்- ௫- ௯- ௰௨- ௨- ௪- ௮ - மிடஞ்சுத்தமாகிலென்றறிவது- இராகு- சனி- செவ்வாய்- முன்புசொன்ன- ௩- ௬- ௰௧-மிடம்பலன்றருவது- ௰௨- ௯- ௫- மிடஞ்சுத்தியாகில் பலன்றரும்-புதன்-௨-௪- ௬- ௮- ௰- ௰௧- மிடம்- பலன்றருவது- ௫- ௩- ௯- ௧-௮-௰௨-மிடஞ் சுத்தியாகிலென்றறிவது- வியாழம்- ௰௧- ௯- ௭- ௫- ௨-மிடம்-பலன்றருவது- ௮- ௰- ௩- ௰௨ - மிடஞ்சுத்தியாகிலென்றறிவது-வெள்ளி- ௰௧-மிடம்- ௰௨- ௨- ௮- ௧-௪-௩-௫-௯-மிடம்பலன்றருவது- ௩- ௭- ௫- ௮- ௰- ௧-௯- ௰௧- ௫- மிடஞ்சுத்தமாகிலென்றறிவது- இவ்வடைவேகிரகம்பார்த்துச்சொல்லுவது-எ-று. (௩௪௨)

கோள்வேதைவரிலுளாத்தகோசரங்கள்பலியாக்... ...*
கோசரக்கோள்கோள்வேதந்தன்னில்நிற்கக்... ...*
கோள்வேறுகோசரத்தேநிற்குமாகிற் ... ... *
கொடியவரும் நலங்கொடுப்பர்விபரீதமான ...*
நாளோராமுதலாகக்கோட்சதிர்சேர்முன்னே... ...*
நலந்தருவர்பொன்வெள்ளிதவிர்ப்பலன்றருவர் ...*
நீள்காரிமதிபின்னேநினைந்தபலன்றருவா ... ...*
ணின்றபுதன்பாம்புபலாபலமென்றுநேரோ... ...*

(இ-ள்) கிரகவேதம்வரில் கோசாரபலமிலாதொன்று முன்புசொன்னகோசாரக்கோட்கள் கிரகவேதநிலையிலே நிற்கப் பெத்தகோட்கள் கோசாரஸ்தானத்திலே நிற்பாரகில் தீதானகோட்களும்நன்மையைத்தருவரென்க-இவைகொள்ளும்படி சந்திரலக்கினத்துக்கு - ௬-மிடத்தில் ஆதித்தனிற்க-௰௧-மிடத்திலே கோட்களுண்டாகிலும்-௩-மிடத்தில்நிற்க-௰-மிடத்திற்கோள்களுண்டாகிலும் ௰௨-மிடத்துநிற்க-௫-மிடத்துக்கோளுண்டாகிலும் ஆதித்தன்பலன்றருமெல்பது - மற்றுள்ளவையுமிப்படி விபரீதம் பார்த்துக் கொள்ளுவது- இவை யெல்லாம் நடுவேபலன் றருவர்-சந்திரனுஞ்- சனியும்- பின்னேபலன்றருவர் - புதனும் - பாம்பும் - எப்போதும் பலன் றருவர் - எ-று. (௫௪௫)

## அங்கச்சனி.

என்றுந்தீயன்வாயோராண்டினியன்வலக்கைநாலாண்டு *
சென்றுநடத்துங்காலாறுந்தீமையிடக்கைநாலாண்டும்,ந
ன்றிதூறும்வயிறைந்தும்நயனமிரண்டுத்தனமுண்டாங்,
கன்றும்புயங்களிரண்டுமுடிகவிக்குந்தலைமூன்றுடன்காரி

(இ-ள்) வாயில்நிற்குமோராண்டுந் தீமையைச் செய்யும் - வலக்கையில் நிற்கும்நாலாண்டும்- அர்த்தமுண்டாம் - காலில்நிற்குமாறுண்டும் யாத்திரையுண்டாக்கும்- இடக்கையில்நிற்கும் நாலாண்டுங்காரியசேதமுண்டாம் - வயிற்றில் நிற்கும் ஐந்தாண்டும்ஊணுண்டாகும்-கண்ணில் நிற்குமிரண்டும் தனலாப முண்டாம்- புஜத்தில் நிற்குமிரண்டும் வியாதியுண்டாம் - தலையில்நிற்கு மூவாண்டும் அபிஷேகமுண்டாகும் இராகுகேதுமிவ்வகை-எ-று. (௫௪௪)

## அங்கச்சூரியன்.

காரார்குழலாய்தலைமூன்றுமரசாக்கல்விவாய்மூன்றுந் ... *
சோர்வயிறைந்திடமுண்ணுஞ்செம்பொன்றேயுங்கைபெட்டும்
பாரோழ்நடத்துங்காலெட்டும்பகலோனின்றூற்பிறந்திடுநாள் *
நேரோதொட்டுக்கோள்நின்றநிலைமீறெண்ணிநிகழ்த்தியிடே *

(இ-ள்) தலையில் நிற்கு மூவாண்டும் இராச்சியம்பண்ணும்- வாயில்நிற்குமூவாண்டும் வித்தைகற்கும் - வயிற்றில்நிற்கும் ஐயா

ண்டும் விருந்தோடுண்ணும் - வலக்கைநிற்கு மெட்டாண்டும் தனலாபமுண்டாம்-காலில்நிற்கு மெட்டாண்டும் வழிநடக்கும் - இவையெல்லாம் பிறந்தநாட்கொண்டு- கோள் நின்றநாளளவு மெண்ணிப் பலன்சொல்லுவது-எ-று. (௫௪௫)

## அங்கச்செவ்வாய்.

இடர்வாய்மூன் றும்வலக்கணிரண் டின்பமிடக்கணிரண்டழிவா ...*
மிடரோர்மூன் றுங்கைமூன் றுமேம்பாடிடக்கை மூன்று துயர், மட
வாய்வலப்பாலொன் றுநலமிடமொன் றழிவுவயிறைந்தூண்,நடைபா
ர்வலக்காலிரண்டுநலம்நடத்துமிடக்காலிரண்டுயாத்திரைசெய்-*

(இ-ள்) வாயில்நிற்கு மூன்றுவருஷமூந் துக்கம்-வலக்கண்ணிற்கு மிரண்டுமின்பம்-இடக்கணிரண்டும் அழிவாம் கழுத்திலுங்கையிலு மூன்றும்மேம் பாடுண்டாம் - இடக்கையில்மூன் றுந் துக்கம்- வலப் பாலொன்றும் நன்மை-இடப்பாலொன் றுமழிவுண்டாம்- வயிற்றில் ஐந்துமூ ணுண்டாம்-வலக்காலிரண்டும்நலமுண்டாம்-இடக்காலிரண்டும் யாத்திரையுண்டாம்-எ-று. (௫௪௬)

## அங்கபுதன் - வியாழம் - வெள்ளி.

சேதமாக்குந்தலைமூன் றுஞ்செல்வமாக்குங்கழுத்துமூன்... *
றேதுமூன் றுவலக்கைமூன் றுள்ளத்திடராமிடக்கைமூன்று *
மாதிவயிற்றிலைந்தாக்கமரையிலிரண்டுமழிவுண்டாம்... ...*
பாதமெட்டுநடனுண்டாம்பைம்பொன்புந்திபுகர்நின்றால் *

(இ-ள்) தலையில்நிற்கு மூவாண்டும் அர்த்தநாசம்- கழுத்தில் நிற்குமூவாண்டும் ஸ்ரீயுண்டாம்-வலக்கையில் நிற்குமூவாண்டும் நன்மையுண்டாம்-இடக்கையில்நிற்கு மூவாண்டுமேநோ துக்கம் - வயிற்றில்நிற்கும் ஐயாண்டும் ஆக்கமுண்டாம் - அரையில்நிற்குமூவாண்டும் அழிவுண்டாம் - காலில் நிற்கு மெட்டாண்டும் ஸ்ரீயுண்டாம்- இப்படி வியாழம் - வெள்ளி - புதன் - இம்மூவர்க்கு மிப்படியறிவது- எ-று. (௫௪௭)

## காலச்சக்கரவாண்டும் பலனும்.

நின்றபருதியையாண்டுநிலாமூவேழுஞ்சேயேழு,மென்
றுவேலைதயொன்பதும்பொன் பத்தும்வெள்ளியீரெட்டு

மன்றுங்காரிநான்குந்தம்மாட்சியொன்றிலடுத்துண்பர்;
நன்றியோரையொன்பதுகால்நாளுமிரண்டோலாமே

(இ-ள்) காலச்சக்கிரங்கொள்ளும்படி - ஆதித்தனுக்காண்டு-௫-திங்கள்-௨௰௧- செவ்வாய்- ௭- புதன்- ௯- வியாழம்- ௰- வெள்ளி-௰௬- சனி - ௪ - இவ்வகையால் - தந்தாமாட்சியிலே தந்தாம் உண்பர்- இராசி யென்பது - ௯ - காலென்றும் - உவ - நாளென்றும் அறிந்துபார்ப்பது-எ-று- (௫௪௮)

காலையறிந்தாற்கால்சேருமிராசிக்காலொன்பதுங்கதிரு
சாலவொருவனுயுவாமதில்மூக்ரேரைதன்னுணே...[ஞ்
பேலுமூவைந்துக்கேய்ந்தாலிவோற்கடிகைக்கிழாகும்*
வாலிதாங்காலினிற்சென்றகடிகைகண்டுமறிந்துலாயே.

(இ-ள்) இன்னநாளின்னதனை யாங்காலென்றறிந்து - அக்கால்கிடக்குமிராசியொன்பதிலு மூண்ணுங் கோள்களின் கதிர் அவனுக்குப்பரமாயு வென்றறிவது- இதின் முதலிராசியுண்ணுங்கோட்களினுண்டைப் பதினைந்துக்கேய்ந்தால் - ஈய்ந்த - யீவுநாழிகைக்கு - இழவென்றறிவது - அக்காலிற்சென்றநாழிகைக்குஆண்டைக்கழித்துநின்ற ஆண்டு இன்னதனை - யென்றறிந்து ஆண்டொன்றுக்கு- ஐந்தேகாலாக நாளுங்கழித்து நின்றதொகை யொருவனுக்குச்சொல்லும்பரமாயு - எ-று. (௫௪௯)

## சவ்வியச்சக்கரம்.

மதியேரியாழ்நண்டரிபெண்கோள்வளர்தேள்தனுமாமுதற்காலுண்.
சுறவேகால்மீன்றேள்கோல்பெண் துயர்நண்டரியாழிருகாலுண் *
குறியேறேடுமீன்சால்மான்குறிவிற்கொறியேறியாழ்மூக்கால் ...*
சிலைறசேர்நண்டுபுலிபெண்கால்தேள்விற்சுறுச்சால்செல்பிற்கால்*

(இ-ள்) அசுபதி - முதற்காலுக்குச்சக்கரம் - மேஷம் - ரிஷபம்- மிதுனம்- கடகம்- சிங்கம்- கன்னி- துலாம்- விருச்சிகம் - தனுசு- இவ்வொன்பதுமடைவே முதற்கால்- செவ்வாயுண்ணும்- உ- ங- கால்- மகரம்-கும்பம்-மீனம்-விருச்சிகம்-துலாம்- கன்னி- கடகம்- சிங்கம்- மிதுனம்- இவ்வொன்பது மூண்ணும்- ரு- ங- கால்-ரிஷபம்- மேஷம்- மீனம் - கும்பம் - மகரம் - தனுசு - மேடம்-

ரிஷபம் - மிதுனமும் - ௪ - ங் - கால் - கடகம் - சிங்கம் - கன்னி - துலாம் - விருச்சிகம் - தனுசு - மகரம் - கும்பம் - மீனம் - உண்ணும் - எ-று. (௫௰)

காற்தேட்கோற்பெண்குளிரரியாழேருடேமீன்சங்குற்சால் ...*
சாலேமான்விற்கொறியெருதியாழ்தரு நண்டரிபெண்குழலிருகால்,
கோல்தேள்இலைமான்குடமீன்றேள்கோல்பெண்முக்காற்குளிரரியா
மால்சேய்க்கொறிமீன்குடமான்விற்பிற்காலாரல்மாவெரக்கும் [ம்

(இ-ள்) பரணிமுதற்கால்-விருச்சிகம் -துலாம்-கன்னி- கடகம்-சிம்பம்- மிதுனம்-ரிஷபம்- மேஷம்- இவ்வொன்பதிராசியுமுண்ணும்- கும்பம்- மகரம்- தனுசு- மேஷம்- ரிஷபம்- மிதுனம்- கடகம்-சிம்பம்-கன்னி- இவையிரண்டாங்காலை யுண்ணும்- துலாம்- விருச்சிகம்- தனுசு- மகரம்- மீனம்-கன்னி- இவைமூன்றாங்காலை யுண்ணும்-கடகம்-சிம்பம்- மிதுனம்-ரிஷபம்- மேஷம்-மீனம்-கும்பம்- மகரம்-தனுசு- இவைநான்காங்காலையுண்ணும்-எ-று. (௫௰௧)

## அபசவ்வியச்சக்கரம்.

மாவிற்கருச்சால்மீன்கொறிசேவருதண்டரிநண்டுருள்முதற்கால் *
பூவிற்பெண்கோல்தேள்மீன்சால்பொய்மான்விற்றேள்துலையிருகா
காவிற்பெண்மானண்டரியாழ்சேதகர்விற்கேதுக்குடமுக்கால் [ல்
தூவிசுயல்மறிசேதண்டரியுங்குளிர்பெண்கோக்தேளாம்பிற்கால் *

(இ-ள்) ரோகணிமுதற்கால்- தனுசு- மகரம்- கும்பம்- மீனம்-மேஷம்- ரிஷபம்- மிதுனம்-சிங்கம்- கடகம்- இவையுண்ணும்- கன்னி- துலாம்- விருச்சிகம்- மீனம்- கும்பம்- மகரம்- தனசு- விருச்சிகம்- இவையிரண்டாங்காலையுண்ணும்- சிங்கம்- கடகம்- மிதுனம்- ரிஷபம்- மேஷம்- தனுசு- மகரம்- கும்பம்- இவைமூன்றாங்காலையுண்ணும்- மீனம்- மேஷம்- ரிஷபம்- மிதுனம்- சிங்கம்- கடகம் -கன்னி- துலாம்- விருச்சிகம்- இவைநான்காங்காலையுண்ணும்-எ-று.()

குளிர்மீன்கலைசால்மாவிற்றேள்துலைபெண்சிங்கங்குளிர்முற்கால் *
தளமார்த்தண்டுவிடைமறிவிற்கலைசால்மீன்கொறிசேயிருகால் ...*
துளையார்மிதுனப்புலிகுளிர்பெண்டுலைதேள்மீன்சால்கால்முக்கால்
வளையர்சிலைதேட்துலைமகள்மான்குளிரியாழ்குண்டைமறிநாற்கால்

(இ-ள்) மிருகசீரிடமுதற்கால்- மீனம்- கும்பம்- மகரம்- தனுசு- விருச்சிகம்- துலாம்- கன்னி- சிம்பம்- கடகம்- இவையொன்பதும் உண்ணும்- இரண்டாங்கால்-மிதுனம்-ரிஷபம்- மேஷம்-தனுசு-மகரம்- கும்பம்- ரிஷபம்-இவையுண்ணும் - மூன்றுங்கால்- மிதுனம்- சிம்பம்- கடகம்- கன்னி- துலாம்- விருச்சிகம்- மீனம்-கும்பம்- மகரம்- இவையுண்ணும்- நாங்காங்கால்- தனுசு-விருச்சிகம்- துலாம்- கன்னி- சிம்பம்-கடகம்- மிதுனம்-ரிஷபம்- மேஷம்- இவையொன்பதுமுண்ணும்-எ-று. (௫௩௫)

மதிமான்விழியாயாதிரையின்முதற்காலுரோகணிவருநாற்கால் ... *
சிறுமான்றலைமுற்காலொழித்துமுக்கால்திருவாதிரைமுக்கால் ... *
பெருமாமுதல்மூன்றவைவலநாட்பின்மூன்றிடநாட் பெரும்வலநா
விறவாவோரையுயிராதியுடலாமிடமூன்றுயிருடல்பின் ... ... *

(இ-ள்) திருவாதிரைமுதற்கால்- உரோகணி- நாலாங்காலொட்டினுத்போலேயொட்டுவது- மிருகசீரிஷம்- இரண்டாங்காலொட்டினுத்போலேயொட்டுவது- மிருகசீரிஷத்து மூன்றுங்காலொட்டினுற்போலே யொட்டுவது-திருவாதிரை நாலாங்காலுக்கு மிருகசீரிஷம் நாலாங்காலொட்டினுற்போலே யொட்டுவது-அசுவதிமுதல்மூன்று நாளும் வலவொட்டுநாள்ரோகணிமுதல்மூன்று நாளுமிட வொட்டு நாள்இப்படியேமும் மூன்றாக-உயக - நாளையுமொட்டிக்கொள்வது-

உடற்கோள்மதிமுன்வல்லொட்டுநேநந்தோள்முன்னிடவொட்டே *
ணிடக்கோள்தனுமேடத்தில்விழுமீன்றேட்பாயுமாவிணைப் ... *
பிடிக்கத்தத்தும்பெண்ணண்டிற்றத்தியரிபின்மேற்புறனு... ... *
மடுத்தபொழுதிக்கோளேனுயிர்போம்நற்கோளழிவுண்டாம் *

(இ-ள்) வல்லொட்டல்லாம்மேஷமுதலாகவுண்ணும்-தனுசில்நன்று மேஷத்திற்பாயும்மிதுனத்திற்றத்தும்- கன்னியில்நின்று கடகத்திற்றத்தும்- கடகத்தில்நின்று சிங்கத்திற்புறனும் இவைவந்துதித்தபோதுதீக்கோளேனுகில்மரணமென்றறிவது-நற்கோளேனுகில் வியாதியும்அர்த்தஹானியுமுண்டு-எ-று. (௫௩௬)

உண்டாமரசாலழிவுமுளேப்பமருக்கனூண்சேதுன், ... ... *
தண்டாவெதுப்புத்தீப்பாசெலிநூண்இறையும்வழக்காட்டுங் *

கண்டாருவருக்குமைந்தருடன்கல்விபுதனூண்கனகம்பொன் ✽
வண்டார்குழலார்மனைபுகுவர்மதியூண்வெள்ளிவாழ்வுண்டாம் ✽

(இ-ள்) ஆதித்தனூண்- அரசரால்விதனம்- இனைப்புபித்தமுமாம்- செவ்வாயூண்-சுரமும்-அக்கினிபயமுண்டாம்- சனியினூண்- சிறையும் வழக்குமுண்டாம்- புதனூண்வித்தையாப்பியாசமும் புத்திரருமுண்டாம்- வியாழனூண் அர்த்தலாபமிகவுமுண்டாம்- சந்திரனூண்விவாகமும்பரஸ்திரீ செத்தியுமுண்டாம் -வெள்ளியூண்- அயிஸ்வரியமுமுண்டாம்-இவ்வகையாற்பார்த்து நன்மை தீமை சொல்லுவது -எ-று.

வாழும்பரமாயுந்தனுக்குமன்னுமோரோர்கோளாண்டை... ✽
யாழின்சொல்லாயீந்ததனையாண்டுதோறுமாறியிட... ... ✽
வேழின்கோட்கும்பரித்துணுமிராசி யுடையான்முதலுன்னு
முழுத்துயர்தீக்கோளூண்சுடருநன்மைசுகந்தருங்கோள் [ள்

(இ-ள்) ஒருத்தருக்குச் சொல்லும்பரமாயு வறிந்து அதற்கோரோர் கோட்களூண்ணு மாண்டையீய்த்தால்- அந்தயீவு ஓராண்டைக்கூறும் அதன்படியிலேகோள்களுக்குமுன்பு சொன்ன வூண்கள்தோறும் மேற்றியிடப் பதித்தாலும் ஒருராசியிலோ ரிராசியுடையான் முதலாகவொன்பதுகோளும் பறிச்சுண்ணுமென்றறிவது தீக்கோளூண்ணும்போது வியாதியும் அர்த்த அழிவுமுண்டாம் நற்கோளூண்ணும்போது அர்த்தலாபங்கள்- உண்டாம்-எ-று. காலசக்கரமுற்றும்கூறின

மகாதிசை- ஆண்டும்- பலனும்.

கோதிலருக்கன்மதிசெவ்வாய்க்கொடியவராப்பொன்சனிபுந்தி ✽
கேதுவெள்ளியாரல்முதலேழுமன்பாமடைவடைவே ... ✽
யோதுமாண்டாரீரைந்தேழொருபத்தெட்டுப்பதினாறு ...✽
மீதுபத்தொன்பதுபதினேழ்மேவுமேழுமிருபதுமே...... ✽

(இ-ள்) ஞாயிறுமுதலேழுகோளும்- இராகுகேதுவும்- ஆகவொன்பதுகோளுமிவ்வடைவே- கார்த்திகைமுதலொன்பதும்- உத்திரமுதலொன்பதும்-உத்திராடமுதலொன்பதும்- இவ்வடைவேயுண்பார்கள்- ஆதித்தனுக்குஆண்டு-௬- சந்திரன்-௰- செவ்வாய்-௭-இராகு-௰௮- வியாழம்- ௰௬- சனி- ௰௯- புதன்-௰௭- கேது-௭-சுக்கிறன்-௨௰-எ-று

இருக்கும்பதிபோமிருநிதிபோமிடறுமிளைப்பும்பித்தமுமா *
மருக்கன்றிசையில்மதிபூணிலாளுநிதியுமடர்தையரும்...,... *
பெருக்கஞ்சேயூண்பகைபசிபோர்பிணிதீப்பாடுபேசிலரா *
மரிக்குமனைவிபோர்சிறையாமக்கள்சுற்றம்நிதியுமாம்... ...*

(இ-ள்) ஆதித்தன்திசையிலூர் விட்டுப்போய்- அர்த்தஹானியுண்டாம் இடறும்- இளைப்பும்- கோபமுற்றவர்விதனமு முண்டாம்- திங்கள்திசையில் அடியாரும்- பற்றுக்களும் அர்த்தலாபமும் ஸ்திரீயுமுண்டாம்- செவ்வாயில்பகையும் பசியும்- பூசலும்- வியாதியும்- அக்கினிபயமும் உண்டாம்- இராகுவில்மரணமும்ஸ்திரீமரணமும் யுத்தமும்- சிறைபந்த மரணமும் அர்த்தஹானியு முண்டாம்-எ-று.

நிதியுந்தனமும்பரிகளிறும்நிகழுங்குருவிற்றிசைசனிமேல் *
பதியும்பொருளுமடியாரும்பாழாய்ப்பசிநோய்பகையுண்டா *
மதியும்பெரியகல்விகளுமைந்தர்தானும்வரும்புதனூண்... *
சதியும்பிணியுஞ்சாவுமர்த்தனமும்புவியுந்தரும்புகர்தான் *

(இ-ள்) வியாழதிசையில் -அர்த்தலாபமும்- வாகனமும்- ஆசர்கள்நோக்குமுண்டாம்- சனிதிசையில்- க்ஷேத்திரங்களும்- அர்த்தமும் அடியாரும் - கன்றுகாலியும் போய்- பசியும்- பகையும்-தேசாந்தரப் பெருக்குமுண்டாம்-புதன்றிசையில்-அறிவும்- கல்வியும்-புத்திரருமுண்டாம்-கேதுதிசையில்-பிணியும்-சாவு-முண்டாம்-சுக்கிரதிசையில் தனமும்-பூமிலாபமும்-உண்டாம்-எ-று. (௫௯௰)

## அந்தரதிசைகொள்ளும்படி.

புகலுந்திசையிலோரொருகோட்பொருந்துமாண்டைமுற்றித்த...*
தொகையுங்கோராண்டதற்குள்ளநாளென்றறிந்துசோராமல் ... *
மிகவுமுடையான்முதலாகவடைவேவிரித்தவாண்டுதொறும் ... *
பகருமத்தத்திசையூணும்பாலுந்தேனும்போன்மொழியாய் ... *

(இ-ள்) அந்தரத் திசைகொள்ளும்படி- மகாதிசையுண்ணுங் கோட்களில் -ஒருகோளுண்ணு மாண்டின்-நாள்தனை யறிந்து அதனைமுற்றிக்கூடிஓராண்டுக்குண்ணக்கடவநாளாம்- இவ்வகையே ஆண்டுதோறும்-நாளையேற்றிஉடையவன்முதலாகவூட்டுவது- இவையூட்டும்படி ஆதித்தனுண்ணுமாண்டு-௬-உண்டாம்- இதனையோராண்டைக்குநாளா

கமெகித்து இதனை-௬-ல் பெருக்க-௱அ-நாளாம்- ஆதலால் ஆதித்தன்றி
சையில்-ஆதித்தனுக்கு-௱அ-நாளென்பது- மற்றுள்ள துமிவ்வகையே
யாண்டின் விழுக்காடு கூட்டிப் பெருக்கிக்கொள்ளுவது-எ-று. (௫௬௧)

## சூரியதிசைக்குப் புக்தியும் அந்திரதிசையும் பலனும்.

ஆய்கதிர்க்கிற் பீடைபொன்னூற்றாழிவா ... ...*
மணிமதிமேல்வெற்றிதனமாயிலைழபேரிடர்யோஞ் *
சேயதனிற்பொன்வெற்றிதேசமுண்டாந்...... ......*
தீயர்வேற்பகையிடர்நோய்பயஞ்செம்பொனழிவாந்
தூயகுருநோய்பீடைகலகமிடர்பாவஞ்... ... ... *
சுன்னரசர்பயமக்களழிவுபகைபுதனேல்... ... *
நோயிறைவராலிடுக்கண்கேதுபோக்கு... ... [பாம்
நோய்பொருள்போம்புகரிற்கண்டலைநோவுவெதுப்

(இ-ள்) ஆதித்தன் திசையிலாதித்தனுன் னுநாள்-௱அ-க்கு-பலன் பொருள்-உற்றாரழிவு-சந்திரனுள்-௱அ௰-க்கு-வெற்றி-தனம்-ஸ்ரீபேறு-காரியலாபம்-வெற்றியுண்டாம்-செவ்வாய்நாள்-௱உ௬-க்கு- இராஜாக்களால் அர்த்தலாபம்-தேசம்பெறும்-வெற்றியுண்டாம்- இராகுவினாள்-௬உ௪க்கு- பகைதனக்கிடர்-வியாதி அர்த்தஹானி-பயம்- வியாழம்-நாள்-உ௮அ-க்கு-வியாதி-பீடை-கலகம்-இடர்-தனம்-விரோதமுண்டாம்-சனிபூவநாள்-௬சஉ௰-இராஜபயம்-புத்திரநாசம்-சத்துருக்களுண்டாம்- புதனுன்நாள்-௬௱௬௰- சரீரவாதை- வயிறுநோவு-குட்டம்-பிரபுக்களால்விசனம்-கேதுவுன்நாள்-௱உ௬௰-தேசாந்திரம்-க்ஷபவியாதி-காணியுண்டாம்-வெள்ளியூன்நாள்-௬௬ய௰- தலைநோவு-வெதுப்புண்டாம்-எ-று. (௫௬௨)

## சந்திரதிசைக்குப் புக்தியும் பலனும்.

ஆன்றமதிதனின்மதிபம்பெண்டீர்மக்க... ... ... *
ளாடையணிசெய்பித்தங்களவுபகையிடர்தீ... ... *
யூன்றரவுபகைமிடிபோக்குற்றார்பொன்னிழவா... ...*
மூயர்குருபொன்பரியானைபசுக்கலவியுளவா ... *
மென்றசனிமனமிடிநோயிடர்மனையாள்மரண.. ...*
மெழின்மேனைதவந்தானமாடையணிஞானங் ... *

வருஞ்சகாண்டிரண்டாய்வைத்துமேலறுபதுக்கேற் ... *
றிருந்தகீழப்படியூமேழாற்பெருக்கிக்கண்ணைகாலீய்ந்தோன்
பொருந்துவித்துள்ளேதேவற்கேற்றதுகண்மேற்கூட்டி... *
இருந்தயன்னிரண்டாற்றுக்கிமுன்னதற்கேயமாதம் ... ... . *

(இ-ள்) சகாணுக்குச்சென்றவாண்டை இரண்டுபடியாகவைத்து-மேலிற்படியை-கூய-ல்-தரித்து- நின்றசேஷமதிந்த கீழிற்படியை-உக-ல்-பெருக்கி-அதன்மேலே-கண்காலீய்ந்தோனென்றகூட்டி யுள்ளே தேவனெனுங் கருவியாற்றரித்துப் பெற்றபலமே- மாதம்- எ-று.

கேபாதமுப்பான்மாறியிதற்கேற்றதியதிபின்னு ... *
மீயாததறுபாற்றுக்கிமுன்னதற்கேற்றநாடி ... ... *
யோயாமலிருபதாண்டுமூத்தமம்பின்னுலைந்து ... *
மேயாமத்திமம்பின்றீதாமிருபதும்விளங்குங்காலம் *

(இ-ள்) ஈயார்தசேடமும்-கூய-ல்-பெருக்கி- மூன்பில்கருவியால்தரித்துப் பெற்றபலம் தியதியாம்-ஈயாதசேடம்- கூய-ல்-பெருக்கி-மூன்பில்கருவியால் தரித்துப்பெற்ற-பலம்-நாழிகை- என்றறிவது முன்பினின்மேலிபபடி இருபதாண்டுத்தமம் - விம்சதியென்றறிவது நாற்பதுக்குள்மத்திமம்-விம்சதியென்றறிவது - அறுபதுக்குள்ளாகில்-தன்மம்-விம்சதியென்றறிவது-இப்படி யிருபதிருபதாக்கழித்து மேல்நின்றவையாண்டாகவும்-கீழ்நின்றவை-மாதமும்-தியதியும்- நாழிகையுமென்றறிவது-இன்னவாண்டில்- இன்னமாதத்தில்- இன்னதியதியில்-இன்னநாழிகையில்-விம்சதி- புகுதுமென்றறிவது-எ-று.()

வாக்கியம்பிறக்கும்வகை.

விளங்கியவாக்கியத்தென்விகலையோர்முப்பத்தைந்தும்... *
வளங்கலைபத்தும்பாகைபதின்மூன்றும்வைத்துமுன்னில்... *
உளங்கொள்வாக்கியத்தைப்பண்ணிலொன்றுடுதாக்கிரண்டே
விளங்கொடியிரண்டேலேற்றமற்றுமிவ்வகையாலேற்றே *

(இ-ள்) வாக்கியம்பிறக்கும்படி-௩௫-விகலையும்-௰-கலையும்-௰௩-பாகையும்-வைத்துமுதல்வாக்கியம்காணவேண்டில் ஒன்றேடேயித்தை

கான்றாவுவஞ்சனைநாசமழிவுபித்தம்... ... ... *
கடிபவெள்ளிகன்னியர்பொன்கதிர்புகழ்பேரழகாம் *

(இ-ள்) சந்திரன்றிசையில்-சந்திரனுண்நாள்-௩௱௳- பலன்-ஸ்ரீவெற்றி- புத்திரலாபம்-ஆடையாபரணம்-செவ்வாய்நாள்-௨௱௰௳ப்பித்தம்-களவு-பழி சரீரவியாதி-அக்கினிபயம்-அபசெயம்-இராகுநாள்-௫௱௪௰௳-சத்துருக்களுண்டாம்- தேசாந்திரம்- பந்துக்கள்நாசம்-அர்த்தநாசம்-மனமிடி-வியாழநாள்-௪௱௮௰௳-தனம்- யானை- குதிரை-கன்றுகாலி-வஸ்திராபரணம்-வித்தை-சனிநாள்-௫௱௭௰௳- மனோதுக்கம்-ஸ்ரீமரணம்-வியாதி-விசனம்-புதனுள்- ௫௱௰௳-தவம்- தானம்-வஸ்திராபரணம்-ஞானம்-கேதுவினுள்-௨௱௰௳- வஞ்சனை அர்த்தநாசம்-யாத்திரை-வெள்ளிநாள்-௬௱௳-ஸ்திரீகள்பேறு- இரத்தினபரணப்பேறு-ஆதித்தநாள்-௱௮௰௳-இராஜசேர்வை-பட்டப்பேர்-ஐஸ்வரியம்-வியாதிநாசம்-சத்துருநாசமுண்டாம்-எ-று. (௱௬௫)

## செவ்வாய்திசைக்குப் புக்தியும்- பலனும்·

போழலித்தேசயாசர்பயங்கலவுவாதம்... ... ... *
பிணிபாவுசிறைபகைதீப்ப்படையாம்பான்மரணம் *
சீரியபொன்றேவர்தெழுமறையோர்சேருந்... ... *
தீர்த்தயாத்திரைநல்லன்செற்றிவிற்புச்சனிதா ... *
னூரழிவுதிலசெம்பொனழிவுபுந்தி ... ... ... *
யொளிபாசர்புதல்வர்பேறுளகேதுநெருப்பி ... *
லார்படையிலிடிகளவுமழிபுகர்நேர்யாகு ... ... ...*
மாதித்தன்றன்மதியபழகுபெரிதாமே... ... ...*

(இ-ள்) செவ்வாய்திசையிற்-செவ்வாய்-நாள்-௱௪௰௭-க்குப்பலன் இராசபயம்-ஸ்ரீபயம்-பந்துபயம்-களவு-வாதபித்தம்-இராகுநாள்-௩௱௭௰௮௳ சிறைபகை-அக்கினிபயம்-வியாதி-அர்த்தஹானி-ஆயுதத்தாலாதல் விஷத்தாலாதல் மரணம்-வியாழநாள்-௩௱௩௰௬௳-தேவபக்தி-பிராணர்விசுவாசம்-தீர்த்தயாத்திரை-நல்லாரனுகூலம்-பிரபுவாம்- சனிநாள்-௩௱௯௰௯௳-ஊரழியும்-பந்துநாசம்- அர்த்தஹானி- புதனுள்- ௩௱௫௰௭௳-புத்திரலாபம்-இராஜசேர்வையுண்டாம்- கேதுநாள்- ௱௪௰௭௳- படையிலாதல்இடியிலாதல் நெருப்பிலாதல் கள்ளராலாதல்- மரணம்

வெள்ளிநாள்-௱௨௰௬-வியாதி-புஞ்சொல்லு-அர்த்தநாசம்-சத்துரு
களால் விசனம்-மிருகங்களாலழிவு-ஆதித்தநாள்-௱௨௯௬-தருமஞ்
செயயும்-தானம்பண்ணும்-சந்திரனுள்-௨௱௰க்கு-முத்துமணி-தா
னியம்-காசுபெருக்கவுண்டாம்-எ-று. (௬௯௪)

## இராகுதிசைக்குப் புக்தியும்-பலனும்.

பெரியரவிலரவுத்தார்பெண்டிர்புவிவிடப்போம் ... *
பேணுறுசுகமின்பத்தனமதுபெண்கூடுங் ... *
கரியசனிகலாம்வழக்குவாதபித்தங் ... ... ... *
கணக்கநெற்றேவரருள்காதலர்போமேவ... ... *
லெரிமானம்பகைவெறுப்பாம்வெள்ளிபுகழுற்று ... *
றிடர்தீருமகவுண்டாமிரவிபுவிகுளநீர் ... ... *
திருமதியிற்பெண்ணுற்றூர்சேர்வர்தனமழிவாஞ் ... *
சேய்கருவியாற்பாடுதீப்க்களவுபிணியே ... ...*

(இ-ள்) இராகுவின்திசையி லிராகுவண்ணும் நாள்-௯௱௭௨க்கு-பந்துநாசம்-ஸ்ரீநாசம்-வியாதிபயம்-பூமிவிட்டுப்போம்-வியாழம்நாள்-௮௱௬௪க்கு-சுகம்-இன்பம்-அர்த்தம்-ஸ்ரீகூட்டும்-சனிநாள்-௲௨௬க்கு-கலகம்-வழக்கு-வாதம்-பித்தம்-புதனுள்-௯௱௰௮க்கு-அர்த்தம்-தெய்வரக்ஷை-புத்திரலாபம்-கேதுவினுள்-௩௭௮க்கு-அக்கினிபயம்-மரணம்-பகைவெறுப்பு-அர்த்தஹானி-வெள்ளிநாள்-௲௮௰க்கு-உற்றூர்-வியாதியனுகூலம்-புத்திரருண்டாம்-ஆதித்தநாள்-௩௨௪க்கு-பூமிபேறு-குளம்-சத்துருயீனம்-சந்திரநாள்-௫௱௪௰க்கு-ஸ்ரீயனுகூலம்-பந்துக்கள்வரவு-கைப்பொருள்சிலவழியும்-செவ்வாய்நாள்-௩௭௮க்கு-கருவியாற்பாடு-அக்கினிபயம்-களவுபோம்-வியாதியுண்டாம்.

## வியாழதிசைக்குப் புக்தியும்-பலனும்.

கிளங்குருவாலரசாடையணிபூமியொழுக்கம்... ... *
காரிகருங்கலைவிடுக்கண்கணிகையர்கள்புதனேய்... *
விளங்கரசர்பெண்டிரார்கேடுகேது............. ... *
மிடிநடைபொன்கேடுமக்களிழவதுதான்வெள்ளி *
வளர்ந்தபகைபொருளழிவுமனைகேடுநடையாம்... ... *

வண்பருதிமன்னவரால்வாழ்வுமதிபகைநோ ... *
யளந்தறியாநிதிமாதர்சேய்சிரங்குசொறிநோ ... *
யரவுபிணிசிறைமானமகமிடம்விட்டழிவாம் ... ... *

(இ-ள்) வியாழதிசை-வியாழநாள்-எாகூய அக்கு-பலம்-இராசப்பிரியம்- வஸ்திராபரணம்- பூமி-பொருக்கமுண்டாம்- சனிநாள்-கூாயஉக்கு-களவு-இடுக்கண்-அழிவுண்டாம்-புதனாள்-அாயகூக்கு-அறிவும்-பட்டமும்-கல்வியும்-புத்திரரும்-தேவபூசையுமுண்டாம்- கேதுவிநாள்-ஙஙகூக்கு-களவும்-வியாதியும்-யாத்திரையும்-விஷபக்ஷணங்களுமுண்டாம்-வெள்ளிநாள்-கூகாயக்கு-அர்த்தமும்-பூமியும்-ஸ்ரீயும்-கன்றுகாலியும்-அடியாரும் பெருக்கவுண்டாம்- ஆதித்தநாள்-உஅஅக்கு-இராஜாக்களால்வாழ்வு-சுகம்-சத்துருபீனமுமுண்டெனக- சந்திரனாள்-சஅஅக்கு-சக்கிராபீனம்-ஸ்ரீகள்சேர்த்திஎனக- செவ்வாய்நாள்- ஙகூகூக்கு-சிரங்கு-சொறி-இளைப்பு-பலவிரோதம்-சுகம்- வியாதிஉண்டென்க- இராகுநாள்- அகூசக்கு-பிணி-சிறை-மரணம்-பூமிவிட்டுப்போம்-அழிவுண்டாம்-எ-று. (ஙகூகூ)

## சனிதிசைக்குப் புத்தியும்-பலனும்.

அழிவுசனிபெண்ணுக்குமக்கள்காலி ... ... ... *
யடியார்க்கேடருந்துயரம்புதனுறவுசுகம்பொன் ... *
கழலரவுபகைபெண்டீர்நோய்வாதபித்தஞ் ... ... *
சுங்கன்மடவாருறவுபொன்வெற்றிசுகமாம் ... ... *
எழுகதிர்நோய்பொருண்மக்களழிவுமதிவழக்காட் [ப்
டிடர்மரணம்பறிகொடுக்குஞ்செய்குட்டந்துயர்நோ
தழுதலைபாம்பிடர்சரய்கால்முறிவுபெண்டீர்வழக்குத் *
தருகுருவிலுறவடியார்தனந்தானமிடுமால் ... *

(இ-ள்) சனியின்றிசையில்-சனிபூண்நாள்- ஙஅயஈக்கு-பலன்-பெண்டீர்கெடும்-மக்கள்மரணம்-கன்றுகாலிகெடும்- அடியார்கேடு-துக்கம்-வியாதி-அபிமானம்-தேசாந்திரம்-வியசனம்-புதனாள்-கூகாகூக்கு உறவு-சுகம்-அர்த்தலாபம்-தனம்-தானம்பண்ணுமெனக-கேதுநாள்-ஙகூகூக்கு-பகை-ஸ்ரீநோவு-வாதபித்தம்-வெள்ளிநாள்-தூாசயக்கு-ஸ்ரீசேர்க்கை-வெற்றி-சுகம்-தோழமை-தானியமுண்டாமெனக-ஆதித்தனாள்-ஙஅஉக்கு-வியாதி-மக்களழிவு ஸ்ரீநோவு-பொருளழிவு-வியசன

மெனக-சந்திரநாள்-ருஎயக்கு-வழக்கு-விசனம்-ஸ்ரீமரணம்-பதிகொடுக்கும்-உற்றார்கேடு-செவ்வாய்நாள்-ஙகூக்கு-குட்டம்-துக்கம்-வியாதி-தழுதலை-தொழுநோயெனக-இராகுநாள்-தூஉயசுக்கு-இடர்-கைகாவழிவு-ஸ்ரீவழக்கு-அர்த்தஹானியெனக-வியாழம்நாள்-ஙாய உக்கு-உறவு-அடியார்-அர்த்தலாயம்-தானம்பண்ணும்-எ-று (௯௱௭)

புதன்றிசைக்குப் புக்கியும் பலனும்.

இடும்புதனிற்புதன்கல்விதனம்பூமிபூசை... ... ...*
யிருங்கேதுநடைபொன்போமிறைவர்பயம்புகரோல்
நடும்புகழ்பெண்பொன்பேறுகதிர்போகமிலாபம்... *
நாமேதிபவ்குட்டம்பகையரசாக்நடுக்கம்... ... *
கடுங்கனற்காமாலைதலைநோயிறைவரச்சம் ... ... *
கடிபாவுபெண்பொருட்டாற்பரதேசநடத்தும் .. *
நெடுங்குராவிலாசனுந்தூய்மையதுவின்பம் ... ... *
நீலன்மிடிநோய்சிறுகுவழக்காட்டுநிகழ்த்தும் .. *

(இ-ள்)புதன்றிசையிற்புதனுன்நாள்-அாசு௵க்கு-பலன்-கல்வி-அர்த்தம்-பூமி-தேவபூசை-வெற்றியெனக-கேதுநாள்-ஙாடுயெக்கு-பலன்-அர்த்தஹானி-இராஜபயம்-கிலேசம்-வியாதியெனக-வெள்ளிநாள்-தூஉயக்குபுகழ்-ஸ்ரீபேறு-அர்த்தலாபம்-சுகமுண்டெனக-ஞாயிறுநாள்-ஙாசுக்கு-போகலாபம்-நாடு-அர்த்தலாபம்-மனைபுண்டெனக-சந்திரநாள்-ருாயக்கு-ஷபவியாதி-குட்டம்-பகை-இராஜபயமெனக-செவ்வாய்நாள்-ஙாடுனக்கு-காமாலை-தலைநோவு-இராஜபயம்-துக்கமெனக-இராகுநாள்-ஙாயஅக்கு-ஸ்ரீபொருட்டாற்பரதேசம்போம்-அர்த்தஅழிவு-உற்றார்கேடெனக-வியாழநாள்-அாயசுக்கு-இராஜராஜன்-சுத்தம்-இன்பம்-அர்த்தலாபமெனக-சனிநாள்-ஙாசு௵க்கு-மிடி-சிறை-சிறுகு-வியாதி-வழக்காடல்-எ-று. (௯௱௮)

கேதுதிசைக்குப்புத்தியும் பலனும்.

நிகழ்கேதுவினிற்கேதுபெண்டிர்மக்களழிவாம் ...*
நெடும்புசரில்வழக்காட்டுகுடிகெடும்பெண்பெறுமா
திசழ்ந்திரில்நோய்வழக்குப்புதல்நீப்பாடுளதாந் ... [ந்
திங்கள்நிதிபோஞ்சிறுகாம்வெகுமாலஞ்செய்யி...*

விகழ்வரொதிரில்லாதர்பொன்னிழவாம்பாம்பா ...*
விடர்விடற்றீவெட்டறியார்செற்றியதுவியாழம் ...*
புகழ்பெறுவேதியர்செற்றிசனிவிளைவுழக்குப் ... [ல்
பொருளிழவுபுதன்மைந்தர்பொன்றுவர்மண்போமா

(இ-ள்) கேதுவின்றிசையிற் - கேதுவினாள்- ௱௪௰௭க்கு- பலன்- பெண்டீரும் மக்களும்பிரிந்துபோவர் - சத்துருக்களுண்டாமென்க - வெள்ளிநாள் - ௱௨௰௪க்கு - வழக்காட்டும் - குடிகேடும் - அழிவுண்டாமென்க- ஆதித்தனாள் - ௱௨௰௬க்கு - வெதுப்பு - வழக்காட்டு - புண் - அக்கினிபயம் - பலவிரோதம் - துக்கம்என்க - சந்திரனாள் ௨௱௰க்கு - தனம்பெற்றிழக்கும்- பிள்ளைபெற்றிழக்கும்- சுகமாயிருக்கையில் சிறுசாப்என்க - செவ்வாய்நாள் - ௱௪௰௭க்கு - தாமல்லாதார்கொடிக்கட்டுவார் - சீரவியாதி - பொருளழிவு- மனமிடியென்க - இராகுவினாள் - ௲௱௭அக்கு- இடறு-விஷம்- அக்கினிபயம்-வெட்டு-அபோயர்கள்செற்றி-வெதுப்புமரணமுண்டாமென்க-வியாழம்-நாள்-௲௯௰க்கு- புகழ்- அர்த்தலாபம்-பிராமணர் செற்றி-இராஜாக்கள்நோக்குண்டாமென்க-சனிநாள்- ௲௱௱க்கு- விளைவு-வழக்கு-அர்த்தஹானி- வாதபித்தம்- பரதேசம்போவதுமென்க-புதனாள்-௲௨௰௭க்கு-மக்களழிவு-மரணமுண்டாம்-பூமிவிட்டுப்போம்-பந்துக்கள்பயம்-வெதுப்பு-விசனமுமுண்டாம்-எ-று. (௲௱௱)

## சுக்கிரன்றிசைக்குப் புக்தியும்-பலனும்

மாண்புகரிற்புகழ்ஞானமாதர்மக்கள்நிதிபெண்... .. *
வளர்சதிர்கள்வயிறுநோய்மனமிடிவான்சிறையாங் *
கோண்புள்மதிபகைமிடிநோய்கொடுமைகுற்றங் ... *
குசன்போகங்கோதையர் மண்பொருள் பெறுநோய்
காண்பலாவிடர்நோய்காமாலைதலைநோவு......[காப்பில்
கனகன்மிகநல்லன்மந்தன்காவலராற்கருமம்... ...*
போண்புதனில்ராசதாற்பெண்பகையுமுறவாம் [மூவாம்
பொருள்கேதுக்கெலாமுறவுபொன் நிதிபொன்னி

(இ-ள்) வெள்ளிதிசையில்-வெள்ளிபூண்நாள்-௩௨௰க்குபலன்-ஞானம்-ஸ்திரீகூட்டம்-இனிபபெண்பெறும்- அர்த்தலாபம்- பூமிநிற்கும்-புகழுண்டாமென்க-ஆதித்தநாள்-௲௱௪க்கு-கண்ணோவு- வயிறு

நோவு-மனமிடி-தலைசிறைப்பென்க-சந்திரநாள்-கூாக்கு-பகைமிடி-வியாதி-கொடுமை-குற்றமுண்டாமென்க-செவ்வாய்நாள்-சஉயிக்கு-போகம்-ஸ்ரீபேறு-அர்த்தலாபம்-வாதபித்தமென்க-இராகுநாள்-௩அயிக்கு-நன்மை-ஸ்ரீகூட்டம்-இராஜாக்களால்பலம்-சத்துருநாசம்-தோழமை-உறவு-நினைத்தகாரியமெல்லாமுடியுமென்க-வியாழநாள்-கூாகூயிக்கு-வஸ்திராபரணம்-உத்தமஸ்திரீசெற்றி-இராசப்பிரியம்-மனப்பிரியம்-சவுந்தரியம்-சனிநாள்-௩௱சுயிக்கு-நன்மை-இராசராஜபலம்-சத்துருநாசம்-ஸ்திரீசெற்றி-பிரபுசெற்றி-புதனுள்-௩உயிக்கு-இராசராலாக்கம்-தனதானியசம்பத்து-சத்துருசங்காரம் - தோழமை-உறவு-நினைத்ததைமுடியும்-கேதுநாள்-சஉயிக்கு-கலகம்-பந்துநாசம்-அர்த்தஹானி-காரியச்சேதம்-குழப்பமுண்டாம்-அந்தராவந்தரதிசைகொள்ளும்படி - ஒருகோளுக்குண்ணக்கடவநாள் - முன்புசொன்னநாட்களை-ஈஉயிக்கீய்ந்து-ஓராண்டுக்குவருமவையறிந்து-ஆண்டுதோறும்-எத்திவரும்-நாளையறிந்து-முன்புபோல்-பலாபலஞ்சொல்லுவது-எ-று. (௲௭௰)

## யுகம்பிறக்கும்வகை.

பொன்னவனனைய்முன்னோர்பொருந்திய நவக்கோளென்ன
பன்னியவட நூலாற்செய்பாதிதன்பனுவற்றன்னை .... [ம்
மன்னியதமிழினுலேமண்ணுளோர்க்கறியும்வண்ண ... .. *
மன்னமேநடையினுய்கேளுனாசெய்வனழிவிலாமல் ... *

(இ-ள்) பிரகஸ்பதியேயனைய வித்துவான்களாற்செய்யப்பட்ட ஆரியத்தையெல்லாந் தமிழினுலேபுணாப்பன-எ-று. (௲௭௧)

அழிவிலாவிராசியீராறதனைவான்கலைபதாக்கி ... ... *
யொழிவிலாவெண்பாற்றுக்கிற்கிருதயுகமறுபாற்றுக்க *
வழிவிலாத்திரேதநாற்பான்வான்றுவாபரமதாகும் ... *
கழிவிலாவிருபாற்றுக்கக்கலியுகவருடமாமே ... ... *

(இ-ள்) இராசி பன்னிரண்டையும்வைத்து- ஒருராசிக்கு- ௩அாகலையாக-எல்லாத்தையும் கலையாக விறங்கவிட்டு - நின்றதொகையை-எண்பதாற்பெருக்கக்கிரேதாயுகமாம்-கூய-தாற்பெருக்கிற் றிரேதாயுகமாம்-சுய-ல்- பெருக்கத்துவாபரயுகமாம்- உய-ல்- பெருக்கக்கலியுகவருஷமாம்-எ-று. (௲௱௭௨)

ப்பெருக்குவது-இரண்டாம்வாக்கியம் காணவேண்டில்- இரண்டுடன் பெருக்குவது-முடிந்தவாக்கியங் காணவேண்டில்·உ௱சாயஅ-ல்-பெருக்குவது-எ-று· (௱௭௫)

## தாற்காலம்பிறக்க.

எற்றியதொகையைத்திட்டிவிகலையீரிருபத்தொன்று *
மேற்றியகலையோராறும்வைத்தமூன்போலத்தாக்கி ...*
மாற்றிதுதன்னைமூன்னமெண்ணினதொகையைவாங்கிக்
கூற்றவேல்விழியாய்சேடமேடாதிதுலாத்திற்கொள்ளே-

(இ-ள்) மூன்புபெருக்கினதொகையைத்தீட்டிவைத்து- சாயக-விகலையும்·கூ-கலையும்- மூன்புபோலேவைத்து- மூன்புசொன்னதைப்போலத்தாக்கி- இத்தொகையிலே - களைந்துநின்றசேஷம்- மேஷாதிதுலாதி- யென்றறிவது-எ-று· (௱௭௬)

கொண்டதிற்புகன்றகோடிகளைந்துசாக்குறித்தசாவு,...*
கண்டருமதியிற்கொண்டுகோச்சமதரித்துப்பெற்ற ... *
பண்டுமூன்றீட்டிவைத்தபடியின்மேடாதிவாங்கி ...*
மண்டலனிகழ்துலாதிகூட்டவாக்கியமதாமே ... ...*

(இ·ள்) மூன்புமேடாதி துலாதியபிர்த்து நின்ற தொகையிலே-பூசாகோடி களைந்து - சாக்கொள்வது - சந்திரசாவில் சாக்கொண்டு சமஸ்காரம்பண்ணி சாபலமுழுதும் - மூன்புதீட்டிவைத்து படியிலே மேஷாதி களைந்து துலாதி கூட்டுவது - இப்படிகளைந்துகூட்டநின்றதுவாக்கிய மென்றறிவது - மேஷாதி துலாதியையும் - பூசாகோடியும்-சாக்கொள்ளும் படியும் - பின் பேசிற ஹாசாரத்திலே கண்டுகொள்வது-எ-று. (௱௭௭)

## கலியுகம்பிறக்க·

வாக்கியத்தொகையைவைத்துப்பிழைத்ததிற்றொகையை
வாங்கி, நீக்கிநின்றதனுவ்வர்தொகையெண்ணிரோய்வ
ந்த,வாக்கியந்தன்னையீற்றில்வாக்கியந்தன்னில்வாங்கி,வா
க்கியம்பிழையாதென்றூர்மண்ணினில்வடித்தநூலோர் *

(இ-ள்) வாக்கியம் - ௨௱௪௰அ - வைத்து - பிழைதீர்க்கவேண்டும் வாக்கியம் இன்னதனையாம் வாக்கியமென்றறிந்து, முன்பிற்றொகையைக்களைந்து நின்றசேஷமெத்தனை யென்றறிந்து அத்தனையாம் வாக்கியத்தைக் களைந்து நின்றவலகு நினைத்த வாக்கியமென்று சொல்லுவது-எ-று. (௱௭அ)

வழுத்து நூற்றிருபாலாரும்வாக்கியங்காணவேண்டில் *
முடித்தவாக்கியத்திற்பாதி மொழிந்தனர்முடிவுகாணீர் *
துடித்தவாக்கியத்திலித்தில் முன்னில்வாக்கியத்திற்கூட்ட
த்,திடத்தவாக்கியமிராசிமண்டலங்குறையிற்சேர்த்தே *

(இ-ள்) ௱௨௪-ம்- வாக்கியங்காணவேண்டில்- முடிந்தவாக்கியத்திற்பாதியலகுகொள்வது-முடிந்தவாக்கியங் காணவேண்டில் முதல் வாக்கியத்தையும்- ௨௱௪௰௭-ம்- வாக்கியத்தையுங்கூட்டிக்காண்பது குறைந்தவையிற்றுக்கெல்லாம் இராசிமண்டலங் கூட்டிக்கொள்வது எ-று. (௱௭௯)

சேர்த்திபசகராண்டிற்கைசெய்தவில்லோனென்றே *
யேர்த்திடக்கலியாண்டித்தினாலோன்றனாகனீசன் ... *
சீர்த்தகுதாக்கிநெந்சேய்வெலியீபத்துன்றசேட ... *
மேற்பதினுலிற்றுக்கியதற்கேவிடுவநாடி... ... ... *

(இ-ள்) சகரவாண்டிலே கைசெய்த வில்லென்றுகூட்டக் கலிக்குச் சென்றவாண்டாமென்பது யாற்சேடம் பெருக்கியிற்றால் முன்னமேபெற்றது வரிசைசெய்து முன்களைந்த வாக்கியத்துடனே கூட்டசுத்ததினமென்பது தாற்காலிக்கும்படி அற்றைவாக்கியத்தைவைத்து முன்னுளவாக்கியத்தை யதிற்களைந்துநின்றசேஷத்தைக் காணவேண்டும் நாள்த்தொகையாற் பெருக்கி நின்றதுவிகலைமுன்னுமதையவரிசையாலொட்டு அதிலேமுன்புகளைந்த வாக்கியத்தையும் துருவத்தையுங்கூட்டி நாட்பார்த்தால் அப்போதுகண்டநாழிகையை அந்நாளிற்சென்ற நாழிகையென்றறிவது-எ-று. (௱அ௰)

சுத்திநக்ஷத்திரம்.

நாடனையெழிற்றள்ளவெள்ளிமுனையந்தவார ...... *
மோடியவரந்தன்னிலொருமூன்றுவாரமொட்டிட் *

பாடிமவிடுச்சொல்நாடிதனின்மூன்றுகடிகைபார்க்கக் *
கூடிதுருபமாகுங்கொண்டசங்கிராந்திக்கெல்லாம்... *

(இ-ள்) சுத்ததினத்தை- எ- வ்- கழித்துநின்றது- வெள்ளிமுதலா க அற்றைக்கிழமையென்றறிவது- அக்கிழமை அன்னதனையென்றறி ந்து அதிலேமூன்று கிழமைகழித்து- நின்ற தொகையைவேறேவை த்து முன்பு சொன்ன நாழிகையை இன்னதனையென்றறிந்து அதி லே மூன்று நாழிகையைக் கீழேவைத்துப்பார்க்க அவ்வாண்டைக்கு ச்-சங்கிரமதுருவம்-பார்ப்பது-எ-று. (௫௮௧)

நக்ஷத்திரமெடுக்க.

எல்லையில்தினத்தின்மன்னன்வீடுகூழ்ந்துளமெடுத்துப் *
பல்லியோனிக்கரித்தபலமமுதாகுஞ்சேடஞ்... ...*
செல்விகேளெறீர்மாவென்றரித்ததுவிருத்தஞ்சேடஞ் *
சொல்விடிலற்றைநாட்குத்தீதால்றுவாக்கியமதாமே *

(இ-ள்) து- சுத்ததினத்தைவைத்து - அதிலேசென்ற - மாதமும் தியதியுங் கூட்டி- இதிலேமன்னவன் வீடுகூழ்ந்துளமென்றுகளைந்து நின்றசேஷித்தைப்டல்லி யோனியென்றறிந்து- பெற்றபலம்- அமு தபலமென்று பேராம் நின்றசேஷிமெறிசுமாவென்றறிந்துப் பெற் றபலம் - விருத்தமென்றுபேராம் - நின்றசேஷம் - அற்றவாக்கி யமென்றறிவது-எ-று. (௫௮௨)

ஆமமுதையாற்றுன்றுள் பெருக்கிப்பின் னதனிற்செங் கோ,லேமுறவிருத்தத்தேற்றியிதிலமுதத்தைவாங்கிச் *
சேடனின்றதனிற்செய்யப் பொன்கொள்ளுமெனச்சி தைக்க,வாமமேகலையாய்ச்சேடம்வாக்கியத்துருவமாமே.

(இ-ள்) அமுதபலத்தை ஐயாற்றுன்றுளென்று ஸ்ரீங்காரமர்கவை த்துப்பெருக்கி - விருத்தபலத்தையும் - நீணிறசெங்கோ லென்று வைத்துப்பெருக்கி - இந்தவிருத்தப்பலத்திலே முற்பட்ட அமுதப லத்தைப்பெருக்கின தொகையைக்களைந்துநின்றதொகையிவ்வரிசை யாலொட்டி அதிலேசெயயப்பொன்னென்றுகளைந்து நின்றசேஷ ம்வாக்கியத்துருவமென்றறிவது - விருத்தபலமில்லையாகில்மண்டல த்திலேயமுத பலத்தைக்களைந்து முன்புபோற்செய்வது; இப்படிச்

சொல்லுகிறகருவிகளுக்கெல்லாம் - எழுத்துகொள்ளும்படி அம்முதல்அன்னீராகப்பத்தொன்பதுமறியும்படி முதலெழுத்துக்கள் ஒரலகுபெறும்-உ-ம்- எழுத்துக்களிரண்டு- ௩- ம் - எழுத்துக்கள்மூன்று- ச - ம் - எழுத்துக்கள் - நான்கு- ௫ - ம் - எழுத்துக்கள் - ஐந்து- ௬ - ம் - எழுத்துக்கள் - ஆறு எ - ம் - எழுத்துக்களேழு- அ-ம்- எழுத்துக்க ளெட்டு - ௯ - ம் - எழுத்துக்க ளென்பது - அலகும்- இப்படி யேற்றிக்கொள்ளுவது - வேறுள்ளவை யெல்லாஞ்சுன்னென்றுகொள்ளுவது எ-று.
(௱௮௩)

## அர்த்தாதிகம்.

திருவுதற்காலமொன்றுந் தோன்றும் வாக்கியத்தின்மூந்
நாள், மருவும்வாக்கியத்தைவாங்கிவந்தநாழிகையாற்சேட
ம், பெருகிடவிகலைமுன்னும்பெற்றதுவரிசைசெய்து *
திருவமூன்களைந்தவாக்கியத்துடனதுகூட்டச்சுத்தம் *

(இ-ள்) பெற்றபலம் - கலையாக வைத்து நின்ற சேஷம்- அர்த்தாதிகங் கூட்டி யல்லாதொழிவிற் போக்குவ தென்றறிவது-எ-று.
(௱௮௪)

சுத்தமாதினத்திற்சென்றமாதங்கள்திதிகூட்டி ...*
யத்தினமதனிற்சூழப்போத்தோந்தேற்குளமகத்தில் *
வைத்தெலாக்கோட்குங்கண்டமந்தன்முன்வாரங்கண்டு *
மொற்றிருபதினுற்றுக்கிமுக்கோடிநெல்லெல்நீமே *

(இ-ள்)சுத்ததினம்வைத்து அதிற்சென்ற மாதமுந்-திதியுங்கூட்டி இதிலேசூழப்போந்தோங் தேற்குளமென்று களைந்து நின்றசேஷமெல்லாக் கோட்களுக்குங் கண்டதினமென்று போரம் - இக்கண்டத்தைச் சனிமுதலாகக் கிழமைகண்டுகொள்க - ஆதித்தனையெண்ணும்படி கண்டதை - இருபதாற்பெருக்கிமுக்கோடிநெல்லென்றறிவது-எ-று.
(௱௮௫)

ஈபலமண்டவார்த்தமிருந்ததிராதிற்றுக்கி ... ...*
யாயமுன்கருவிக்கீந்தாலப்பலமிராசிசேடந்... ...*
தோயுமுப்பானிற்றுக்கிச்சொன்னதிற்கீபப்பாகை ...*
கூயதையறுயாற்றுக்கியதத்கீய்கக்கலையாங்கோதாய் ...*

(இ-ள்) மூன்பு முக்கோடி நெல்லுக்கீப்ந்த பலத்தனமோ மண்டலார்த்த மென்றறிவது நின்றசேஷித்தை - ௰௨ - ல் - பெருக்கி - மூன்புற்று நின்ற கருவிகவீய்ந்த பலமிராசியாக வைத்து நின்ற சேஷித்தை - ௯௰ - ல் - பெருக்கி - முதற் கருவியால ரித்துப் பெற்றபலம் - மகாகெங்கையாகவைத்து-சேஷித்தை-௯௰-ல்-பெருக்கி - மூன்பிற்கருவியால்தரித்து இதைனூலோன்றன் றாதனீசமென்று பெருக்கி நெய்செய்வேலியென்னுங் கருவியால்தரித்து பெற்றதினஞ் சுத்ததினமென்றறிவது-௫பாதசேஷம்-௯௰-ல்-பெருக்கி-முதற்கருவியால் தரித்துப்பெற்றபலம்- தித்தினா- விஷநாழிகையென்றறிவது-சுத்ததினமும்-விஷநாழிகையுமென் றறிது- எ-று

கோதில்மண்டலார்த்தந்தாக்கிகொற்றிடவேதநூலிற்... *
போதறுகலைநீக்கிப்போவர்மெய்ப்போகங்கூட்டச் *
சோதிமத்திமம்பகர்தீப்போவரத்தளைஞற்மேடம்... *
பாதியாற்றிராசிக்குள்ளுமேடாதிதுலாதியப்பால் ... *

(இ-ள்) மண்டலத்தைக் கோற்றொடியொன்று பெருக்கி வேதநூலென்றுதரித்துப்பெற்றபலங் - கலையாகப்போவதொன்று களைந்து நின்றசேஷம் ஆறுக்குள்ளாகில் மேஷாதியென்றும் ஆறுக்கப்பாலாகில் துலாதியென்றுமறிவது-எ-று. (௫௮௭)

பாற்புகைகோடியென்றுபகர்ந்தோனைமுடிமூன்றொட்டிப் *
போற்புகையதனிற்சாக்கோள்கொடியேறப்புகையதாக்கிச் *
சேற்றவைமுக்காற்பாவைச்சோர்வதற்களைந்துசேடம் ... *
பேற்கலையாக்கிப்பெற்றசாமேல்வைசாமேல்வைபின் ... *

(இ-ள்) மேஷாதி துலாதி-கூட்டி நின்றதொகையிலே- குசையென்று மூன்றிராசிமேலேவைத்து நின்றகொடிவைக்களைவது-இப்படிகளைந்து நின்றசேஷித்தை மூன்றேமுக்காலுக் - கொருசாவாகக்கொண்டு நின்றசேஷித்தைக் கலையாகவிறங்கவிட்டுப் பெற்றசாவை நின்றகலைக்குமேலாகவைத்து அதன்பின் நின்றசாவைக் கீழாகவைத்துக் கொள்வர்-எ-று. (௫௮௮)

பின்சாவில்முன்சாநீக்கிப்பெற்றகாவிடையைத்தாக்கி *
குன்றுநாற்கீய்ந்தபேறுகூட்டுமேற்சாவின்மேற்சா... *

பின்சாவிற்களைபவில்லேற்பெற்றசாமாறிவைத்து [வில்
முன்போலவீய்ந்துப்பெற்றமொய் குழற்களேமேற்சா

(இ-ள்) கீழிற்சாவிலே மேற்சாவைக்களைந்து நிற்கசேஷித்தாலே நடுவில் நின்றகலையைப்பெருக்கிக்குன்றுசாரொன்றுங்கருவியால்-தரித்தபலத்தை மேலிற்சாவிலே கூட்டுவது கீழிற்சாவிலே மேலிற்சாவைக் களையப்பெறாதாகில் கீழிற்சாமேல்வைத்து மேலிற்சாவைக் கீழேவைத்து முன்புபோலேகளைந்து பெருக்கித் தரித்துப்பெற்ற பலத்தை மேலிற்சாவிலேகளைவது-எ-று. (௫௮௯)

சாக்கொளப்போதாதாகில்முதற்சாவாற்களையத்தாக்கி *
யீக்கவுமுன்போலிப்ந்தபலங்களையாமென்றெண்ணி *
மாக்கலைவரிசைசெய்துமத்திமமதனிற்கூட்டத் ... *
தூக்கியதுலாதிமேடங்களைந்திடவருக்கந்தாய்தாம்... *

(இ-ள்) சாக்கொளப்போதாதாகில் முதற்சாவில் நடுவில்நின்ற கலையைப்பெருக்கி - முன்புபோலேகரித்து மேலிற்சாவிலேகூட்டுவது கலையாம் - அக்கலையை வரிசையாலோடுகிற ஆதித்தன் மத்திமத்திலே முற்படத்தரித்து - துலாதிமேஷாதி யாயத்தைக்கூட்டுவது. இப்படிகூட்ட ஆதித்தனுக்குச் சுத்தஸ்படம் ஆதித்தன் மந்தமந்தகா- மேலோன்-௧-வெல்லை-௨-உள்ளான்-௩-வல்லி-௪-நல்விரல்-௫- கைநதி-௬-செப்பு-௭-வீதீர்-௮-மாலோன் ௯-வேளேன்-௰-புத்தேள்-௰௧-மறை-௰௨-எல்லை-௰௩-மர்பரதன்-௰௪-வெண்கோலன்- ௰௫-நாயகன்-௰௬-கூடலமன்-௰௭-மைக்கண்டன்-௰௮-மால்பாகன்- ௰௯- ஸ்ரீராமன்-௨௰-பூநாதன்-௨௧-கோடாகன்-௨௨-ஐயாரன்-௨௩-மஞ்ஞுகன்-௨௪- ஆதித்தன்மந்தசாமூற்றும்-எ-று, (௫௯௰)

சந்திரன் சுத்ததினம்.

தாய்கண்டத்தறுநூறேத்தியிரவிதூரம்போய்நீக்கி... *
யாயும்பன்னிரண்டுமுப்பதறுபதாற்பெருக்கிமுன்னிற்,
றேய்கின்றவிராசிபாகைகலை கொள்மண்ட லார்த்தமெட்
டா,லீய்ந்தவப்பலமுனிக்கோள்சோதிமாயவனென்றேற்றே

(இ-ள்) சந்திரனையென்னும்படி-மண்டலத்தைவைத்து-௬௱-ல்- பெருக்கி-இரவிதூரம்போமென்ற கருவியாற்றரித்துப் பெற்றபல

மிராசிபாகக்கலைகொண்டு சுய்ந்தசேடம்-புகட்டுமண்டலத்தை-எட்டரந்தரித்துப் பெற்றபலம் - கலையிலேகளைந்து ஒண்சோதிமாயனைன்று மூலதுருவங்கூட்டில் சந்திரன்மத்திமமாம்-எ-று. (௱௯௧)

ஏற்றமத்திமமாந்திங்கட்கினி துங்கமெனண்கண்டத்தே ❋
மாற்றிலாவிண்ணோர்கிப்ந் துவரும்பலம்போக்கிச்சேட ❋
மாற்றுமீராறுமுப்பதறுபதாற்பெருக்கிமுன்னிற் ... ❋
சேர்த்ததிற்சித்திராசிபாகையுங்கலையுஞ்செய்யே ... ❋

(இ-ள்) துங்கனென்னும்படி கண்டத்தைவைத்து-மாற்றலரிவிண்ணோரென்னுங் கருவியால் - தரித்துப்பெற்றபலம்- பிறவாடனம் சேஷம்-௧௨-௩௰-௬௰-ல்-பெருக்கி- முன்புற்றநின்ற கருவியால்தரித்து-இராசிபாககலைகொண்டு சுயாதசேடம்-புகட்டுவது-எ-று. (௱௯௨)

செய்யமண்டலார்த்தமுன்னேமன் பெருக்கினிற்கோபத்தீபக்
கெய்தியபலமுநீக்கியென்போதும்பொன்னிகூட்டத் ... ❋
துய்யமத்திமமாமத்தைச்சோமன்மத்திமத்தின்வாங்கி .. ❋
மையில்சாமுன்போற்செய்துமதிநீக்கிமதியினெண்ணம் ❋

(இ-ள்) மண்டலத்தைமுன்னே-மன்என்று- பெருக்கிசோபத்தீபமென்னுங் கருவியாற் றரித்துப்பெற்றபலங்-கலைபாம் இத்தை முன்புவெண்ணி-நின்றதிற்களைந்தது என்போதும் பொன்னியென்று மூலதுருவங்கூட்டத் துங்கமத்திமமாம்- இதைச் சந்திரன்மத்திமத்திலேகளைந்து மேஷாதி துலாதியபிரிந்து - சுக்கிரர்கொடி முன்போற்கொண்டு சாஸமஸ்க்காரம்பண்ணி சாபலமுமுதுஞ் சந்திரன் மத்திமத்திலே மேஷாதிகளைந்து துலாதிகூட்டச் சந்திரன் சபல்காரமாம்-சந்திரன்-௧-நசாகோமான்-௨-கையில்-௩-வைப்பு-௪-பெய்ப்பெண்-௫-எந்தை-௬-சுந்தரன்-௭-இந்திரன்-௮-பொதுவன்-௯-வெண்ணூலன்-௰-வீணிறன்-௰௧-வேட்டமன்-௰௨-சிறந்தான்-௰௩-மூவ்வாதனன்-௰௪-தலைவிலாஃ-௰௫ ஓதுமால்-௰௬-நல்லூரான்-௰௭-சோரா-௰௮-செய்யாதான்-௰௯-புத்தேளான்-௨௰-பழையான்-௨௧-உடையான்-௨௨-கிறையான்-௨௩-பெற்றகோவில்-௨௪-நல்லோன்-௨௫-சந்திரன் சுத்தம்முற்றம்-எ-று. (௱௯௩)

எல்செவ்வாய்தனக்குக்கண்டமெண்ணேந்பூவரித்துப்போதி
மண்டியீராறுமுப்பதறுபதால்மாறிமுன்றிற் ... ... ❋

கண்டத்தையிராசிபாககலைகொள்மண்டலார்த்தம்பூநீர் ... *
கொண்டுநீராடற்கீப்ந்துவருபலங்கலையிற்கூட்டே ... *

(இ-ள்) செவ்வாய்க்கு எண்கண்டத்தலைவைத்துப்பெருக்கில்-எண்ணேழ்பூவென்னுங் கருவியால்தரித்துப் பெற்றபலம் விபலமாம்- சேஷம்-௰உ-௬௰-தாற்பெருக்கி-முன்புற்ற நின்றகருவியால் தரித்துப்பெற்றபலம் - இராசிபாககலைகொண்டு சேஷம்புகட்டுமண்டலத்தைப் பூநீயொன்றுபெருக்கப் பொய்யிலா னென்னுங்கருவியால் தரித்துப்பெற்ற பலங்கலையாம்- இதைமுன்புயெண்ணி நின்றதிலே கூட்டுவது-எ-று. (௫௱௪)

கூட்டியேகன்னிதேரோன்பகல்நீக்கிவிடைகுசற்குத் *
தீட்டிதிற்பாகையாதியேரிகளைந்தசேட ... ... *
மாட்டொடுதுலாதியாய்ந்துசாபலம்பாதியாக்கி ... *
வாட்டுமத்திமத்தின்மேடந்துலைகூட்டமந்தஞ்சேய்க்கே

(இ-ள்) கன்னிதேரோன்பகலென்று களையச்செவ்வாய்- மத்திமமா-மத்திமத்தைத் தீட்டிவைத்து இதிலே பாகாதியாக வோரணியென்றும்-தொச்சமெடுத்து நின்றசேஷம் மெஷாதி துலாதியறிந்து பூசாகொடிகொண்டு-ஸாஸ்மஸ்காரம்பண்ணி- சாபலத்தைப்பாதித்துச் செவ்வாய்மத்திமத்திலே மேஷாதிகளைந்து துலாதிகூட்ட மந்தஹப்-எ-று. (௫௱௫)

மந்தத்தையருக்கனூர்தமத்திமத்ததனுல்வர்ங்கி... ... *
யந்தயில்மகரமாதியாறுமந்தாதிசர்வாம் ... ... *
வந்தகற்கடகமாதியாறுமத்திமமச்சவாஞ் ... *
சந்தித்துச்சாக்கோள்கொண்டுசாபலம்பாதிசெய்யே *

(இ-ள்) மந்தவனாயில்-ஆதித்தன்மத்திமத்தைக்களைந்து மேஷாதி துலாதி கடகாதி மகராதி பூசாகொடிகொண்டு சாக்கொண்டு - சாஸமஸ்காரஞ்செய்து சாபலம் பாதிகொள்வது-எ-று- (௫௱௬)

செய்துமேடாதிமந்தவரையினிற்சேர்க்கச்செவ்வே... *
வெய்யசீக்கிரூர்த்தமாகும்வோரணிகளைமந்தோச்சந் *
தையல்கோல்மேடமாய்ந்து சாக்கொள்சா பலத்தைமுற்
றும்,பொய்யில்செய்மத்திமத்திற்றுலேகூட்டப்புடமதாமே

(இ-ள்) முன்பு அற்பிகரித்து நின்றபலத்தை மந்தவளையிலே மேடாதிகளோர்ந்து துலாதிகூட்ட சீக்கிரவளையம்-இந்தச்சீக்கிரவளையில் ஓரணியென்றவைகளோர்ந்து நின்றசேட மேடாதி- துலாதியறிந்து பூசாகொடிகொண்டு சாசமஸ்காரம்பண்ணி-சாபலமுழுதும்-செவ்வாய் சுத்தமத்தி மத்திற்கூட்டமுதல்களைதல் - செய்யப்புட மத்திமமாம்-எ-று. (௫௬௭)

புடந்தனிலருக்கனூர்தமத்திமமதனைப்போக்கி ...*
யடைந்தகோல்மேடம்நண்டுமகாதியறிந்துசாவாய்ந் *
திடர்தருபுகையேகோடிகொண்டுசாபலத்தையெல்லாம்
புடந்தனின்மேடநீக்கித்துலைகூட்டப்பூமன்சுத்தம் ...*

(இ-ள்) முன்புவைத்தபுட மத்திமத்திலே ஆதித்தன்மத்திமத்தைக்களைந்துசேடமேடாதி துலாதிமகாதி - கடகாதி யறிந்து - பூசாகொடிகொண்டு - சாசமஸ்காரம்பண்ணி சாபல முழுதும் - புடமத்தி மத்திலே மேடாதிகளைந்து துலாதிகூட்ட செவ்வாய் சுத்தம்-எ-று. (௫௬அ)

பூகண்டம்நாற்றிற்பெருக்கிப்புகனுக்குவெள்ளைச்செந்தே*
னீகண்டதீராறையாதிருமுப்பான்பெருக்கிமுன்னீய்ந்,
தாகின்றராசிபாகைகலைசெய்பூக்கொள்கவென்றே [றே
போகுங்கொள்மண்டலார்த்தம்பெருக்கரிபொலிகாலென்

(இ-ள்) புதனை யெண்ணும்படி - கண்டத்தைவைத்து - ௬ - ல்-பெருக்கி வெள்ளைச்செந்தேனென்றே (அதுஎ௱௬௰எ) க்கு- யீந்து பெற்றபலம் மண்டலார்த்தம் - அதைவேறேவைத்து சேடம்-௰௨ - ௬௰ - ௩௰ - ல் - பெருக்கிமுன்பிலர்த்தாதிக்க மூன்றடனில் கருவியாலரித்துவத்தபலம் - இராசிபாகைகலையாகவைத்து சேடத்தில் - அர்த்தாதிக்க மூன்றடனி லொன்றேத்தி முன்வைத்த மண்டலார்த்தத்தை - பூக்கொள்கவென்ற - ௱சுக்குப் - பெருக்கிப் - பொலிகாலென்ற-௨௱௬௰க்கு-யீவது-எ-று. (௫௬௯)

என்றதிட்பலமுங்கூட்டிநட்டார்வேலோன்சேயென்றே
என்றதிற்களையப்புந்திமத்திமமதனைவெய்யோன் ...*

சென்றமத்திமத்தில்நீக்கிச்சேடங்சோல்மேடந்தேர்ந்து
நின்றதிற்கடகமாதிமகராதியறிகநேரே ... ... .. *

(இ-ள்) மூன்பு மண்டலார்த்தத்தைப் பெருக்கீஈய்ந்தபலங்கலையா
மிவைமூன்றுசிபாகைகலையிற்கூட்டி நட்டார்வேலோன் சேயென்ற
மூலத்துருவங்கலை- உ௰௩- பாகப்- அ- ராசி- எ- களைய- புதனுக்கு
மத்திமமாம்- அதைத்தீட்டிவைத்து - ஆதித்தன் மத்திமத்திலீய்ந்த-
புதன்மத்திமத்தைக்களைந்து சேடம்- மேடாதி துலாதியறிந்துகடகா
திமகராதிகாண்பது-எ-று. (௬௱)

நேர்ந்தசாபலத்திந்பாகிநீள்கதிர்மத்திமத்திற் .. ...*
சேர்ந்தமேடாதிநீக்கசீக்கிரவனாயாமித்தி ... ...*
லார்ந்தவேழிராசிநீக்கியறிகொறிதுலாதிசாக்கோள்... *
கூர்ந்தசாபலத்தைவெய்யோனடுவுடல்றுலாதிகூட்டே.*

(இ-ள்) மூன் புதன் மத்திமங்களைந்து மேடாதிதுலாதி கடகாதி
மகராதியறிந்து நின்றது பூசாகொடிகொண்டு சாக்கொண்டுசாசம
ஸ்காரம்பண்ணி - வந்தசாபலத்தை அற்றிகரித்து ஆதித்தன் மத்தி
மத்தில்மேடாதிகளைந்து துலாதிகூட்டச்சீக்கிரவனாயாம் அத்தச்
சீக்கிரவனையில் மந்தோச்சம்ராசி எ-களைந்து சேடமுன்போல் மே
டாதி துலாதியறிந்து பூசாகொடிகொண்டு சாசமஸ்காரம் பண்ணி-
சாபலமுழுதும் ஆதித்தன் மத்திமத்திற் கூட்ட முதல்களைதல் செ
ய்யில்மத்திமமாம்-எ-று. (௬௱௧)

கூட்டிடபுடமாமித்திற்குலப்புதனலைவநீக்கி .. ...*
ஆட்டொடுதுலாதிநண்டுமகராதியறிந்துசாவாய்த் [துப்
தோட்டியேபுசைபேகோடியொழிந்துச்சாசமஸ்க்கரித்
பூட்டியபலம்புடத்திற்றலைகூட்டப்புதற்குத்தாய்தாம்*

(இ-ள்)முன்புகண்ட புடமத்திமத்திலே புதன்மத்திமத்தைக்க
ளைந்துசேடமேடாதி துலாதிமகராதி கடகாதியறிந்து பூசாகொடி
கொண்டு சாசமஸ்காரம்பண்ணி, சாபல்முழுதும் புடமத்திமத்தில்
மேடாதிகளைந்து துலாதிகூட்டபுதன் சுத்தமாம்-எ-று. (௬௱௨)

தாய்கண்டத்தோர்சுங்கெய்தவில்வாளிவிற்பிறந்கேப்ந்து*
போயதிராமுமுப்புதறுபதாற்பெருக்கிமுன்போ ...*

லீய்பலனிராசியாதிமண்டலம்வண்டோடென்றே......*
யாயதாற்பெருக்கிப்பொய்யிலார்க்கரித்ததுமுனிக்கே *

(இ-ள்)வியாழமெண்ணும்படி கண்டத்தைவைத்துஅதிற்சுக்கொ டுத்தசுக்ருவது-ய -ல்-பெருக்கிவில்வாளிவிற்பீறென்ற- சருதருஉரு று-யீய்ந்துபெற்றபலமண்டலார்த்தம்மேலேவைத்து- சேடப்-யஉ- ருய காய.ல்-பெருக்கிமுன்மிற்கருவிக்கிப்ந்து- பெற்றபலம் ராசிபா கைகலையாகவைத்து-சேடத்தில்அர்த்தாதிக்கமுண்டென்னிலொன்று கூட்டி மண்டலார்த்தத்தை வண்டோடுயென்ற- றாகக்குப்-பெருக் கிப் பெய்யிலாரென்ற- உ௱ருயக்கு - யீய்ந்து பெற்றபலம் - கலை- இவைமுன்வைத்த ராசிபாகைகலையிற்களைவது-எ-று. (௩௱௬)

நீக்கதிர்குடிசூழ்பொன்னேயெலக்களைநின்றசேடம் *
கோக்குருநடுவாமித்திலாரோணகலைந்துகோலா ...*
டாக்கினதறிந்துசாக்கோளன்னதிற்பாதிதன்னை... ...*
மாக்குருமத்திமத்திற்றுலைகூட்டமந்தமாதே ... ...*

(இ-ள்) முன்புபகற்சமஸ்க்காரம்பண்ணிநின்றராசி பாகைகலையி ற்குடிசூழ் பொன்னேயென்றவாக்கியலக்கம் - பூருவத்துருவங் கலை ருடு - பாகம் - கூ - ராசி - அ - களைந்துநின்றசேடம் - வியாழமத் திமமாம் - இவைதிட்டிமந்தோச்சம் - ராசி - கூ - வாங்கி - மேடாதி துலாதியறிந்து புசாகோடிகொண்டு சாசமஸ்க்காரம் பண்ணி- அற்றீகரித்துமத்திமத்தில் - மேடாதிகளைந்து துலாதிகூட்டமந்தவ ளையாம்-எ-று. (௩௱௪)

மாதராய்மந்தந்தன்னிலருக்கன்மத்திமத்தைவாங்கி ...*
யாதிமேடாதிகோலென்றறிந்தபின்னடுவந்தாதி... ...*
சாதுசாவறிந்துசாக்கோள்சாபலம்புகுந்தநேரே ...*
தீதிலாமந்தங்கூட்டிச்சீக்கிரவளையதாமே ... ... *

(இ-ள்) முன்வைத்திருக்கிற மந்தவளையில் ஆதித்தன் மத்திமத் தைவாங்கி நின்றசேடமேடாதி துலாதிமகராதிகடகாதியறிந்து புசா கொடிகொண்டு சாக்கண்டு சாசமஸ்க்காரம் பண்ணிபாதிசெய்து-ம ந்தவளையிற்- கூட்டுதல்களைதல் செய்யச்சீக்கிரவளையாம்-எ-று. ()

சீக்கிரத்திராசியாறுகளைசேடமேடங்கோல்தோ ...*
சாக்கொள்சாபலத்தைமுற்றுந்தடங்குருமத்திமத்திற் *

போக்குமேடாதிகூட்டு துலாதியேற்புடமதாகு... ...*
மாக்கியபுடத்தி நீக்கவருக்கன்மத்திமத்தையாங்கே ...*

(இ-ள்) முன்சீக்கிரவணையில் - மந்தோச்சம் - ராசி - சு - களைந்து - சேடமேடாதி துலாதி யறிந்து - புசாகொடிகொண்டு - சாசமஸ்காரம் பண்ணிசாபலமுழுதும்-சுத்தமத்தி மத்தில் மேடாதிகளைந்து - துலாதிகூட்டப்புட மத்திமமாம் - அவையிலாதித்தன்மத்திமங்களைவது-எ-று. (௪௱௬)

ஆங்கதிர்சேடமேடந்துலாதியாய்ந்தாதிச்சாவாந் ...*
தீங்கில்மத்திமச்சாதேர்ந்துபுசாகொடிதெரிந்துகொண்டு, தாங்குசாச்சமஸ்க்கரித்துசாபலம்புடத்திலாடேல்...*
வாங்குகோலாஇற்கூட்டுவான்குருசுத்தமாமே... ...*

(இ-ள்) புடமத்திமத்திலாதித்தன் மத்திமத்தைக் களைந்து நின்றசேடம் மேடாதி - துலாதி - மகராதி - கடகாதி - யறிந்துபுசாகொடி கொண்டு சாசமஸ்காரம்பண்ணி - சாபலமுழுதும்புடமத்திமத்தில் - மேடாதிகளைந்து - துலாதிகூட்ட - வியாழத்துக்குச்சுத்தமாம்-எ-று. (௪௱௭)

சுத்தவண்புகற்குக்கண்டந்தூயவஞ்ஞாற்றிற்றுக்கி ...*
வைத்ததீக்கருவிலைமதீரிராகவந்கிப்பந்தமசேட ... ...*
மெத்தவீராறுமுப்பதறுபதாற்பெருக்கிமுன்னீய்ந் *
தெத்தநண்ணிடையாயோனாமுதற்பாலைககலையிருத்தே

(இ-ள்) வெள்ளியையெண்ணும்படிகண்டத்தைவைத்து- நால்பெருக்கிமைதீரிராகவனென்ற-௱௰உ தநூ௱௪௰கூக்கு-மீய்ந்து-பெறுபலமண்டலார்த்தம் அந்தமண்டலார்த்தபலம்-வேறுவைத்துசேடம்-௰உ-௬௰-௩௰-ல்பெருக்கி-முன்பிற்கருவிக்கீய்ந்து-பெற்றபலம்-இராசிபாலைககலைகொள்வது-எ-று. (௪௱௮)

இருந்தமண்டலார்த்தமுல்லையேற்றியே பொலிவாற்கீய்ந்து, வரும்பலன்முன்களைந்துகண்டோன்வெய்யோன்றுள்வாங்கப், பொரும்புகர்நடுவாயித்தைப்பொலிசுடர்நடுவினீக்கி, பருந்துலைமேடயாதிமகரநண்டாதியாய்ந்தே*

(இ-ள்) மண்டலார்த்தத்தைமுல்லையென்ற - கூறுக்குப் - பெருக்கிப்பொலிவாவெனன்ற - ஊாநடிக்கு - மீப்ந்து - பெற்றபல முன்தீட்டிவைத்தாரசிபாகை கலையிலேகளைந்து அதிற்கண்டோன் வெய்யோன்று ளென்றபூருவத்துருவங்கலை - க - பாகம் - எ - இராசி உ - களைய - வெள்ளி மத்திமமாம் - அந்த மத்திமத்தைத் தீட்டிவைத்து- அதைஆதித்தன்மத்திமத்திற்களைந்து - சேடமேடாதி துலாதியறிந்து-அந்தாதிச்சா- மத்திமச்சாவறிந்து- புசாகோடிகொண்டு- முன்போலச்சாக்கண்டு- சாசமஸ்காரம் பண்ணுவது-எ-று.()

ஆய்ந்ததுபகுந்தட்டாதியருக்கன்மத்திமத்திற்போக்கித் *
தீய்ந்துலையாதிகூட்டச்சீக்கிரவனைமுன்முறை... ...*
வாய்ந்தமந்தோச்சம்வாங்கிமறிதுலையறிந்துசாக்கொள் *
போந்தசாபலந்துலாதிபொலிசுடர்நடுவிற்பூட்டே... *

(இ-ள்) முந்தினசாபலத்தை அற்றீகரித்து ஆதித்தன்மத்திமத்தில் மேடாதிகளைந்து துலாதிகூட்டச்சீக்கிரவனையாம்-அதில்பொற்கோயிலென்றமந்தோச்சம்- இராசி- ௬- களைந்து சேடமேடாதி துலாதியறிந்துபுசாகோடிகொண்டு சாசமஸ்காரம்பண்ணி சாபலமுழுதும் ஆதித்தன்சுத்தமத்திமத்தில் கூட்டுதல் - களைதல் செய்யப்புடமத்திமமாம் -எ- று. (சாய)

பூட்டிடப்புடமத்திற்புகர்நடுவதனைவாங்கி ... ... *
யாட்டொடுதுலாதியாய்ந்துநடுவுமந்தாதிச்சாவு......*
காட்டியதறிந்துசாக்கொள்கருதுசாபலம்புடத்தில் ...*
பாட்டுகோலாதியாகிற்குறிகளைபுகரோன்சுத்தம்... ...*

(இ-ள்) முன்புஎண்ணிவைத்தபுடத்திலே சுக்கிரன் மத்திமத்தைக் களைந்து-நின்றசேட மேடாதி துலாதி அந்தாதிச்சாவு மத்திமச்சாவுமறிந்து புசாகோடிகொண்டு- சாசமஸ்காரம்பண்ணி சாபலமுழுதும்புடமத்திமத்தில்கூட்டுதல்-களைதல்- செய்யசுக்கிரன்சுத்தமாம்

புகல்சனிகண்டமுதூர்நெற்கோட்டத்தீப்ந்துபோக்கிச் ... *
சிகைசெய்தீராறுமுப்பதறுபத்தாற்பெருக்கிச்சேர்ந்த ... *
வகைவைமுன்னதத்கிப்ந்தோனைமுதல்வைத்துமண்டலார்த்தம்
பகிர்ப்பெண்வண்டென்றேற்றிபொலிகார்கிப்பலமுன்பாச்சே

(இ-ள்) சனியையெண்ணும்படிகண்டத்தைவைத்துமூதூர்நெற்கோட்டமென்ற(௰௪௩)க்குயீய்ந்துபெற்ற லமண்டலார்த்தம்- அவைவேறுவை- சேடம்- ௰௨- ௩௰துத்-௩௰-ல்பெருக்கி-மூன்பில்குருவிபாலரித்துபெற்றபலம்- ராசி- பாகை- கலையாகவைத்துச்சேடம் அர்த்தாதிக்கமாலகிவொன்றுகூட்டி-மண்டலார்த்தத்தைப்பெண்வண்டுயென்ற ருஎ௰எக்குப்-பெருக்கிப்-பொலிசாலென்ற உ௱௩௰-க்கு-யீந்துபெற்றபலம்மூன்புவைத்த-இராசி- பாகை-கலையில்கலையுடன்கூட்டுவது-எ- று. (௬௱௰௨)

யாஞ்சதிலேம்முகன்பொய்மெய்யென்பதரித்தசேடம் *
பூஞ்சனிநடுவாமித்திற்பூசாநெய்களைந்துகோலா...... *
டாஞ்சிகைபதிந்துசாக்கொண்டதிர்ப்பாதிமேடமாதி *
தாஞ்சனிநடுவினீக்கித்துலைகூட்டச்சனிக்குமந்தம்... *

(இ-ள்) மூன்புநின்ற- ராசி- பாகை-கலையில்- ஐம்முகன்- பொய்மெய்யென்றபூருவத்துருவம்-கலை- ரு௰௩- பாகம்-௩-இராசி-எ-களையச்சனிக்குமத்திமமாம்- அந்தமத்திமத்தைத் தீட்டிவைத்து- அதில் மந்தோச்சம்- பூசாநெய்யென்ற- இராசி-எ-பாகம்- உ௰௩- களைந்தசேடம்-மேடாதி- துலாதியறிந்து- புசாகொடிகொண்டு- கொடியுநிற்புசையாக்கி- சாக்கொண்டு- சாசமஸ்காரம்பண்ணிசாபலத்தை அர்த்தரித்து-பாதியை-சனிமத்திமத்தில்-மேடாதிகளைந்து- துலாதிகூட்ட-மந்தவனாயாம்-எ-று. (௬௱௰௩)

சனிமந்தன்றன்னில்வெய்யோன்றன்னடுவதனைத்தள்ளி *
இனியமேடாதிகோலாடெறிசுருவரிந்துசாக்கொண்... *
டணையதிற்பாதிமேடமாதியந்தத்திற்கூட்டச் ... ... *
இனவியகுலைவேற்கண்ணுட்சீக்கிரவனாயாஞ்செவ்வே - *

(இ-ள்)சனிமந்தவனாயில் ஆதித்தன் மத்திமத்தைக்களைந்தசேடம்-மேடாதி-துலாதி-மகராதி-கடகாதியறிந்து- புசாகொடிகொண்டு சாசமஸ்காரம்பண்ணிச்சாபலம்பாதிசெய்து-மந்தவனாயிற்கூட்டுதல்களைதல்செய்யச்சீக்கிரவனாயாம்-எ-று. (௬௱௰௪)

செவ்வியசீக்கிரத்திற்கூடாப்பெண்களைந்துசேடந் ... ...*
தவ்வயில்மதிகோல்சேர்ந்துசாக்கொள்சாபலத்தைமுற்றும் - *

செவ்வியசனியின்மத்திமத்தில்மேடாதிநீக்கிற் ... ... ... ௲
கவ்வியபுடமாமத்திற்கதிர்நடுவதனைவாங்கே ... ... ... ௲

(இ-ள்)சீக்கிறவனையிற்கூடாப்பெண்ணென்ற மந்தோச்சம்-பாகம்·௰௨-இராசி-எ-களைந்து-சேடமேடாதி துலாதியறிந்து புசாகோடிசாமுன்போலக்கொண்டுசாசமஸ்காரம்பண்ணிசாபலமுழுதும்-சனிமத்திமத்திலே கூட்டுதல்- களைதல்- செய்யப்புட மத்திமமாம்- இதிலாதித்தன்மத்திமங்களைவது-எ-று. (௪௱௰௫)

வாங்கிமேடாதிகோள்முன்மகராதிகடகமாதி ... ...௲
யாங்கவையறிந்துசாக்கொண்டடையவாடாதியாகிற் ...௲
பூங்குழன்மடவாய்நீக்கிற்றுலாதியேற்புடத்திற்கூட்டத்-
தீங்கிலாச்சனியின்சுத்தபுடமெனச்செப்பலாமே... -௲

(இ-ள்) முன்பு புடமத்திமத்திலே ஆதித்தன்மத்திமத்தை வாங்கிநின்றசேடம்- மேடாதி-துலாதி-மகராதி-கடகாதி-யறிந்து புசாகோடிகொண்டு சாவறிந்து சாசமஸ்காரம்பண்ணி சாபலமுழுதும்புடமத்திமத்திற்- கூட்டுதல்- களைதல்- செய்யசனிசுத்தம்-எ-று (௪௱௰௬)

## குசாதி- பஞ்சக்கிரக- வுதையம்· அத்தமனம்- அறியும்படி

செப்பியசெவ்வாயன்னேழ்சீரியபுந்தியன்மூன் ... ...௲
றொப்பிலாவியாழம்பன்னொன்றொன்பதுபாகைவெள்ளி - ௲
தப்பில்மூனவந்துபாகைசனிகதிர்முன்பின்சாரி ... ... ௲
லப்பொழுதிறப்பாமப்பாற்பிறப்புமாமாங்கவற்கே ... ...௲

(இ-ள்) ஆதித்தனுக்கு முன்பின் செவ்வாய்பாகம்- ௰௭-புதன்பாகம்- ௰௩-வியாழம்·௰௧-வெள்ளி·௯-சனி- ௰௫- யிதன்மேலாறுவருனையராம்- பின்னின்றுதிக்கில் கிழக்குதையம்- முன்னின்று திக்கில் மேற்குதையம்-எ-று. (௪௱௰௭)

## வெள்ளி·பாடு பிறப்பு·அறியும்படி.

ஆங்கண்டமதனிற்பட்டக்கூட்டியேநீரமேடு ... ... ...௲
பாங்கொக்கவரித்தவன்றுபடுவதுகிழக்கேவெள்ளி ... ...௲

பூங்கண்டஞ்சொல்வெண்பாவென்றிருத்திமுன்போலவீய்ந்தா
வீங்கினமூலையாவொக்கவீய்ந்தநாள்மேற்குப்பாடே......[ல்

(இ-ள்) கண்டம்வைத்துப்பட்டமென்ற-௰௪- கூட்டிநீரமேலென்ற
(௫அசக்கு)யீய-ஒக்க யீயப்பட்ட நாள்கிழக்கேவெள்ளிபடும்கண்ட
த்தில்சொல் வெண்பாவென்ற ௨௱௭௰- கூட்டிமுன்பிற் கருவிக்கீய்ந்
தால்-ஒக்கயீயப்பட்டநாள்மேற்கேவெள்ளிபடும்-கிழக்குசுபாக-அத்
தமனம்- மேற்கு- வக்கிரூர்த்த அத்தமனம் இவைகுசாதிக்கொக்கும்

பாடுமேற்றலேயேபட்டபத்தர்நாள்கிழக்கேதோன்றும்......*
பாடுகீழ்த்தலேயேபட்டபதிற்றேழின்மேற்கேதோன்றும் ...*
பாடுமேற்றலேமேற்பார்த்தவென்னுக்குமுன்னேயாதிற் ...*
பாடதாங்கிழக்கேமூன்றுநாளைக்குமுன்னேபாடாம்... ...*

(இ-ள்) வெள்ளிமேற்றலேஅத்தமனமாகில்அதற்குப்பத்தாநாள்கிழ
க்குதையம்-கீழ்த்தலே அத்தமனமாகில் எழுபதாநாள்மேற்குதிக்கும்
மேற்றலே- அத்தமனமெண்ணிப் பாடுகண்ட நாளுக்கு-௬- நாளிற்
படும்- கீழ்த்தலேஅத்தமனமெண்ணிப்- பாடு- கண்டதினத்துக்கு-மு
ன்மூன்று- நாளிற்படும்-எ-று. (௬௱௰௬)

முன்னியகண்டந்தன்னைமூல்லைவென்றுவெண்டீய்ந்து *
பன்னிருமூப்பாறுறுபத்திறுற்றுக்கிமுன்னீய்ந்... .. *
தன்னதைபிராசிபாகைகலேயாக்கிமண்டலார்த்தந்......*
தன்னையாதிரையனென்றுபெருக்கியீபொலிகால்தன்றுல்.

(இ-ள்) இராகுவுக்கு எண்ணம் கண்டத்தைவைத்து மூல்லைவென்று
வென்ற(௬௲௭௱௯௰௫) க்கீய்ந்துபெற்றபலம்மண்டலார்த்தம்-அவை
வெறுவைத்து- சேடம்-௰௨- ௬௰ ௬௰-ல்-பெருக்கி-முன்புற்ற கருவி
யாலரித்து பெற்றபலம்-இராசி-பாகை- கலேயாகவைத்தசேடம்-அர்த்
தாதிக்கமாகவேற்றிமுன்வைத்து மண்டலார்த்தம்- ஆதிரையனென்ற
(௲௯௱௬௨)க்கும்பெருக்கி-பொலிகாலென்ற(௨௱௬௰க்கு)யீவதுஎ-று

தன்பலமதனிற்கூட்டிதைபலாரெல்சீர்வெண்பா......*
முன்புறுமதனிற்கூட்டமொய்பராநடுவாமித்தை......*
இன்பமண்டலத்திலீககார்குவின்சுத்தமத்தில் ... ...*
வன்றிறவிராசியாறுகூட்டுகக்கேதுமாதே... ... ...*

(இ-ள்) முன்புமண்டலார்த்தபலம்பெருக்கியீய்ந்தபலங்களைமுன்புனண்ணிவைத்த-ராசி-பாகை-கலையில்-கலையுடன்கூட்டி-எண்சீர்வெண்பாவென்றகலை-சள-பாகம்-௰எ-கூட்ட இராகுமத்திமமாம்-இவை-ராசி. ௰உ-ல்-களைய-இராகுசுத்தம்-இதனுடன்ராசி-௬-கூட்ட கேதுசுத்தமாம். (௪௨௧)

### சூரியர்-சந்திரர்-உபயகிரகணத்துக்கும்-<br>பொதுவாகவெண்ணும்படி.

மாமதிகதிரோன்றன்னைவாளராவளைக்கும்வண்ணந் .. *
தாமரையயனேயன்றுஞ்சாற்றியசயந்தமாலை ... ... *
யாமதுதமிழினாலேயறைதருவரதனிஷ்டம்... [போலாம்
போம்வழி யெறும்புபோக்கி நினைக்கும்புன் மதியைப்

(இ-ள்) முன்னோராற் செய்தவடமொழி சயந்த மாலையென்னுங் கிரகண கணித நூலைத் தமிழினால் யான்சொல்லுவ திப்படியென்னுமவை யடக்கஞ்சொன்னது-எ-று. (௪௨௨)

மதிகதிர் துங்கன்பாம்பின்மத்திமமுதனாட்கெண்ணி...*
உதயமுனுவாச்செல்நாடியொன்றுக்குவிகலைபற்று...*
மதிகலையொருபான்மூன்று மொன்றுநேமுக்கான்மூன்
கதிர்கலை துங்கன்பாம்புகடிகையுள்ளளவுமேற்றே [றாங்

(இ-ள்) சூரியசந்திரருடைய கிரகணத்துக்கும் - பொதுவாகவெண்ணும்படி-கிரகணசங்கையானநாளுக்கு-முதலுள்-சந்திராதித்ததுங்கன்-ராகுமத்திமம்-விகலாதியாகத்தீட்டிக்-கிரகணம்பற்றுகிறவன்று. உதயாதியாகவாக்கியப்படி- உவாநாழிகை- இவ்வளவென்றறிந்து உவாநாழிகையொன்றுக்குச் சந்திரனுக்குக்- கலை-௰௩- விகலை-௰- ஆதித்தன்கலை-க- துங்கன்விகலை-சாஜ- இராகுவிகலை-௩௰௮-உவாநாழிகையுள்ளளவு பெருக்குவது-எ-று. (௪௨௩)

வற்றியதுலைகள்தன்னையிவர்கள்மத்திமத்திற்கூட்டச் *
சாற்றியதற்காலத்துமத்திமமாகுமத்தாற் ... ... ...*
தோற்றியசுத்தமெண்ணிசுடர்மதிதற்காலத்து... ...*
மாற்றியவுவாவுந்துங்கனுங்களைபாய்மற்றோச்சம் ... *

(இ-ள்) முன்புஉவாவிற்சென்றநாழிகைமட்டும் சந்திராதித்த ருங் கனிராவுக்குப்பெருக்கிக் கூட்டிய கலைவிகலை அவரவர் முதல்நாளைக்கெண்ணிக் கண்டமத்திமத்தில்- விகலாதியாய்க்கூட்ட உவாவறுதி-நாழிகைக்குத்-தற்காலமத்திமமென்றறிந்து- வேறுவைத்து- முன்புயெண்ணிய-படிகள் இந்நாலவற்றுஞ் சுத்தமெண்ணிக்கண்டபடி- அவரவர்க்கு விகலாதியாய்த் தற்கால சுத்தமென்றுவைத்து- எண்ணுமிடத்தில்- ஆதித்தன்-தற்காலமத்திமத்துற் பாகாதியாகப்-போவாவென்ற மற்தோச்சமும்-சந்திரன் தற்கால மத்திமத்தில்-துங்கன் தற்கால மத்திமமுங் களையதின்றது கேந்திரம்-இவைசந்திராதித்தருக்கு-வைப்பது-எ-று. (௪௨௪)

களைந்தபின்மகரகற்கிமதிகொடியாய்ச்சாக்கொண்டு *
விளைந்தசாபலமாநன்றுப்விகலையால்வரிசைசெய்து *
வரங்கலையைம்பத்தேழிக்கூட்டதிமகராமாகிற் ... *
களைந்திடுகற்கியாகிற்கதிர்மதிதனக்குக்கன்னம் ... *

(இ-ள்) முற்பட்டகேந்திர-மகர- கடகாதி-யறிந்து- புசைகொடிகொண்டு புசையிலன்றி கொடியிற்கொண்டு-குன்றுதற்கேய்ந்து வருபலமு மேற்சாவிலேகூட்டி ஆதித்தன் சந்திரனுக்கு-அந்தந்தச்சாவிற்கொண்டு சாசமஸ்காரம்பண்ணிப் பெறுபலம்-விகலையென்றறிந்து- அவைவரிசையாய் கலை- விகலையாய்வைத்து- இவைவெவ்வேறுருள - இரண்டுபடிவைத்து இதில்முற்பட்ட கேந்திரமகராதியாகிற்-கூட்டகடகாதிகளைந்து நிற்றவை-சந்திராதித்தர் கன்னமென்று விகலாதியாகத்திட்டிவைப்பது-எ-று. (௪௨௫)

கன்னமதறிந்துநீயேசெல்லென்னுங்கலைமதிக்கு ... *
மன்னியகதிர்க்கும்வைப்புமத்திமபுத்தியென்றுய்ந் ... *
தன்னவையைம்பத்தேழாற்பெருக்கரிக்கன்னந்தம்மாற்-
பொன்னனுப்பலமிவற்குப்புடபுத்தியென்றுயோற்றே *

(இ-ள்) நீயேசெல்லென்ற- ௭௮௬-வைத்துச் சந்திரன் மத்திமபுத்தியாம்-வைப்பு-என்றகலை-௫௯- ஆதித்தன் மத்திம புத்தியாம்-சந்திரன் மத்திமபுத்தி-௭௮௬-கலையும்-௫௭-ல்-பெருக்கி- இரவிகன்னத்தீயில் வருபலம்- இரவி - புடபுத்தி யென்னும் சசிபுடபுத்தி யென்று வைப்பது-எ-று. (௪௨௬)

புத்திகள் தீட்டிவெய்யோன் புடத்தினிற் புகையிற்சாக்
கொண், டுத்தசாபலத்துநாமம் புசாபலக்கலையென்றுன்
னி,பத்லைதயொன்றேமுக்காலாற்றுக்கியாங்கதிலிரண்டை
நெத்திசூழ்குழலாய்வாங்கிநின்றதுபிராணைநேரே ... *

(இ-ள்)மூன்பு எண்ணித் தீட்டியிருக்கிற ஆதித்தன்-தற்காலசுத்த
த்தில் புசாகொடு'கொண்டு- புகையினிற்சாக்கொண்டு-சாசமஸ்காரம்
பண்ணிப்பெற்றபலம்-புடரவிபுசாபலக் கலையென்றுதீட்டி-இந்தக
லையை விடுவச்சாயங்குலமென்ற-கஅ-ல்-பெருக்குவது-அத்துகையி
ல்-அலகு-உ-களைந்து நின்றதுபிராணன்-இவை அனுகலைவைப்பது-()

பிரர்ணனையிருபத்தேழாலீய்ந்திடக்கலைமதிக்குப் ... *
பிராணனைபாறுக்கியவிகலைவெய்யவனுர்கித்ததப் ... *
பாமதிகதிரினுக்குப்பகர்பற்றுமந்திப்பற்று... ...*
பிராவினிற்பின்னிற்பற்றுமிருபதுமில்புகூட்டே... *

(இ-ள்) மூன்தீட்டியபிராணனை-உஎ-லீயப்பெற்றபலம்- சந்திர
னுக்குக்கலை-பிராணனை-கூ-லீய்ந்து- வருபலம்- ஆதித்தன்விகலையா
ம் - இவைதற்காலச் சுத்தபுடத்தில்- ஆதித்தன்- மேடாதியன்னிவனை
நிற்கில் உதித்தநாழிகை-ய- அஸ்தமித்தநாழிகை ய- உவாவரிலிருவரி
லுங் களைவது இருபது நாழிகைக்குப் பின்பெண்ணும்-அத்த
மனத்திற்-பின்பத்தெனினுங்கூட்டுவது-எ-று. (௪௨௮)

கூட்டுமேடாதியாறேலிவ்வகைகோல்நூன்றுறேல் ... *
வாட்டியபொருளைக்கூட்டுக்கூட்டியபொருளைவாட்டுங்,
கீட்டியநடுவிற்பற்றுமிரவிடைப்பத்தும்வேண்டாங் *
கோட்டிகூறுதலாய்சேடங்கூறுமுப்புடமதென்றே... *

(இ-ள்) சந்திராதித்தரிருவருக்குமிப்படியே செய்வது பகல் ந
டுவில் பத்தும்-இராநடுவில்-பத்தும்- உவாவரில் பிராண சமஸ்கார
ம் வேண்டாம்-மூற்பட்டசுத்ததற்காலமே சுத்தமென்றறிவது இப்ப
டிகூட்டுதல் களைதல்செய்து நின்றது இருவர்க்கும் திதிப்புடமெ
ன்றுபெயர் இவையித்தைத்தீட்டுவது-எ-று. (௪௨௯)

புடரவிகேந்திரத்துப்புசாபலமிருபத்தேழீய்ந்......*
திடமதிகலையாமாறுக்கீய்ந்திடவிகலைவெய்யோற்......*

கடையமுப்புடத்திலத்தையகத்துமேடாதியாறேல்… *
நடைதருதுலைமுன்னுறேந்கூட்டுநாற்புடமதாமே… *

(இ-ள்)முன்புதீட்டிவைத்த ரவிகேந்திரத்தைப் புசாகொடிகொண்டு புசையில்சாக்கொண்டு சாசமஸ்காரம்பண்ணி நிற்றசாபலத்தை புசாபலக்கலையென்று தீட்டிவைத்து அதனை-உள-ல்- யீய்ந்து-பெற்றபலம் சந்திரனுக்குக் கலையாம்-கூ-லீய்ந்து பெற்றபலம்-ஆதித்தனுக்கு விகலையாம்- இவையை ஆதித்தன் மேடாதி கன்னிவரை நிற்கி லந்தந்த திரிதீயப் புடங்களில்லையாகில் மூதற்புடங்களில்-கூட்டுதல்-களைதல்-செய்வது-இவையிற்றை இருவருக்குஞ் சதுர்புடமென்று தீட்டுவது-எ-று. (௪௱௯)

நாற்புடமதியிருேனார்பாகைநற்கலையதாக்கிச்…… *
சீற்கவெண்ணூற்றிற்கீயச்சென்னிமூன்சென்றநாளா *
மாத்தவியாதம்சேடமறுபதாற்பெருக்கித்திங்கட் … *
காற்புடபுத்திக்கீயக்காணுநாட்கடிகையாமே … *

(இ-ள்) சதுப்புடசந்திரனிராசியும்-பாகையும்-கலையாக்கி-அ௱-லீய-வருபலம்- அசுபதிமூதற்சென்றநாளாம்- ஈயாதசேடம்- கூய-ல்-பெருக்கி-புடபுத்தியை கலையாக்கி-அதனுலீய்ந்து பெற்றபலம்-செல்கின்றநாளிற் சென்றநாழிகையாம்-ஆகவதனு ளின்னநா ளித்தனை நாழிகையிற் பற்றும்-எ-று. (௪௱௰)

உவானிற்கலையாலேழ்நூற்றிருபதாலிதனைவாங்கிக் …*
திவாவியசேடமென்பதிதிக்குறைதிங்கள்வெய்யோ…*
னவாபுடபுத்திதன்னிலகற்றிடலொன்றிலொன்றை … *
விவாகமாஞ்சேடமிக்கதிதிக்குறையறுபான்வீக்கே… *

(இ-ள்) முன்புயக்கம்- ௰௪- மற்றுசேடம்நிற்கில். சேடமானகலையை-எஉ௰-ல்- களைந்து- நின்றசேடம் தற்காலத்துக்குப்பின்பு பக்கம்- ௰௫க்குச்- செல்லக்கடவ நாழிகைக்குக்கலையா மூன்புகண்டபக்கம்-௰௫-மற்றுச்சேடம் நிற்கில் தற்காலத்துக்கு மூன்பு பிரதமையிற் சென்றநாழிகைக்கு கலையாம் இவையால் உவாபிரதமைக் கலையென்றறிந்து இவை திதிசேடமென்று தீட்டுவது-சந்திராதித்தர் புடபுத்திகளைவைத்து பெறிதிற்சிறிதுகளைந்து நின்றசேடம் புடபுத்தியுவாவென்று தீட்டிக் கலையாக்கித் திதிசேடம்-கூய-ல்- பெருக்குவது-

வீக்கிய துகையைமுன்னைவிவாகத்துக்கியேநாட்டி ... ... *
யீக்கிடாச்சேடந்தன்னையிருமுப்பாற்பெருக்கிமுல் வீய்ந் .. *
தோக்கிடவிருமயித்தையுவாவிஞுடியினுங்கூட்டி ... ... *
நாற்புடைவெயிலோன்றிங்கள்கலையினுந்தரிகூட்டே ... ... *

(இ-ள்) முன்புபெருக்கினதொகையைப்- புடபுத்திவிவாககலையா லீய்ந்துபெற்றபலம்- நாழிகையாகவைத்து- சேடம்-சா௰-ல்-பெருக்கி-முன்பிற்கருவியாலரித்து- பெறுபலம் விநாழிகையாம்- இந்தவி நாழிகை உவாநாழிகைக்குக் கீழவைத்து- இதனை முன்தற்காலத்து வாக்கியத்தின்படி- கண்டஉவாநாழிகையிற்கூட்டசுத்தபருவமாம்-இவைதிட்டிவைத்து முற்படி- நாடி- விநாடியைச்- சதுப்புட சந்திரன்-கலை- விகலையினும்-சதுப்புடவாதித்தன் அகலவிடுவது -எ-று.()

கூட்டுநாற்புடமதிக்கேதிதிக்குறைதனையுங்கூட்டத் ... *
தீட்டுவற்கலையதாக்கித்தெரிந்ததுபிரதமையாகில் ...... *
வாட்டுமேலெல்லாம்வாட்டித்திதிக்குறைமதிப்புடத்தி *
ஞேட்டுதிசமர்களாவரிருவருமுவாவுஞ்சுத்தம் ... ... *

(இ-ள்) முன்புநாழிகை-விநாழிகைக்கூட்டி-நின்றதுசதுப்புடசந்திரகலை- விகலைகளில்முன்புதெரித்துவைத்த- திதிசேடத்தையுங் கூட்டுவது-முன்புதிட்டினதுஉவாவிற்-கலையாகிற்- சொன்னப்போலே எல்லாங்கூட்டுவது- பிரதமைக்கலையால் வந்ததாகில்அந்த- நாடி-விநாடியை-உவாநாழிகையிலும் சதுப்புடசந்திராதித்தர்- விகலையிலுங் களைந்துநின்றது சதுப்புடம்-சந்திரனில்ல திதிசேடங்களைந்து இப்படி-கூட்டுதல்-களைதல்- செய்தவை சமசந்திராதித்தரும்- சுத்தபருவமுமாம்-எ-று. (௨௱௯)

சுத்தமாம்பிராணன்றன்னைசொல்லியவாறுக்கீய்க ...... *
வத்தகுவிநாடியித்தலைதனை மூன்றுகடிகைதன்னிற் ...... *
சித்திரைமுதலாமாதிற்செங்கதிர்நிற்கக்கூட்டு ... ... *
வைத்துலையாதியாறேற்களைபகலனையதாமே ... ... *

(இ-ள்) இரண்டுகிரகணமுமொத்தவை இப்பாற்சூரிய கிரகணம்முன்புதிட்டினபிராணனை- சா-லீய்ந்து-துலாதி மீனந்தமாக ரவிநிற்கில்நாழிகை-௰௫-ல்-களைவது-மேடாதிகன்னியளவாயாகில்-நாழிகை-௰௫-வைத்துஇந்தவிநாடிகூட்டுவது-இவைபகலளவாகவைப்பது-எ-று.

பல்லாயிரட்டிசெய்யப்பகலளவறுபானுடி ... ... *
பகலவைத்திதனை நீக்கவல்லளவாகுமித்தைப் ... ... *
பகர்தருபாதியாக்கிப்பகலளவோடேகூட்ட ... ... *
விகலுறுவிழிபாய்நின்றதிராவளவாகுமென்றே ... ... *

(இ-ள்)முன்னேகண்டபகல்லாயிரட்டிக்கப் பகலளவாம்-கூய வேறேவைத்துப்பகலளவைக்களைந்து நின்றசேடமிராவளவாம்- இவை பாதிசெய்துபகலளவோடேகூட்ட- விராவளவாம்-எ-று. (௪௱௬)

ஆகுவாநாடிதானுமருள்பகல்லாயும்வைத்து ... ... *
வேகமாஞ்சிறுமைநீக்கப்பெரியதில்விவாகசேட .. *
மோகைகொளவைவிநாடியொன்றுக்கோர்சாவாயுன்னி *
பேகியவிநாடிகீழ்வைத்தெய்தியசாமேல்வையே ... ... *

(இ-ள்)முன்புநீட்டின சுத்தருவத்தையும்- பகல்லாயும்- வெவ்வேறுவைத்துப்- பெரிதிற்சிறிதுகளைந்து- நின்றசேடம்-விவாகமென்றுபெயர்- இதைத்நீட்டிவைத்து- இந்தவிவாகத்தில் நாழிகையை வைத்து- விநாழிகையுண்டாகிலுங்கீழவைத்து- ஒருநாழிகைக்கொரு சாவாகக்கொண்டு- மேலேநின்றநாழிகையைக் களைந்து- பெற்ற சாவெத்தனை- அத்தனையா மிலம்பிதச்சாவைவிநாழிகையின்மேலாக நிறுத்துவது-எ-று. (௪௱௭)

வைத்தசாவதன்பின்சாவைவிநாடிக்குக்கீழேவைத்து ... *
மெத்துமேற்சாக்கீழ்நீக்கிச்சேடத்தால்விநாடியேற்றி *
யத்தையோராறுபாற்கீந்தும்மற்பலனதன்மேற்கூட்ட *
வெத்தனிவிநாடியித்தையிலம்பிதபலமென்றென்னே *

(இ-ள்,மேல்நிறுத்தினசாவின்பின்னிற்சாவை- விநாடிக்குக்கீழாக நிறுத்திமேலிற்சாவைகீழிற்சாவிலேகளைந்து- நின்றசேடத்தால் -நடுவில்நின்றவிநாடியைப்பெருக்கி- கூய- லரித்துப்பெற்றபலமேற்படியிற்கூட்டிவரிசைசெய்ய இலம்பிதச்சாபலமாம்- கீழிற்சாச்சுருங்கிவரில்- கீழிற்சாவைமேலிற் சாவாகமாதிவைத்துகளைந்துமுன்போல் சாசமஸ்காரம்பண்ணி சாபலத்தைமேற்படியிற் களைவது- இவையிலம்பிதச்சாபலவிநாடியென்றறிந்து நாடியாகவரிசையேற்றி இலம் பிதச்சாபலமென்றுஇட்டுவது-எ-று. (௪௱௮)

எண்ணியவிதனைமுன்னைவிவாகத்திற்கூட்டியாறு ... *
லொன்னுதல்பெருக்கியுச்சிமுன்னுவாவருமேனிற்றைப்
பண்ணிபசமரவிக்கேபாங்குறக்களைபின்போதே...... *
லெண்ணுதற்கூட்டமுன்போலிலம்பிதவருக்கனுமே *

(இ-ள்)முன்புதெரிந்தவிவாகத்தையும்- இலம்பிதச்சாபலத்தையுங் கூட்டி-சா-ல்- பெருக்க-நாழிகைகலையாம்- அவைமுன்புதீட்டினசம ரவியில்உச்சிக்குமுன்னாகிற்களைந்து உச்சிக்குப்பின் உவாவரிற்கூட்டு வது- இப்படிச்செய்துநின்றதும் இலம்பிதச்சா வருக்கனும்-எ-று

இலம்பிதவருக்கன்றிக்குமேடமுத்தரங்கோல்தெற்கு... *
புலம்படவறிந்துநின்றபுசையினிற்சாக்கொண்டச்சா - *
பலன்றனையேழிற்கீய்த்துபலன்கலைசேடந்தாக்கி ... *
இலங்கிழைவிகலையாக்கவிரவிலிக்கேபமென்றும் ... *

(இ-ள்)இலம்பித வருக்கன்மேடாதியாகில் உத்தரகோளமென்று ந்- துலாதி தெக்கணகோளமென்றும்- அறிந்து இப்படிகோளமறி ந்துபுசைகொடிகொண்டு கொடியுறிற் புசையாக்கி- சக்கொண்டு சாசமஸ்க்காரம்பண்ணி- சாபலத்தையேழாலரித்துப்பெற்றபலம் க லையாகவைத்துச்சேடமுண்டாகில்-சா-ல்-பெருக்கிமுன்பிற்கருவிக லையே விகலையாகக்கொண்டு- இப்படிநின்றரூபத்தைத்தாவி இதனைமே டாதியாகிலும் உத்திரவிட்சேபமென்றும் துலாதியாகில் தெக்கண விட்சேபமென்றறிவாய்-எ-று. (௨௨௩)

என்றமுன்றீட்டிவைத்தயிலம்பிதசாபலத்தை ... ... *
நின்றபன்மூன்றுற்றுக்கிநிறம்பியசமசோமன்று... ... *
ஞென்றியகலைசனிக்கிவுச்சிக்குமுன்னுவாவே... ... *
வின்றெனிற்கூட்டிவைக்கயிலம்பிதவிந்துவாமே...... *

(இ-ள்)மூற்படத்திட்டிவைத்தஇலம்பிதச்சாபலத்தை- ௰௩-ல்-பெ ருக்கிச் சமசந்திரன் விகலைகளில் உச்சிக்குமுன்பே உவாவரிற் களை ந்துஉச்சிக்குப்பின்பு உவாவரிற்கூட்டுவது இலம்பிதச்சந்திரன்-எ-று

இந்துவிலாவைநீக்கியிருந்ததுகோடிகோளாய்ந்து... *
புந்தியிற்புசையறிந்துபுசையினைக்கலையதாக்கி ... ... *

வந்தபன்மூன்றிற்கீய்ந்துபெறுபலமதிவிக்கேப......*
மந்தமிலேழுவைக்கவைக்கவிக்கேபமென்றும்... ...*

(இ-ள்) அந்தயிலம்பிதச்சந்திரனில் மூன்றெண்ணிவைத்த தற்கா லிராகுவைக்களைந்து- சேடமேடாதியாகில்- உத்திரகோளமென்றும் துலாதியாகிற்றெக்கணகோளமென்றும்- திட்டிப் புகைகொடிகொண்டு புசாம்சடத்தைக்கலையாக்கி- ௰௬-லீய்ந்து பெற்றபலன்சந்திர விக்கேபம்- இவைமேடாதி உத்திரவிக்கேபம்- துலாதிதெக்கணவிக்கேபம்- விடுவர் சாயாங்குலியென்ற-௧௨௩- வைத்து-௬-ல்-பெருக்க-ள-இவையெப்போதும்தெக்கண ஆட்சவிக்கேப மென்றறிவதுஎ-று.

என்றுந்தெற்கிதற்கேதிக்காம்விக்கேபமூன்றுமொன்றாய்ச் -*
சென்றமேலதுவேதிக்காமிரண்டொன்றுமொன்றொன்றாகிற்*
பின்றுமேலிரண்டுவைத்துப்பெரியதிற்சிறுமைவாங்கி... ...*
வன்றதேதிக்காஞ்சுத்தவிக்கேபந்தானுமாமே... ... ...*

(இ-ள்) முன்புசொன்ன அட்சவிக்கேபத்துக்குஎன்றுந்தெக்கண கோளமே தெக்கணமேதிக்கு யென்பதுஇதுவுமுன்புசொன்ன ரவி விக்கேபமுமூன்றுமொருதிக்கி லதுவேதிக்கென்றறிவது இம்மூன் றுங்கூட்டிசுத்தவிக்கேபமென்று திட்டியதுவேதிக்கொன்றுகொள் வது இரண்டொருதிக்காய்ஒன்றொருதிக்காய் மாறிவரில்- தெட்சண விக்கேப மிரண்டுங்கூட்டி வேறேவைத்து உத்திரவிக்கேபத்தையும் வேறேவைத்து இரண்டிலும் பெரியதிற்சிறியதை களைந்துநின்ற சேடம் சுத்தவிக்கேபமென்று திட்டிவைத்து அதுவேதிக்கென்று சொல்வது கேதுவுக்குதெக்கணம் உத்தரமாகவும் உத்தரம்தெக்கண மாகவும்மாறிவரும்- ராகுகரும்பாம்பு- கேதுசெம்பாம்பு- எ-று.()

தான்மதிகதிரோன்றங்கள்புடபுத்திபதினென்றேற்றி... ...*
யேனைமத்திமமாம்புத்திக்கீய்ந்திடவிரண்டுங்கூடிற்... ...*
றூனதுசம்பற்சார்க்கமிதிற்சுத்தவிக்கேபத்தைப் ... ... *
பூண்முலைக்களையப்போதிற்கிராணமூண்டிவேறப்பொய்யே*

(இ-ள்)முன்புதிட்டிவைத்த சகிரவிபுடபுத்தியைவெவ்வேறேவை த்து-௰௧-ல்-பெருக்கி அவரவர்சுத்தமத்திம புத்திகளாலீய்ப் பெற்ற

பலம் சசிரவி தேகமிவ்விரண்டுங் கூட்டில் சம்பற்காத்தமாம் இந்த
ச் சம்பற்காத்தம்வைத்து இதில்முற்பட்ட சுத்தவிக்கேபங் களைந்
தால் களையப்பட்ட சேடமுளதாகிற் கிரகணமுண்டு சேடம்பெருக்
கிலும் சம்பற்காத்தோ டொக்கிலும் கிரகணமில்லை-எ-று. (௪௪௪)

பொய்மெய்பதறிந்துமுன்புகளைந்ததிற்சேடந்தன்னை *
இம்மையொன்றிரண்டுமூன்றுறெட்டோடாறுவாங்கி *
பொம்மெனவொன்றுக்கொன்றுவைத்துப்போதாதசேட *
மெய்ம்மையோறுபாற்றுக்கிமேல்வருங்கருவிக்கே *

(இ-ள்) சுத்தவிக்கேபங்களைந்து நின்றசம்பற்காத்ததிற் கலைகளி
ல்திதிநாடி கொள்ளும்படி யோரலகுவாங்கி வேறேயோரலகு வை
ப்பது-௨-க்கு-௨-௬-க்கு-௬-௯-க்கு-௪-௮-க்கு-௫ ௰௨-க்கு-௯- ஆம் தா
னம்-௯க்கு-௯-இப்படிவாங்கிப் போதாதசேடம்-௯௰-ல்- பெருக்கி-
மேல்வாங்கவருங் கருவிக்கே-எ-று. (௪௪௫)

ஈவதுவிநாடிமுன்புநின்றதுவிநாடியித்தை ... ... *
யாய்திதிநாடியென்றுங்கதுவாரேல்முழுக்கப்பத்தும் *
யாய்திதிநாடியாதியுவாவினிற்களையப்பற்று ... *
மேதகுமின்நாடிக்கேயுவாநாடிகூட்டவீடே... ... *

(இ-ள்) முன்புமீய்ந்து பெற்றபல முதல்வாங்கி வைத்தபலத்தி
ன் கீழ்வைத்து மேற்படிநாடியும் கீழ்ப்படி விநாடியுமாகவருவது-
இவைதிதிநாடி விநாடியென்பது-இந்ததிதிநாடி-௯- கண்டார் சர்வ
க்கிராசமென்றறிவது-கண்டதிதிநாடி விநாடியைப் பாதிசெய்ய தி
திஅர்த்தநாடி விநாடியாம்- முன்புதீட்டிவைத்த சுத்தபருவநாடி வி
நாடியை இரண்டுபடியாகவைத்து ஒருபடியில் திதிஅர்த்தநாடி வி
நாடியைக்களைந்துநின்றது கிரகண பிரவேசநாடி விநாடியாம்-மற்
றப்படியிலே திதிஅர்த்தநாடி விநாடியைக்கூட்டிநின்றது மோட்
சவிநாடியாம்-சுத்தபருவநாடி விநாடி மத்தியகாலமென்பது-எ-று.

கூட்டியபரிசநாடிபகற்பாதிக்குவாவிற்சாவை ... *
போட்டிநின்றதனைமுன்போலொருநாடிக்கொருசாவாக
மூட்டுசாபலத்தைப்பத்துநாடியிற்களைமுன்போதேற் *
றூட்டவிந்குழலாய்பின்பேற்கூட்டிடுசுத்தப்பற்றும் *

(இ-ள்) பரிசநாடியிலும் பகற்பாதியிலும் பெரியதிற்சிறியதுகளைந்து நின்றவிவாகத்தில் முன்போலொருநாழிகைக் கொருசாவாகயிலம்பிதச்சாக்கொண்டு இந்தசாபலத்தைப் பரிசநாடியிலுச்சி முன்னாகிற்களைந்து பின்னாகிற்கூட்டுவது இப்படிசெய்து நின்றது சுத்தபருவநாடி விநாடியாம்-எ-று. (௬௬௭)

பற்றிமுன்விடுதிநாடிபகலைவேறுவைத்து ... *
சிற்றிடைபெருமைதன்னிற்சிறுமையைக்களைந்தசேடந்
துத்தசாபலத்தைவிட்டிற்களையுச்சிமுன்னேற்பின்னேல்
விற்றிறல்நுதலாய்கூட்டுவிடுதிநாழிகைக்குச்சுற்றம் ... *

(இ-ள்) மோட்சவிநாடியையும் பகலையும் வெவ்வேறுவைத்து பெரியதிற் சிறியதுகளைந்து நின்றவிவாகத்தில் முன்புபோல் இலம்பிதச்சாபலங்கொண்டு அத்தச்சாபலத்தை மோட்சநாடி விநாடியில் யுச்சிக்கு முன்னாகிற்களைந்து-பின்னாகிற்கூட்ட-சுத்தமோட்சநாடி விநாடியாம்- இவைதெக்கணகோளமாகிற் தென்மேற்கேபத்தும்- உத்தரகோளமாகில் வடமேற்கேபத்துமென்பது சற்பசாரத்தில் ஒருகலைக்கு ஒருஅங்குலமாகக்கொண்டு ஒருகயிரளந்து ஒருமண்டலமாகக்கீறி அதநடுவே இரவிதேகத்தை இத்தனை அங்குலமென்றறிந்து அதினாலொரு மண்டலமுறித்து அதநடுவேநின்று சுத்தவிக்கேப மித்தனை விரலென்றறிந்து அந்தமுனையினின்று அதனையொருமண்டலமாக முறித்தால் அந்தசசிதேகம் ரவிதேகத் தெவ்வளவு சென்றது அவ்வளவும்பற்றும்-எ-று சூரியகிரகணம்-முற்றும்(௬௬௮

## சந்திரகிரகணம்.

சுத்தமாஞ்சமமதிக்கேதொல்லராவதனை நீக்கி... ... *
பொத்தகோல்மேடமாய்ந்துபுசையினைக்கலையதாக்கி, *
பத்தொடுமூன்றிற்கேய்ந்துபெறுபலமதிவிக்கேபம் ... *
உத்தரகோளங்கோலேல்மேடாதிதெற்கென்றுரே ... *

(இ-ள்) சமசந்திரனளவு முன்போலெண்ணி அதில்லளகு சுத்தங்களைந்து மேடாதி துலாதியதிந்து-மேடாதி தெக்கணகோளமென்றும்-துலாதி யுத்தரகோளமென்றறிந்து-புசாகொடிகொண்டு- கொடியுதிற் புசையாக்கிப்-புசாசேடத்தைக் கலையாக்கி-அதை- ௰௩- லீய்ந்து-பெற்றபலங் கலையாக மேற்படியாகவைத்துசேடம்-௬௰-ல்- பெ

ருக்கி முன்பிற் கருவிக்கீப்ந்து-பெற்றபலம் விகலையாக்கீழ்வைத்து-இவைசந்திரவிக்ஷேபமாகவைத்து தெட்சண வுத்தரம் விக்ஷேபத்துக்கறிவது-எ-று- (௪௪௯)

வடங்கொள்பன்னிருலேமதிபடபுத்திவற்றித் ... *
திடங்கொள்மத்திமமாம்புத்திக்கீப்பலந்திங்கட்டேகம் *
படந்தவித்தஞ்சாற்றுக்கிப்பாதிசெய்பாம்பின்றேகந் *
தடங்கொளவிரண்டுங்கூட்டிநின்றதுசம்பற்காத்தம்... *

(இ-ள்) சசிபுடபுத்தியை-௰௯-ல்-பெருக்கி மத்திம புத்திக்கலைக்கீ ழ வருபலம்-சசிதேகம் இந்தசசிதேகம்-௫-ல்-பெருக்கிப் பாதிசெய்ய-ராகு தேகமிவ்விருதேகமுங்கூட்ட சம்பற்காத்தம்-எ-று. (௪௫௰)

சம்பறக்காத்தத்திங்கள்விக்ஷேபங்களைந்தசேடத் ... ... ... *
தின்பரோமொன்றிரண்டேமூன்று நான்கைந்தாறெட்டு ... *
மும்பர்பன்னிரண்டேபன்னொன்றெடுத்ததற்கொன்றுக்கொன்றாய்.
முன்புபோல்வைத்துப்பத்துமுண்டெனின்முழுக்கப்பற்றும்

(இ-ள்) சம்பற்காத்தத்தில்-சந்திரன்-விக்ஷேபங்களைந்தால்- கிரகணமுண்டு - விக்ஷேபம் சம்பற்காத்தமு மொக்கிலும் சம்பற்காத்தம்-அதிகமெனினும்- கிரகணமில்லை சந்திரவிக்ஷேபங் களைந்தசேடத்திருந்தால் அலகு-௧-வாங்கில்-௧-௨-காங்கில்- ௨-௪-க்கு-௩-௬-க்கு-௪-௪க்கு-௧-௫-க்கு-௧-௯-க்கு-௧-அ-க்கு-௧-௰௨-க்கு-௧-௰௯-க்கு-௧ ௨௰ -பத்துத்தானமும் வருமிடத்து வாங்கப்பத்தாமெனில்-முன்புபோல்-௯௰-ல்-பெருக்கி மேல்வருங்கருவிக்கீப்ந்து பெற்றபலம்-விநாடி இவை முன்வைத்த பலத்தின்கீழ்வைக்க இவைநாடி விநாடியாமிவை திதி நாடி விநாடியாம் - திதிநாடி பத்துங்கண்டால் சர்வத்திராஹுக்கும்-முழுக்கப்பற்றும்-எ-று. (௪௫௧)

பற்றினதறிந்துநின்றபக்கநாடியினிற்பாதி ... *
யற்றுவாநாடிதன்னிலொழித்திடப்பத்துநாடி... ... *
பற்றுநாடியினின்முன்னைப்பக்கநாடியினைக்கூட்ட ...*
வெற்றிவேல்விழிபாய்பாம்புவிடுநாடியெனவிளம்பே *

(இ-ள்) திதிநாடியைப் பாதிசெய்து சுத்தபருவநாடியிற் களைய ப்பரிசநாடியாம்-பரிசநாடியில் திதிநாடி முழுதுங்கூட்ட மோக்ஷ

நாடியாம்- பரிசநாடியையும் மோக்ஷநாடியையுங்கூட்டிப் பாதியா யாக்கி நின்றது-விடத்துடங்கும் நாழிகையாம்-இவை பருவமத்திய காலம்-உத்தரகோளம் வடகிழக்கும்- தெக்கணகோளந் தென்கிழக்கும்-பற்றுவது முன்புபோல் சம்பற்காத்தத்திற் கண்டவிரல்கொண்டு ஒருமண்டலமுறித்து அதனடுவே-நின்றும் - சுத்தவிக்கேப விநாடியைப்பற்றுகிற திக்கில்கிடத்தி- அதன்முடிவில் ஒருமுளையடித்து அந்தமுளைமுதல் இராகுதேகத்தை யொருமண்டலமாகமுறித்தால் இராகு-தேகம்- சசிதேகத்தேவ்வளவுசென்றது - அவ்வளவும் பற்றுமென்பது-எ-று.சந்திரகிரகணமுற்றும். (௬௰௨)

விளம்பியசகரூண்டாயிரத்தொருநூற்றின்மிக்க ... *
வளம்புகழ்பாண்டமங்கைமாமுனியரியவன்சே ... *
யிளங்கொடிமடவார்காமணிசைத்திருகோட்டிநம்பி...*
யுளம்புகக்கணிதநூலைப்புரைத்தனனுலகுக்கெல்லாம் ... *

(இ-ள்) சகாத்தம்-ஆயிரத்துச்சென்ற விளம்பி௵-முன்னையோர்வடமொழிபாற்செய்த சோதிடத்தைத் தென்தமிழினால் விரித்து யாவர்க்கும் உளங்கொளவுரைத்தான் வென்பதைக்குடி நாட்டுப்பிரமதேசமென்னும் பாண்ட மங்கலமாகிய பஞ்சவன மாதேவி சதுர்வேதமங்கலத்து அரியவன் புத்திரன் திருக்கோட்டியூர்நம்பி-எ-று.

மண்டலபுருடன்செய்த

## சூடாமணி உள்ளமுடையான்

முற்றிற்று

வே - கோவிந்தமுதலியாரால் - அச்சடிக்கப்பட்டது.

